உ

கணபதிதுணை

யாழ்ப்பணம் நல்லூர்

மஹாவித்துவான்

செகராசசேகரமகாராஜா அவர்களால்

இயற்றுவிக்கப்பட்ட

# செகராசசேகரமாலை

யாழ்ப்பாணம் கொக்குவில்

சோதிடபரிபாலனமடம்

இ. சி. இரகுநாதையர் அவர்களால்

எழுதிய உரையுடன்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பெற்றன.

இரண்டாம்பதிப்பு

சித்திரபானுஸூ புரட்டாதிமீ

1942.

*Registered Copyright*] [விலை ரூபா 3.00.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிதுணை

யாழ்ப்பாணம் நல்லூர்

மஹாவித்துவான்

செகராசசேகரமகாராஜா அவர்களால்

இயற்றுவிக்கப்பட்ட

# செகராசசேகரமாலை

யாழ்ப்பாணம் கொக்குவில்

சோதிடபரிபாலனமடம்

## இ. சி. இரகுநாதையர் அவர்கள்

எழுதிய உரையுடன்


சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பெற்றன.

இரண்டாம் பதிப்பு.

சித்திரபானுவுஉ புரட்டாதிமீ

1942.



Registered Copyright.]


[விலை ரூபா. 3-50.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| விஷய அகராதி | III |
| முகவுரை | VII |
| இந்நூலில் வழங்கப்பெற்ற இராசிப்பேர்கள் | XV |
| ,, ,, கிரகப்பேயர்கள் | XVI |
| சிறப்புப்பாயிரம் | XVII |
| நூல் | |
| கடவுள்வாழ்த்து | 1 |
| அவையடக்கம் | 3 |
| க. மகளிர்வினைப்படலம் | 4 |
| உ. மைந்தர்வினைப்படலம் | 16 |
| ங. மணவினைப்படலம் | 42 |
| ச. கூழ்வினைப்படலம் | 65 |
| ரு. பலவினைப்படலம் | 75 |
| சு. வேந்தர்வினைப்படலம் | 97 |
| எ. கோசரப்படலம் | 107 |
| அ. யாத்திரைப்படலம் | 116 |
| கூ. மனைவினைப்படலம் | 137 |
| செய்யுண்முதற்குறிப்பகராதி | 141 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷய அகராதி


அ

அக்கினியாதானம் ... 65
அக்ஷராரம்பம் ... 34
அகத்தியபூசை ...106
அசுபசகுனம் ...127
அசுவகன்மம் ...104
அசுவசாந்தி ...105
அட்டைவிடல்(இரணங்களுக்கு) 89
அத்திசஞ்சயனம்(காடாற்றுதல்) 95
அநந்தியயனம் ... 41
அரிட்டபுங்கம் ... 21
அரிட்டபலன் ... 17
அரிட்டம்பலிக்குங்காலம் ... 18
அரைஞாண் தரித்தல் ... 28
அவையடக்கம் ... 3
அன்னப்பிராசனம் ... 27
அனுகூலதேசம் (விவாகப் பொருத்த) ... 61

ஆ

ஆடுகொள்ளல் ... 76
ஆயிரம்பிறை (காணும் வயது) 91

இ

இரச்சுப்பொருத்தம் ... 56
இராசசேவை ...101
இராசதரிசனம் ... 99
இராசாபிடேகம் ... 97
இராசிகளில் துயில்வன, நடப்பன, நிற்பன, இருப்பன ...139
இராசிப்பொருத்தம் ... 50
இராசியதிபதிப்பொருத்தம் ... 55
இராசியதிபர்கள் ... 52
இருதுஆரூடபலன் ... 10
இருதுஇலக்கினத்திற் கிரகங்கள் நிற்கும்பலன் ... 10
இருதுஇலக்கினபலன் ... 9
இருதுகாலபலன் ... 9
இருதுசமயபலன் ... 12
இருதுதரிசித்தவர்பலன் ... 11
இருதுதிதிபலன் ... 7
இருதுநக்ஷத்திரபலன் ... 8
இருதுவஸ்திரபலன் ... 10
இருதுவாரபலன் ... 7
இருதுஸ்தானபலன் ... 12
இறைகொள்ளல் ... 99

உ

உச்சபலன் ... 22
உடற்கோசரம் ...113
உபநயனம் ... 36
உபாகன்மம் ... 39
உயிர்க்கோசரம் ...113
உழுதல் ... 67
உழுந்துஉண்டாக்கல் ... 71
உற்பாதசென்னம் ... 21

ஊ

ஊர்த்துவமுகஇராசிகள் ... 26

ஏ

ஏகதினப்பொருத்தம் ... 46
ஏகராசி, ஏகதினம் ... 46
ஏகோத்திட்டம் ... 95

க

கஜகன்மம் ...104
கஜசாந்தி ...105
கடவுள்வாழ்த்து ... 1
கடன்தீர்த்தல் ... 80
கணப்பொருத்தம் ... 47
கமுகுநடுதல் ... 71
கரும்புநடுதல் ... 71
கல்லெடுத்தல் ... 96

கா

காதுகுத்தல் ... 25
காப்புத்தரித்தல் ... 23
கார்த்திகைவிளக்குப்பிடித்தல் 32


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விஷயம் | பக்கம் |
|---|---|
| காரமிடல் (இரணங்களுக்கு) | 89 |
| காளாஞ்சிகொள்ளல் | ... 80 |
| **கி** | |
| கிரக(சஞ்சார)காலவரையறை | 114 |
| கிரகசத்துருமித்துருசமன் | ... 53 |
| கிரகசுபாவசத்துரு | ... 54 |
| கிரகதற்காலசத்துருமித்துரு | ... 54 |
| கிரகபலன்காலவரையறை | ...114 |
| கிரகமூலத்திரிகோணஇராசிகள் | 54 |
| கிரயவிக்கிரயம்(கொள்ளல்விற்றல்) | 76 |
| கிருத்திகாதீபத்திற்செய்யத்தகுவன | ... 33 |
| கிருஷியாரம்பம் (வயற்செய்கை) | 65 |
| கிழங்குவகைநடுதல் | ... 69 |
| **கு** | |
| குட்டரோகத்துக்குமருந்துண் | 88 |
| குருகோசரபலன் | ...109 |
| குருகோசரவேதை | ...111 |
| **கெ** | |
| கெண்டாந்தம் | ... 20 |
| கெண்டிகைகொள்ளல் | ... 80 |
| **கே** | |
| கேதுகோசரபலன் | ...108 |
| **கொ** | |
| கொடிவகைநடுதல் | ... 69 |
| **கோ** | |
| கோசரகாலகருமம் | ...112 |
| கோசரபலம்பலிக்காதவர் | ...115 |
| கோசரவேதை | ...110 |
| கோதானம் | ... 42 |
| கோ(பசு)யாத்திரை | ...130 |
| **ச** | |
| சகலகலாரம்பம் | ... 35 |
| சகலவியாதிகளுக்கும் மருந்துண்ணல் | ... 88 |
| சகுனபலன் | ...138 |
| சகோதரர்களுக்கு (சுபகருமம்) காலநியமம் | ... 62 |
| சங்கீதங்கேட்டல் | ... 98 |
| சஞ்சீவினிமருந்துண்ணல் | ... 87 |
| சதாபிஷேகம் | ... 92 |
| சந்திரலக்கினகோசரபலன் | ...107 |
| சந்திரன்கோசரபலன் | ...108 |
| சந்திரன்கோசரவேதை | ...110 |
| சபிண்டீகரணம் | ... 95 |
| சமாவர்த்தனம் | ... 42 |
| சரஇராசிகள் | ... 26 |
| சரசுவதிவணக்கம் | ... 3 |
| சரநக்ஷத்திரங்கள் | ... 25 |
| சலயாத்திரை | ...128 |
| சனிகோசரபலன் | ...108 |
| **சா** | |
| சாகாதிபதிகள் (நான்கு வேதங்களுக்கு) | ... 37 |
| சாதகன்மம் | ... 16 |
| சாந்திகபௌஷ்டிகம் | ... 97 |
| சாமரைகொள்ளல் | ... 80 |
| சாரதாயோகம் | ... 36 |
| **சி** | |
| சிவபெருமான்வணக்கம் | ... 2 |
| சிராத்தம் | ... 93 |
| **சீ** | |
| சீமந்தம் | ... 14 |
| **சு** | |
| சுக்கிரன்கோசரபலன் | ...109 |
| சுக்கிரன்கோசரவேதை | ...112 |
| சுடல் (ரோகங்களுக்கு) | ... 89 |
| சுபகோசரம் | ...107 |
| சுபசகுனம் | ...126 |
| சுவாதிசம்பாதயோகம் | ...105 |
| **சூ** | |
| சூதிகாக்கிருகப்பிரவேசம் | ... 15 |
| சூதிகாக்கிருகப்பொருத்தம் | ... 15 |
| சூரியசந்திரகோதரிசனம் | ... 27 |
| சூரியன்கோசரபலன் | ...108 |
| சூரியன்கோசரவேதை | ...110 |
| சூலதோஷஅனுபவம் | ...121 |
| **செ** | |
| செங்கழுநீர்நடுதல் | ... 70 |
| செவ்வாய்கோசரபலன் | ...108 |
| **சே** | |
| சேடரோகங்களுக்கு மருந்துண்ணல் | ... 87 |
| **சௌ** | |
| சௌரகாலநியதி | ... 30 |
| சௌரஞ்செய்யவாகாதகாலம் | 31 |
| சௌரத்துக்குமாதபலன் | ... 32 |
| சௌளம் | ... 28 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விஷயம் | பக்கம் |
|---|---|
| **த** | |
| தகனம் | ... 94 |
| தசப்பொருத்தம் | ... 44 |
| தலைப்பாகைதரித்தல் | ... 79 |
| **தா** | |
| தானியசங்கிரகம் | ... 73 |
| தானியபருவதயோகம் | ... 73 |
| தானியவிரயம் | ... 74 |
| **தி** | |
| திசையாத்திரை | ...122 |
| திசையாத்திரைக்குக் காலம், வாகனம், பக்ஷணம் | ...123 |
| திதிபக்ஷணம் (யாத்திரைக்கு) | 124 |
| திருவாண்டெழுத்திடல் | ...106 |
| தினப்பொருத்தம் | ... 44 |
| **து** | |
| தும்மற்பலன் | ...127 |
| **தே** | |
| தேரேற்றம் | ...102 |
| **தை** | |
| தைலாப்பியங்கம் | ... 90 |
| தைலாப்பியங்கவாரபலன் | ... 90 |
| **தொ** | |
| தொட்டிலேற்றல் | ... 25 |
| **ந** | |
| நக்ஷத்திரஅரிட்டம்: அத்தம் | ... 19 |
| ,, ,, உத்தரம் | 20 |
| ,, ,, சித்திரை | 20 |
| ,, ,, பரணி | ... 20 |
| ,, ,, பூசம் | ... 19 |
| ,, ,, பூராடம் | 19 |
| ,, ,, மூலம் | ... 19 |
| நக்ஷத்திரசூலம் | ...120 |
| நக்ஷத்திரபக்ஷணம்(யாத்திரை) | 123 |
| நக்ஷத்திரபாதஅதிபர்கள் | ... 52 |
| நக்ஷத்திரயோனி | ... 49 |
| நவபலாதிஇராசிகள் | ... 75 |
| நவபூஷணம் | ... 80 |
| நவபோசனம் | ... 74 |
| நவவஸ்திரந்தரிக்கும்இராசிப்பல | 77 |
| ,, நக்ஷத்திரபலன் | ... 78 |
| ,, வாரபலன் | ... 79 |
| நவவஸ்திரந்தரித்தல் | ... 77 |
| நவவஸ்திரந்தரித்தற்குவிசேஷ | 80 |
| **நா** | |
| நாடிகூடம்(நாடிப்பொருத்தம்) | 59 |
| நாமகரணம்(பெயரிடுதல்) | ... 23 |
| நாராயணபெலி | ... 96 |
| நாளாதிவேண்டப்படாதமரண | 96 |
| **நி** | |
| நிருத்தம்பார்த்தல் | ... 98 |
| நிலவெழுத்து | ... 34 |
| நிஷேகம்(கருப்பாதானம்) | ... 4 |
| **நெ** | |
| நெற்கதிரறுத்தல் | ... 72 |
| **நோ** | |
| நோய்நீங்கியவர்ஸ்நானஞ்செய்ய | 91 |
| நோய்நீங்கியவர்ஸ்நானஞ்செய்ய ஆகாதவை | ... 91 |
| நோயுறின்ஆகாநாட்கள் | ... 85 |
| **ப** | |
| பக்ஷணங்களுக்குப் புறநடை (யாத்திரைக்கு) | ...124 |
| பஞ்சாயுதம்தரித்தல் | ... 22 |
| பட்டங்கட்டல் | ... 97 |
| படைக்கலப்பயிற்சி | ...102 |
| பணிச்சக்கரம் | ... 68 |
| பந்துஅரிட்டம் | ... 18 |
| பயறுவிதைத்தல் | ... 71 |
| பரிகசக்கரம் | ...118 |
| பல்லுகிர்மயிர்வினைக்கு விசேட காலம் | ... 30 |
| பலன்கால்வரையறை | ...114 |
| பலனுக்குரியவர் | ...115 |
| பறவையாத்திரை | ...131 |
| பனைவித்து நடுதல் | ... 71 |
| **பா** | |
| பால்பருக்கல் | ... 25 |
| **பி** | |
| பித்தத்துக்குமருந்துண்ணல் | 87,88 |
| பிதாஅரிட்டம் | 17,18 |
| பிரதமார்த்தவம்(முதற்பூப்பு) | ... 6 |
| பிரமேகம் 18-க்கும் மருந்துண்ணல் | ... 88 |
| பிரஸ்தானம்(பிறவிடுதி) | ...125 |
| பிரேதகன்மம் | ... 94 |
| **பீ** | |
| பீஜாவாபனம் (விதைத்தல்) | ... 69 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷய அகராதி


| விஷயம் | பக்கம் |
|---|---|
| பு | |
| புதன்கோசரபலன் | ...109 |
| புதன்கோசரவேதை | ...111 |
| பும்சவனம் | ... 13 |
| புவனந்தயோகம் | ... 73 |
| புன்பயிர்உண்டாக்கல் | ... 71 |
| பூ | |
| பூதகூடம் (பூதப்பொருத்தம்) | ... 60 |
| பூமிப்பரீக்ஷை | ...137 |
| பூமிப்பிரவேசம் | ... 66 |
| பூமியின் ஆகிருதி, மணம் | ...138 |
| பூமியின்நிறம், சுவை | ...137 |
| பெ | |
| பெருவயிற்றுக்குமருந்துண்ணல் | 88 |
| பொ | |
| பொருத்ததோஷாபவாதம் | ... 61 |
| பொருத்தபலன் | ... 58 |
| ம | |
| மகவுஅரிட்டம் | ... 18 |
| மகளிர்பருவம் | ... 6 |
| மங்கலங்கேட்டல் | ... 98 |
| மரணகாலபலன் | ... 94 |
| மரவகைநடுதல் | ... 70 |
| மருந்துண்ணல் | ... 86 |
| மனைவிகருப்பவதியானற் செய்யத்தகாதவை | ... 31 |
| மா | |
| மாகேந்திரப்பொருத்தம் | ... 48 |
| மாடுகொள்ளல் | ... 76 |
| மாதாஅரிட்டம் | ... 17 |
| மாதுலர்அரிட்டம் | ... 18 |
| மாமரம்நடுதல் | ... 71 |
| மானவிதானம் | ...103 |
| மி | |
| மிருகயாத்திரை | ... 131 |
| மு | |
| முதனூலாசிரியர்வணக்கம் | ... 3 |
| மே | |
| மேஷேக்கியநாள் | ... 25 |
| யா | |
| யாத்திராவிரதம் (கன்னியர் நீராடல், ஊஞ்சலாடல்) | ... 33 |
| யாத்திரைக்குஇராசிநியதி | ...119 |
| யாத்திரைக்குக்கோசரசுபம் | ...107 |
| யாத்திரைக்குத்திதிநியதி | ...116 |
| யாத்திரைக்குநக்ஷத்திரநியதி | 117 |
| யாத்திரைக்குமாதநியதி | ...116 |
| யாத்திரைக்குவாரநியதி | ...119 |
| யாத்திரைபுறப்படும்முறை | ...125 |
| யு | |
| யுத்தஞ்செய்தல் | ...134 |
| யுத்தயாத்திரை | ...131 |
| யோ | |
| யோனிப்பொருத்தம் | ... 49 |
| ரோ | |
| ரோகமரணயோகம் | ... 85 |
| ரோகாரம்பநாட்பலன் | ... 81 |
| வ | |
| வக்கிரக்கிரகபலன் | ...114 |
| வசியப்பொருத்தம் | ... 55 |
| வன்னகூடம்(வருணப்பொருத்) | 59 |
| வா | |
| வாட்பொருத்தம் | ...103 |
| வாதத்துக்குமருந்துண்ணல் | ... 87 |
| வாயசநிமித்தம்(காக்கைச்சகுன) | 65 |
| வாரசூலம் | ...121 |
| வாரபக்ஷணம்(யாத்திரைக்கு) | 124 |
| வாழைநடுதல் | ... 71 |
| வாள்இலக்கணம் | ...102 |
| வாஸ்துவின்னியாசம் | ...140 |
| வி | |
| விட்டியிற்சென்னபலன் | ... 20 |
| விட்டுணுவணக்கம் | ... 2 |
| விநாயகர்வணக்கம் | ... 1 |
| வில்இலக்கணம் | ...102 |
| விவாககாலம் | ... 62 |
| விவாகமுகூர்த்தம் | ... 63 |
| விவாகம்(விதி) | ... 43 |
| விஷ்ணுபலி | ... 14 |
| விஷந்தீண்டின்ஆகாநாட்கள் | 85 |
| வே | |
| வேதவிரதம் | ... 42 |
| வேதாங்கநூல்கள் | ... 40 |
| வேதாரம்பம் | ... 40 |
| வேதைப்பொருத்தம் | ... 57 |
| ஸ் | |
| ஸ்திரீதீர்க்கப்பொருத்தம் | ... 48 |
| ஸ்திரீயாத்திரை | ...128 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

மானுடயாக்கை யெடுத்த நாமெல்லோரும் பந்தமாகிய பிறவித்துன்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பம் பெற்றுய்யும் பொருட்டுக் கற்குமாறு இறைவனால் அருளிச்செய்யப்பட்ட முதனூல் வேதமாகும். இவ் வேதம் சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் ஆறு அங்கங்களை உடையது.

மாந்தரின் முன்வினைப் போகங்களை அங்கைநெல்லிக்கனி போலக் காட்டி, அவற்றில் தீயனவற்றைத் தெய்வவழிபாடு, விரதம், மந்திரசெபம், தானம், ஓமம், புண்ணியதீர்த்த ஸ்நானம் என்னும் பிராயச்சித்தங்களாற் றீர்த்து நன்னிலையடையச் செய்தலாலும், இம்மையிற் செய்யவேண்டிய இல்லறத்திற்குரிய செயல்களை இனிது முடித்தற்குத் தகுந்த மகளிர்வினை, மைந்தர்வினை, மணவினை என்பவற்றிற்குரிய சுபமுகூர்த்தங்களையும், வாழ்வுக்குரிய மனைகளின் நியதிகளையும், பயிர்ச்செய்கை, வாணிகம், வைத்தியம், யாத்திரை, தேவவிரதம், வேள்வி முதலியவற்றிற்கேற்ற காலநியதிகளையும் நன்கு விளக்கிக்காட்டித் துன்பங்களினின்று நீங்கி இட்டசித்திகளைப் பெற்று உய்திபெறுமாறு நல்வழி காட்டுதலாலும் சோதிடம் வேதத்தின் கண் என்று வழங்கப்படுகின்றது.

இச் சோதிடம், கணிதம், ஜாதகம், சங்கிதை என மூன்று வகைப்படும்.

(1) கணிதமாவது: வருஷம், அயனம், இருது, மாதம், பக்ஷம், தினம், வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம், கிரகநிலை என்பவைகளை எக்காலத்துக்கும் ஏற்ப வரையறைப்படுத்தி விளக்குவதாம். இக் கணிதம், எல்லாம்வல்லவராகிய ஈசுவரனுடைய சக்தியினாலே இயக்கப்படுகின்ற தெய்வசக்திகளின் மூலமாகச் சீவர்களுக்கு அவரவர் வினைக்கேற்ற போகங்கள் ஊட்டப்படும் நியதிகளைக் காண்டற்கேற்பக் கடவுளருள்வழிப்பட்ட தத்துவஞானிகளால் வரையறுக்கப்பட்ட காலநியதிகளைப் பொதிந்துள்ளதாம்.

(2) ஜாதகமாவது: மக்கள் பிறந்த நேரத்தில் உதயமாகும் இலக்கினம், கிரகநிலை முதலியவற்றால் முக்காலங்களிலும் உள்ள பலாபலன்களை விளக்கிக் காட்டுவதாம். இதில் ஒன்பது கிரகங்களும் பன்னிரு இராசிகளிலும் பன்னிரு பாவங்களிலும் இயங்குகின்ற நியதிகளுக் கேற்ற பலாபலன்கள் தெளிவிக்கப்படுகின்றன. இது ஓரை எனவும் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சங்கிதையாவது: முகூர்த்தம், பிரச்சினுரூடம், உலக சுபாசுபம், சகுனம் முதலியவற்றை விளக்கிக் காட்டுவதாம்.

முகூர்த்தமாவது: குறித்த கருமங்கள் இட்டசித்திகளைத் தருதற்கேற்றவாறு செய்யப்படவேண்டிய காலவரையறைகளை விளக்குவதாகும்.

பிரச்சினுரூடமாவது அவரவர் தத்தம் மனநிகழ்ச்சிக் கேற்ப அவ்வப்போது அறிய விரும்பிய விஷயங்களைக் குறித்து நின்று கேட்கும் இலக்கினம் கிரகநிலை முதலியவற்றால் முக்கால நிகழ்ச்சிகளையும் தெரிந்து கூறுவதாகும்.

உலகசுபாசுபமாவது: கிரக கதிவயங்களால் இன்ன தேசத் திற்கு இன்ன காலத்தில் மழை, காற்று, பூகம்பம், பஞ்சம், சுகம், துக்கம் முதலியவைகள் இவ்வாறு நிகழுமென வரை யறுத்துக் கூறுவதாகும்.

சகுனமாவது: யாத்திரை முதலிய யாதானுமோர் காரியந் தொடங்கும்போது எதிரிட்டு நேரிடுகின்ற நிகழ்ச்சிகளின் சுபா சுபங்களை விளக்குவனவும், மற்றும் எதிர்கால நிகழ்ச்சிகளை முன் அறிதற்கேற்ப உண்டாகும் சொப்பனமுதலிய நிகழ்ச்சிகளை விளக்குவனவுமாம்.

இந்நூல், மேலே கூறிப்போந்தவற்றுள் மூன்றுவதாகக் கூறப்பட்ட சங்கிதையிலுள்ளவற்றைப் பெரும்பான்மையாக வும், இரண்டாவதாகக் கூறப்பட்ட ஓரையென்னுஞ் சாதகத் தில் உள்ளவற்றைச் சிறுபான்மையாகவும் அடக்கி, மகளிர் வினைப்படலமுதல் மனைவினைப்படலமீறுக ஒன்பது படலங் களையும் 290 விருத்தச் செய்யுள்களால் விளக்கியுள்ளது. இவற் றின் விரிவை விஷய அகராதியிற் கண்டுகொள்க.

வடமொழிச் சோதிட நூல்களிலுள்ள முகூர்த்தநியதிகளைத் திரட்டி மொழிபெயர்த்துத் தமிழில் இந்நூலைப் பாடியவர் யாழ்ப்பாணநாட்டில் வசித்த இராமேசசன்மாவின் புத்திரர் சோமசன்மா என்னும் பூசுரபன்னராவர். இஃது இந்நூற் சிறப்புப்பாயிரத்தில் "இராசவிராமேசனருள் சோமனெனுஞ் சுருதியோன்" என்றதனுல் உணரப்படும். எனவே, இந் நூலாசிரியர் காசிபகோத்திரமும் காத்தியாயனசூத்திரமும் உடையவராய்க் காசியம்பதியினின்று வந்து இராமேச்சரத்தில் அரசுரிமை கைக்கொண்ட சேதுபதிகளின் வழித்தோன்றலாகிய செகராசசேகரமன்னனுடைய உறவினருள் ஒருவரென்பது பெற்றும். இந்நூல் இயற்றுவித்தோர் பெயரைக்கொண்டு சேகராசசேகரமாலை என வழங்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலையும் இதன் பழைய உரையையும் முதன்முதலாகக் கலியப்தம் 5004-க்குச் சரியான சுபகிருதுவருடத்தில் அச்சிடுவித்தவர் வண்ணார்பண்ணை ஜோதிஷர் பிரமஸ்ரீ வி. சபாபதி ஐயரவர்களாவர். அதன்கண் பல வழுக்கள் திருத்தப்படாதிருந்தமையின், (கலி 5007) விசுவாவசுவருடத்தில் எமது தந்தையாராகிய பிரமஸ்ரீ ச. இ. சிவராமலிங்கையரவர்கள் தமது தந்தையார் பிரமஸ்ரீ சங். இரகுநாதையர் அவர்கள் பரிசோதித்த பிரதிக்கிணங்கச் செய்யுட்களை மாத்திரம் அச்சிட்டு வெளியிட்டனர். அப் பதிப்பின் பிரதிகள் பலவருடங்களுக்கு முன்னரே செலவாகிவிட்டமையாலும், பழைய உரை அநேக வழுக்கள் பொதிந்திருந்தமையாலும் இவ்விரண்டாம் பதிப்பை அச்சிடும்போது இதனைப் பரிசோதித்துப் புதிய உரையுடன் வெளியிட்டிருக்கின்றோம்.

யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு இந்நூல் ஓர் முக்கியமான அகச்சான்றாக அமைந்திருத்தலின், செகராசசேகரமன்னரின் சரித்திரச் சுருக்கம் இதன்பின்னுற் காட்டப்படுகின்றது. சோதிடங் கற்போருக்கு உதவியாக இந்நூலில் வழங்கப்பெறும் இராசிப்பெயர் கிரகப்பெயர் நக்ஷத்திரப்பெயர்கள் வேறுவேறாக எடுத்து நான்முகத்தீற்றிற் றொகுக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும், இந்நூலை உபயோகிப்போரின் சௌகரியத்துக்காக நூலின் முதலில் பொருளடக்கமும் விஷய அகராதியும், ஈற்றில் செய்யுண்முதற்குறிப்பகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் இயற்றி அரங்கேற்றப்பட்ட காலத்தைக் குறிக்குஞ் செய்யுட்கள் நூலகத்தேத காணப்படவில்லை. ஆதலின், இதன் காலத்தை இதனை இயற்றுவித்த செகராசசேகரமன்னரின் காலத்தைக் கொண்டே நிச்சயித்தல்வேண்டும். இவர் காலத்தைக் குறித்துச் சரித்திரஆசிரியர்களின் அபிப்பிராயங்கள் பலவாறாக இருத்தலின் அதனைத் திட்டமாக நிச்சயித்தல் தற்போது இயலாததாயிருக்கின்றது.

தென்னிலங்கையில், தம்பதெனியா நகரத்தில் கலி. 4405-ம் ஆண்டு முதலாக அரசுபுரிந்த பராக்கிரமவாகுமகாராசனின் ஆட்சியின் ஏழாவதாண்டாகிய கலி. 4411 (கி. பி. 1310)-ம் ஆண்டில், மேற்குறித்த அரசனால் இயற்றுவித்து அரங்கேற்றப்பட்ட சரசோதிமாலை என்னும் சோதிடநூல் உள்ளீட்டில் பெரும்பாலும் இச் செகராசசேகரமாலையைத் தழுவியதாகவே காணப்படுகின்றது. ஆதலின், இவ்விருநூலுள் ஒன்று மற்றொன்றைக் கண்டபின்னரே அதனிலுஞ் சிறப்பாக விளங்கவேண்டும் என்னும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருத்தல்வேண்டும். ஆத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லால், இவற்றுள் முதலிற் செய்யப்பட்டது எது? பிந்திச் செய்யப்பட்டது எது? என்று ஆராய்தல் அவசியமாகிறது.

இங்ஙனம் ஆராயுமிடத்து, முந்திய படலங்களில் சரசோதி மாலையிற் சுருக்கமாகக் கூறப்பட்ட பல விஷயங்கள் செகராசசேகரமாலையில் விரிவாக விளக்கப்பட்டமையாலும், அதிற் கூறப்படாத சில விஷயங்கள் இதிற் புதிதாகச் சேர்க்கப்பட்டமையாலும் செகராசசேகரமாலையே பிந்திச் செய்யப்பட்டதென்பது தெளிவாகிறது. அன்றியும், சரசோதிமாலையில் மனைசெயற்படலம் 72 செய்யுட்கள் கொண்டதாக விரிவாயிருக்க, செகராசசேகரமாலையில் அப் படலம் 9 செய்யுட்களை யுடையதாய், அவற்றின்கண் சில விஷயங்கள் மாத்திரங் கூறப்பட்டு, மனைமுகூர்த்தம் முதலிய இன்றியமையாத பல விஷயங்கள் கூறப்படாமையாலும், சரசோதிமாலையிற் கூறப்பட்ட தெய்வ விரதப்படலம், குணாகுணப்படலம், சுபாபசுபப்படலத்தில் கோசரபலமொழிந்த எஞ்சிய விஷயங்கள் ஆகியவை சங்கிதை நூல்களுக்கு இன்றியமையாதனவாயிருப்பவும் அவை செகராசசேகரமாலையிற் சேர்க்கப்படாது, மனைவினைப்படலத்து 9-ம் செய்யுளுடன் நூல் முற்றுப்பெறுவதாகக் கூறப்படுவதாலும் செகராசசேகரமாலை பூர்த்தியாவதற்கு முன்னரே யாதோ சில இடையூறுகளால் நூலாசிரியர் எஞ்சிய பகுதியைச் செய்ய இயலாமற்போயிருத்தல் வேண்டும். அன்றேல், சரசோதிமாலையில் நூல் அரங்கேற்றிய காலங் கூறியவாறு இச் செகராசசேகரமாலையிலும் அதனைக் கூறாது விட்டிருக்க நியாயமில்லை.

இந்நூல் 158-ம் செய்யுளில் "மன்னர்மன்னுசெகராசசேகரமன் மணவைபாரிய வரோதயன்" என்று கூறியதிலிருந்து இதனை இயற்றுவித்தோன் வரோதயசிங்கையாரியன் எனப்பட்ட செகராசசேகரனே என்பதும், அவனது அரசாட்சிகாலம் கி. பி. 1302 முதல் கி. பி. 1325 வரை எனக் கூறப்படுவதால் இச் செகராசசேகரமாலை சகாப்தம் 1232-க்குப் பின் 1247-க்குள் (கி. பி. 1310-க்குப் பின் 1325-க்குள்) ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் ஒருவாறு நிச்சயிக்கக்கூடியதாயிருக்கின்றன.

சோதிடபரிபாலன மடம்

கொக்குவில்

சித்திரபானுஹு கார்த்திகைமீ

கலி ௫0௪௪

இ. சி. இரகுநாதையர்

# செகராசசேகரமன்னர் வரலாறு

அயோத்திமாநகரில் அரசுசெலுத்திய தசரதச்சக்கிரவர்த்தியின் புத்திரராகிய ஸ்ரீராமபிரான் தந்தையின் வாக்கை நிறைவேற்ற விரும்பித் தமது பத்தினியாராகிய சீதாதேவியுடன் வனவாசஞ்செய்த காலத்தில் இலங்கையரசனாகிய இராவணன் அச் சீதையைக் கவர்ந்து கொண்டுபோய்த் தனது நகரிற் சிறைவைத்திருக்க, அதனை அறிந்து அச் சீதையைச் சிறைமீட்டற்காக எழுபதுவெள்ளம் குரங்குச் சேனைகளுடன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்று, இடையிற் குறுக்கிட்ட கடலைச் சேதுவினால் அடைத்து, இலங்கையிற் புகுந்து, இராக்ஷதர்தலைவனாகிய இராவணனையும் அவன் தம்பி கும்பகர்ணனையும் ஏனைய துட்ட அரக்கர் யாவரையுஞ் சங்கரித்து, விபீஷணனுக்குப் பட்டங்கட்டி, சீதையைச் சிறைமீட்டுத் தமது பதிக்குத் திரும்பி வழிக்கொண்டனர். அங்ஙனம் வரும்போது, இராவணனைக் கொன்றதனால் அவரைத் தொடர்ந்துவந்த பிரமஹத்திதோஷமானது கந்தமாதனம் என்னும் தலத்தினை அடுத்ததும் நீங்கியது. அம் மகிமையைக் கண்டு வியந்து அகத்தியமுனிவருக்கு உரைக்க, அவர் அத் தலத்தின் பெருமையை விரித்துக் கூறினர். ஸ்ரீராமபிரான் அவ் வரலாற்றைக் கேட்டு மகிழ்ந்து, அத் தலத்தில்விதிப்படி சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூசித்து, அம் மூர்த்திக்கு இராமநாதன் எனப் பெயர் புனைந்து, அத் தலத்துக்கும் இராமேச்சரம் எனப் பெயர் கொடுத்தனர்.

அதன்மேல், இத் தலத்திலிருந்து இம் மூர்த்திக்குப் பூசை முதலியன செய்தற்பொருட்டுக் காசியம்பதியினின்றும் பஞ்சக்கிராமவேதியர்களாகிய பாசுபதசைவர்கள் ஐந்நூற்றுப்பன்னிருவரை வரவழைத்து, அவர்களை அத் தலத்திலிருந்து ஸ்ரீராமநாதசுவாமியைப் பூசித்துக் கொண்டிருக்குமாறு பணித்து, அவருள் தகுதிவாய்ந்த இருவரை அப் பதிக்கு அமைந்த நாடு முழுமைக்கும் அரசராகச் செய்து, அவர்க்குப் (பூசுரவம்மிச) ஆரியச்சக்கிரவர்த்திகள் என்னும் பட்டத்தையும், துளபமாலையையும், அரசசின்னங்களாகிய வெண்கொற்றக்குடையையும், ஒற்றைச்சங்கையும், இடபக்கொடியையும் ஈந்து, தமது பதிக்கு மீண்டு அரசுபுரிந்திருந்தனர்.

அக் காலமுதல் **24** சதுர்யுகங்களாக அந் நாட்டை வழிவழியாக ஆண்ட அரசர்கள் **சேதுபதி** என்னும் பட்டப்பெயருடன் அரசுசெலுத்தி வந்தனர். இச் சேதுபதிகளின் வழித்தோன்றல்களே யாழ்ப்பாணத்தில் அரசுபுரிந்த ஆரியச்சக்கிரவர்த்திகளாவர்.

இவ்வாரியச்சக்கிரவர்த்திகள் சிங்கைநகரிலிருந்து இலங்கை முழுவதையும் ஒருகுடைக்கீழ் அரசுபுரிந்துவந்தமையின் சிங்கையாரியச்சக்கிரவர்த்திகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களில் விசயசிங்கை(கூழங்கை)ஆரியச்சக்கிரவர்த்தி என்னும் அரசனே முதன்முதல் ஆரியச்சக்கிரவர்த்தி என்னும் பட்டத்துடன் செங்கோல் செலுத்தினே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞவன். இவனுக்குப் பின் குலசேகரசிங்கையாரியன், குலோத்துங்கசிங்கையாரியன், விக்கிரமசிங்கையாரியன், **வரோதயசிங்கையாரியன்**, மார்த்தாண்டசிங்கையாரியன், குணபூஷணசிங்கையாரியன், வீரோதயசிங்கையாரியன், செயவீரசிங்கையாரியன், குணவீரசிங்கையாரியன், கனகசூரியசிங்கையாரியன், சிங்கைப் பரராசசேகரன், சிங்கைச் செகராசசேகரன் என்போர் பாரம்பரியமாய் அரசுபுரிந்துவந்தனர்.

இவர்களுடைய புகழைப்பற்றி ஒருவாறு இந்நூற் சிறப்புப்பாயிரத்தில் சுருக்கிக் கூறப்பட்டிருக்கின்றது. ஆங்கு, "வென்றிதிகழ் மீனவன்முன் செப்பேடங் கத்தழைக்கும் வேதமேவந்தும்" என்பது யாரைப்பற்றியதென்றும் எச்சம்பவத்தைக் குறிக்கின்றதென்றும் தெரியவில்லை. "சென்றுகரு நாடகரை யந்தரவல் லிபிற்பொருது செயித்த வேந்தும், கன்றிவரு மதவேழங் கரந்துணித்துப் போசலனைக் கடிந்த வேந்தும்" என்பவை, சோழ சிற்றரசனாகிய கோப்பெருஞ்சிங்கன் இலங்கையரசனாகிய பராக்கிரமவாகுவின் உதவியுடன் சக்கிரவர்த்தியாகிய மூன்றாம்இராசராசனைச் சிறைப்படுத்தியபோது, சக்கிரவர்த்தியின் உரித்தாளனும் ஹொய்சால அரசனுமாகிய இரண்டாம்நரசிங்கன் கோப்பெருஞ்சிங்கனை எதிர்த்து யுத்தம்புரிந்து இராசராசனை மீட்டதாகத் திருவாண்டிபுரச் சாசனங் கூறுவதையே குறிக்கும்போலும் என்பர்.

விக்கிரமசோழன, இரண்டாம் குமாரகுலோத்துங்கசோழன் என்பவர் காலத்தில் அவர்களின் அரண்மனைப் புலவராய் இருந்த புகழேந்திப்புலவர் கதிர்காமயாத்திரைக்கு இலங்கை வந்தஞான்று இலங்கைஅரசனைப் பாடி யானைப்பரிசில் பெற்றுச் சென்றனர். அவர் பெற்றுச்சென்ற யானையை வாங்கும்பொருட்டுச் சோழனும் பாண்டியனும் புலவர்வீட்டிற்குச் சென்றனர். அப்போது புலவர்,

"பாவலன் வாயிலில் வந்திபம் வாங்கப் படிபுரக்குங்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி யொன்பதினு
மேவலர் மார்பினுந் திண்டோளி னுஞ்செம்பொன் மேருவினுஞ்
சேவெழு தும்பெரு யான்சிங்கை யாரிய சேகரனே."

என்று தமக்குப் பரிசில் தந்த சிங்கைஆரியச்சக்கிரவர்த்தியைப் புகழ்ந்துரைத்தனர். இம் மன்னரைப் பற்றியே **"விடைக்கோடியுஞ் சேதுவுநீள் கண்டிகளோன் பதும்போறித்து மிகைந்தகோவும்'"** எனவும், **"கடக்கலுழி யந்திதனை யிரவலர்தங் கட்களித்த கருணைக் கோவும்"** எனவும் கூறப்பட்டிருத்தல்வேண்டும்.

"வடக்கெழுவா டைக்குபிளந் தென்றலுக்குந் தன்குலப்பேர் வழங்குகோவும்" என்றது எவரைக் குறித்ததென்பதும், அப் பெயர் எவ்வாறு வழங்கிவந்ததென்பதும் தெரியவில்லை. "அடற்கரிமூவாயிரத்தோ டெழுநூறு பாவலருக் களித்தகோவும்" என்றதும் யாரைக் குறித்துச் சொல்லப்பட்டதெனக் கூற முடியாதிருக்கின்றது. இவ்வளவும் இந்நூற் சிறப்புப்பாயிரத்துக் கூறியபடி செகராசசேகரனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலமுதல்வரைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளாம். இதன்மேல், இந்நூலை இயற்றுவித்த செகராசசேகரனுடைய புகழ் கூறப்படுகின்றது.

"மற்றுமுள பெருந்தகைமை யிக்குலத்துப் புவிபுரந்த மன்னர் தாமும்
வெற்றிதரு திருப்புயத்துப் பரித்தபடி தனிதரித்த விஞ்சைவேந்தன்"

என்றதனால், செகராசசேகரன் தன் முன்னோராகிய சிங்கையாரியச் சக்கிரவர்த்திகளைப் போலவே தானும் இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் அரசுபுரிந்தான் என்பதும், தமிழ்க்கல்வியில் மிகுந்த ஆர்வமுடையவன் என்பதும் பெறப்படுகின்றன.

"கற்றதிறன் மற்படையைத் துரந்துகச்சாய்த் துறையினில்வெங் கண்டவாளான், கொற்றமிகு வட்கருயர் தென்றிசைக்குச் செலவிடுத்த குருதிவேலான்" என்றதனால் யாழ்ப்பாணக்குடாநாட்டின் தென்கரையில் உள்ள கச்சாய்த்துறையில் செகராசசேகரமன்னன் தன் சத்துருக்களைத் துரத்திச் சென்று ஓர் போர்புரிந்ததாகவும், அப்போரில் அவன் சத்துருக்கள் முறியடிக்கப்பட்டு முதுகிட்டோடியதாகவும், அதன்மேலும் அவர்களைத் துரத்திச் சென்று சங்கரித்ததாகவும் தெரிகிறது. இச் சத்துருக்கள் வன்னிய சிற்றரசரின் உதவிபெற்ற சிங்களவரசரேயாதல்வேண்டும். "கி. பி. 1303-ல யாழ்ப்பாணத்தில் வந்த கலகங் காரணமாக நாலாம் பராக்கிரமவாகு தனது இராசதானியைக் குருநாக்கலிலிருந்து தம்பதெனியாவுக்கு மாற்றினன்" என்று 'குருநாக்கல் விஸ்தரய' என்ற சிங்களநூல் கூறுவது இந்தப் போரினைப்பற்றியதாதல்வேண்டும். இம் மன்னவனால் இயற்றுவிக்கப்பெற்ற செகராசசேகரவைத்தியநூலின் ஆசிரியரும் மேற்படி வைத்தியநூலின் அங்காதிபாதப் பிரிவினுள்,

"இயம்பிய தோலுமூனு மென்புநா டிகளுமற்றுஞ்
செம்பெறு சிங்கைநாடன் செகராச சேகரன்றன்
வயஞ்செறி வட்கராக முருட்டிய களத்தின்மீது
அயஞ்சிறி துளதுதிர வளந்துகண் டறிந்ததாமே"

என்றதனால் மேற்கூறிய சம்பவத்தையே குறித்திருக்கின்றனர்.

"கோமாறன் கரகமல மோடைபட்டங் குளமீது குவியக்கண்டு
மாமாரி மதக்கலுழிக் கிளையானை செம்பொனுடன் வழங்குவேந்தன்"

என்றது இச் செகராசசேகரன் தன்னைப் புகலடைந்து வணங்கிய சுந்தரபாண்டியனுக்கு (கி. பி. 1310-ல்) அநேகம் மதயானைகளையும் பொற்குவைகளையுங் கொடுத்து உதவிய செயலைக் குறிக்கும் என்பர்.

"பாய்மாவு நிதிக்குலமும் பட்டமுநீ டரசுரிமைப் பதியுமிக்க
தேமாலை புனைபுயத்தே மத்தையர்கோன் றனக்களித்த செங்கைவேந்தன்"

என்றது, இச் செகராசசேகரன் வன்னிச் சிற்றரசர்களுடன் நடத்திய போரில் தன் பக்கலில் நின்று உதவிபுரிந்த பிரதானி ஒருவனுக்கு ஓமந்தை என வழங்கப்படும் ஓமத்தையின் சிற்றரசுரிமையை அளித்த பெருமையை விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேகரிக்கு மணிமவுலிப் பாரரசர் செம்பொனுடன் திகழ்ந்தவென்றிப்
பாகரிக்குங் களியானைத் திறையளித்துப் பதாம்புயங்கள் டணிந்துவாழ்த்த
மோகரிக்குஞ் சலஞ்சலங்கள் முழக்குகடற் கலைப்புவனி முழுதுந்தந்த
மாகரிக்குஞ் சேடனுக்கும் பொறைநீக்கிப் பரந்தபுகழ் வரைந்தமார்பன்"

என்றதனால் இவன்கீழ்ப் பல அரசர்கள் திறைகொடுத்து ஆண்டனர் என்பதும், இவன் இவ்விலங்கை முழுமைக்கும் ஏகசக்கிராதிபதியாய்ச் செங்கோல்செலுத்தினன் என்பதும் விளங்குகின்றன.

இச் செகராசசேகரன் ஆஞ்ஞைப்படி பண்டிதராசரால் இயற்றப்பட்ட தக்ஷிணகைலாசபுராணத்தில், இவனைப்பற்றிக் கூறியவிடத்து,

"ஆங்காட் டரசன் ஆரியர் கோமான்
பொன்னாட் டைந்தரு பொருவரு கரதலன்
மறுநில நிருபரை வாளிலத் திருத்தி
யுறுநில முழுவது மொருதனி புரப்போன்
றென்னிலங் காபுரித் திசைதொறு மருவும்
மின்னிலங் கியவேல் மேவலர் புயத்துப்
படவரா முடித்தலைப் பார்முழு தாண்ட
இடப வான்கொடி யெழுதிய பெருமான்
சிங்கை யாரியன் சேது காவலன்
கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன்
பௌவ பேற்றுயில் பராபரன் சூட்டிய
தெய்வ மாமுடிச் செகராச சேகரன்" எனவும்,

"அம்புயத் தாதரத்தண்ண லமைத்தவா ரியர்தங்கோமா
னும்பர்வந் திறைஞ்சுஞ்சேது வுயர்வரைக் காவல்வேந்தன்
செம்பொன்மா மவுலிச்சென்னிச் செகராச சேகரேசன்
றும்பைடுஞ் சடையான்சைவந் தோன்றிடத் தோன்றினானால்"

"தோன்றிய காலைவேதந் தொனித்தன சிவனூற்சைவ
மான்றமர் வெண்ணீறன்றி யணிந்தன ரலங்கல்வாகை
வான்றனிச் சிங்கைகாவன் மன்னனோர் சிங்கந்தோன்ற
வேன்றபல் சமயமெல்லாங் கரியென விரிந்துபோன"

"போனது வணங்கார்செல்வம் புகுந்தது புகுந்தோர்க்கின்ப
மானது சிவனூலோசை யழிந்தது பிறனூலந்த
மானத னடத்தும்பூசை வயங்குதென் கயிலைச்சென்னி
ஞானமா மூர்த்திகொள்ளச் சிறந்தது நன்றெங்கும்"

"நாடுறு மிலங்கைநாடு நாற்றிசை நாடுமென்று
நீடுறு கவிகைத்திக்க ணிழலிடைப் படிந்ததெங்கும்
வாடுறு கலியுமில்லை மனத்துறு துயருமில்லை
யாடுறு பதாகைச்சேவு மனுதினம் விளங்குமாதோ" எனவும்,

"*தேவையின் மன்செக ராச சேகரக்
கோவையி னுதித்தசீர்க் குமார சூரிய

* தேவை - இராமேச்சரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞவியு முடலுமொரு களித்த கல்வியியின்
மேவிய காப்பியம் விமலற் காயதே" எனவும்

கூறப்பட்டிருக்கின்றது.

அன்றியும், இந்நூலகத்தே நூலியற்றுவித்தோனைச் குறிக்கும் செய்யுட்பகுதிகளும் இவ்வரசன் வரலாற்றுக்கு ஆதாரமாகக் காணப் படுகின்றன. அவற்றைக் கீழே காட்டுகின்றோம்:—

"சீரியவேற் பரநிருப ரிறைஞ்சும்பொற்றுட்
செகராச சேகரமன் சிங்கைதங்கு
மாரியர்கோ னெனக்குடைக்கீ ழவனியெல்லா
மடக்கியொரு கோலோச்ச வளிக்குமாதே" (செ. 36)

"சேவணி துவசன் சிங்கைப் பங் கோமான் செயசெக ராசசேகரமன்
பூவணி புகழான் பயில்சதுர் மறைக்கு" (செ. 76)

"சேது காவலவன் விஞ்சை விஞ்சுசெக ராச சேகரன்மெய் நிகழ்வசற்
கேது வானவரு மலர்மு கத்தெரிவை" (செ. 86)

"தெண்டிரைக்குட் கண்டுயில்மால் செகராச சேகரனுந் திருவுமென்ன
மண்டலத்தி னெடுங்கால மடமாது மபுமானுமிக வாழ்வரன்றே" (செ. 117)

"முத்தமிழ்சேர் செகராச சேகரமன் திருமார்பின் மூந்நூலென்ன
மெத்துமியன் மயிலனையார் பைங்கழுத்தின் மங்கலநாண் விளங்குமின்னே"(118)

"சீதமலர் நறுந்தெரியற் செகராச சேகரமன் சிறந்தகீர்த்தி
மேதினிமேல் வளர்ந்துலவுந் தகைமையென" (செ. 144)

"..........................................வென்றிசே
ரரியவாரிப குலாதிபன்றெரியு மம்மறைப்பொரு ளுரைக்குமே" (செ. 157)

"மன்னர் மன்னுசெக ராசசேகரமன் மணவைபாரிய வரோதயன்
பன்னு செந்தமிழ் வளம்பெ றற்குதவு" (செ. 158)

"திண்மடந்தையம் புயத்தொடைப் புயந்திடைத் திகழ்செக ராசசேகரமன்
மணவை தந்தமா விருபதாம் புயமென மருவினர்க் காத்துயி ரளிக்கும்
குணமி குந்தசஞ் சீவனிக்கு" (செ- 173)

"வையமன்னு காத்திரியா யனசூத்ரத்து மன்னியகா சிபகோத்ர மருவுகேண்மைச்
செய்யசதுர் மறைவாய்மைக் காசிவந்த செகராச சேகரனு மன்னனுதி
துப்பபுகழ்ப் பூசுரமன் னவரைக்காண" (செ. 201)

"..........................................நெடுந்தரங்க மிரங்குகூலத்
தெண்டிரைசூழ் மணவைபர்கோன் செகராச சேகரமன் செவ்வேல்வென்றி
கண்டுநிறை புரிந்தவர்போ லுரம்பகரா தஞ்சலிப்பர் கருதலாரே" (செ. 269)

"..........................................களைறந் காட்குதப்
பண்ணென்று சதநனைத்தார்ச் செகராச சேகரமன் பகைஞர் தம்மிற்
றுண்ணென்று வெருவு தல்போல் விழியிணைக டுயிலாவாந் துன்னலார்க்கே"(270)

"தென்னவர் பரவும் பொலன்மணிக் கழலான் செகராச சேகர னென்னு
மன்னவர் மன்னு மாநிலா ரணன்சீர் மருவினர் நிகர்க்குமப் புவியே" (செ.286)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றியும், செகராசசேகரவைத்தியம், சர்ப்பசாஸ்திரப்பிரிவினுள்,

"பாரினுள்ள சூத்திரனும் பாம்புபுற்றிற்
பரிந்திருக்கு மிரையெடுக்கிற் பலவுந்தின்னு
மேருடனே தானுடிற் பத்மராக
மிலங்குமணி முடிபுனைய மிலங்கைவேந்தர்
சீரியபொன் திறையளக்கச் செங்கோலோச்சுஞ்
செகராச சேகரமன் சிங்கைமேவு
மாரியர்கோன் வெண்குடையி னிழலேசெய்யு
மவனிதனைப் பார்த்துநின்றே யமர்ந்தாடும்மே" எனவும்,

கேகாலைப்பிரிவிலுள்ள கொத்தகம என்னுங் குறிச்சியின் விகாரையிற் கண்டெடுத்த கற்சாசனத்தில்,

"சேது
கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினர் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலகம் பாரித்தார் —பொங்கொலிநீர்ச்
சிங்கைநக ராரியனைச் சேரா வனுரேசர்
தங்கள் மடமாதர் தாம்" எனவுங் கூறப்பட்டிருக்கின்றன.

இச் செகராசசேகரன் கல்வியிற் சிறந்தவனாகவும், தமிழை வளர்க்கும் பெருவிருப்புடையவனாகவும் விளங்கி, இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து தமிழ்ப்புலவர்களையும் பண்டிதர்களையும் வரவழைத்துத் தமிழ்ச்சங்கமொன்று நிறுவி, அவர்களால் புதிய நூல்கள் பலவற்றை ஆக்குவித்துவந்தனன். இச்சங்கம் இவன் பின் வந்த சிங்கை அரசர்களாலும் பரிபாலிக்கப்பட்டுவந்தது. செகராசசேகரவைத்தியம், தக்ஷிண கைலாசபுராணம், காரிகையாவின்கணக்கதிகாரம் என்பவை இவ்வரசனால் இயற்றுவிக்கப்பட்ட பிறநூல்களாகும்.

இவனரசாட்சிகாலத்தில், சமயகாரணமாகக் குடிகளுள் கலகங்கள் நடவாவண்ணம் கட்டுப்பாடுகள் செய்து, யாவரையும் தத்தம் சமய நெறிப்படி ஒழுகுதற்குத் திட்டமுஞ் செய்தனன். இவன் திறைகொடுக்கும்படி நெருக்கிய நெருக்கத்திற்குப் பயந்தே குருநாக்கலில் இருந்து அரசாண்ட சிங்கள அரசனாகிய நாலாம் பராக்கிரமவாகு தனது இராசதானியைத் தம்பதெனியாவுக்கு மாற்றினன் என்பர். இச் சிங்கள அரசனே சரசோதிமாலை என்னும் சோதிடநூலை இயற்றுவித்தோன் ஆகலின், அந்நூலினும் சிறப்புமிக்கதாகவே இவன் இந்நூலை ஆக்குவித்திருப்பான் என்பதற்கு ஐயமில்லை.

இவ்வரசன் காலத்தில் அடிக்கப்பட்ட நாணயங்கள் விடையும் பிறையும் "சேது"வும் பொறிக்கப்பட்டவைகளாய், உருவத்தில் விளக்கமாகவும் அழகாகவும் இருக்கின்றன.

சரித்திரநூலார், மணவையாரிய **வரோதயன்** எனப்பட்ட இவ்வரோதயசிங்கையாரியனும் செகராசசேகரன் கி. பி. 1302 முதல் கி. பி. 1325 வரை அரசாண்டதாகக் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலில் வழங்கப்பட்ட
## இராசிப் பெயர்கள்

மேடம்:—ஆடு, ஆதி, கொச்சை, தகர், வருடை.

இடபம்:—ஏறு, கோ, விடை.

மிதுனம்:—இரட்டை, தடி, தண்டு, யாழ்.

கர்க்கடகம்:—அலவன், கடகம், குளிர், ஞெண்டு, நண்டு.

சிங்கம்:—அரி, கேசரி, சீயம்.

கன்னி:—அரிவை, காரிகை, பாவை, பெண், மங்கை, மகள், மடவாள், மின், மென்கொடியாள்.

துலாம்:—கோல், துலை, வணிகன்.

விருச்சிகம்:—அளி, தேள்.

தனு:—கோதண்டம், சாபம், சிலை, மூனி, வில்.

மகரம்:—அரிணம், கலை, சுறு, நவ்வி, மான்.

கும்பம்:—கடம், குடம், சாடி.

மீனம்:—கயல், மீன்.

## கிரகப் பெயர்கள்

சூரியன்:—அருக்கன், ஆதபன், ஆதவன், இரவி, இனன், என்றூ, கதிர், கதிரவன், கனலி, கனற்கதிரோன், தபனன், பதங்கன், வெங்கதிர், வெய்யவன், வெய்யோன்.

சந்திரன்:—அம்புலி, ஆலோன், இந்து, குபேரன், சசி, சுதகரன், சோமன், திங்கள், பனிக்கதிர், மதி, மதியம்.

செவ்வாய்:—அவனிமான்புதல்வன், அவனிமைந்தன், ஆரல், காசினிசேய், காசினிமகன், குசன், செய்யவன், சேய், தரணிபுத்திரன், தரணிமகன், தாரணிசேய், பூசன், மண் சேய், மண்மகள்புதல்வன்.

புதன்:—அம்புலிமகன், அம்புலிமைந்தன், இந்துமகன், கூரி யோன், சௌமியன், பண்டிதன், புந்தி, மால், மாலவன், மாலோன்.

வியாழன்:—அந்தணன், அண்டர்புரோகிதன், அரசன், இமைய வர்குரவன், குரு, கனகன், சுரர்குரு, சுரேசன்மந்திரி, நாக நாயகபுரோகிதன், பீதகன், பொன், மந்திரி, வேதியன்.

வெள்ளி:—அசுரமந்திரி, ஒள்ளியோன், கவி, கவியோன், காவி யன், சுக்கிரன், சுங்கன், பளிங்கு, பார்க்கவன், புகர், புகர வன், புகரோன்.

சனி:—அருக்கன்சேய், இரவிமைந்தன், காரி, சுன், சௌரி, நீலன், பங்கு, மந்தன், முடவன்.

இராகு:—அரவு.

கேது:—அரவு.

C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவினி:—அயம், ஆதி, இரலை, ஐப்பசி, கந்துகம், பரி, புரவி, மா, வாசி.

பரணி:—அடுப்பு, நமன், பூதம்.

கார்த்திகை:—அங்கி, அனல், ஆரல், கனல், பாவகன், வன்னி.

ரோகிணி:—அயம், உருடேர், உருள், செக்கு, சிவிகை, தேர், பண்டி, வேதன், வையம்.

மிருகசீரிடம்:—அம்புலி, இந்து, உடுபதி, பாலை, மகசிரம், மதி, மார்கழி, மான்றலை, மும்மீன்.

திருவாதிரை:—அரன், ஆதிரை, ஈசன், உருத்திரன், காமாரி, சிவன், செங்கை, நக்கன், முக்கணன், மூதிரை.

புநர்பூசம்:—அதிதி, ஆவணம், இக்கு, கரும்பு, கழை, கன்னல், பிண்டி, புநர்தம், மூங்கில், வேய்.

பூசம்:—காற்குளம், குரு, கொடிறு, சுரர்குரு, பீதகன், பொன், மறையவன்.

ஆயிலியம்:—அரவம், அரவிஞள், அரா, உரகம், கௌவை, சர்ப்பம், பணி, பாந்தள், பாம்பு, மாசுணம்.

மகம்:—பிதிர்நாள், மாசி, வாய்க்கால்.

பூரம்:—அம்பு, கணை.

உத்தரம்:—பங்குனி. [பாணி.

அத்தம்:—அங்கை, ஐவிரல், கரம், களிறு, கன்னி, காமரம், நவ்வி,

சித்திரை:—நெய்மீன், நேர்வான், பயறு, மீன்சுவை.

சுவாதி:—அனிலம், கால், சோதி, தீபம், பவனம், மருத்து,

விசாகம்:—சுளகு, முற்றில், முறம். [வாயு, விளக்கு.

அனுஷம்:—தாலம், பனை, பெண்ணை, போந்தை.

கேட்டை:—இந்திரன், இந்திரஞள், ஒளி, சுரேசஞள், துளங்கொளி, புரந்தரன், புனிதன், வச்சிரஞள்.

மூலம்:—அசுரர்நாள், அன்றில், குருகு, தேட்கடை.

பூராடம்:—உடைகுளம், சலநாள், நாரம், நீர், நீர்நாள்.

உத்தராடம்:—ஆடி, ஆனி, விச்சுவநாள்.

திருவோணம்:—அரி, உலக்கை, ஓணம், கண்ணன், சோணம், சோணை, மாயன், மால்.

அவிட்டம்:—ஆவணி, காக்கை, புள், விட்டம்.

சதயம்:—கடல், குன்று, சிலம்பு, செக்கு, புணரி, போர், வருணன்.

பூரட்டாதி:—புரட்டாதி, புரட்டை, முற்கொழு.

உத்தரட்டாதி:—முரசு.

ரேவதி:—அந்தநாள், கலம், சூலம், தொழு, தோணி, நாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிறப்புப் பாயிரம்

எழில்வாய்ந்த மணிமவுலித் துளவணிமா றசரதன்சே
யெனவந் தெய்தித்
தொழில்வாய்ந்த விளவலொடு சென்றுமுனி வோனினருள்
சுரந்து காத்துப்
பொழில்வாய்ந்த மிதிலைநகர் வில்லிறுத்துத் திருவைமணம்
புரிந்து வெண்சங்
குழிவாய்ந்த மணிகொழிக்குந் தன்னகர்வந் தன்னைதரு
முறையை வேண்டி.

இதன் பொருள்: அழகிய இரத்தினக் கிரீடத்தையும் துளசி மாலையையு மணிந்த திருமாலானவர், தசரதச் சக்கிரவர்த்தியின் புதல்வனாக இராமன் என்னும் பெயரோடு மவதரித்து, போர்த்தொழில் வல்லமை மிக்க தம்பியாகிய இலக்குமணனோடும் விசுவாமித்திரர் பின் சென்று, அவருடைய வேள்வியைக் காத்து, அவரருள் பெற்று, சோலை நிறைந்த மிதிலைநகரிற் போய், எவராலும் எடுத்து வளைக்க முடியாத வில்லை வளைத்து முரித்து, அவ் வீரச்செயலின் பேறாக இலக்குமியின் அவதாரத்தளாகிய சீதையை மணஞ்செய்து, வெண்சங்குகள் முத்துக்களை யீனுகின்ற செழிப்பான தனது அயோத்திநகரத்தின் மீண்டு வந்து, கைகேசியன்னை கூறிய (பிதாவினது) கட்டளையை நிறைவேற்ற விரும்பி, என்றவாறு. (1)

வேறு

மின்னுட னெடிய கானகம் புகுந்து
விராதனை மாயமா ரீசன்
றன்னைவா லியையேழ் மாராமரங் களைவெஞ்
சாயக மொன்றினாற் றடிந்து
மன்னுநீர் வேலை யடைத்தட லிலங்கை
வளநகர் புகுந்தெழிற் கும்ப
கன்னனை யரக்கர் கோவினைச் செயித்துக்
கமலநா யகிசிறை கடிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ - ள்: சீதையுடன் நீண்ட காட்டிற் போய், விராதனை
யும் மாயமானாக வந்த மாரீசனையும் வாலியையும் ஏழு மராமரங்
களையும் வெவ்விய ஒவ்வோர் இராமபாணத்தினால் அழித்து, நிலை
பெற்ற நீரையுடைய கடலைச் சேதுவினால் அடைத்து, வலிய
இலங்கை என்னும் வளப்பமுள்ள நகரிற் புகுந்து, வலிய கும்ப
கன்னனையும் அரக்கர்களுக் கரசனாகிய இராவணனையுங் கொன்று,
சீதையைச் சிறையினின்று மீட்டு, எ - று. (2)

கருங்கடற் சேனை வெள்ளமுந் தானுங்
கந்தமால் வரைப்புறத் தணுக
விருங்கதத் தரக்கன் சாயைவிட் டகன்ற
வியல்பினைத் திருவுளத் தெண்ணி
யருங்கலைப் பொதிய மாமுனிக் குரைப்ப
வவனுமத் தலத்தின தியல்பைப்
பெருங்கதைப் படுத்த வதிசயித் தந்தப்
பெருங்கதை யாதரம் பிணிப்ப.

இ - ள்: கரிய கடல்போன்ற எழுபது வெள்ளக் குரக்
குச்சேனையுந் தானுமாகக் கந்தமாதனமலையின் பக்கத்தை யடை
தலும், பெருங் கோபமுள்ள இராவணனைக் கொன்றதனாற்
றொடர்ந்த பிரமகத்தி தோஷம் நீங்கிப்போனதைக் கண்டு, அம்
மகிமையைக் கூர்ந்து சிந்தித்து, அரிய கலைகளை யறிந்த பொதிய
மலைவாசராகிய அகத்தியமுனிவருக்கு எடுத்தோத, அவரும்
அக் கந்தமாதனத்தின் பெருமைகளை விரிந்த கதையாகச் சொல்
லக் கேட்டு, ஆச்சரியமடைந்து, அப் பெருங் கதையினுலுண்
டான ஆர்வத்தி லீடுபட்டு, எ - று. (3)

அந்தமா தலத்தி லரன்றனைத் தாபித்
தருச்சனை புரிந்துதன் னுமஞ்
சிந்தையா லருளி யப்பதி தனக்குத்
திருப்பெய ரன்னதே யாக்கி
நந்தலில் பஞ்சக் கிராமவே தியராய்
நான்மறைப் பொருளுளம் பிரியாப்
பைந்தொடைப் பாசு பதர்களைந் நூற்றுப்
பன்னிரு வரைவர வழைத்து.

இ - ள்: அந்தப் பெருமை பொருந்திய தலத்தில் சிவ
பெருமானைப் பிரதிஷ்டைபண்ணிப் பூசித்து, அம் மூர்த்திக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பெயர்த் தொடர்பாக இராமநாதன் எனப் பெயர் புனைந்து, அத் தலத்திற்கும் அவ்வாறே இராமேச்சரம் என்னும் பெயர் கொடுத்து, கெடுதலற்ற பஞ்சக்கிராம அந்தணர்களாய் நான்கு வேதங்களின் பொருள்களையும் இடையறாது தியானிக்கின்ற பசிய மாலையை யணிந்த பாசுபதசைவர்கள் ஐந்நூற்றுப்பன்னிரண்டு பேரை அவ்விடத்தில் வரவழைத்து, எ - று. (4)

பூசனை செய்ம்மி னீரெனக் கருணை
புரிந்தவர் தங்களி லிருவர்
காசினி தாங்கும் படிவரங் கொடுத்துக்
கமழ்செழுந் துளபமா லிகையு
மாசறு சுருதி யாரிய வேந்தென்
றணிமணிப் பட்டமுங் கொடுத்துத்
தேசுறு குடையு மொற்றையும் வெற்றி
திகழ்விடைத் துவசமு நல்க.

இ - ள்: நீவிர் இங்கிருந்து இம் மூர்த்தியைப் பூசை செய்யுங்களென் றருளிச்செய்து, பின் அவருள் (அதிகாரமுடைய) இருவரைத் தெரிந்து, நீவிர் இத் தலத்திற்கியைந்த நாடு முழுவதையும் அரசுபுரிவீராக என்று நியமித்து, நறுமணங் கமழுஞ் செழுமையாகிய துளசிமாலையையும், குற்றமற்ற வேதவாண ஆரியவரசரென்னும் உயர்ந்த பட்டத்தையும், பிரகாசிக்கின்ற வெண்கொற்றக் குடையையும், ஒற்றைச் சங்கையும், வெற்றி விளங்குகின்ற இடபக் கொடியையும் அவர்களுக்குக் கொடுக்க, எ - று. (5)

வேறு

அன்றுமுதற் சதுரயுக காலாறிற் புவிபுரந்த
வரசர் தம்மில்
வென்றிதிகழ் மீனவன்முன் செப்பேடங் கத்தழைக்கும்
வேத வேந்துஞ்
சென்றுகரு நாடகரை யந்தரவல் லியிற்பொருது
செயித்த வேந்துங்
கன்றிவரு மதவேழங் கரந்துணித்துப் போசலனைக்
கடிந்த வேந்தும்.

இ - ள்: அக்காலமுதல் இருபத்துநான்கு சதுர்யுகங்களாக அந்நாட்டை வழிவழியாக ஆண்டுவந்த அரசருள், வெற்றி பொருந்திய பாண்டியராசனுக்கு முன்னே செப்பேட்டைத் தமிழ்ச்சங்கத்தில் வரவழைத்துக் காட்டிய வேதமுணர்ந்த அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும், அந்தரவல்லியென்னுமிடத்திற் சென்று கருநாடகரைப் போர்செய்து வென்ற அரசனும், கோபித்து வந்த மதயானையின் துதிக்கையை வெட்டிப் போசலராசனை வெற்றிகொண்ட அரசனும், எ - று. (6)

அடற்கரிமூ வாயிரத்தோ டெழுநூறு பாவலருக்
களித்த கோவும் [றித்து
விடைக்கொடியுஞ் சேதுவுநீள் கண்டிகளொன் பதும்பொ
மிகைத்த கோவும்
வடக்கெழுவா டைக்குமிளந் தென்றலுக்குந் தன்குலப்பேர்
வழங்கு கோவுங்
கடக்கலுழி யத்திதனை யிரவலர்தங் கட்களித்த
கருணைக் கோவும்.

இ - ள்: மூவாயிரத்தெழுநூறு வலிய யானைகளைப் புலவர்களுக்குப் பரிசாகக் கொடுத்த அரசனும், இடபக் கொடியையும் சேதுவையும் நெடிய ஒன்பது மலைகளிலும் எழுதி மேலாக விளங்கச்செய்த அரசனும், வடக்கேயிருந்து வீசுகின்ற வாடைக் காற்றுக்கும் (தெற்கேயிருந்து வீசுகின்ற) இளந் தென்றற்காற்றுக்கும் தனது குலப்பெயரிட்டு வழங்கச்செய்த அரசனும், மதஞ் சொரிகின்ற யானையை இரப்பவர்களுக்குக் கொடுத்த கருணையுடைய அரசனும் (ஆகிய இவர்கள் சிறந்து விளங்கியுள்ளார்.) எ - று. (7)

மற்றுமுள பெருந்தகைமை யிக்குலத்துப் புவிபுரந்த
மன்னர் தாமும்
வெற்றிதரு திருப்புயத்துப் பரித்தபடி தனிதரித்த
விஞ்சை வேந்தன் [வெங்
கற்றதிறன் மற்படையைத் துரந்துகச்சாய்த் துறைதனில்
கண்ட வாளான்
கொற்றமிகு வட்கருயர் தென்றிசைக்குச் செலவிடுத்த
குருதி வேலான்.

இ - ள்: இவர்களும், இவ்வாரியகுலத் துதித்துப் பெருந்தகைமை பூண்டு பூமியைப் பரிபாலித்த மற்றைய அரசர்களும் வெற்றிமிகுந்த வீரலக்குமி வசிக்கின்ற புயங்களினாற் பூமியைத் தாங்கிக் காத்தவாறு, தானும் பூமியை ஒப்பின்றித் தாங்கிய வித்தையில் வல்லுநனான அரசனும், கற்ற வலிய மல்வீரரின் படையைத் துரத்திப் பொருது கச்சாய்த்துறையிற் புறங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி யோடச்செய்த வாட்படையையுடையவனும், வீரமிருந்த பகைவரைப் பொருது வென்று உயர்ந்த தென்றிசைக்குப் போகவிட்ட இரத்தந்தோய்ந்த வேலினையுடையவனும், எ - று. (8)

கோமாறன் கரகமல மோடைபட்டங் குளமீது
குவியக் கண்டு
மாமாரி மதக்கலுழிக் கிளையானை செம்பொனுடன்
வழங்கு வேந்தன்
பாய்மாவு நிதிக்குலமும் பட்டமுநீ டரசுரிமைப்
பதியு மிக்க
தேமாலை புனைபுயத்தே மத்தையர்கோன் றனக்களித்த
செங்கை வேந்தன்.

இ - ள்: பாண்டியராசனது தாமரைமலர்போன்ற கைகள் நெற்றிப்பட்டமும் முகபடாமுமணிந்த அவனது யானையின் நெற்றிமீது குவியக் கண்டு, அவனுக்கு மதநீரை மழைபோலச் சிந்துகின்ற யானைக்கூட்டங்களையும் பொற்குவைகளையுங் கொடுத்த அரசனும், மிகுந்த தேன்பொருந்திய மாலையை யணிந்த புயத்தையுடைய ஏமத்தையின் அதிபனுக்குப் பாய்கின்ற குதிரைகளும் திரவியக் குவைகளும் பட்டமும் நீடித்த அரசுரிமையும் நாடும் ஆகிய இவற்றைக் கொடுத்த சிவந்த கையையுடைய அரசனும், எ-று. (9)

சேகரிக்கு மணிமவுலிப் பாரரசர் செம்பொனுடன்
றிகழ்ந்த வென்றிப்
பாகரிக்குங் களியானைத் திறையளித்துப் பதாம்புயங்கள்
பணிந்து வாழ்த்த
மோகரிக்குஞ் சலஞ்சலங்கண் முழங்குகடற் கலைப்புவனி
முழுதுந் தந்த
மாகரிக்குஞ் சேடனுக்கும் பொறைநீக்கிப் புரந்தபுகழ்
வரைந்த மார்பன்.

இ - ள்: குற்றமற்ற இரத்தினக்கிரீடம் பூண்ட பூமியை ஆளும் அரசர்கள் சிவந்த பொற்குவையையும் பாகரை யழிக்கின்ற மதயானைகளையும் திறையாகக் கொடுத்துத் தனது பாததாமரைகளை வணங்கித் துதிக்க, ஆரவாரிக்கின்ற சலஞ்சலச்சங்குகள் ஒலிக்கின்ற கடலை ஆடையாகவுடைய பூமி முழுவதையும் (சுமக்கின்ற) தந்தங்களையுடைய எட்டுத் திசையானைகளுக்கும் ஆதிசேடனுக்கும் பாரம் பொறுது நீக்கிக் காத்த புகழ் விளங்குகின்ற மார்பையுடையவனும், எ - று. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தருவு நவநிதியுங் குலமணியும் பொன்முகிலு
மாவு மொன்றாய்
வந்தனைய கொடைக்குரிசில் வரியளிக ளிசைகுலவு
வனசத் தாமன்
சந்ததமுந் தருமநெறி கோடாத தவப்பெருமான்
றழைத்த கீர்த்திக்
கந்தமலை யாரியர்கோன் செகராச சேகரமன்
கங்கை நாடன்.

இ - ள்: கற்பகமுதலிய ஐந்து தருக்களுஞ் சங்கநிதி பதும நிதிகளும் சிந்தாமணியும் பொன்னைப் பொழிகின்ற புட்கலாவருத்தமென்னு முகிலும் காமதேனுவும் ஒருங்கே வந்தாற்போன்ற குறைவற்ற கொடைவள்ளலாகிய அரசனும், நிரையான வண்டுகள்விழுந் திசைபாடுகின்ற தாமரைமலர்மாலையை யுடையவனும், நாடோறுந் தருமநெறி தவறாது செங்கோல் செலுத்துகின்ற தவத்தையுடைய அரசனும், பரந்த கீர்த்தி பொருந்திய கந்தமாதன மலையைச் சார்ந்த ஆரிய மன்னனும், கங்கை சூழ்ந்த காசியம்பதியிலிருந்து வந்த பூசுரர்களின் வழித்தோன்றலும் ஆனோன் செகராசசேகர மகாராசனேயாவன். எ - று. (11)

தன்கடவுட் சுருதிகளின் மனமெனுஞ்சோ திடமதனைத்
தலத்தின் மீது
மின்குலவு தென்கலையாற் றருகவென வருள்புரிய
விருத்தப் பாவாற்
பொன்குலவு செகராச சேகரமா லையைச்செய்தான்
பொருந்து மேன்மைத்
தொன்குலவு மிராசவிரா மேசனருள் சோமனெனுஞ்
சுருதி யோனே.

இ - ள்: இச் செகராசசேகர மகாராசன் தனது கடவுள் வாக்காகிய வேதங்களின் மனமெனப்படுகின்ற சோதிடத்தை இத் தமிழ்நாட்டில் சிறப்புவாய்ந்த தமிழ்மொழியாற் பாடுக என்றருளிச்செய்ய, மேன்மையான பழமைபொருந்திய இராச பரம்பரையினனாகிய இராமேசன் என்பவன் பெற்ற சோமன் என்னும் பெயரையுடைய வேதியன், செகராசசேகரமாலை யென்னும் பெயர்பூண்ட இந்நூலை விருத்தச் செய்யுளாகப் பாடினான். எ - று. (12)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை.

# செகராசசேகரமாலை

## மூலமும், உரையும்.

### கடவுள் வாழ்த்து.

---

#### விநாயகர்.

எழில்வாய்த்த மணித்திகிரித் திருநெடுமா லுந்தியின்வந்
திணங்கு மாதித்
தொழில்வாய்த்த சதுர்முகத்த னிருச்சுருதிப் பொருளாகுந்
துய்ய கார்வண்
டுழிவாய்த்த தேனிதழிச் சிவனருளு மைங்கரத்தா
னுலக மெல்லாம்
பொழில்வாய்த்த மலர்சொரிந்து வாழ்த்தெடுக்கும் பதமலர்கள்
புகழ்தல் செய்வாம்.

(இதன் பொருள்:) அழகுபொருந்திய கௌஸ்துபமணியையும் சுதரிசனமென்னுஞ் சக்கரத்தையுமுடைய அழகிய விட்டுணுமூர்த்தியின் உந்திக்கமலத்தினின்றுந் தோன்றி அவருடைய காத்தற்றொழிலோடியைந்த படைத்தற்றொழிலைப்பெற்ற பிரமாவினாற் றுருக்கப்பட்ட வேதப்பொருளாகியவரும், சுத்தமாகிய கரிய வண்டு தன்னிடத்தே வசிக்கப்பெற்ற தேன் பொருந்திய கொன்றைமாலையைச் சூடியவருமாகிய சிவபெருமான் பெற்றருளிய ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளினது, உலகத்தார் யாவராலும் சோலைகளிலுள்ள பூக்களைச் சொரிந்து துதிக்கப்படுகின்ற திருவடித்தாமரைகளை யாமும் துதிப்பாம். என்றவாறு.

இட்டசித்திகளை இடையூறின்றி இனிதுமுடித்தல்பற்றி யாவராலும் வாழ்த்தப்படுங் கடவுள் இப்போது வாழ்த்தும் எமக்கும் எடுத்துக்கொண்ட இந்நூல் இனிது முடிய அருள்செய்வாரென்பது கருத்து. எல்லாமணிகளிலுங் கௌஸ்துபமணி சிறப்புடைத்தாயிருத்தல்பற்றி அதனை "எழில்வாய்த்த மணி" என்றார். ஆதித்தொழில் - படைத்தல். சுருதிப்பொருளாகும் சிவன் எனவும், ஐங்கரத்தான் பதம் எனவும் இயையும். நாம் என்னும் எழுவாய் மறைந்துநின்று, புகழ்தல் செய்வாம் என்னும் பயனிலை கொண்டது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபெருமான்.

**சங்கரனைப் பிறைவேணிப் பினையிருங்கைப் பிரசநறுந் தாமத் தாம, வங்கணனைப் புரமெரித்த வாடகவான் கோதண் டத் தானை மானேர், பங்கினனைக் கடுத்துளிக்குந் துளையெ யிற்றுப் பஃறலைவெம் பகுவாய் நாக, கங்கணனைக் கனலு நுதற் கண்ணனை விண்ணவனைக் கருத்தில் வைப்பாம்.**

(இ - ள்:) (ஆன்மாக்களுக்குச்) சுகத்தைச் செய்பவரும், பிறைச்சந்திரனை யணிந்த சடையினையும் மான்கன்றைத் தரித்த பெருமைபொருந்திய திருக்கரத்தினையும் தேன்பொருந்திய நன் மணத்தினையுடைய கொன்றைமலராலாகிய மாலையையுமுடைய அருட்கண்ணரும், முப்புரங்களையு மெரித்தவரும், பொன்மலை யாகிய பெரிய வில்லையுடையவரும், உமாதேவியாரை ஒருபக்கத் தினுடையவரும், நஞ்சை யுமிழ்கின்ற உட்டுளைபொருந்திய பற் களையும் பல தலைகளையும் வெம்மையாகிய பிளந்த வாயையுமுடைய பாம்பைக் காப்பாகத் தரித்திருப்பவரும், நெருப்பையுமிழ்கின்ற நெற்றிக்கண்ணையுடையவரும், ஆகாயரூபியுமாகிய சிவபிரானை மனத்துளிருத்துவாம். எ - று.

*தாமத் தாமம் - கொன்றைமலர் மாலை. இங்கே அனுக்கிரகமும் நிக்கிரகமுமாய பல செயல்கள் கூறப்பட்டன. இவ்வியல்புடைய கடவுள் ளாமெடுத்துக்கொண்ட நூலினையும் இடையூறு நீக்கி இனிதுமுடிப்பா ரென்பது கருத்து.* (2)

## விட்டுணு.

**நாரணனைப் பயோததியி னனந்தலைவா யனந்தமுடி நாகப் பாய்வா, ழாரணனைப் பிரசமுறை யணிகமலத் திருப் பூத்த வாகத் தானைப், பூரணனை மலர்ப்பூவைப் பொருவுரு வப் பொற்போனைப் புணரிப் பாரேழ், பாரணனைத் திகிரிவி டாப் பங்கயக்கைப் பெருமானைப் பணிதல் செய்வாம்.**

(இ - ள்:) நீரிலிருப்பவரும், பாற்கடலின் நடுவிலே அள வில்லாத தலைகளையுடைய (ஆதிசேடனாகிய) சர்ப்பசயனத்தில் வாழுகின்ற வேதமுதல்வரும், தேன்பொருந்திய அழகிய தாமரை மலரிலிருக்கின்ற இலக்குமி பொலிந்திருக்கும் மார்பினையுடையவ ரும், எங்கும் நிறைந்தவரும், காயாம்பூவையொத்த திருமேனிப் பொலிவுடையவரும், கடல்சூழ்ந்த பூமிகளேழையும் உண்டவரும், சக்கராயுதத்தைத் தரித்திருக்கின்ற செந்தாமரைப்பூப்போலுந் திருக்கரத்தையுடைய பெருமானுமாகிய விட்டுணுமூர்த்தியை வணங்குவாம். எ - று.

*நாராயணன் என்பது நாரணன் என விகாரமாயிற்று. நாரம் - நீர். அயனம் - இடம். பயோததி - பாற்கடல்.* (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரசுவதி.

**படிகநிறத் திருமேனிப் பவளவிதழ்ச் செங்காந்தட் பைம் போ தங்கைக், கடிகமழ்பூங் கருங்கூந்த லிணைச்செந்தாட் குவளைவிழிக் கற்பின் பொற்பார், வடிவுளவெண் டாளநகைக் கமலமலர்ப் பீடிகைவாழ் மங்கை துங்கப், பொடிமலரா லயனு விற் புக்கிருப்பா ளெமக்கன்பு புரிவா டானே.**

(இ - ள்.) பளிங்குபோன்ற திருமேனியையும், பவளம் போன்ற இதழையும், செங்காந்தளின் பசிய பூவையொத்த உள் ளங்கைகளையும், வாசனைவீசுகின்ற பூக்களையணிந்த கரிய கூந்தலை யும், சிவந்த இருதிருவடிகளையும், குவளைப்பூப்போலுங் கண் களையும், கல்வியழகின் நிறைவையும், அழகிய வெண்மையாகிய முத்துப்போன்ற பற்களையுமுடைய வெண்டாமரைமலராகிய ஆசனத்தில் வீற்றிருக்கின்ற பெண்ணும், சிறந்த மகரந்தப்பொடி களையுடைய தாமரையாசனனாகிய பிரமாவின் நாவிற் புகுந்திருப் பவளுமாகிய சரசுவதிதேவி எமக்கு அன்புசெய்வாள். எ - று.

## முதனூலாசிரியர் வணக்கம்.

வேறு.

**காசிபன் வசிட்ட னத்திரி வல்லன் கௌதமன் சிங்கனு ராயன், தேசுறு பட்டர் திரிவிக்ரம ரகத்தியன் சியவன னம் பொனே பிருகு, மாசில்கல் யாண வண்மனு ரதன்சீர் வற்சனே கற்கனல் வராகன், பூசுறு தேவ ராதனென் றினையோர் பொன்னடி சென்னிமேற் புனைவாம்.**

(இ - ள்.) காசிபர், வசிட்டர், அத்திரி, வல்லர், கௌதமர், நிருசிங்கர், நாராயணர், கீர்த்திபொருந்திய ஸ்ரீபதிபட்டாசாரியர், திரிவிக்கிரமர், அகத்தியர், சியவனர், பிரகஸ்பதி, பிருகு, குற்றமில் லாத கலியாணவன்மர், நாரதர்,சிறப்புப்பொருந்தியவற்சர், கற்சர், நல்ல வராஹமிஹிரர், பூசிக்கப்படுகின்ற தேவராதர் ஆகிய இம் மகான்களது பொன்போலுந் திருவடிகளைச் சிரமேற்கொண்டு வணங்குவாம். எ - று. (5)

---

## அவையடக்கம்.

---

வேறு.

**வனைந்துமா முனிவோர் சொன்ன வடகலைச் சோதி டத்தைப் புனைந்ததென் கலையாற் சட்டை பூட்டிய விதனைக் கேட்டு முனிந்திட வேண்டா நல்லோர் முற்றுமா ராய்ந்து குற்ற மினைந்ததை யகற்றி நன்காய் நிச்சயித் திடுகை நீரே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பெரிய முனிவர்கள் வடமொழியில் அலங்கரித்துச் சொல்லிய சோதிட நூல்களின் பொருளை அழகிய தென்மொழியாந் தமிழினாற் சட்டைபூட்டப்பட்டிருக்கின்ற இந்நூலைக் கேட்டமாத்திரையானே சிற்றறங்கொள்ளற்க. கல்வியறிவிற் சிறந்த நல்லோராயுள்ளார் இந்நூல் முழுமையு மாராய்ந்து, குற்றமாகவெண்ணுங் கருத்தை நீக்கி, நன்றென்று உறுதிப்படுத்தல் குணமாகும். எ - று. (6)

---

## முதலாவது

# மகளிர்விளைப்படலம்.

### நிஷேகம்.

வேறு.

**புண்ணியவே தாகமங்கள் புகல்காலத் திருவோரும் பொருந்து வேலை, கண்ணியசீர்க் கருவழியா வகைவாசீ கரண முதற் காவல் பண்ணி, எண்ணியவன் னதுக்குலகோ ரிசைத் தபரி காரமுட னிறையோன் பூசை, திண்ணியமந் திரம ருந்து கனலியற்றி நிஷேகவிதி செய்ய வேண்டும்.**

(இ - ள்:) புண்ணியங்களையே பிரதானமாகப் புகலாநின்ற வேதாகமங்கள் விதிக்கின்ற நற்காலங்களிலே நாயகன் நாயகி என்னுமிருவோரும் புணருங்கால், மதிக்கத்தக்க சிறப்புவாய்ந்த கருச்சிதையாவண்ணம் வாஜீகரணமுதலான காவல்கள்பண்ணி, நினைத்த அக் கருவளர்ச்சிக்கு அறிஞர்கள் சொன்ன பரிகாரங்களோடு, சிவபூசை, உறுதியான மந்திரசெபம், மருந்து, ஓமங்களுஞ் செய்து, ஒருவரி லொருவர் பூரண வசியமுடையவராய்க் கருப்பாதானஞ் செய்தல்வேண்டும். எ - று.

இல்லறத்தினினிய பயனாக மதிக்கப்பெறுவது மக்கட்பேறென்பார் "**கண்ணியசீர்க்கரு**" என்றார். மணமக்கள் புணர்வது புத்திரப்பேற்றிற்கேயன்றிக் காமநுகர்ச்சிக்கன் றென்பார் "இருவோரும் பொருந்துவேலை ... ... கருவழியாவகை" என்றார். எனவே, கருப்போற்பத்திக்கு அமையாத காலங்களில் புணர்ச்சி கூடாதென்பது பெற்றாம். வாஜீகரணம் நாயகனைக் கருப்போற்பத்தி செய்தற்கு வல்லவனாக்கலின் "**வாசீகரணமுதற் காவல் பண்ணி**" என்றார். தலைவன் தலைவியுடைய அத்தியுச்ச நீசங்களாற் கருப்போற்பத்திக்கு இடையூறு நேராவண்ணம் அறிஞர்கள் அதற்குச் சொல்லிய பரிகாரமுறைகளைக் கைக்கொண்டு காத்து என்பார் "எண்ணியவன்னதுக் குலகோரிசைத்த பரிகாரமுடன்" என்றார். சிவபூசைசெய்தல் மனதிற்கினிய மகவைப் பெறுதற்கும், மந்திரசெபம் கிரக பூத பசாச பீடைகள் தவிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. SARAVANAPAVAN



தற்கும், மருந்துண்ணல் மலடு முதலிய நோய் தீர்க்கும், ஓமஞ்செய்தல் முற்சன்மவசத்தினுல் புத்திரப்பேறில்லாதிருக்கும் குறையை நீக்சற் கும் காரணமாதல் பற்றி இவற்றைச் செய்து தவருது புத்திரசம்பத்தை யடையவேண்டுமென்பார் "இறையோன்பூசை...மந்திர மருந்து கன லியற்றி" என்ருர். செபித்தோர்க்குக் கிரக பூத பசாச தோஷங்களை நீக்கிப் புத்திரப்பேற்றினைத் தரவல்ல "சுதரிசனம்", "விஷ்ணுயோனி" முதலிய மகாமந்திரங்க ளென்பார் "திண்ணிய மந்திரம்" என்ருர். "இறையோன்பூசை" என்றதனுல், அதனேடியைந்த தலதரிசனம், தீர்த் தஸ்நானம் முதலியவைகளும் புத்திரப்பேற்றுக்குப் பிரதிகூலமான தோஷங்களை நீக்கு மாற்றலுடையன வென்பது பெற்ரும். நூல்களில் அறிவுறுத்தியவாறு பயம், துக்கம், வெட்கம், கோபம் முதலியவற்றை நீக்கி. இருவோரும் ஒருவரிலொருவர் பூரணஅன்புடையவராய்க் கூடிப் பெறும் புத்திரரே அழகும் ஆரோக்கியமும் நற்குண நற்செய்கைகளு முடையவராய்க் குலத்தை விளங்கச்செய்வராதலின், அந்நூல்களில் விதித்தவாறே கருப்பாதானஞ் செய்தல்வேண்டுமென்பார் "நிஷேக விதிசெய்யவேண்டும்" என்ருர். (7)

**அத்தமுரு டேரோண மனுடமிரே வதிமூல மனிலஞ் செக்கோ, டுத்தரமூன் றுத்தமமான் றலைபுரவி கரும்பவிட்ட முரைதேர் பூசஞ், சித்திரைமத் திமமிவைக ளொழிந்தவையு மாடவன்றன் சென்ம மூன்று, மெத்தியநான் கெட்டாறீ ரேழிரண்டாம் பவ்வமிவை வேண்டா வென்னே.**

(இ - ள்:) ரோகிணி, உத்தரம், அத்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி இவை உத்தமம். அச்சுவினி, மிருகசீரிடம், புநர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம் இவை மத்திமம். இவையல்லாத பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி இந்நாட்களும், ஆடவனது சென்மத்திரயங்களும், சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசைத் திதிகளும் கருப்பாதானத்துக்கு விலக்கப்படுவனவாம். எ - று. (8)

வேறு.

**ஏறுறுகே சரிவணிகன் கடக நற்றண் டிருங்கன்னி சாபமீ னெழுநற் கோட்கள், பேறுறுகண் டந்தன்னி லொன்பா னைந்திற் பிறங்கவிரு நாலுசுத்தம் பெருக நாளும், கூறுமிரா சியும்பொருந்தச் சோமன் புந்தி குருவெள்ளி யிவர்வாரங் கூட மற்ற, மாறுறுபா போதயங்கள் மருவா வண்ணம் வகை தெரிந்தா தானவிதி வழுத்து வாயே.**

(இ - ள்:) இடபம், மிதுனம், சர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், தனு, மீனம் என்னு மிலக்கினங்களில், சுபக்கிரகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-4-5-7-9-10-ம் இடங்களிலிருக்க, எட்டாமிடஞ் சுத்தமாக, நக்ஷத்திரமும் இராசியும் பொருத்தமாக, திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரோதயங்களில் கருப்பாதனஞ் செய்க. ஏனைய மேடம், விருச்சிகம், மகரம், கும்பம் என்னு மிராசிகளும், பாபக் கிரகோதயவிராசிகளும், ஞாயிறு, செவ்வாய், சனி வாரங்களு மாகாவாம். எ - று. (9)

வேறு.

**பூப்புறுநாட் டொடுத்திரெட் டவையுட் கர்ப்பம் பொருந்துமென மறையுணர்ந்த பெரியோர் சொற்றூர், நீப்பிதன்முன் னொருநான்கு மசுத்த நாளா நிகழுமிதி லாதான நேருங் காலைக், காப்புறுவா ணுண்மகவு மற்று மெல்லாங் கனங்குழையாய் குன்றுமுயர் பிதிர்கட் கன்றி, மீப்பயிலுந் தேவகன்ம மதற்கைந் தாநாண் மிக்கவதிற் குறையொண்ணு விளம்புங் காலே.**

(இ - ள்:) மகளிர் பூத்தநாள் முதல் பதினாறு நாட்களுள் கருப்பாதானநிகழ்ந்தால் சருப்பமுண்டாகுமென்று வேதநூற் பொருளுணர்ந்த பெரியோர் சொன்னூர்கள். இப்பதினாறு நாட்களுள், முதலுள்ள நான்கு நாட்களும் விலக்கப்படவேண்டிய அசுத்த நாட்களாம். இந்நான்கு நாட்களிலும் கருப்பாதானம் சம்பவித்தால் காக்கப்படுகின்ற ஆயுளும், புத்திரனும், மற்றைய சிறப்புக்கள் யாவும் கெடும். உயர்ச்சிபொருந்திய பிதிருக்கன்றிச் சுவர்க்கத்திலுள்ள தேவர்களுக்கும் உரிய கன்மஞ் செய்தற்கு ஏற்ற நாள் ஐந்தாநாளாம். இவ்வைந்தாநாட்கு உட்பட்ட நாட்கள் தகுதியற்றனவாம். எ - று.

கனங்குழையாய் என்பது மகடூஉ முன்னிலை. இதுபோலப் பிற் செய்யுட்களில் வருவனவற்றையுங் கொள்க. (10)

## மகளிர் பருவம்; பிரதமார்த்தவம்.

**ஆண்டிருநான் கினிற்கவுரி முப்மூன் றுரோ மதுபகரி லுரோகிணியீ ரைந்து கன்னி, கூண்டவதன் மேலிரச சுவலையென்று குறித்தனர்முற் பூப்புநெறி குறிக்குங் காலை, வேண்டுபகன் முதற்பத்துத் தமர டுப்பால் விளங்குபத்து மத்திமமாம் பிற்பத் தோடாய், நீண்டவிரா வதமநல்லோர் வார மாயினெடுங்கண்ணாய் நல்லதென நியமிப் பாயே.**

(இ - ள்:) மகளிர் எட்டாம் வயதில் கௌரியெனவும், ஒன்பதாம் வயதில் உரோகிணியெனவும், பத்தாம் வயதில் கன்னி யெனவும், அதன்மேல் (பதினொருவயதில்) இரசசுவலை யெனவும் பெயர்பெறுவர். முதன்முதலிவர்கள் இருதுவாகும் காலத்தை யாராயுங்கால், பகலில் முதற்பத்துநாழிகை உத்தமம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுப்பத்துநாழிகை மத்திமம்; பிற்பத்துநாழிகையும், இரவும் அதமம். வாரங்களுள், திங்கள் புதன் வியாழன் வெள்ளி இவை நன்று; ஏனைய வாரங்கள் அதமம். எ - று.

இராஜஸ்வலை - பூப்படைந்திருக்கும் பெண். பிரதமார்த்தவம் - முதற்பூப்பு. ஆர்த்தவம், இருது என்பதினின்று வந்த தத்திதம். (11)

**பதிமரிப்புச் சுகம்வாழ்வு மக்கட் பேறு பயில்மகவு குணம்புதல்வர் மகச்சாக் கன்னி, துதிமகவு கேடனுதை மானி மைந்தர் துளங்குதல்மா தாவகத்திற் றுய்த்த லென்றே, விதி முதலாந் திதியாதி ஞாயி ருதி மிக்கமக வின்மைகுணம் வீயுங் காந்தன், முதிர்மகவு பலநன்மை சுகங்கே டென்றே மொழிக் தனரிப் படிப்பலன்கள் மூன் னு வாயே.**

(இ - ள்:)

## இருது திதிபலன்.

| | | | |
|---|---|---|---|
| பிரதமை | - புருஷநாசம் | நவமி | - விவாகமின்மை |
| துதியை | - சரீரசுகம் | தசமி | - புத்திரலாபம் |
| திருதியை | - நல்வாழ்வு | ஏகாதசி | - கேடு |
| சதுர்த்தி | - புத்திரப்பேறு | துவாதசி | - ஆதரவின்மை |
| பஞ்சமி | - புத்திரலாபம் | திரயோதசி | - மானமுடைமை |
| ஷஷ்டி | - நற்குணம் | சதுர்த்தசி | - புத்திரநாசம் |
| ஸப்தமி | - புத்திரப்பேறு | பூரணை | } - தாய்வீட்டிலிருப்பு |
| அஷ்டமி | - புத்திரநாசம் | அமாவாசை | |

## இருது வாரபலன்.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | - புத்திரநாசம் | வியாழன் | - பலவிதநன்மை |
| திங்கள் | - நற்குணம் | வெள்ளி | - சரீரசுகம் |
| செவ்வாய் | - புருஷநாசம் | சனி | - கேடு. |
| புதன் | - புத்திரப்பேறு | | |

எ - று.

திதிபலன் கூறுமிடத்து, சதுர்த்திக்குத் தரித்திரம் அல்லது வியபிசாரமெனவும், ஷஷ்டிக்குத் துன்பம் அல்லது புத்திரநாசமெனவும், ஸப்தமிக்கு மிக்கநன்மை அல்லது போகமெனவும், அஷ்டமிக்கு நோயெனவும், நவமிக்கு அழுகை அல்லது தரித்திரமெனவும், தசமிக்கு நன்மை அல்லது சுகபோகமெனவும், ஏகாதசிக்கு இன்பம் அல்லது பதிநேசமெனவும், துவாதசிக்குத் துயர் அல்லது புருஷநாசமெனவும், திரயோதசிக்கு இன்பமெனவும், சதுர்த்தசிக்கு வியபிசாரமெனவும், பூரணைக்குப் பூரணலாபமெனவும், அமாவாசைக்குக் குலநாசமெனவும்; வாரபலன் கூறுமிடத்து, ஞாயிறுக்கு ரோகமெனவும், திங்களுக்குக் கற்பெனவும், செவ்வாய்க்குத் துக்கமெனவும், புதனுக்குப் புத்திரிப்பேறெனவும், வியாழனுக்கு நல்லொழுக்கமெனவும், வெள்ளிக்குப் புத்திரலாபம் அல்லது பதிநேசமென்வும், சனிக்குத் தரித்திரமெனவும் வேறு நூல்கள் கூறுகின்றன. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனலாதி காலுமுன் றடைவி லெண்ணி யரும்புதல்வர்
நோய்வாழ்வு மகவிலாமை, தனபதிசார் விதவைகுணமின்மை
யென்றே சாற்றுகமே டாதிபலஞ் சாற்றுங் காலை, வினயமுறு
சாகசம்பே ரசதி மைத்தர் மிகல்துலக்கே டறைசேய்சா வாழ்வு
நன்மை, வனையுமெழிற் பரத்தைகுண மின்மை நோய்மெய்
வாழ்விலிசேர் மடக்கையென வழங்கு வாயே.

(இ - ள்:) கார்த்திகை முதல் நான்கு நக்ஷத்திரங்கள் அப்பியந்தரமெனவும், மேல் புநர்பூசமுதல் மூன்று நக்ஷத்திரங்கள் பஹிர்ப்பவமெனவும், இவ்வாறு முறையே மகம், அனுஷம், அவிட்டம் இவை முதலாக நந்நான்கு நக்ஷத்திரங்கள் அப்பியந்தரமெனவும்; சித்திரை, உத்தராடம், ரோகிணி இவை முதலாக மும்மூன்று நக்ஷத்திரங்கள் பஹிர்ப்பவமெனவும் சொல்லப்படும். இவற்றுள் உத்தராடமுத லெண்ணும்பொழுது, உத்தராடத்துக்கும் திருவோணத்துக்கு மிடையில் அபிசித்தையுஞ்சேர்த் தெண்ணல் வேண்டும். இங்ஙன மெண்ணிக்கண்ட நாட்களுள், மகளிர் இருதுவான நக்ஷத்திரம் அப்பியந்தரத்துள் முதலாவதாயின் புத்திரப்பேறு; இரண்டாவதாயின் வியாதி; மூன்றாவதாயின் போகம்; நான்காவதாயின் புத்திரநாசம். அஃது பஹிர்ப்பவத்துள் முதலாவதாயின் தனலாபம்; இரண்டாவதாயின் புருஷநாசம்; மூன்றாவதாயின் துர்க்குணம். இவற்றின் விவரம் வருமாறு:—

## இருது நக்ஷத்திரபலன்.

| | | | |
|---|---|---|---|
| அப்பியந்தரம் 4 | கார்த்திகை | — | புத்திரப்பேறு |
| | ரோகிணி | — | வியாதி |
| | மிருகசீரிடம் | — | போகம் |
| | திருவாதிரை | — | புத்திரநாசம் |
| பஹிர்ப்பவம் 3 | புநர்பூசம் | — | தனலாபம் |
| | பூசம் | — | புருஷநாசம் |
| | ஆயிலியம் | — | துர்க்குணம் |
| அப்பியந்தரம் 4 | மகம் | — | புத்திரப்பேறு |
| | பூரம் | — | வியாதி |
| | உத்தரம் | — | போகம் |
| | அத்தம் | — | புத்திரநாசம் |
| பஹிர்ப்பவம் 3 | சித்திரை | — | தனலாபம் |
| | சுவாதி | — | புருஷநாசம் |
| | விசாகம் | — | துர்க்குணம் |
| அப்பியந்தரம் 4 | அனுஷம் | — | புத்திரப்பேறு |
| | கேட்டை | — | வியாதி |
| | மூலம் | — | போகம் |
| | பூராடம் | — | புத்திரநாசம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| பஹிர்ப்பவம் 3 | உத்தராடம் | — | தனலாபம் |
| | அபிசித்து | — | புருஷநாசம் |
| | திருவோணம் | — | துர்க்குணம் |
| அப்பியந்தரம் 4 | அவிட்டம் | — | புத்திரப்பேறு |
| | சதயம் | — | வியாதி |
| | பூரட்டாதி | — | போசும் |
| | உத்தரட்டாதி | — | புத்திரநாசம் |
| பஹிர்ப்பவம் 3 | ரேவதி | — | தனலாபம் |
| | அச்சுவினி | — | புருஷநாசம் |
| | பரணி | — | துர்க்குணம் |

## இருது இலக்கினபலன்.

| | | |
|---|---|---|
| மேடம் | — | மனத்துணிவு |
| இடபம் | — | வியபிசாரம் |
| மிதுனம் | — | புத்திரலாபம் |
| கர்க்கடகம் | — | குலத்துக்கினம் |
| சிங்கம் | — | புத்திரநாசம் |
| கன்னி | — | செல்வம் |
| துலாம் | — | சுசம் |
| விருச்சிகம் | — | வியபிசாரம் |
| தனு | — | துர்க்குணம் |
| மகரம் | — | வியாதி |
| கும்பம் | — | வாழ்வின்மை |
| மீனம் | — | அழகுடைமை. |

எ - று.

அபிசித்தென்பது உத்தராடத்து நாலாங்காலும் திருவோணத்தின் ஆதிநாழிகை நான்குங் கொண்டது. அப்பியந்தர நாட்களில் இருதுவான பெண் மங்கலியம், புத்திரலாபம், பலவிதசுகம் இவற்றுடன் கூடியவளாவளென்றும், பஹிர்ப்பவ நாட்களில் இருதுவான பெண் துக்கம், புத்திரநாசம், புருஷநாசம், வியபிசாரம் இவற்றுடன் கூடியவளாவளென்றும் வேறுநூல்கள் பொதுவாகக் கூறுகின்றன. மேடத்துக்கு இடர், வியபிசாரம் அல்லது திருவிலாமை எனவும், இடபத்துக்குப் பதிவிரதை அல்லது சுகபோகம் எனவும், மிதுனத்துக்குச் சர்வசம்பத்து எனவும், கர்க்கடகத்துக்கு வியபிசாரம் எனவும், சிங்கத்துக்குப் புத்திரலாபம் எனவும், கன்னிக்கு மிதகர்புடைமை எனவும், துலாத்துக்குப் புத்திசாமர்த்தியம் எனவும், விருச்சிகத்துக்குத் திருவிலாமை எனவும், தனுவுக்குத் திருவிலாமை எனவும், தனுவின் முற்பாதிக்குத் தீயொழுக்கம் பிற்பாதிக்குக் கற்பு எனவும், மகரத்துக்கு மானக்கேடு அல்லது போகமுடைமை எனவும்; கும்பத்துக்குந் தனதானியலாபம் எனவும், மீனத்துக்குத் திருவிலாமை, புத்திசாமர்த்தியம், கணவனை நேசித்தல் அல்லது சோபமுடைமை எனவும் வேறு நூல்கள் கூறுகின்றன. (13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லசுபோ தயமம்சம் பார்வை மிக்க நன்மைகளாங் கதி ருதய மரிப்புத் திங்கள், சொல்லுறுமா தாவகத்தி லிருக்குஞ் செவ்வாய் சுதரின்மை புத்திமகச் சிறக்கும் வாழ்வா, நல்ல லறுங் குருவெள்ளி நன்மை சால வருக்கன்சேய் சண்டை யிரண் டாவுந் தோன்றிற், புல்லியநீங் கெனவுளத்திற் கொள் வாய் தீயோர் பொருந்துதய வர்க்கமெலாம் பொல்லா வென்றே.

(இ - ள்:) இருதுவான இலக்கினத்திற் சுபக்கிரகங்களிருப் பினும், இலக்கினம் சுபாம்சமாயினும், சுபக்கிரகங்கள் இலக்கி னத்தை நோக்கினும் மிகுந்த நன்மையாம். பாபக்கிரகங்களு டைய உதயம், அம்சம், நோக்குகள் மிகுந்த தீமையாம்.

## இருதுலக்கினத்திற் கிரகங்கள் நிற்கும் பலன்.

| | |
|---|---|
| சூரியன் —மரணம் | வெள்ளி —மிகுநன்மை |
| சந்திரன் —தாய்வீட்டிலிருத்தல் | சனி —கலகம் |
| செவ்வாய்—புத்திரநாசம் | இராகு —தீமை |
| புதன் —புத்திரவிருத்தி | கேது —தீமை |
| வியாழன் —நல்வாழ்வு | |

எ - று.

இருதுலக்கினத்து நின்ற கிரகங்களின் பலன் கூறுமிடத்து, சூரிய னுக்குத் தீமையெனவும், சந்திரனுக்குப் பெண்குழந்தைகளையே பெறுத லெனவும், சனிக்குப் புருஷநாசம் அல்லது துக்கமெனவும், இராகு கேதுக்களுக்குத் துக்கம் அல்லது மரணமெனவும் வேறு நூல்கள் கூறு கின்றன. (14)

## இருது ஆடைபலன்.

வச்சிரனின் மகவைந்து வெள்ளை யாடை வன்னியிரு மூன்றுகறுப் பியம னெட்டு, நிச்சயஞ்சேர் கேடிமடி நிருதி வந்தி நிகழ்மலினங் கலைவருண னீடு வெள்ளை, மெச்சுமக வாறுமருத் தைந்து செம்மை மிகுபுடைவை குபேரனிரண் டைந்து மக்கள், தைச்சபழஞ் சிலைபதி னொன்று மக்க டலை யெழுத்துக் கலைபீசன் சாற்று வாயே.

## இருது வஸ்திரபலன்.

வேறு.

கலையினில் வெள்ளை சுகங்கறுப் பாடை காந்தனுக் கழிவ தாங் கோடி, நிலைபெறு சதியா மழுக்கெனில் மிடிமை நேரு நல் வெண்மைமே னிகழ்ந்த, கலைபதி விரதை செம்மைநோய் புழைய கலையெனிற் றுர்ப்பகி யெழுத்துத், தலைபடு கலையே லரசினேர் வாழ்வு தருமென வதிந்திவை சாற்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) இருதுபலன் வினவுந் தூதன் நிற்கும் நிலையைக் கொண்டு பலன் கூறும் வகை வருமாறு:—

| திக்கு | பிள்ளை | புடைவை | பலன் |
|---|---|---|---|
| கிழக்கு | 5 | வெள்ளை | சுகம் |
| தென்கிழக்கு | 6 | கறுப்பு, நீலம் | புருஷநாசம் |
| தெற்கு | 8 | கோடி | கற்பு |
| தென்மேற்கு | 0 | அழுக்கு | வறுமை |
| மேற்கு | 6 | வெள்ளை | கற்பு |
| வடமேற்கு | 5 | சிவப்பு | வியாதி |
| வடக்கு | 10 | கந்தை | வியபிசாரம் |
| வடகிழக்கு | 11 | தலைப்பில் எழுத்துள்ளது | அரசிபோல வாழுதல். எ - று. |

இவற்றுள், கிழக்கிற்கு 7 புத்திரர், பழையவஸ்திரமெனவும்; தென்கிழக்கிற்கு 1 புத்திரன், பச்சைவஸ்திரமெனவும்; தெற்கிற்குப் பலநிறம் அல்லது சிவப்பு வஸ்திரமெனவும்; தென்மேற்கிற்கு 4 புத்திரர், வெள்ளை வஸ்திரமெனவும்; மேற்கிற்கு 6 புத்திரிகளும் 3 புத்திரரும் எனவும்; அழுக்குவஸ்திரம் எனவும்; வடமேற்கிற்கு 6 புத்திரரெனவும்; 2 புத்திரர், காஷாயவஸ்திரமெனவும்; வெள்ளைவஸ்திரம், சக்களத்தியுண்டாதலெனவும்; வடக்கிற்கு 1 புத்திரன், வெள்ளைவஸ்திரமெனவும்; 9 புத்திரர், சித்திரவஸ்திரமெனவும்; வடகிழக்கிற்கு புத்திரரின்மை, அழுக்குவஸ்திரமெனவும்; 10 புத்திரர், காவிவஸ்திரமெனவும்;— இருது வஸ்திரபலன் கூறுமிடத்து, கறுப்பு அல்லது நீலவஸ்திரத்துக்கு மிருத்துபயமெனவும், உறுதியான கோடிவஸ்திரத்திற்குக் கற்பு சுகமெனவும், கலப்பு வர்ணத்திற்குத் தரித்திரம் அல்லது புத்திசாமர்த்தியமெனவும், வெள்ளைக்குப் புத்திரப்பேறெனவும், பச்சைவஸ்திரத்திற்குக் கற்பெனவும், பொன்னெழுத்துவஸ்திரத்திற்குப் போகபாக்கியமெனவும், பட்டுவஸ்திரத்திற்குப் பதிநேசமெனவும், மஞ்சள்வஸ்திரத்திற்கு நற்குணமெனவும், அழுக்குவஸ்திரத்துக்குத் துக்கமெனவும் வேறு நூல்கள் கூறுகின்றன. (15—16)

## இருது தரிசித்தவர் பலன்.

முன்னுறத் தானே கண்டிடிற் றுக்க முதிர்விலாக் கன்னியர் காணில், மன்னிய செல்வம் புருடரேற் றீதா மங்கல மங்கல மடவார், பன்னுவை தவமாம் விதவையர் காணிற் பதிக்குநோய் நோயின ரென்னிற், றுன்னிய சார்வோ ரெனின் மிடி பிறரேற் சுகமெனத் துடியிடை சொல்லே.

(இ - ள்:) இருதுவான குறியைத் தானே கண்டால் துக்கம். இருதுவாகாத கன்னிகைகள் கண்டாற் செல்வம். புருஷர் கண்டால் தீமை. சுமங்கலிகள் கண்டால் மங்கலம். விதவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டால் விதவையாதல். நோயாளிகள் கண்டால் நாயகனுக்கு வியாதி. ஏவலாளர் கண்டால் வறுமை. அந்நியர் கண்டால் சுகம். எ - று.

நோயாளிகள் கண்டால் வியாதியெனவும், தாசிகள் கண்டாற் செல்வம் ஆயுள்விருத்தி யெனவும், புருஷர் கண்டால் தரித்திரமெனவும், பேடியர் கண்டால் சௌக்கியமெனவும், எண்ணெயிட்டுக்கொண்டவர் கண்டால் துக்கமெனவும் வேறு நூல்கள் கூறுகின்றன. (17)

## இருது ஸ்தானபலன்.

**உயர்பெணி லுயர்வாம் வாகனந் தன்னி லோங்கிய வாகன முண்டாம், பயமுறு நதியின் கரையிடைக் காணிற் பண்ணிய தனம்பல பலிக்குந், துயர்வறு புணர்வின் கண்ணெனி னில மாந் தூயதன் வீடெனிற் சுகமாப், நயமுறு புறமேல் வழக்க தாம் வாய்த்த னன்மக வழிவென நாடே.**

(இ - ள்.) உயர்ந்தவிடத்தில் இருதுவானால் நல்வாழ்வுண்டாம். வாகனத்தின்மேல் இருதுவானால் வாகனலாபமுண்டாம். ஆற்றங்கரையில் இருதுவானால் திரவியலாபமுண்டாம். புணர்ச்சியின்போது இருதுவானாற் பூமிப்பேறுண்டாம். தன்வீட்டினுள் இருதுவானாற் சுகமுண்டாம். மனையின் பின்புறத்தில் இருதுவானால் வழக்குண்டாம். மனைவாயிலில் இருவானாற் புத்திரநாசமுண்டாம். எ - று.

உயர்ந்தவிடத்தில் இருதுவானால் வாழ்வுண்டாமென்றதனால், தாழ்ந்தவிடத்தில் இருதுவானாற் றாழ்வுண்டாமென்பது பெறப்படும்.

வேறுநூல்களில், அந்நியர்வீட்டில் இருதுவானால் வியபிசாரியாவாளென்றும், புணர்ச்சிவேளையிலிருதுவானாற் போருட்சேதமுண்டாகுமென்றும், ஜனக்கூட்டத்தின்முன் இருதுவானால் ஆயுள்விருத்தியுண்டாகுமென்றும், ஸ்திரீகளின் மத்தியில் இருதுவானால் தனதானியவிருத்தியுண்டாகுமென்றும், வீட்டினுள் இருதுவானால் நல்லொழுக்கமுடையவளாவாளென்றும், வெளியில் இருதுவானால் வியபிசாரியாவாளென்றும் கூறப்பட்டிருக்கின்றது. (18)

## இருது சமயபலன்.

**தலைபடு மெண்ணெய் நோத்திற் காணிற் சாற்றிய மரணமா முழுது, நிலையினின் மிடியாம் போசன கால நிகழ்சுப போசன நேரு, முலைவுறு சயன மெனிற்பிதா மரிக்கு மோங்கிய நடைபதி நாசம், நலவிரை நோயாம் பணிவெனிற் சுபமாய் நாட்டினர் வடகலை நரரே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்.) தலையில் எண்ணெயிட்டுக்கொண்டிருக்கும் போது இருதுவானால் மரணபயமுண்டாம். ஸ்நானஞ்செய்யும் போது இருதுவானால் வறுமையுண்டாகும். புசிக்கும்போது இருதுவானாற் போசனசுசமுண்டாம். நித்திரைசெய்யும்போது இருதுவானாற் பிதாவுக்கு மரணமுண்டாகும். வழிநடக்கும் போது இருதுவானால் நாயகனுக்கு மரணம் நேரிடும். இருக்கும் போது இருதுவானால் நோயுண்டாகும். வணக்கஞ்செய்யும் போது இருதுவானாற் சுபமுண்டாம். எ - று.

வேறு நூல்களில், உட்கார்ந்திருக்கும்பொழுது இருதுவானாற் புத்திர பௌத்திர சுகமுண்டாகுமென்றும், படுத்திருக்கும்பொழுது இருதுவானாற் சுகமுந் தனமுமுண்டாகுமென்றும், ஓமஞ்செய்யுங்காலத்திலிருதுவானால் மித்திரலாபமுண்டாமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. (19)

## பும்சவனம்.

வேறு.

**மூன்றுறு நான்கெட்டாந் திங்க டன்னின் முழுமதியின் பலந்தோன்றப் பூசத் தோணத், தான்றுய வலவனொடு தண்டு கன்னி யல்லாத ராசிகளி னன்கோ டொன்பான், ஏன்றுய பன்னொன்கி ருவாக்கள் போக்கி யிசைந்துறுநற் பக்கத்தில் வாரம் வெள்ளி, வான்றுவு புதன்றிங்கள் குருவிற் பும்ச வன மிருநான் கிடஞ்சுத்தம் வாய்ப்பச் செய்யே.**

(இ - ள்.) கருப்பமுற்ற மூன்றும் நான்காம் ஆறும் எட்டாம் மாதங்களுளொன்றில், சந்திரன் பலவானாயிருக்க, பூசம் திருவோணம் என்னும் நக்ஷத்திரங்களில், சதுர்த்தி ஷஷ்டி அஷ்டமி துவாதசி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை அல்லாத திதிகளில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரங்களில், மிதுனம் கர்க்கடகம் கன்னி அல்லாத இலக்கினங்களில், எட்டாமிடஞ் சுத்தமாகப் பும்சவனம் செய்யலாம். எ - று.

நற்பக்கத்தில் என்றதனால் பக்கச்சித்திரைகளாகிய ஷஷ்டி அஷ்டமி துவாதசிகளும் விலக்கப்பட்டன.

பும்சவனமாவது, கருப்பஸ்திரீயின் கணவன் வாமதேவ மந்திரத்தால் ஆயிரம் அல்லது நூற்றெட்டுத்தர மோமஞ்செய்து, அந்த மந்திரத்தினாலேயே ஆண்மகவு பிறக்கும்படி ஆலமுகிழ், பால், உழுந்து இவைகளைக் கொண்டு கருப்பவதியின் நாசியிற் பிழியுங் கிரியை. (20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீமந்தம்.

மன்னுமுதற் கருப்பமதற் கிரவி பாத வகையானுன் சாறெட்டா மாதந் தம்மி, லுன்னரிய மறையோர்க்குத் தகுஞ்சீ மந்த முலகுதனிற் செய்யவிதி யுளதா போணங், கன்னி குருப் புனர்தமிரே வதிதேர் மும்மீன் கருதியமூன் றுத்தரத் திற் கவிமா றிங்கள், பொன்னுறுவா ரத்தரிதே ணிக்கிப் பக் கம் பொருந்தியசித் திரையிருத்தை போக்கிக் கொள்ளே.

(இ - ள்:) முதற்கருப்பமான நான்காம் ஆறாம் எட்டாம் சௌரமாதங்களுளொன்றில், ரோகிணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் உத்தராடம் திருவோணம் உத்தராட்டாதி ரேவதி என்னும் நக்ஷத்திரங்களில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரங்களில், சதுர்த்தி ஷஷ்டி அஷ்டமி நவமி துவாதசி சதுர்த்தசி அமாவாசை அல்லாத திதிகளில், சிங்கம் விருச்சிகம் அல்லாத இலக்கினங்களில் பிரமணர் விதிப்படி சீமந்தஞ் செய்தல்வேண்டும். எ - று.

சீமந்தமாவது, கருப்பவதியின் புருஷன் வியாகிருதி மந்திரத்தாலும் அகோர மந்திரத்தாலும் நூற்றெட்டுத்தரம் ஓமஞ்செய்து, தருப்பை அத்தி அரசங்கொம்பு மூன்றிடத்து விளர்ப்பு (வெண்மை) உள்ள பன்றிமுள் இவைகளைக் கூட்டி, வித்தியாங்க மந்திரத்தினால் கருப்பஸ்திரீயின் தலையிலிரை வகிரும்படி நெற்றிமுதல் மேலீழுத்துச் செய்யுங் கிரியை. (21)

## விஷ்ணுபலி.

சிறந்ததிங்க ளிருநான்கின் முற்பக் கத்துச் செப்பியவே ழீராறுந் திங்க டம்மி, லறந்தருநா டிருவோண மாதல் வைய மாதவிவை சம்பவிக்க வறக்கார் நீக்கி, யறைந்தபகற் பூருவான் னத்தி னுதலன் றிமத்தி யான்னத்தி னுள்ளே யாத, னறுங்குழலார் வயின்கருப்பம் பிறக்க விண்டு நல்லபலி யிடுவதற்கு நவின்ற தாமே.

(இ - ள்:) கருப்பமான எட்டாம் மாதத்தில், பூருவபக்க ஸப்தமி துவாதசித் திதிகளில், ரோகிணி திருவோண நக்ஷத்திரங்கள் பொருந்த, இராக்காலத்தை நீக்கி, பகலில் பூருவான்னத்திலாதல் மத்தியான்னத்திலாதல் பெண்கள் வயிற்றினுட் கருப்பம் நன்முக வளர்ந்து பிறத்தற்பொருட்டு விட்டுணுபலியிடுக. எ - று. (22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூதிகாக்கிருகப் பிரவேசம்.

நவ்விகரும் பிரேவதிமான் றலைசேர் சோதி நற்ருல முத்தரமூன் ருதி யோணஞ், செவ்வியசித் திரையிவைபிற் குடக்தே வன்றிச் சிறந்தொழிந்த விராசிகளி லிருத்தை போக்கிக், கவ்வையறு நற்றிதியிற் காரி திங்கள் கவிகுருமால் வாரமிவை யனுகூலிக்க, வெவ்வமினற் கோளுதயஞ் சேர நோக்க மெழச்சூதி கைக்கிருகத் தேகு வாயே.

(இ - ள்.) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் உத்தராடம் திருவோணம் உத்தரட்டாதி ரேவதி என்னும் நக்ஷத்திரங்களில், சதுர்த்தி அஷ்டமி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை அல்லாத திதிகளில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி சனி வாரோதயாம்சங்களில், விருச்சிகம் கும்பம் அல்லாத இலக்கினங்களில், சுபக்கிரகங்கள் உதயத்தினிற்க அல்லது நோக்கப் பிரசவ வீட்டில் கருப்பஸ்திரீ பிரவேசிக்கலாம். எ - று. (23)

## சூதிகாக்கிருகப் பொருத்தம்.

கண்ணியவக் கிருகத்தை யறைபன் னாறய்க் கண்டதனி னடுநான்கு நீக்கி மீது, பண்ணியவை சான்னியத்தில் மீனக் தன்னைப் பாரித்து மேடமுதல் வலமாய் வைத்து, நண்ணிய விவ் விராசிகளின் மகரஞ் சிங்க நண்டுறுலை யாறெட்டு நான்மூன் ருகாத், திண்ணியவ ரொழிந்தவைக ணன்ரு மென்று தெய்வவட நாலுணர்ந்தோர் செப்பி னாரே.

(இ - ள்.) சூதிகாக்கிருகத்தை (கீழேகாட்டியவாறு) பதினாறு அறைகளாகப் பகுத்து, அவற்றுள் நடுவிலுள்ள நான்கறைகளையும் நீக்கி ஒழிந்த பன்னிரண்டு அறைகளையும் வடகிழக்கிலிருந்து வலமாக முறையே மீனம் மேடம் இடபம் என்று குறித்து, அவற்றுள் கர்க்கடகம் சிங்கம் துலாம் மகரம் என்னும் இராசிகளையும் கருப்பஸ்திரீயின் சென்மராசிக்கு ஆறு எட்டுப் பன்னிரண்டாம் இராசிகளையும் தவிர்த்து, ஒழிந்த இராசிகள் பிரசவத்தானமாதல் உத்தமம். எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுன |
| கும்பம் | | | கர்க்கடகம் |
| மகரம் | | | சிங்கம் |
| தனு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

வடக்கு — தெற்கு

மேற்கு

(24)

மகளிர்வினைப்படலம் முற்றிற்று.

---

## இரண்டாவது

# மைந்தர்வினைப்படலம்.

### சாதகன்மம்.

***சாற்றியிடு கற்புதல்வன் சாத மான தற்காலத் திரணமது தணத்தல் வேண்டி, யேற்றமிகு தந்தைதிதி வார நாட்க ளின் றிமகக் காண்பதுல கியல்ப தன்றி, மாற்றரிய நாட்கழிந்தாற் சுபகா லங்கண் மதித்துமகக் கண்டுமன மகிழ நாபி, தேற்ற முற வரிவதன்முன் சாத கன்மஞ் செய்ததற்பி னரிட்டவிதி தேரு வாயே.***

(இ - ள்:) *புத்திரன் பிறந்த நேரத்தில், பிதிருதேவதைகளின் கடன் நீங்கும்படி, பிதா திதி வார நக்ஷத்திராதி சுபங்களைக் கவனிக்காது உடனே புத்திரமுகதரிசனம் பண்ணவேண்டும். அக்நாட் கழிந்தாற் சுபகாலத்திற் பார்த்தல்வேண்டும். தொப்பூழறுத்தற்கு முன் சாதகன்மஞ் செய்து, பின் பிறந்த நேரத்துக்குரிய இலக்கின கிரகநிலைகளால் அரிட்டங்களை ஆராய்க. எ - று.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதகன்மமாவது, புத்திரன் பிறந்தவுடன் தொப்பூழ்க்கொடி யறுத்தற்கு முன் செய்யுங் கிரியை. அஃது அஸ்திரமந்திரத்தை யுச்சரித்து நூறு ஓமஞ்செய்து, வாமமந்திரத்தை யுச்சரித்துக் குழந்தைமுகத்தை எதிர்நோக்கி, பஞ்சப்பிரம மந்திரத்தை யுச்சரித்து உச்சிமோந்து, புருஷமந்திரத்தைக் குழந்தையின் வலக்காதிற் சொல்லுதலாம்.

புத்திர முகதரிசனத்தால் தகப்பன் பிதிருதேவதைகளின் கடனைத் தீர்த்தவனாகின்றமைபற்றி "இரணமது தணத்தல் வேண்டி" என்றார். பிள்ளை பிறந்தவுடன் தகப்பன் நதி குளம் கிணறு முதலியவைகளில் உடுத்த வஸ்திரத்துடன் வடக்குமுகமாக ஸ்நானஞ்செய்து, பூமி பசு பொன் ஆடை அணி நெல் எள் முதலியவைகளி லியன்றவற்றைச் சற்பாத்திரமான பிராமணருக்குத் தானங்கொடுத்து, தன் குலபந்துக்களுடன் புத்திரமுகதரிசனஞ்செய்து, அதன்பின் பிள்ளை பிறந்த காலத்தின் இலக்கின கிரக பலன்களை விசாரித்தல் முறையாம். (25)

## அரிட்ட பலன்.

### மாதா அரிட்டம்.

பிறத்தலுறு மோரைக்கெட் டேழிற் பாவர்
பிறங்கவவர் நோக்குறினு மன்றிச் சென்மத்
துறப்பெறுமோ ரைக்கெட்ட ராறே ழாறி
லுதித்திடினுஞ் சுபர்மகவி னோடு மாதா
விறத்தலுறு மாறீரா றிவையிற் பாப
ரெழின்மாதா வின்றிமக விறக்கு மேழெட்
டறிக்கையுறு பாபருறின் மைந்த ரின்றி
யாங்கிடைமா தாமரிக்கு மணங்க னாளே.

(இ - ள்:) பாபக்கிரகங்கள் சென்மலக்கினத்துக்கு ஏழாம் எட்டாம் இடங்களில் இருக்க, இலக்கினத்தைப் பாபக்கிரகங்கள் பார்க்கினும், சுபக்கிரகங்கள் ஆறும் ஏழாம் எட்டாம் பன்னிரண்டாம் இடங்களில் இருப்பினும் மகவும் மாதாவும் மரணமாம். பாபக்கிரகங்கள் ஆறும் பன்னிரண்டாம் இடங்களில் இருப்பின் மாதாவிறக்காது மகவு மரணமாம். ஏழாம் எட்டாம் இடங்களில் பாபக்கிரகங்கள் இருந்தால் மகவிறக்காது மாதா மரணமாம். எ - று. (26)

### பிதா அரிட்டம்.

கதிரவன்ற னிராசிக்கெட் டதனில் மந்தன்
காசினிசேய் கலந்துசுபர் விழிப்பு மின்றி
முதிர்வுறுமக் காலத்துப் பிறத்தல் செய்யின்
முன்னியதா தாமரிக்கு முடவன் செவ்வாய்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*சதியுறுமச் சரராசி யிடையிற் சார்ந்து*
*தணப்பின்றி விழிக்குங்காற் பரதே சத்துப்*
*பிதிரகல்வ னெனவடநூல் கற்ற றிந்த*
*பெற்றியினர் சொற்றபடி பேசு வாயே.*

(இ - ள்:) பிள்ளை பிறக்குங் காலம் செவ்வாயுஞ் சனியுங் கூடிச் சூரியனுக்கு எட்டாமிராசியிலிருக்க, சுபக்கிரக நோக்க மில்லையாயின் பிதா மரணமாம். செவ்வாயுஞ் சனியுஞ் சர ராசிகளிலிருந்து சூரியனை நோக்கில் பிதா பரதேசமடைவான். எ - று. (27)

## மாதுலர், பந்து, மகவு, பிதா அரிட்டம்.

*சென்மத்தி லீராறே ழெட்டிற் பாபர்*
*திகழுங்கால் மாதுலர்க்குத் தீதாம் பத்தி*
*னன்மொய்த்த கதிர்மதிய நான்கிற் பாபர்*
*நனியேழில் வெள்ளியுறி னுசம் வெந்து*
*தொன்மைத்தாஞ் சனியைந்து மதலைக் காகா*
*சொற்றிடுமப் பிதாவரிட்டஞ் சொல்லுங் காலை*
*யன்மொய்த்த குழன்மடவா யஞ்சிற் செவ்வா*
*யடைவதுதா னெனக்கருதி யறைந்தி டாயே.*

(இ - ள்:) சென்மலக்கினத்துக்கு ஒன்று ஏழு எட்டுப் பன்னிரண்டாமிடங்களில் பாபர் நிற்கில் மாதுலர்க்கு அரிட்டம். பத்தில் சூரியனும் சந்திரனும், நாலில் பாபரும், ஏழில் சுக்கிரனும் நிற்கில் சுற்றத்தார்க்கு அரிட்டம். ஐந்தில் சனியிருப்பின் மகவுக்கு அரிட்டம். ஐந்திற் செவ்வாயிருப்பின் பிதா வரிட்டம். எ - று. (28)

## அரிட்டம் பலிக்குங்காலம்.

*தந்தைதாய் சகோதரமா துலன்றாய் தாயர்*
*தகைவில்பிதாத் தந்தைசுத ரடைவே வெய்யோ*
*னிந்துகுசன் புதன்கனகன் வெள்ளி காரி*
*யிவர்கோணத் துறிலவர்க ளவர்கட் காகா*
*முந்தயன முகூர்த்ததிசா விருது மாத*
*மூவைந்து நாள்வருட மூறையே செவ்விப்*
*பைந்தொடியாய் கதிர்முதலா யரிட்ட மெல்லாம்*
*பலித்திடுங்கா லங்களிவை பகருங் காலே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) ஜென்மலக்கினத்துக்கு ஐந்து ஒன்பதாமிடங்களில் சூரியன் நிற்கில் ஆறுமாதம்வரை பிதாவுக்கும், சந்திரன் நிற்கில் இரண்டுநாழிகைவரை மாதாவுக்கும், செவ்வாய் நிற்கில் ஒருஇரவுவரை சகோதரருக்கும், புதன் நிற்கில் இரண்டுமாதம்வரை மாதுலருக்கும், வியாழன் நிற்கில் ஒருமாதம்வரை மாதாவின் மாதாவுக்கும், சுக்கிரன் நிற்கில் பதினைந்துநாள்வரை பிதாவின் பிதாவுக்கும் சனிநிற்கில் ஒருவருடம்வரை பிள்ளைக்கும் அரிட்டமாம். எ - று. (29)

## நக்ஷத்திர அரிட்டம்.

### மூலம்.

மூலத்தின் முதற்காலிற் பிறத்தல் செய்யின்
முன்னியவாண் டிருநான்க தளவுந் தாதா
ஞாலத்தின் மைந்தர்முகங் காண வாகா
நண்ணிரண்டு தாயருக்கு நலத்த தன்று
சீலத்தின் மூன்றாங்கால் பொருட்குச் சேதஞ்
செப்பியநான் கென்னின்மிகு சிறப்பா மன்றி
வேலொத்த விழிமடவாய் செல்லா மூலம்
மிகக்கொடிதீங் கிதுபோல விளம்ப ராவே.

(இ - ள்:) ஆயிலியம், மூலம் இவைகளின் முதற்காலிற் பிள்ளை பிறக்கின் பிதா எட்டு வருடங்கள்வரை பிள்ளையைப் பார்க்கலாகாது. இரண்டாங்காலிற் பிறக்கில் மாதாவுக்கு ஆகாது. மூன்றாங்காலிற் பிறக்கிற் பொருட்சேதம். நாலாங்காலிற் பிறக்கில் மிகு நன்மை. மூலத்தின் ஞெருடக்ஷமானால் பிதாவுக்கு அதிக கேடாம். எ - று. (30)

### பூசம், அத்தம், பூராடம்.

பூசத்துக் கடகத்துப் பிறத்தல் செய்யின்
புதல்வர்பிதா மாதர்க்குப் பொல்லா தாகு
மேசற்ற முதற்காலிற் பிதாவா மற்றை
யெனிலன்னை மூன்றுமைந்த ஞன்கு மாமன்
மாசுற்ற மரிப்புடைய ரத்தம் மூன்றின்
மரித்திடுந்தா தாச்சலநாட் சாபங் கூடில்
பேசுற்ற பிதாமரிக்குங் கால்க ளெல்லாம்
பிறங்கியபூ சப்படியே பேசு வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பூசநக்ஷத்திரத்தில் கர்க்கடகலக்கினத்தில் பிறந்தால் மகவுக்கும் பிதாமாதாக்களுக்கும் தீங்குண்டாகும். பூசம் முதற்கால் பிதாவுக்கும், இரண்டாங்கால் மாதாவுக்கும், மூன்றாங் கால் மகவுக்கும், நாலாங்கால் மாமனுக்கும் அரிட்டமாம். அத்த நக்ஷத்திரத்தின் மூன்றாங்காலிற் பிறக்கில் பிதாவுக்கரிட்டமாகும். பூராடநக்ஷத்திரத்தில் தனுலக்கினத்திற் பிறந்தால் பிதாவுக்கு அரிட்டமாம். பூராடம் முதற்கால் பிதாவுக்கும், இரண்டாங் கால் மாதாவுக்கும், மூன்றாங்கால் மகவுக்கும், நாலாங்கால் மாமனுக்கும் அரிட்டமாம். எ - று. (31)

### பரணி, சித்திரை, உத்தரம்.

*பரணியின்மூன் றாங்காலிற் பிறக்கிற் றாதா*
*பயின்மாதா மரிப்புறுவர் பயற்றி லாதி*
*விரவியகாற் பிதாவிரண்டு மாதாச் சாவாம்*
*மென்கொடியா ளுதிக்குங்காற் பூசம் போலும்*
*கருதியிடு முத்தரத்தின் முதற்கா லொன்றிற்*
*கண்ணியமா தாமரண மடைவள் சாலப்*
*புரையறுவேல் விழியுடையா யரிட்ட மெல்லாம்*
*புசனூலிற் சொன்னபடி போக்கு வாயே.*

(இ - ள்:) பரணிநக்ஷத்திரத்தின் மூன்றாங்காலிற் பிறக்கில் பிதாவுக்கும் மாதாவுக்கும் அரிட்டம். சித்திரை முதற்கால் பிதாவுக்கும், இரண்டாங்கால் மாதாவுக்கும் அரிட்டமாம். கன்னிலக்கினமாகச் சித்திரை முதற்காலிற்பிறக்கில் பிதாவுக்கும், இரண்டாங்கால் மாதாவுக்கும், மூன்றாங்கால் மகவுக்கும், நான் காங்கால் மாமனுக்கும் அரிட்டமாம். உத்தரத்தின் முதற்கா லிற் பிறக்கில் மாதாவுக்கு அரிட்டமாம். இவ்வரிட்டத்தின் விரிவெல்லாம் பரந்தநூல்களிற் கண்டுகொள்க. (32)

### கெண்டாந்தம், விட்டி முதலியன.

*உருத்ததிதி நாளோரைக் கெண்டாந் தத்தி*
*லுற்பவிக்கிற் றந்தை மகச்சாம் விட்டி*
*பெருத்தமிடி குளிகனிலுற் பாத காயம்*
*பிறங்கியும் கண்டகன்பங் கிருத்தை யென்னிற்*
*பொருத்தலியாம் வெதிபாதந் தங்க் வீனம்*
*புகல்பரிகஞ் சுதர்சரவை திருதி தந்தை*
*மரித்திடுஞ்சூ லஞ்சகல நாச மந்த*
*மருவியநாட் குலமனைத்து மாளு மன்றே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பஞ்சமி, தசமி, பூரணை, அமாவாசைத் திதிகளினீற்றில் இரண்டுநாழிகை திதிகண்டாந்தம். அச்சுவினி, மகம், மூலம் இவற்றாதியில் இரண்டுநாழிகையும், ஆயிலியம், கேட்டை, ரேவதி இவற்றினந்தத்தி லிரண்டுநாழிகையும் நக்ஷத்திரகண்டாந்தம். மேடம், சிங்கம், தனு இவ்விராசிகளின் முதலங்கிஷமும், சர்க்கடசம், விருச்சிகம், மீனம் இவ்விராசிகளின் கடைசி அங்கிஷமும் இராசிகண்டாந்தம். இத் திதி நக்ஷத்திர இராசி கண்டாந்தங்களில் பிறக்கில் தாய் தந்தை மகவு மரணமாம். விட்டியிற் பிறக்கில் வறுமை. குளிகோதயத்திற் பிறக்கில் விகாரசரீரமுண்டாகும். யமகண்டகனுதிக்கப் பிறந்தால் மூடமாம். இருத்தையிற் பிறக்கில் அலியாம். வியதீபாதத்திற் பிறக்கில் அங்கவீனமுண்டாகும். பரிகத்திற் பிறக்கில் மகவுக்கரிட்டம். வைதிருதியிற் பிறந்தாற் பிதாவுக்கரிட்டம். சூலத்திற் பிறந்தாற் சகல நட்டம். ரேவதியினீற்றிற் பிறக்கில் குலநாசமாம். எ - று. (33)

## உற்பாத சேனனம்.

கூடியசீர் மதியிழியுங் காலத் தோன்றிற்
குருடாகு மங்கமிவை குறையி லேறில்
நீடுமிரு சந்திகளிற் பருவாந் தத்தி
னிகழ்கால மனைத்தழிவு சேரு மன்றிப்
பீடுறுபல் லொடுபிறப்பிற் காலாற் றோன்றிற்
பிரியமுறு சாந்திகன்மம் பெருக்க வேண்டும்
வீடுறுநா ளஞ்சுற்றிப் பிறப்பின் மிக்க
விபரீத மாய்ப்பிறப்பின் வேந்தர்க் காகா.

(இ - ள்:) சந்திரன் பலமிழந்த காலத்திற் பிறக்கிற் குருடு. அங்கம் குறைந்துங் கூடியும் பிறப்பினும், உதயாஸ்தமன சந்திகளிலும் பர்வாந்தங்களிலும் பிறக்கினும் சகலநாசம். பல்லோடு பிறப்பினும், காலாற் பிறப்பினும் அதிக கேடுண்டாம். ஆதலாற் சாந்திகன்மஞ் செய்தல்வேண்டும். கொடிசுற்றிப் பிறப்பினும், விபரீத சரீரத்துடன் பிறப்பினும் அரசர்களுக்குக் கேடு விளையும். எ - று.

## அரிட்ட பங்கம்.

விளங்குபெலத் தொடுசெம்பொன் கேந்தி ரத்து
மேவினுங்கோ ணத்துறினு மிகுத்த கல்லோர்
கிள்க்தவரிட் டத்தொல்லைகள் முற்றுந் தாமே
கெடும்புக்ரோன் றனக்கும்து இள்ரேழ் நீக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம்புனையும் புத்தியுகா லன்றிப் பொன்போல்
மன்னுகினுஞ் சென்மத்தின் மலிந்த சோமன்
றுளங்குகினுங் கோளனைத்துந் தத்த மாட்சி
தோன்றிடினு மரிட்டமெலாந் தொலைந்து போமே.

(இ - ள்:) வியாழன் பலம்பெற்று ஒன்று நான்கு ஐந்து ஏழு ஒன்பது பத்தாமிடங்களில் நிற்பினும், சுக்கிரன் இவற்றுள் ஏழொழிந்த மற்றையவிடங்களினிற்பினும், புதன் இவற்றுள் நான்கொழிந்தவிடங்களில் நிற்பினும், பூர்வசந்திரன் இலக்கினத்து நிற்பினும், கிரகங்களெல்லாம் தத்தம் ஆட்சிவீடுகளிலிருப்பினும் சர்வாரிட்டமும் நீங்கும். எ - று. (35)

## உச்சபலன்.

சூரியவோர் கோளுச்சங் குற்றம் போக்குங்
கோளிரண்டே லரசாக்குங் கோண்மூன் றுச்சம்
பாரியசொற் சமூகரெனப் படுத்து நான்கு
பயில்வேள்விக் குரித்தாக்கும் பஞ்சோச் சங்கள்
சீரியவேற் பரநிருப ரிறைஞ்சும் பொற்றாட்
செகராச சேகரமன் சிங்கை தங்கு
மாரியர்கோ னெனக்குடைக்கீ ழவனி யெல்லா
மடக்கியொரு கோலோச்சி யளிக்கு மாதே.

(இ - ள்:) ஒரு கிரகம் உச்சமாயின் அரிட்டமுதலிய குற்றங்கள் நீங்கும். இரண்டுகிரகம் உச்சமாயின் சிற்றரசாக்கும். மூன்றுகிரகம் உச்சமாயின் சமூகத்தலைமை தரும். நான்கு கிரகம் உச்சமாயின் இராசசூய முதலிய யாகங்களைச்செய்யுங் கிரீடாதிபதியாக்கும். ஐந்து அல்லது அதன்மேற்பட்ட கிரகம் உச்சமாயின் சிறந்த வேலைத்தாங்கிய பிற அரசர்களெல்லாம் வந்து வணங்குகின்ற பொன்போன்ற பாதங்களையுடையவனும், சிங்கையாரியச்சக்கிரவர்த்தியுமாகிய செகராசசேகர மன்னவனைப் போல ஒரு வெண்கொற்றக்குடைக்கீழ் உலகெல்லாவற்றையுமடக்கித் தனித்த செங்கோலைச் செலுத்துகின்ற ஏகச்சக்கிராதிபதியாக்கும். எ - று. (36)

## பஞ்சாயுதம்.

நற்குழவி பிறந்தவந்நாட் கைந்தா நாளு
நாடியவவ் வாரமுமைந் தாகுங் காலை
பொற்பொலிந்த சூத்திரத்து வட்டஞ் சேர்த்துப்
பொருந்திடுபஞ் சாயுதங்கள் பொறித்து நாபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்படவே சுபமூர்த்த மதனில் வேத
மொழிபிறங்கத் தரித்திடுகின் முன்னோர் சொன்ன
வற்புதமாங் கிரகபய மெல்லாந் தீர்ந்தங்
காயுமிகப் பெற்றுமக வழகி தாமே.

(இ - ள்:) பிள்ளை பிறந்த ஐந்தாம் நாளும் ஐந்தாம் வாரமும் அமையுங்காலத்து, பொற்றகட்டுவெட்டத்தில் சங்கு சக்கரம் தண்டு வில் வாள் என்னும் பஞ்சாயுதங்களையும் அமைத்துப் பொற்கயிற்றிற் சேர்த்துப் பிள்ளையின் நாபியினளவு தொங்கச் சுபலக்கினத்தில் வேதமந்திரங்களுடன் தரித்தால், முன்சொன்ன கிரகதோஷ பயம் நீங்கி, ஆயுள் நீடித்து, அழகுடன் மகவு வாழும். எ - று. (37)

காப்பு.

சாதமுறுந் திவசத்துக் கேழா நாளிற்
றக்கபக லேகுழவி தனக்குச் சால
வேதமுறு நமனுலென் றறிந்தக் காலத்
திருக்காப்புத் தரித்ததற்பி னந்தி நேர
மோதுமறை விளங்கவரு கணேச னுக்கன்
புறுபூசை புரிந்துமணி முசல மேந்தித்
தீதறுசீப் பிடுங்கதவிற் புடைக்க நன்மை
திகழ்ந்தமக வுய்யுமெனத் தேரு வாயே.

(இ - ள்:) பிறந்த ஏழாந் தினத்தில் பகலில் பிள்ளைக்கு யமனாலே கண்டமுண்டாமென்றறிந்து, அக்காலத்திலே பொற்காப்புத்தரித்து, பின் அந்திக்காலத்தில் விக்கினேசுரருக்குப் பூசை செய்து, தாழிட்ட கதவி லுலக்கையினாற் புடைத்தால் நன்மையுண்டாய்ச் சிசு நீடித்து வாழும். எ - று. (38)

நாமகரணம்.

வேதியர்க்குச் சென்மாதி யீரா றாதல்
விளங்கியவீ ரைந்தாதல் வேந்தர்க் கீரா
றோதியவீ ரெட்டுவை சியர்க்கு நாலைந்
துடனிருபத் திரண்டாதல் சூத்தி ரர்க்குப்
பேதமிலா றைந்தாதல் நாலெட் டாதல்
பெறுநாளிற் சுபமூர்த்தம் பிறங்க நற்கோ
ளுதிலரா யுச்சமவை யடைந்து நிற்பச்
செப்பியநன் னாமகன்மஞ் செய்தி டாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பிராமணருக்கு பிறந்த 10-ம் 12-ம் நாட்களிலும், அரசருக்கு 12-ம் 16-ம் நாட்களிலும், வைசியருக்கு 20-ம் 22-ம் நாட்களிலும், சூத்திரருக்கு 30-ம் 32-ம் நாட்களிலும், சுபமுகூர்த்தத்தில் நல்ல கோட்கள் குற்றமற்று உச்சம் ஆட்சி நட்பாயிருக்க நாமகரணஞ் செய்க. எ - று. (39)

*பேசியதற் காலமதில் வார மாதி*
*பிறங்கியசா மானியமா மெனினு நன்று*
*மாசறுநன் மூர்த்தமொன்றே யமையு மங்கா*
*னவைகழிந்தா லனுடமகங் கரும்ப விட்டம்*
*பூசமதி யுத்தரமூன் றனில நவ்வி*
*புகமோண நற்சகடு தோணி யீசன்*
*காசறுமிந் நாட்களின்மால் செம்பொன் றிங்கள்*
*கவிவாரோ தயாம்மிசங்கள் கண்டு கொள்ளே.*

(இ - ள்) அவ்வவ் வருணத்தாருக்குவிதித்த தினங்களிலே பொதுவாக முகூர்த்தங்கொண்டு செய்யலாம். அந்நாட்கள் கழிந்தால், ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம், பூசம், மகம், உத்தரம், அத்தம், சுவாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம்; அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி நக்ஷத்திரங்களில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரோதயாம்சங்களில் நாமகரணஞ் செய்க. எ - று. (40)

*பக்கமதி லாறெட்டு நான்கி ராறு*
*பன்னான்கொன் பான்பர்வ மிரண்டு நன்றன்*
*றெக்குமிரா சியிற்றிரமே நன்று மற்ற*
*வுபயமுமா மொழிக்தசர மொன்று மாகர்*
*தக்கவர்க டிரிகோண கண்டந் தன்னிற்*
*சாரவவ ரேசரைபெற வெட்டே சுத்த*
*மிக்கமுதற் பகன்மத்தி யானத் துள்ளே*
*வேண்டுமதி நுதன்மருங்குன் மின்ன னாளே.*

(இ - ள்:) சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி, பூரணை, அமாவாசை ஒழிந்த திதிகளில், இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் என்னும் இராசிகளில், சுபக்கிரகங்கள் 1-4-5-7-9-10-ம் இடங்களில் நிற்க, 8-ம் இடம் சுத்தமாக, மத்தியானத்துள் முற்பகலிலே நாமகரணஞ்செய்க. மிதுனம், கன்னி, தனு, மீன ராசிகள் மத்திமமாகக் கொள்ளலாம். மேடம், கர்க்கடகம், துலாம், மகரங்கள் விலக்கவேண்டியன. எ - று. (41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் பருக்கல்.

சென்மாதி முப்பத்தொன் றமைந்த நாளிற்
றிகழிரண்டாஞ் சன்மநா ளனுகூ லித்த
பொன்மாலோன் வெள்ளிநிறை மதியி னேக்குப்
பொருந்துதயந் திருந்துசுப மூர்த்தத் தங்க
ணன்மாசி லவனியுடன் மதிக்குப் பூசை
நல்கிப்பா லூட்டிவைக்க நன்றே யாமிக்
கன்மமதற் குரைத்தநாட் கழிந்தா லூட்டுக்
கல்யாண விதிப்படியே கருதிச் செய்யே.

(இ - ள்:) பிள்ளை பிறந்த தினத்துக்கு 31-ம் தினத்தினு தல், இரண்டாவது முறை வரும் சன்மநக்ஷத்திரத்தினுதல், பூரணசந்திரன் புதன் வியாழன் சுக்கிரன் இவர்கள் இலக்கினத்து இருக்க நோக்க நேருஞ் சுபமுகூர்த்தத்தில், பூமிதேவிக்கும் சந்தி ரனுக்கும் பூசைசெய்து, சங்கினுற் பால் பருக்குக. இவ்வெல்லை கழிந்தால், அன்னப்பிராசனத்துக்குச் சொல்லிய விதிப்படி செய்க. எ - று. (42)

## தோட்டி லேற்றல்.

சாதமுதற் பதினுறிற் பத்தீ ராறிற்
சாற்றியநா லெட்டினின்மே னேக்க தாக
வோதியநா ளதனிலன்றிச் சரநா டன்னி
லூர்த்வசர ராசியவை யனுகூ லிக்க
வேதமறு சுபதிதியிற் சுபர்வா ரத்தி
லெழுசுபர்க ளவர்நோக்குண் டாக வோரை
தீதிலதாப் பொற்கால்கள் சிறக்கத் தொட்டிற்
சிசுக்களையேற் றுதற்குநன்று திருவ னுளே.

(இ - ள்:) பிறந்த தினமுதல் 10-ம் 12-ம் 16-ம் 32-ம் தினங்களில், மேனேக்கிய நக்ஷத்திரங்களில் அல்லது சரநக்ஷத் திரங்களில், ஊர்த்துவ இராசிகளில் அல்லது சர இராசிகளில், சுபதிதிகளில், சுபவாரங்களில், சுபக்கிரக உதயம் நோக்கு உண் டாக, சுப காலவோரைகளில் சிசுக்களைத் தொட்டிலேற்றுக. எ - று.

மேனேக்கிய நக்ஷத்திரங்கள்: ரோகிணி, திருவாதிரை, பூசம், உத் தரம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி என்பனவாம். சர நக்ஷத்திரங்கள்: புநர்பூசம், சுவாதி, திருவோணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிட்டம், சதயம் என்பனவாம். ஊர்த்துவமுக இராசிகள்: சூரியன் நிற்கும் இராசிக்கு 3, 6, 9, 12-ஆம் இராசிகளாம். சர இராசிகள்: மேடம், கர்க்கடம், துலாம், மகரம் என்பனவாம். (43)

## காது குத்தல்.

*ஈரெட்டி லாறிரண்டா நாளின் மாத*
*மிருமூன்றி லிருநான்கி லேழி னல்ல*
*பேருற்ற மாதங்கள் சம்ப விக்கப்*
*பிறைவளரும் பக்கத்துப் பகன்முற் பத்தி*
*னேருற்ற விருபதினுட் டிதியு நாளு*
*நிறைந்துலவச் சுபர்பெலமுண் டாக நாட்டிக்*
*காருற்ற விரவுடனே ராசி சந்தி*
*கழித்துணர்ந்து மக்களுக்குக் காது குத்தே.*

(இ - ள்:) புத்திரர் பிறந்த தினம் முதல் 12-ம் 16ம் நாளிலாதல், 6-ம் 7-ம் 8-ம் மாதங்களிலாதல், சுப மாதங்களில், பூருவ பக்கத்தில், பகல் 20 நாழிகைக்குள், பகலில் இருதிதி இருநக்ஷத்திரங்கள் சம்பவியாத தினங்களில், சுபக்கிரகங்கள் உதயத்து நிற்க நோக்க, இரவும் இராசிசந்திகளும் கழித்துக் காது குத்தலாம். எ - று. (44)

*ஓணமிரே வதிசெங்கை கரும்பு பூச*
*முத்தரமூன் றுதிபனை யவிட்ட மும்மீன்*
*பாணியுடன் சித்திரையிந் நாளிற் கும்பம்*
*பயிலரிதே ளொழித்தோரை யெழமா றிங்கள்*
*சேணவிர்பொன் வெள்ளியிவர் வாரஞ் சாரத்*
*திருக்துமிவர் லக்கினத்துத் திகழப் பக்கம்*
*வாணுதலா யுவாவிருத்தை தள்ளி யெட்டாய்*
*வருமிடமுஞ் சுத்தமுற வணங்கிக் கொள்ளே.*

(இ - ள்:) அச்சுவினி, மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம், உத்தரம், அத்தம், சித்திரை, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், உத்தரட்டாதி, ரேவதி இந்நாட்களில், சதுர்த்தி, அட்டமி, நவமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை ஒழிந்த திதிகளில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்களில், சிங்கம், விருச்சிகம், கும்பம் ஒழிந்த இராசிகளில், சுபக்கோட்களுதிக்க, அட்டமசுத்தி யுண்டாகத் தெய்வ வழிபாடு செய்து காது குத்துக. எ - று. (45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரிய சந்திர கோ தரிசனம்.

காட்டியகற் றிங்களொரு மூன்றிற் சென்ம
நாளாதல் வாரமுத லெல்லா நல்லோ
ரூட்டுதற்குச் சொன்னபடி யதனி லாத
லுறுமூர்த்தத் திரவிதரி சனமு நாலாங்
கோட்டமறு திங்களினி லன்னத் துக்குக்
குறித்தபடி நாளாதி கொண்டு திங்கள்
பூட்டியகோ தரிசனமும் டண்ண நன்று
பொருவிலிய கலைமுனைப் பொன னனே.

(இ - ள்:) பிள்ளை பிறந்த மூன்றும் மாதத்தில், சென்ம நக்ஷத்திரத்திலாதல் அன்னப்பிராசனத்துக்குச் சொல்லிய சுப முகூர்த்த முறைப்படியாதல் சூரிய தரிசனஞ் செய்விக்க: நான்காம் மாதத்தில், அன்னப்பிராசனத்துக்குச் சொல்லிய முகூர்த்தங்களில் சந்திரனையும் பசுவையும் தரிசனஞ் செய்விக்க. எ - று. (46)

## அன்னப்பிராசனம்.

திங்களிரு மூன்றிலிரு நான்கிற் பத்தி
றிறம்பெறுமாண் டொன்றதனி லாட்டிற் காரு
மங்கதனி னூற்றெண்ப தன்றி நன்னூற்
றைம்பதென வாகுநாட் கழியல் வேண்டுந்
தங்கியவாண் பிள்ளைக்கு மாதப் பான்மை
சாற்றிரட்டி யாமறுவில் பெண்ணுக் கென்னில்
மங்கலமா மொற்றிக்கி லொன்பான் மாத
மன்னியவாண் பிள்ளைக்கு மதிக்க லாமே.

(இ - ள:) ஆண்பிள்ளைகளுக்கு, பிறந்த நூற்றைம்பதாம் நாட் கழிந்த 6-8-9-10-12-ம் மாதங்களினும், பெண்பிள்ளைகளுக்கு, பிறந்த நூற்றெண்பதாம் நாட் கழிந்த 7-9-11-ஆம் மாதங்களினும் அன்னப்பிராசனஞ் செய்க. எ - று. (47)

கரும்புகுரு மதியவிட்டம் விளக்குச் செக்கு
கன்னியயம் போர்தைசக டோணந் தோணி
திரும்புகுரு கவிருமுறம் வாய்க்கா லோடு
சித்திரையுத் தரங்களெனச் சிறந்த நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்புதன்பொன் வெள்ளிசசி வாரங் கால்க
ளுவாபக்கச் சித்திரைக டள்ளி யெட்டு
விரும்புகுசன் மும்மூன்றின் மாலேழ் வெள்ளி
மேடக்தேண் மீனமிவை விலக்கு வாயே.

(இ - ள்:) ரோகிணி, மிருகசீரிடம், புநர்பூசம், பூசம், மகம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி நக்ஷத்திரங்களில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்களில், இவர்களின் அம்சங்களில், சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை ஒழிந்த திதிகளில், செவ்வாய் எட்டிலும் புதன் ஒன்பதிலும் வெள்ளி ஏழிலும் நீக்கி, மேடம், விருச்சிகம், மீனம் ஒழிந்த இராசிகளில் அன்னப்பிராசனஞ் செய்க. எ - று. (48)

## அரைஞாண், சிற்றுடை தரித்தல்.

வளர்ந்தசீர் மகவினுக்குச் சௌள மாத
வகையாலீ ராறுதிங்கட் கழிந்து மற்றை
விளங்கியவாண் டினிற்சென்ம மாத நாளில்
வேண்டுசுப ராசிகடா மனுகூ லிக்கத்
துளங்கியகன் னீராட்டிச் சாந்தி பண்ணித்
தூயகவாம் பரமரையிற் றொடுத்துச் செம்பொன்
களங்கமற வமைத்தகடி சூத்தி ரத்தைக் [illegible]
கட்டிமன மகிழ்ந்திருக்கக் கழறு வாயே.

(இ - ள்:) பிள்ளைபிறந்த 365-ஆம் நாட் கழித்து, மேல் வரும் பதின்மூன்றாம் மாதத்துக்குரிய தினங்களுள், பிறந்த நக்ஷத்திரத்தில், சுபலக்கினத்தில், பிள்ளையை முழுக்காட்டிச் சாந்திசெய்து, புதிய ஆடை தரித்து, பொன்னரைஞாணையுங் கட்டுக. எ - று. (49)

## சௌளம்.

ஆண்டொன்றி லந்தத்தின் மூன்றி லைந்தி
லாகியமுக் கூற்றின்மே லாகுஞ் சௌளம்
வேண்டியபெண் மகவினுக்கே ழைந்தா மன்றி
விளக்கியவைந் திரட்டித்த வருட மெல்லாங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டகுமா டவர்க்காகுஞ் செம்பொ னோடு
கவிபிவைக ளத்தமியாக் காலந் தன்னி
லீண்டியவுத் தராயணத்துக் கால நன்று
யிருந்திடச்சௌ ளச்சடங்குக் கியம்பு வாயே.

(இ - ள்:) ஆண்பிள்ளைகளுக்கு பிறந்தவருட முடிவிலும், மூன்றும் ஐந்தாம் வயதின் பின்மூன்று மாதங்களிலும், 6-8-10 முதலிய இரட்டித்த ஆண்டுகளிலும்; பெண்பிள்ளைகளுக்கு ஐந் தாம் ஏழாம் ஆண்டின் பின்மூன்று மாதங்களிலும், குருசுக்கிரர் அஸ்தமனமில்லாத காலத்தில், மாசியொழிந்த உத்தராயண மாதங்களில் சௌளஞ் செய்யலாம். எ - று.

வேண்டிய பெண்மகவு என்றதனால் சௌளஞ் செய்யவேண்டிய நியதியுள்ள பெண்ணுக்குமாத்திரம் இவ்விதி யமையுமென்க. (50)

புனர்தமதி யவிட்டமுட னோணந் தோணி
புரவிகுரு சித்திரையுங் கரமிக் நாட்க
ளினியனதே ருத்தரங்கள் விளக்குச் செக்கோ
டிவையுரைக்கின் மத்திமமா மோரா றெட்டு
வினவியநான் கீரேழு மும்மூன் றொன்று
விளம்பாத நாட்களிவை வேண்டாந் திங்கள்
கனவியபொன் வெள்ளிபுந்தி நல்வா ராதி
கருதுவெள்ளி சாவபனங் கண்ணு தென்னே.

(இ - ள்:) அச்சுவினி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், சித்திரை, திருவோணம், அவிட்டம், ரேவதி இவை உத்தமம். ரோகிணி, உத்தரம், சுவாதி, உத்தராடம், சதயம், உத்தரட்டாதி இவை மத்திமம். பிரதமை, சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை அல்லாத திதி களில், திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்களில் சௌளம் செய்யலாம். சுக்கிரவாரம் சாக்கிரியைக்குரிய சௌளத்துக்கு ஆகாது. எ - று. (51)

குளிர்மடவா டண்டுதுலை சுறுமீ னேறு
கூறிடிலுத் தமமாகுஞ் சிங்க மாடு
வளைதனுத்தே ளிவைபொல்லாங் காகு நற்கோள்
மன்னிலவர் நோக்குறிலாங் கும்ப நல்லோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரளவில்பெல முண்டெனினுந் தீய தாகு
மட்டமத்தில் வெள்ளியொழிந் தாகார் மீற்றோ
ரொளியிரவி சேய்பனிக்கு சனியேழ் நன்றன்
றுரைத்தவிதி லதோவபன மொன்ற நன்றே.

(இ - ள்:) இடபம், மிதுனம், கர்க்கடகம், கன்னி, துலாம், மீனம் இவை உத்தமம். மேடம், சிங்கம், விருச்சிகம், தனு, கும்பம் இவை ஆகா. இவற்றுள், கும்பமொழிந்த இராசிகள் சுபக்கிரகம் நிற்றல் நோக்கல் செய்யின் மத்திமமாகக் கொள்ளலாம். எட்டா மிடத்தில் சுக்கிரனொழிந்த கிரகங்கள் நிற்றலாகா. ஏழாமிடத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனி நிற்றல் கூடாது. இவை ஏழில் நிற்றல் அதோவபனத்துக்கு நன்றும். எ - று.

அதோவபனம் - சரீரத்தின் கீழ்ப் பாகத்திற் செய்யும் வபனம். (52)

## சௌரகால நியதி.

ஆதான முதற்சாத மந்த மாக
வன்னைபிதா விருவருக்கும் விலக்க லாகுஞ்
சூதார்ந்த முலையாருக் கீரைந் தாகுஞ்
சொல்லிடிலா டவர்தமக்கு மூவைந் தாமற்
றோதாத வலியவர்க்குத் தினமாங் கெற்ப
முறிலன்னை சிசுக்கடனக் கோதார் சந்தி
யாதாந்த நிசிகுதப கால மெண்ணெய்
வருமுணவு பிணிபொருந்தின் மன்னு தென்னே.

(இ - ள்:) கருப்பாதானமுதல் மகப்பேறளவும் பிதா மாதாக்கள் சௌரஞ் செய்யலாகாது. மற்றைக் காலங்களில், பெண்கள் பத்துநாளுக் கொருமுறையும், ஆண்கள் பதினைந்து நாளுக் கொருமுறையும், அலிகள் தினந்தோறும் சௌரஞ்செய்க. மாதா கருப்பவதியாயிருக்குங் காலத்துப் பிள்ளைகளுக்குச் சௌரஞ் செய்யலாகாது. சந்தியாகாலங்கள், பாதாந்தம், இரவு, குதபகாலம், எண்ணெய்தேய்த்துமுழுகியபின், போசனஞ்செய்த பின், நோயுற்றகாலம் இவற்றில் சௌரஞ்செய்தலாகாது. எ - று.

குதபகாலமாவது: பகலைப் பதினைந்து பாகமாக்கி, அதில் (மத்தியிலுள்ள) எட்டாவது பாகமாகிய காலமாம். (53)

## பல்லுகிர் மயிர்வினைக்கு விசேடகாலம்.

மறையவருக் கிரவிசெவ்வாய் மன்னர்க் கிந்து
மங்கையர்க்குச் சூத்திரர்க்கு மந்தன் றந்தங்
கறையகற்ற வுகிர்சுத்தி பண்ண நன்றாங்
காவல்விடி லுபதேசங் கருதி னல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறைமகுடஞ் சூடிவுறு பூசை பண்ணி
　　னியமமுறு விரதத்திற் சூத கத்தி
லிறையவர்பூ சுரருறையி ஞள்வா ராதி
　　யேதெனுமாங் கடிவினைக்கு மிவ்வா ருமே.

(இ - ள்:) அந்தணருக்கு ஞாயிற்றுக்கிழமையும், அரசருக்குச் செவ்வாய்க்கிழமையும், பெண்களுக்குத் திங்கட்கிழமையும், சூத்திரருக்குச் சனிக்கிழமையும் பற்கறை நீக்கவும், நகசுத்தி செய்யவும் நன்று. சிறைநீங்கிய காலத்தும், தீக்ஷாகாலத்தும், முடிசூடுங் காலத்தும், தேவபூஜையாரம்பிக்குங் காலத்தும், விரதாரம்ப காலத்தும், செனனமரண சூதகாந்தத்தும், பிராமணரிடத்தும் அரசரிடத்தும் செல்லும்போதும், விவாககாலத்திலும் சௌரம், தந்தசுத்தி, நகங்களைதல் என்பவற்றைக் காலதோஷங்கள் நோக்காது செய்யலாம். எ - று. (54)

## மனைவி கருப்பவதியானுற் செய்யத்தகாதவை.

நகமறுத்தல் கடலாடல் சிராத்த முண்ட
　　னண்ணுசவத் தின்பிறகே கடத்தன் மேவு
மகமெடுத்த லதற்கான கருமஞ் செய்த
　　லழுதல்பிறி தொருமணமுண் டாக்க லன்றிப்
புகன்மிகுத்த நெடுந்தூரம் போதன் மேனி
　　பொருந்துமயிர் வினைகேசம் போக்க லெல்லா
மகிழ்வுறத்தன் மனையாள்சூல் சாரிற் செய்ய
　　வழக்கலவா யுளுங்குறுக வருமென் ருரே.

(இ - ள்:) மனைவி கருப்பவதியாயிருக்குங் காலத்தில் நகமறுத்தல், சமுத்திரதீர்த்தமாடல், சிராத்தபோசனஞ்செய்தல், சவத்தின்பின் போதல், வீடுகட்டுதல், அதற்கியைந்த கருமங்கள் செய்தல், மறுமணம்புரிதல், தூரதேசங்களுக்கு யாத்திரை செய்தல், மயிர்களைதல், குடுமிகளைதல் என்பவை செய்யலாகா. செய்யில் ஆயுள் குன்றும். எ - று. (55

## சௌரஞ்செய்யலாகாத காலம்.

மகமைந்து மூன்றனுட முருடே ரெட்டு
　　வன்னியிரு மூன்றொருநான் குத்த ரத்துத்
தகைமைபெறு மயிரகற்றி லாண்டு நான்கிற்
　　சார்ந்திடுசோ மாயுசுவுஞ் சமிக்கு மன்றி

நிகரில்புரட் டாதியொடு மாடி மாசி
நிகழ்த்துறுமார் கழியிவைவயி னிவைக்க லாகாக்
ககவிழியாய் செயிற்பிதிர்க ளுரோம மெல்லாங்
கைப்பற்றி நுகர்வரெனக் கணிப்பர் தாமே.

(இ - ள்:) மூன்றுதரம் அனுஷத்திலும், நான்குதரம் உத்தரத்திலும், ஐந்துதரம் மகத்திலும், ஆறுதரம் கார்த்திகையிலும், எட்டுத்தரம் ரோகிணியிலும் சௌரஞ் செய்யில் நான்கு வருடத்துள் நோயுண்டாகி ஆயுளுங் குன்றும். ஆடி, புரட்டாதி, மார்கழி, மாசி மாதங்களிற் சௌரஞ் செய்யின் பிதிர்கள் அவ்வுரோமங்களைப் புசிக்க நேருமாதலால் அவற்றிற் சௌரஞ் செய்ய லாகாது. எ - று. (56)

## சௌரத்துக்கு மாதபலம்.

சித்திரைகைப் பொருள்வென்றி மிகும்வை காசி
திகழானி குலம்பெருகு மாடி நோயா
மெத்தகிளைக் காகாவா வணிபொல் லாங்கு
விளைத்திடுமப் புரட்டாதி தனக்கே யாகாப்
புத்திரக்கே டைப்பசியிற் பந்து நாசம்
பொருந்துதேள் தனச்சிதைவு தனுமா னன்றுஞ்
சுத்தமறு சஞ்சலமா மாசி நன்மை
சுரந்திடும்பங் குனிவபனஞ் சொல்லுங் காலே.

(இ - ள்:) சௌரம் சித்திரைமாதத்திற் செய்யின் கைப்பொருளுண்டாம். வைகாசியில் வெற்றி. ஆனியில் குலவிருத்தி. ஆடியில் நோய். ஆவணியில் சுற்றக்கேடு. புரட்டாதியில் தனக்குக்கேடு. ஐப்பசியில் புத்திரநாசம். கார்த்திகையில் பந்துநாசம். மார்கழியில் தனச்சேதம். தையில் சுபம். மாசியில் துக்கர். பங்குனியில் நன்மையுண்டாம். எ - று. (57)

## கார்த்திகை விளக்கு.

சொல்லியவாண் டோரைந்தின் மூன்று தன்னிற்
றுடங்கியதேண் மாதத்தைம் மூன்றும் பக்கத்
தெல்லியனல் லுறவோரை யனுகூ லிக்க
விளங்குமரர்க் கருக்தீப மெடுக்க லாகு
மல்லதிரு பக்கமுன்பின் னுட்கள் பர்வ
மமைக்துறுகின் மத்திமமாம் பர்வ மின்றே
னல்லதன்று மரசர்மனை சிவால யத்து
நவின்றனரே றெழ்விளக்கு நலத்த தென்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) மூன்றும் ஐந்தாம் வயதில் வருகின்ற கார்த்திகை மாதத்தில், பூரணையுங் கார்த்திகையுங் கூடிய தினத்து இரவில், அனுகூலமான சுபமுகூர்த்தத்திலே சிசுக்களுக்கு விளக்குப் பிடிக்க நன்று. பரணியோடாதல் ரோகிணியோடாதல் பூரணை கூடுதல் மத்திமம். பூரணையே யில்லையாயினும், இருப்பினும் மேற்சொல்லிய மூன்று நக்ஷத்திரங்களுடன் கூடாதிருப்பினும் ஆகாது. சிவாலயங்களுக்கும் அரசமாளிகைகளுக்கும் மற்றைய புண்ணியதலங்களுக்கும் இடபலக்கினத்தில் தீபமேற்ற நன்று. எ - று. (58)

## கிருத்திகாதீப காலத்திற் செய்யத்தகுவன.

புகருறு நிமை சாரினுந் தினுதி
　　பொருந்திய சுபமதின் றெனினும்
வகையுறு குற்றம் பிறபல வரினு
　　மன்னுதீ போற்சவ காலத்
துகள்கயல் விழியாய் கடிவினை சாலே
　　யுட்புக லாதியா யுரைத்த
தகுசுப மெவையும் பண்ணலா மென்று
　　சாற்றினர் முனிவரர் தாமே.

(இ - ள்:) சுக்கிராஸ்தமனமுதலிய தோஷமுண்டாயினும், தினம் முதலாகிய பஞ்சாங்கசுப மில்லையாயினும், வேறு பலவகையான குற்றங்களமையினும், கிருத்திகாதீப காலத்திலே விவாகம், கிருகப்பிரவேசம் முதலிய சுபகருமங்கள் யாவும் செய்யலாமென்று முனிவர் கூறினர். எ - று. (59)

## யாத்திராவிரதம்.

வேறு.

சாபமெமூ காலத்துக் கதிரோ னுகச்
　　சசிநிறைந்த பக்கமுமா திரையுஞ் சாரத்
தூபமுறுங் குழலார்க்குத் தனுமா னுனை
　　தோன்றநறு நீராடல் சொற்றூர் கற்றோர்
கோபமறு மனுகூல மூர்த்தத் தாசல்
　　கொண்டாட்ட நன்றுரைத்த பக்க மின்றிப்
பாபமறு நாளொன்றி னடுவா மந்நாட்
　　பயிலாது பறுவமுறிற் பழிப்ப தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) மார்கழிமாதப் பூரணையும் திருவாதிரையுங் கூடிய தினத்தில், தனு அல்லது மகர இலக்கினத்தில் கன்னிகைகள் நீராட நன்று. அன்று அனுகூலமான நல்ல முகூர்த்தத்தில் கன்னிகைகள் ஊஞ்சலாட நன்று. இவற்றிற்குப் பூரணை கூடாத திருவாதிரை மத்திமம். திருவாதிரைகூடாத பூரணை விலக்கப்படும். எ - று. (60)

## அக்ஷராரம்பம்.

ஐந்துறுமாண் டதனினெடுங் கதிர்சேய் வெய்யோ
னமைந்தவுத் தராயணகா லத்துக் கும்ப
மூந்துறநீத் தல்லாத மாதந் தம்மின்
முதற்பக்கத் திரவகற்றிப் பகற்கா லத்துத்
தந்திமுகற் கெட்பயறே தனஞ்செய் பாறேன்
சருக்கரைநை வேதித்துத் தாள்கள் போற்றி
மைந்தர்களுக் கமைந்தமுத லெழுத்தா ரம்ப
மருவுவித்துக் குருசித்த மகிழ்விப் பாயே.

(இ - ள்:) ஐந்தாம் வயதில், உத்தராயணத்து மாசியொழிந்த மற்றைய மாதங்களில், பூருவபக்கத்தில், இரவொழிந்த பகலில், விநாயகருக்கு எள் பயறு வெண்பொங்கல் காய்ச்சிய பால் தேன் சருக்கரை என்பவற்றை நிவேதித்து, அவருடைய திருவடிகளை வணங்கி, மைந்தர்களுக்குக் குருவைக்கொண்டு அக்ஷராரம்பம் செய்வித்து, அக்குருவுக்கு வேண்டிய தக்ஷிணைகளைக் கொடுத்து அவரை மகிழ்விக்குக. எ - று. (61)

## நிலவெழுத்து.

காமநிதி விளக்கோணம் பெண்ணை தோணி
காமாரி மைப்பசித் திரையிக் நாளிற்
குருமதிமா லிரவிகவி வாரங் கால்கள்
கூடமற்றோர் வாரமுதற் குறியா யாகித்
திரயுபய மெழுப்பக்க மொன்பா னெட்டுத்
திகழாதீ ரேழுநான் கொன்று நீக்கி
விரவியகற் றிதிகளினு லிரண்டே சுத்த
மிருக்கநில வெழுத்திடற்கு விளம்பு வாயே.

(இ - ள்:) அச்சுவினி, திருவாதிரை, புனர்பூசம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம், ரேவதி இந்நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில், சூரியன் சந்திரன் புதன் குரு சுக்கிரன் இவர்களின் வாரோதயாம்சங்களில், மேடம் கர்க்கடகம் துலாம் விருச்சிகம் மகரம் கும்பம் ஒழிந்த இராசிகளில், பிரதமை சதுர்த்தி ஷஷ்டி அஷ்டமி நவமி சதுர்த்தசி ஒழிந்த திதிகளில், அட்டமசுத்தி யுண்டாக நிலவெழுத்திடுக. எ - று. (62)

## சகலகலாரம்பம்.

சோதிகரும் போணமுரு டேர்போர் பூதஞ்
 சொற்றவிவை மல்வித்தை தொடங்கற் காகு
மோதுகரம் பனைபூச மவிட்டம் வாசி
 யுத்தரங்கள் பிண்டிகண்ணன் சோதி யின்ன
வேதியர்சோ திடம்படிக்க நன்று நெய்மீன்
 வேண்டியவுத் தரமுன்று மாசி செங்கை
நிதறுகூ லம்புரவி கன்னி கௌவை
 செப்புகுரு மருத்நிலைவயிற் சிற்பந் தேரே.

(இ - ள்:) பரணி ரோகிணி புநர்பூசம் சுவாதி திருவோணம் சதயம் இந்நாட்களில் மல்வித்தையும், அச்சுவினி புநர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் சுவாதி அனுஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் உத்தரட்டாதி இந்நாட்களில் சோதிடவித்தையும், அச்சுவினி திருவாதிரை பூசம் ஆயிலியம் மகம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி உத்தராடம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில் சிற்பவித்தையும் ஆரம்பிக்கலாம். எ - று. (63)

சாற்றுகுரு கரம்பிண்டி தயங்கு சோதி
 சௌரியன்பொன் வாராதி சத்த நூற்காந்
தோற்றியவா வணிகவ்வி பூசம் பெண்ணை
 சுபேசனுள் போர்நாவா யுத்த ரங்கள்
வேற்றுமைசேர் நடனகலை யவைக்கு மாகு
 மிக்கபுதன் வாராதி விட்ட மத்தம்
மாற்றில்பனை கேட்டைகுரு குன்று தோணி
 வாத்தியகி தந்தொடங்க மதிக்க லாமே.

(இ - ள்:) புநர்பூசம் பூசம் அத்தம் சுவாதி என்னும் நாட்களில் புத குரு வாரோதயாம்சராசிகளில் சப்தசாஸ்திரமும், பூசம் உத்தரம் அத்தம் அனுஷம் கேட்டை உத்தராடம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி என்னும் நாட்களில் நடனசாஸ்திரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சளும், புதன் வாரோதயாம்சராசிகளில் பூசம் அத்தம் அனுஷம் கேட்டை அவிட்டம் சதயம் ரேவதி என்னும் நாட்களில் வாத்தியகீத சாஸ்திரங்களும் ஆரம்பிக்கலாம். எ - று. (64)

பிண்டிகரம் பவனமுட ஞேணத் தோணி
பிறழ்செங்கை சித்திரையாய்ப் பேசு நாளிற்
றண்டருமம் புலியுதயங் கால்க வாதி
சாற்றியவா கடகலிக டரிக்க லாகும்
பண்டையா னடிப்பரவங் குன்று கேட்டை
பண்ணியமுப் பூரமொடு குருகிந் நாளு
மெண்டருமண் சேய்வார மாதி யாவு
மிசைந்தனவாங் கொடியவிஞ்சை யியற்றுங் காலே.

(இ - ள்.) திருவாதிரை புநர்பூசம் அத்தம் சித்திரை சுவாதி திருவோணம் ரேவதி இந்நாட்களில் சந்திரவாரோதயாம்சராசிகளில் வைத்தியநூல்களும், பரணி திருவாதிரை ஆயிலியம் பூரம் கேட்டை மூலம் பூராடம் சதயம் பூரட்டாதி இந்நாட்களில் செவ்வாய் வாரோதயாம்சராசிகளில் உக்கிரவித்தைகளும் ஆரம்பிக்கலாம். எ - று. (65)

## சாரதாயோகம்.

வேறு.

நவ்வி நாற்பத மவற்றுண்மால் பெறுபத நயந்த
செவ்வி மாலவன் வாரம தாறவதிற் றிருமால்
கௌவை தீர்மதி யுடனெழி லன்னது கல்விச்
செவ்வ தீங்கிய சாரத யோகமா மென்னே.

(இ - ள்:) அத்தத்துக்குரிய நான்கு பாதங்களுள் புதனம்சமாகிய மூன்றும் பாதமும் புதவாரமும் கன்னிலக்கினமும் பொருந்த, அதில் புதன் சந்திரனுடன் கூடி நிற்கில் அம்முகூர்த்தம் சாரதாயோகமெனப்படும். இதில் ஆரம்பித்த வித்தை அதிக விருத்தியாகும். எ - று. (66)

## உபநயனம்.

மன்னு வேதியர்க் காண்டிரு நான்குடன் வசந்த
முன்னு மன்னர்க்குப் பின்னத ரேறுபன் னொன்று
மன்னுவைசியர்க் காறிரண் டொடுசர மயுகா
மின்ன லெண்ணிரண் டிருபதோ டையந்தி னெழிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பிராமணருக்கு எட்டாம் வயதில் வசந்தருது விலும், அரசருக்குப் பதினோராம் வயதில் கிரீஷ்மருதுவிலும், வைசியருக்குப் பன்னிரண்டாம் வயதில் சாருதுவிலும் உபநய னஞ்செய்க. மேற்கூறிய வயதுகள் கடந்தால், பிராமணருக்குப் பதினாறும் வயதினுள்ளும், அரசருக்கு இருபதாம் வயதினுள்ளும் வைசியருக்கு இருபத்தைந்தாம் வயதினுள்ளும் உபநயநஞ்செய் தல் மத்திமம். இதன்மேற் கூடாது. எ - று. (67)

நாட்டு மூவர்க்கு முத்தரா யணமது நன்று
மீட்டு மச்சிசு விராசிகட் கிரண்டிலேந் தேழிற்
கோட்டு மொன்பதிற் பன்னொன் றிற் குருநிற்க வென்று
காட்டி னுருப நயனத்துக் கருமறை கற்றோர்.

(இ - ள்:) முன் சொல்லிய மூன்று வருணத்தாருக்கும் மாசியொழிந்த உத்தராயண மாதங்கள் நன்றும். மைந்தனது சென்மலக்கினத்துக்காவது சந்திரலக்கினத்துக்காவது 2-5-7-9-11-ல் குருவிருக்குங்காலம் நன்று. ஏனையவிடங்களில் குருவிருக் குங் காலம் விலக்கப்படும். எ - று. (68)

ஆட்சி யோடுநல் லுச்சத்தின் மித்திர ரகத்தி
லேட்சி யாகிய மூலத்திரி கோணத்தி லிலங்குங்
கோட்சி றந்தவக் குருநிற்பிற் குருவின்கோ சாரங்க
டாட்சி யெய்திலு நனறெனச் சாற்றினர் தக்கோர்.

(இ - ள்:) குரு 1-3-4-6-8-10-12-ஆம் இராசிகளில் நிற்பி னும், அச்குரு உச்சம், மூலத்திரிகோணம், ஆட்சி, நட்பு ஆகிய இராசிகளில் நிற்கில் தோஷமில்லை. எ - று.

குருவுக்கு கர்க்கடகம் உச்சம்; தனு மூலத்திரிகோணமும் ஆட்சியு மாம்; மீனம் ஆட்சி; மேடம் சிங்கம் விருச்சிகம் நட்பு. (69)

## சாகாதிபதிகள்.

இருக்க தாதிய நான்கிற்கு மதிபதி யிசைப்பின்
குருச்சி றந்தவக் கவிபுதன் சனியெனக் கொள்க
தரிக்கு மிம்மறை யோர்க்கிவர் கண்டங்க ளுறினும்
புரக்க லாமன்றி வாரமு மாமெனப் புகலே.

(இ - ள்:) இருக்குவேதிகளுக்கு வியாழனும், யசுர்வேதி களுக்குச் சுக்கிரனும், சாமவேதிகளுக்குப் புதனும், அதர்வண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதிகளுக்குச் சனியும் சாகாதிபதிகளாம். அவ்வவ்வேத சாகைகளை யுடையாருக்கு அவ்வச் சாகாதிபதியான கிரகம் கேந்திரத்து நிற்றலும், அவரவர் வாரங்களும் உபநயனத்திற்கு நன்று. எ - று. (70)

சுத்த வேதியன் றன்னொடு சுக்கிர னிவர்க
ளத்த மின்றியே யம்பரத் தொளிர்வுறுங் காலம்
வைத்த வெண்சுதைக் கதிர்மதி பெலமுற வான
நத்த நீங்கிடப் பகறனி லிருபது நன்றே.

(இ - ள்:) வியாழனும் சுக்கிரனும் அஸ்தமனமடையாது பிரகாசிக்க, சந்திரன் பலமுள்ளவனாக, ஆகாயம் களங்கமற்றிருக்க, பகற்காலத்தில் இருபதுநாழிகைக்குள் உபநயனஞ் செய்ய நன்று. எ - று. (71)

புரவி மான்றலை புட்பனை சித்திரை பூசங்
கரமி ரேவதி கண்ணன்அுன் றுத்தரங் கரும்போ
டிரையு ரோகிணி சோதியிக் நாட்களு முயர்மால்
குருவி ருங்கவி வாரமுங் கால்களுங் கொள்ளே.

(இ - ள்:) அச்சுவினி, ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், உத்தரட்டாதி, ரேவதி இந்நாட்களில், புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சராசிகளில் உபநயனஞ் செய்யலாம். எ - று. (72)

திங்கள் வெய்யவன் வாரங்கண் மத்திமஞ் சிறந்த
வங்கண் மாமதி யுதயவம் சிசங்களு மன்ன
தங்கு மட்டமி யிருத்லைதக னுவாவிவை தவிர்த்து
மங்க லம்பெறு திதிகளி னாகிடல் வழக்கே.

(இ - ள்:) ஞாயிறு திங்கள் வாரங்களும், சந்திரோதயாம்சராசிகளும் மத்திமம். சதுர்த்தி, அட்டமி, நவமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை ஒழிந்த திதிகளில் உபநயனஞ் செய்க. எ - று. (73)

பூச னுதபன் சனியுறை யிராசிகள் பொல்லா
மாசி லேறுவிப் குளிர்துலை தண்டுமீன் மங்கை
பேசு மோரையி லட்டம சுத்தியே பெறுநாட்
டேசு மேவிய விராசிகள் பொருந்திடச் செய்யே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) இடபம் மிதுனம் கர்க்கடகம் கன்னி துலாம் தனு மீனம் என்னும் இராசிகளுள், சூரியன் செவ்வாய் சனி இவர்கள் நிற்கும் இராசிகளை நீக்கி மற்றைய இராசிகளில், அட்டமசுத்தியுண்டாக, தாராபலம் சந்திரபலம் அமைய உபநயனஞ் செய்க. எ - று. (74)

## உபாகன்மம்.

வேறு.

ஆவணி யாதி யிரண்டினு மாடி
 யாதியா யந்தமே பூரசாய்த்
தாவிறு ளெவையும் பூரணை திதியுஞ்
 சாரினன் றந்தமைந் துடனே
மேவினு மாத மிரண்டினு நன்று
 மிக்கவ ருரையுமீ தன்றிக்
காவியங் கண்ணாய் சூத்திரத் தியல்புங்
 கண்டுபா கன்மஞ் கருதே.

(இ - ள்:) சிராவண பாத்திரபத மாதங்களில், உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்தரட்டாதி என்னும் நக்ஷத்திரங்களோடு கூடிய பூரணையிலும், அத்தத்துடன் கூடிய பஞ்சமியிலும், அவரவர் சூத்திரத்துக்கியைய உபாகருமஞ் செய்க. எ - று. (75)

ஆவணி யோணம் பூரணை யவிட்ட
 மாவிமா லத்திதி புரட்டை
மேவிய மாயன் பூரசு பூரணைபுன்
 மிளிர்காஞ் சோணையாம் புதனிற்
சேவணி துவசன் சிங்கையெங் கோமான்
 செயசெக ராசசே கரமன்
பூவணி புகழான் பயில்சதுர் மறைக்குப்
 பொருந்துபா கன்மமாம் பொன்னே.

(இ - ள்:) இருக்குவேதிகள் சிராவணமாதத் திருவோணத்திலும், யசுர்வேதிகள் பூரணையுடன் கூடிய உத்தராடம் திருவோணம் அவிட்டத்திலும், சாமவேதிகள் பூரணையுடன் கூடிய திருவோணம் பூரட்டாதி உத்தரட்டாதியிலும், அதர்வணவேதிகள் பூரணையுடன் கூடிய அத்தம் திருவோணம் அவிட்டத்திலும் புதன் கிழமையிலும் உபாகருமஞ்செய்யலாம். எ - று. (76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாரம்பம்.

அத்த மைப்பசி பனைவிலக் கரியா
　　னறைதரு மான்றலை பூசம்
வைத்த சித்திரை புனர்தமென் றின்னவை
　　மதித்திடு முத்தம முருடே
ருத்த ரங்கண்மூன் றிரேவதி மத்திம
　　மூவாவிரண் டட்டமி யிருத்தை
கைத்த சத்தமி யொடுபதின் மூன்றிவை
　　கழிவெனக் கனங்குழாய் காணே.

(இ - ள்:) வேதாரம்பத்துக்கு அச்சுவினி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், அத்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம் என்பவை உத்தமம். ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ரேவதி என்பவை மத்திமம். சதுர்த்தி சத்தமி அட்டமி நவமி திரயோதசி சதுர்த்தசி பூரணை அமாவாசை என்பவை ஆகா. ஏனைய திதிகள் நல்லன. எ - று.

புக்தி வெள்ளிபொன் வாரங்க ளாதிகள்
　　புகன்றிடு முத்தம மிரவி
சந்தி ரன்பெறு வாரம தாதிகள்
　　சாற்றிடின் மத்திமத் தாறு
நந்த லின்றிய விராசியி லுபயங்க
　　ளன்றுமத் திமஞ்சர ராசி
வந்த சுத்தியே மூறமறை யங்கமு
　　மறைகளும் பயில்வது வழக்கே.

(இ - ள்:) புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களும், மிதுனம் கன்னி தனு மீன ராசிகளும் உத்தமம். ஞாயிறு திங்கள் வாரோதயாம்சங்களும், மேடம் கர்க்கடகம் துலாம் மகர ராசிகளும் மத்திமம். ஏனைய வாரோதயாம்சங்களும், இடபம் சிங்கம் விருச்சிகம் கும்ப ராசிகளும் ஆகா. ஏழாமிடஞ் சுத்தமாக வேத வேதாங்கங்கள் ஆரம்பிக்க நன்று. எ - று. (78)

## வேதாங்க நூல்கள்.

வேறு.

சந்தசாத் திரங்கா ஞசி சாற்றிய சிட்சை நாட்ட
முந்துசோ திடமென் றோது முதுமொழிப் பனுவல் கன்னம்
புந்திசெய் திருத்தங் கற்பம் புகல்நரம் வாய்முன் பெற்ற
வந்தமில் சத்த நூலிவ் வாறும்வே தாங்க மாமால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) வேதாங்கமாருவன: சந்தோவிசிதி கால், சிக்ஷை நாசி, சோதிடம் கண், நிருத்தம் காது, கற்பம் கை, வியாகரணம் வாய் ஆகும். எ - று. (79)

### அநத்தியயனம்.

வேறு.

ஆதுமைப்பசி சித்திரைப் பிறப்பினை
யறிந்தவர் விஷுவென வறைநவ
ரேதுமிவ்விஷு முன்பினுங் கடிகைக
ளெண்ணிரண் டவையிரண் டயனப்
பாகுபட்டதை யாடியிப் பிறப்பினிற்
பயின்முன்பி னூலிந்து கடிகை
தோகை யட்டமி யுவாக்களுஞ் சந்தியுந்
தொன்மறை யோதுகிற் றுகவே.

(இ - ள்:) சித்திரை ஐப்பசிச் சங்கிரமங்களை விஷுக்க ளென்பர். இவற்றின் முன்னும் பின்னும் பதினாறு நாழிகை யும், தை ஆடிச் சங்கிரமங்களின் முன்னும் பின்னும் இரு பது நாழிகையும், அட்டமி பூரணை அமாவாசைத் திதிகளும், சந்தியாகாலங்களும் வேதாத்தியயனத்திற்கு விலக்கப்படும். எ - று. (80)

ஒன்று மேழிரு பக்கமுந் திரயோ
தசியுட னுறுநிசி முகமு
மன்றி வானக முழங்கிய காலமு
மழலிடி விழுந்தவப் பொழுது
நன்றலாதவுற் பாதமா நாளினு
நற்குரு யோகிக ளரசர்
பொன்று நாளினும் வேதவே தாங்கங்கள்
புகன்றிடா ரறிந்தவர் பொன்னே.

(இ - ள்:) பிரதமை சதுர்த்தசிகளினும், திரயோதசி கூடிய இரவின் முதற்சாமத்திலும், மேகம் முழங்கும்போதும், இடி வீழ்ந்தபோதும், உற்பாதம் நிகழ்ந்த நாளினும், குரு யோகிகள் அரசர் இறந்தநாளினும், வேதவேதாங்கங்களை அத்தி யயனஞ் செய்பலாகாது. எ - று. (81)

மைந்தர்வினைப்படலம் முற்றிற்று.

---



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூன்றாவது

# மணவினைப்படலம்.

## வேதவிரதம், கோதானம்.

முறையி னேறிய மணவினை செயினதன்
முன்பதாய் மறைபுகல் விரதங்
குறைவ தின்றியே செய்வது விதியெனக்
குலவலாற் சதுர்வித விரத
நிறைவ தாகவே யமைந்தபின் பூசுரர்
நிகரில் கோவது போக்கி
லிறையில் சுத்தமா மிதற்குநா ளாதிக
ளியம்பிய மயிர்வினை யிடத்தே.

(இ - ள்:) விவாகஞ் செய்தற்கு முன் விரதங் கொள்ள வேண்டுமென்ற விதியிருத்தலால், பிராஜாபத்தியம், சௌமியம், ஆக்கினேயம், வைசுவதேவம் என்னும் நான்கு விரதங்களையு மனுட்டித்தபின் அந்தணர் கோதானம்பண்ணிற் சுத்தமுண்டாம். இவற்றிற்கு நாளாதிகள் சௌளத்திற்குரியனவாம். எ - று. ()

## சமாவர்த்தனம்.

வேறு.

சூல மோணமுரு டேர்க ரும்புமதி
சுரர்கு ருக்களிறு சொற்றநற்
றூல மேவுதிரி யுத்த ரங்களிவை
தம்மில் வெள்ளிகுரு வாதவன்
மால வன்சசியிவ் வார மாதியின்
மதித்த வட்டமி யுவாக்களோ
டேல வொன்றுட னிருத்தை தள்ளிமுத
லிருப துட்பக லிசைந்திடே.

(இ - ள்:) ரோகிணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் அனுஷம் உத்தராடம் திருவோணம் உத்தரட்டாதி ரேவதி என்னும் நக்ஷத்திரங்களில், சூரியன் சந்திரன் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்மிசங்களில், பிரதமை சதுர்த்தி அட்டமி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை யொழிந்த திதிகளில், பகல் இருபது நாழிகையினுள் சமாவர்த்தனஞ் செய்க. எ - று. (83)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்து மேறுதுலை னெண்டு மீனமொடு
கன்னி கும்பமுனி தண்டுமான்
சுத்த மாமிவைக டம்மின் மேடமரி
துய்ய தேளிவைக டள்ளியே
நத்த மானமது வன்றி யெட்டிட
மமைந்த சித்திபெற நற்சமா
வர்த்த மாவது புரிந்து கொள்கநெடு
வான நின்மல மதிக்கவே.

(இ - ள்:) இடபம் மிதுனம் கர்க்கடகம் கன்னி துலாம் தனு மகரம் கும்பம் மீனம் என்னுமிராசிகளில், அட்டமசுத்தியுண்டாக, ஆகாயம் மாசற்றிருக்கும்போது சமாவர்த்தனம் பண்ணுக. மேடம் சிங்கம் விருச்சிக இராசிகளும், இராக்காலமும் நீக்கப்படும். எ - று. (84)

ஓது சூத்திரர்த மக்கு மிவ்விதி
யுரைப்பி னற்றிவச முற்றதிற்
பேத மற்றகடி முன்பு தூயது
பிறங்கு நல்லறலின் மூழ்கியே
யேத மற்றவிரு கோடி சுற்றிவசி
யேந்தி யேகியெழு சூரியன்
றீதின் மெய்ப்பரவு காளி பூசையது
செய்வ தென்றுரை செய் தேனனாய்.

(இ - ள்) சூத்திரர், விவாகதினத்தின்முன் மேற்குறித்த காலங்களில் சுத்தசலத்தில் முழுகி, இரண்டு கோடியாடை தரித்து, கையில் வாளேந்திச்சென்று, சூரியனுக்குங் காளிக்கும் பூசைசெய்தல்வேண்டும். எ - று. (85)

## விவாகம்.

மாதர் மைந்தரிவர் சம்ப்ர தாயமும்
வரும்பொ ருத்தமு நிமித்தமு
மோது கோசாமு மொன்ற நன்மணம
தாறுத னன்றெனு விசைத்தலாற்
சேது காவலவன் விஞ்சை விஞ்சுசெக
ராச சேகரன்மெய் திகழ்வதற்
கேது வானவரு மலர்மு கத்தெரிவை
யிவ்வி திப்படி யிசைத்திடே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) அவ்வக் கால தேச வர்த்தமானங்களுக் கியைய, உரியகாலத்திலே ஸ்திரீபுருஷர்களுக்குப் பொருத்தமும் நிமித்தமும் கோசரமும் நன்றாக விவாகஞ்செய்க. எ - று. (86)

## தசப் பொருத்தம்.

*தினங்க ணந்தரும கேந்தி ரந்திரிக*
*மர்க்கம் யோனியதி ராசியு*
*மனங்கொ ளோரையதி பதிபொ ருத்தமுறு*
*வசியம் ரச்சுவொடு வேதையென்*
*றினங்கொள் பத்துமனு கூல மாமுழுது*
*மென்னி னன்மைபல வோங்குமாற்*
*கனங்கொள் பாதியெனின் மத்தி மந்திகழ்*
*கனங்கு றாய் குறையி னதமமே.*

(இ - ள்:) தினம் கணம் மாகேந்திரம் ஸ்திரீதீர்க்கம் யோனி இராசி இராசியதிபதி வசியம் இரச்சு வேதை என்னும் பத்துப் பொருத்தங்களுள், ஆறுமுதற் பத்துவரை பொருந்தின் உத்தமம்; ஐந்து பொருந்தில் மத்திமம்; ஐந்திற் குறைவாகப் பொருந்தின் அதமம். எ - று. (87)

## தினப் பொருத்தம்.

*குலவு மங்கையர்க ளுள்க ளாதியணி*
*குமர னுளளவு மெண்ணியே*
*யிலகு மூன்றுபரி யாய மாகிவர*
*வெண்ணி யொன்றிரெடு மூன்றுமைக்*
*துலவு மேழுபரி யாய மொன்றினி*
*லொழிக்க மற்றதி லுரைத்தகா*
*லலது நன்றறைவை நாச நாளொழிய*
*வாகு மற்றதி லறைந்ததே.*

(இ - ள்:) பெண்ணுள் முதற் புருஷனுளளவு மெண்ணிய தொகையை ஒன்பதால் வகுத்தவிடத்து, முதல் ஒன்பதில் 1-3-5-7-ஆம் நாட்கள் பொருந்தா. இரண்டாம் ஒன்பதில் 3-ம் நாளின் முதற்காலும் 5-ம் நாளின் நாலாங்காலும் 7-ம் நாளின் மூன்றாங்காலும் நீக்கிய ஏனைய நாட்களும், மூன்றாம் ஒன்பதில் பெண்ணினுடைய சென்மநக்ஷத்திரபாதமுதல் எண்பத்தெட்டாவது பாதமமைந்த வைநாசிகநாளொழிந்த ஏனைய நாட்களும் பொருந்தும். எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, பெண்ணுள் முதல் 2-4-6-8-9-11-13-15-17-18-20-21-24-25-26-27-ஆம் நாட்களும், 12-ம் நாளின் முதற்காலும், 14-ம் நாளின் நாலாங்காலும் 16-ம் நாளின் மூன்ருங்காலும் நீக்கிய மற்றைய கால்களும், 22 அல்லது 23-ஆம் நாட்களில் 88-ஆம் பாதம் அமையாத நாளெதுவோ அதுவும் பொருந்தும்; ஏனையவை பொருந்தா. (88)

ஒன்று சென்மமதி ரண்டு சம்பது
விபத்து மூன்றி லுறு சேமநான்
கன்றி யைந்ததுபி ரத்ய யம்பகரி
லாறு பேறுபெறு சாதக
மன்றி யேழுவத மெட்டு மித்திரம
தாகு மப்பரம மித்திரந்
துன்று மொன்பது சிறந்த பத்துரைசெய்
தூய சென்மமென மங்கையே.

(இ - ள்:) மேற்கூறியவாறு ஒன்பது ஒன்பது ஆக எண்ணிக்கண்ட பரியாயங்கள் மூன்றில், ஒவ்வொன்றிலும் 1-சென்மம், 2-சம்பத்து, 3-விபத்து, 4-க்ஷேமம், 5-பிரத்தியயம், 6-சாதகம், 7-வதம், 8-மித்திரம், 9-பரமமித்திரம் எனப் பெயர் பெறும். இவற்றிற்குரிய பலன்களைக் கூறுகின்ருாம். எ - று.

சென்ம நோய்விபத்து நாச மாம்பதி
சிறப்பி லைப்பகர் பிரத்யயங்
கன்ம வீவுவத மொன்று நான்குகிரி
கால்க டள்ளினிவை மூன்றினு
நன்மை சாருமொழி பிறவெ லாமிகவு
நன்றெ னச்சதுர் மறைப்பொருட்
டொன்மை கண்டவர்கள் சொன்ன தாமிது
துணிந்து நீயுரைசெய் தோகையே.

(இ - ள்:) முதற்பரியாயத்தில் சென்மமாகில் வியாதி. விபத்தாகில் காரியநாசம். பிரத்தியயமாகில் தலைவன்நாசம். வதமாயின் காரியக்கேடு. இரண்டாம் பரியாயத்துள்ள விபத்து நாளின் முதற்காலும் பிரத்தியயநாளின் நாலாங்காலும் வதநாளின் மூன்ருங்காலும் ஒழிந்த கால்களும், மூன்ரும்பரியாய நாட்களும் நன்ரும். எ - று. (90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகதினம்.

அநிப்பு நீர்கரம திந்தி ரன்சதய
மரவி ஞட்பதி மடந்தையர்க்
கெடுத்த வொன்றெனி னன்று சானுமிவை
யெண்ணி லாமக மவிட்டநாள்
பிடித்த பிண்டிகுரு மூல மாதிரைகள்
பேசி லொன்றதுறின் மத்திமந்
தடுத்த நாளொருப தைந்தி லேகமது
சாரி னன்மைகள் சமிக்குமே.

(இ - ள்.) ஸ்திரீபுருஷரிருவருடைய சென்மநாட்களும், பரணி ஆயிலியம் அத்தம் சேட்டை பூராடம் சதயம் இவ்வாறனுளொன்ருக அமையுமாயின் உத்தமம். திருவாதிரை புநர்பூசம் பூசம் மகம் மூலம் அவிட்டம் இவ்வாறனுளொன்ருயின் மத்திமம். அச்சுவினி கார்த்திகை ரோகிணி மிருகசிரிடம் பூரம் உத்தரம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் உத்தராடம் திருவோணம் பூரட்டாதி உத்தரட்டாதி ரேவதி இப்பதினைந்தினு ளொன்ருயின் பொருந்தாது. எ - று. (91)

## ஏகராசி, ஏகதினம்.

குமரன் மங்கையிவர் தங்க ளோரைகள்
குறித்த வொன்றெனின் முன்னதி
லமரு நாளிறைவ னுள தாகிலழ
கரிவை நாளெனி லமங்கலஞ்
சமையு மோரைக விரண்டு மொன்றின்மிசை
சாரின் முன்பதி யிராசியே
யுமையு நன்சிவனு மென்ன வாமொழிக
வோரை நாளுமுட னென்றினே.

(இ - ள்.) பெண்ணினதும் புருஷனதும் இராசிகளிரண்டும் ஒன்ருயிருந்தால் அவ்விராசிக்குரிய நாட்களில் முந்தியநாள் புருஷனுளாகவும் பிந்தியநாள் பெண்ணுளாகவும் அமைதலும், முன் ஏகதினத்தில் மத்திமமென்றவற்றுள் புநர்பூசம் அவிட்டம் என்பனவும் அதமமென்றவற்றுள் கார்த்திகை மிருகசிரிடம் உத்தரம் சித்திரை விசாகம் உத்தராடம் பூரட்டாதி என்பனவும் ஆகிய இவற்றுள் ஒருநாள் இரண்டிராசிகளில் அமைந்துநின்ருல் புருஷனிராசி முன்னும் பெண்ணிராசி பின்னுமாக வமைதலும் உத்தமம். அதமமென்றவற்றுள் நாளுமிராசியுமொன்ருயிருப்பின் முழுவதும் விலக்கத்தக்கன. எ - று. (92)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணப் பொருத்தம்.

பூச மோணமனு டங்க ரம்புரவி
    புநர்த மிந்தனில மந்தநா
ளேசி றெய்வகண மரவ மூலமுற
    மிந்தி ரன்வருணை னங்கிபுண்
மாசி சித்திரைமி ராக்க தக்கண
    மதித்த பூதமுரு டேர்விளங்
கிசன் மூன்றுபெறு பூர முத்தர்
    மிசைத்த மானுட கணங்களே.

(இ - ள்:) அச்சுவினி மிருகசிரிடம் புநர்பூசம் பூசம் அத்தம் சுவாதி அனுஷம் திருவோணம் ரேவதி இவை தேவகணம். கார்த்திகை ஆயிலியம் மகம் சித்திரை விசாகம் கேட்டை மூலம் அவிட்டம் சதயம் என்பவை இராக்ஷதகணம். பரணி ரோகிணி திருவாதிரை பூரம் உத்தரம் பூராடம் உத்தராடம் பூரட்டாதி உத்தரட்டாதி என்பவை மனுஷகணம். எ : று. (93)

இருவர் தங்கணமு மொன்றி மேவிடி
    னிசைந்த வுத்தமம தும்பர்தம்
விரவு நற்கணமு மானி டக்கணமு
    மேவின் மத்திம மரக்கராய்
மருவு மக்கணமு மும்பர் தங்கணமு
    மன்னு மேலதம மனுடனு
மரிய வக்கணமு நிசிச ரக்கணமு
    மாகின் மெத்ததம மாகுமே.

(இ - ள்:) ஸ்திரீபுருஷரிருவருடைய கணமும் ஒன்றாயின் உத்தமம். தேவகணமும் மனுஷகணமுமாயின் மத்திமம். தேவகணமும் இராக்ஷதகணமுமாயின் அதமம். இராக்ஷதகணமும் மனுஷகணமுமாயின் அதமாதமமாம். எ - று. (64)

ஏய்ந்த மங்கையர்க ணிசிச ரக்கண
    மெனிற்சி றந்தநல மைந்தர்தம்
வாய்ந்த தங்கண மிராக்க தக்கணம்
    வரிற்பொ ருத்தநல தன்றியே
தோய்ந்த மங்கையர்க ணிசிச ரற்குரிய
    சொற்க ணம்பெறினு நல்லவாம்
வேந்த னுளதறு நான்கின் மேலெனின்
    விதித்த நான்மறை விதித்ததே.

(இ - ள்:) பெண் இராக்ஷதகணமாகப் புருஷன் தேவமனுஷ கணங்களாயிற் பொருந்தாது. ஆயின், புருஷனுள் பெண்ணுளிலிருந்து 24-க்கு மேற்பட்டிருக்கில் பெண் இராக்ஷதகணமானுலும் பொருந்தும். புருஷன் இராக்ஷதகணமும் பெண் தேவமனுஷ கணங்களுமாயின் பொருந்தும். எ - று. (95)

## மாகேந்திரப் பொருத்தம்.

வேறு.

*பிறைநுதன்மா மடமாதர் சென்ம மாகப்*
*பிறங்கியநா ளதனுக்கு நான்கே ழையைத்*
*தறைபதினு றைமிரண்டு திகழ்மூ வொன்பா*
*னுமிருபத் திரண்டுபன்மூன் றணிபத் தொன்பா*
*னிறையவனு ளாகின்மகேந் திரமுண் டென்று*
*மிவையொழிந்த வென்னின்மகேந் திரமின் றென்று*
*மறையொருநான் கறிந்துணர்ந்தோர் கண்டார் செவ்வி*
*மதிவதனக் கிஞ்சுகவாய் மடநல் லாளே.*

(இ - ள்:) பெண்ணின் சென்மநாள் முதல் 4-7-10-13-16-19-22-25-27-ஆம் நாட்கள் புருஷநாளாக வரின் மாகேந்திரம் பொருந்தும்; அல்லாத நாட்களாகிவரின் பொருந்தாது. எ - று.

## ஸ்திரீதீர்க்கப் பொருத்தம்.

*சிறந்தமதித் திருவதனச் செவ்வி நவ்விச்*
*சிஞ்சிதப்பூண் மகுடமுலைத் தேன னுர்கள்*
*பிறங்கியநற் சென்மநாண் முதலாய்த் தாமப்*
*பெருஞ்சிகரக் களபபுயப் பெம்மான் சென்ம*
*மறந்தருநா ளளவாகக் குணிக்கிற் பன்மூன்*
*றதற்குமேற் றிரிதீர்க்க நன்று மன்றி*
*நிறைந்தவொன்பான் மேலாகி னடுவாங் கீழாய்*
*நிற்பிற்றிரி தீர்க்கமிலை திகழ்த்துங் காலே.*

(இ - ள்:) பெண்ணுள் முதற் புருஷனுள் பதின்மூன்றின் மேல் வரின் ஸ்திரீதீர்க்கம் உத்தமம். ஒன்பதின்மேல் பதின்மூன்றுவரையிலிருப்பின் மத்திமம். ஒன்றுமுதல் ஒன்பது வரையிலிருப்பின் பொருந்தாது. எ - று. (97)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோனிப் பொருத்தம்.

வேறு

மாக்களிறு மறியுடனு ணரவநெடு நாகம்
வருஞமலி மார்ச்சாலந் தகர்வெருகு சிகரி
யாக்கியபெண் ணெலியெருது மேதிபுலிப் போத்தா
மடர்தருபெண் புலியுடன்மான் கலைமுடுவல் குரங்கு
நீக்கியமைம் மைப்பசுவே மந்திபிணைச் சிங்க
நிகழ்பெட்டைப் பரியினுட னீண்மடங்கல் சுரபி
தூக்கியகைக் கரேணுவெனப் பரிமுதல யோனி
சொற்றனர்நற் சோதிடநூல் கற்றபெரி யோரே.

### நக்ஷத்திர யோனி.

(இ - ள்:)

| நக்ஷத்திரம் | யோனி | நக்ஷத்திரம் | யோனி |
|---|---|---|---|
| அச்சுவினி | – ஆண்குதிரை | சுவாதி | – ஆண்எருமை |
| பரணி | – ஆண்யானை | விசாகம் | – பெண்புலி |
| கார்த்திகை | – பெண்ஆடு | அனுஷம் | – பெண்மான் |
| ரோகிணி | – ஆண்பாம்பு | கேட்டை | – ஆண்மான் |
| மிருகசீரிடம் | – பெண்பாம்பு | மூலம் | – பெண்நாய் |
| திருவாதிரை | - ஆண்நாய் | பூராடம் | – ஆண்குரங்கு |
| புநர்பூசம் | – பெண்பூனை | உத்தராடம் | – மலட்டுப்பசு |
| பூசம் | – ஆண்ஆடு | திருவோணம் | – பெண்குரங்கு |
| ஆயிலியம் | – ஆண்பூனை | அவிட்டம் | – பெண்சிங்கம் |
| மகம் | – ஆண்எலி | சதயம் | – பெண்குதிரை |
| பூரம் | – பெண்எலி | பூரட்டாதி | – ஆண்சிங்கம் |
| உத்தரம் | – ஆண்மாடு | உத்தரட்டா | – பெண்மாடு |
| அத்தம் | – பெண்எருமை | ரேவதி | – பெண்யானை |
| சித்திரை | – ஆண்புலி | | |

எ - று.

திருவாதிரைக்குப் பெண்நாய் எனவும், சித்திரைக்குப் பெண்புலி எனவும், விசாகத்துக்கு ஆண்புலி எனவும், மூலத்துக்கு ஆண்நாய் எனவும், உத்தராடத்துக்கு ஆண்கீரி எனவும், அபிசித்துக்குப் பெண்கீரி எனவும் வேறுநூல்கள் கூறுகின்றன. (98)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

மடவரலா டவர்களா மிருவோ ருக்கு
 மன்னியவொன் றுகினன்று பின்ன யோனி
நடுவைர மெனிலதம மாகு மீது
 நவிலுங்காற் பசுபுலிதோல் சிங்கம் வாசி
யடுமகிட மாடுகவி பூனை யாகு
 மரிணநா யாமிவைக ளனைத்து மிச்சொற்
படியிடத்தா டவர்மடவா ரிவர்கண் மன்னர்
 பயிறொழிலோர்க் குப்பொருந்தப் பார்த்துக்கொள்வே.

(இ - ள்:) பெண்ணும் புருஷனும் ஒருயோனியாகில் உத்தமம். மாடும் புலியும், யானையும் சிங்கமும், குதிரையும் எருமையும், ஆடும் குரங்கும், பூனையும் எலியும், மானும் நாயும் ஒன்றற்கொன்று பகையாம். இருவர்நாளும் பகையோனியாயின் பொருந்தா. ஏனையவை மத்திமம். விவாகமல்லாத மற்றைய இராசசேவையினும், ஒற்றுமைத்தொழிலினும் மேற்சொல்லிய வாறு ஒருவருக்கொருவர் யோனிப்பொருத்தம் பார்த்தல்வேண்டும். எ - று.

உத்தராடத்துக்கு ஆண்கீரி எனக் கூறிய நூல்கள் பாம்புக்குக் கீரி பகையென விதித்தன. இந்நூலில் பாம்புக்குப் பகையோனியாக ஒன்றனையும் கூறாது விடுத்தது நியாயமாகக் காணப்படவில்லை. (99)

## இராசிப் பொருத்தம்.

மதிமுகத்தா ரோரைமுதன் மைந்த ரோரை
 வரவெண்ணுந் தொகைமிகுந்து மைந்தர் தங்கள்
புதுமையுற்ற வோரைமுதன் மடவா ரோரை
 புகவெண்ணுந் தொகைகுறைந்து வருகி லோரை
முதுமைபெற்ற வனுகூல நன்று மென்று
 மொழிந்தனர்க ளிருதொகையுஞ் சமமே யாகிற்
கதுமையுற்றோர் நன்றெனவே கண்டார் செம்பொற்
 கனங்குழையா யிவ்விதியுங் கருது வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பெண்ணிராசிமுதற் புருஷனிராசிவரை எண்ணிய தொகை மிகுந்து புருஷனிராசிமுதற் பெண்ணிராசிவரை எண்ணிய தொகை குறைந்துவரினும், இருதொகையும் ஒத்திருப்பினும் இராசிப்பொருத்தமுண்டாம். எ - று.

எனவே, பெண்ணிராசிமுதல் 7-8-9-10-11-12-ஆம் இராசிகள் புருஷனிராசியாகவரின் இராசிப்பொருத்தமுண்டென்றும், 1-2-3-4-5-6-ஆம் இராசிகள் புருஷனிராசியாக வரின் பொருத்தமில்லையென்றும் பெறப்பட்டன. (100)

## இராசியதிபதிப் பொருத்தம்.

*தரணிமகன் வெள்ளிபுத னிந்து வெய்யோன்*
*சசிபுதல்வன் கவிசேய்பொன் மந்தன் காரி*
*குருவெனமே டாதியதி பதியா மென்றே*
*குறித்தனர்நற் சோதிடநூல் குறித்த நல்லோர்*
*பரிமுதலாங் காலுடங்கி யொருநூற் றெட்டாம்*
*பதங்களுமிவ் வாறுகும் பகர்மின் செவ்விக்*
*கருநெடுங்கட் சிஞ்சிதப்பூ ணிணைப்பொற் கொங்கைக்*
*கமழளகப் பவளவிதழ்க் கனிவாய் மாதே.*

(இ - ள்:) மேடமுதல் மீனமீறுக முறையே செவ்வாய் சுக்கிரன் புதன் சந்திரன் சூரியன் புதன் சுக்கிரன் செவ்வாய் வியாழன் சனி சனி வியாழன் இவர்கள் அதிபராவர். அச்சுவினி முதற்கால் முதல் ரேவதிநாலாங்கால் வரையுள்ள 108 கால்களையும் மேடமுதலாக நிரையே அமைத்து, அவ்வந் நக்ஷத்திரபாதத்தின் அதிபர்களையும் இவ்வாறே கண்டுகொள்க. எ - று.

### இராசி அதிபர்கள்.

| இராசி | அதிபதி | இராசி | அதிபதி |
|---|---|---|---|
| மேடம் ... | செவ்வாய் | துலாம் ... | சுக்கிரன் |
| இடபம் ... | சுக்கிரன் | விருச்சிகம்... | செவ்வாய் |
| மிதுனம் ... | புதன் | தனு ... ... | வியாழன் |
| கர்க்கடகம்... | சந்திரன் | மகரம் ... | சனி |
| சிங்கம் ... | சூரியன் | கும்டம் ... | சனி |
| கன்னி ... | புதன் | மீனம் ... | வியாழன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்ஷத்திரபாத அதிபர்கள்

| நக்ஷத்திரம் | பாதம் | அம்சம் | அதிபர் | நக்ஷத்திரம் | பாதம் | அம்சம் | அதிபர் | நக்ஷத்திரம் | பாதம் | அம்சம் | அதிபர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அச்சு | 1 | மேட | குச | மகம் | 1 | மேட | குச | மூலம் | 1 | மேட | குச |
| ,, | 2 | இட | சுக்ர | ,, | 2 | இட | சுக்ர | ,, | 2 | இட | சுக்ர |
| ,, | 3 | மிது | புத | ,, | 3 | மிது | புத | ,, | 3 | மிது | புத |
| ,, | 4 | கர்க்க | சந்தி | ,, | 4 | கர்க்க | சந்தி | ,, | 4 | கர்க்க | சந்தி |
| பரணி | 1 | சிங்க | சூரிய | பூரம் | 1 | சிங்க | சூரி | பூரா | 1 | சிங்க | சூரிய |
| ,, | 2 | கன் | புத | ,, | 2 | கன் | புத | ,, | 2 | கன் | புத |
| ,, | 3 | துலா | சுக்ர | ,, | 3 | துலா | சுக்ர | ,, | 3 | துலா | சுக்ர |
| ,, | 4 | விரு | குச | ,, | 4 | விரு | தச | ,, | 4 | விரு | தச |
| கார்த் | 1 | தனு | குரு | உத்ரம் | 1 | தனு | தரு | உத்ரா | 1 | தனு | குரு |
| ,, | 2 | மகர | சனி | ,, | 2 | மகர | சனி | ,, | 2 | மகர | சனி |
| ,, | 3 | கும்ப | சனி | ,, | 3 | கும்ப | சனி | ,, | 3 | கும்ப | சனி |
| ,, | 4 | மீன | குரு | ,, | 4 | மீன | தரு | ,, | 4 | மீன | குரு |
| ரோகி | 1 | மேட | குச | அத்த | 1 | மேட | தச | திருவோ | 1 | மேட | குச |
| ,, | 2 | இட | சுக்ர | ,, | 2 | இட | சுக்ர | ,, | 2 | இட | சுக்ர |
| ,, | 3 | மிது | புத | ,, | 3 | மிது | புத | ,, | 3 | மிது | புத |
| ,, | 4 | கர்க்க | சந்தி | ,, | 4 | கர்க்க | சந்தி | ,, | 4 | கர்க்க | சந்தி |
| மிருக | 1 | சிங்க | சூரிய | சித்தி | 1 | சிங்க | சூரி | அவிட் | 1 | சிங்க | சூரிய |
| ,, | 2 | கன் | புத | ,, | 2 | கன் | புத | ,, | 2 | கன் | புத |
| ,, | 3 | துலா | சுக்ர | ,, | 3 | துலா | சுக்ர | ,, | 3 | துலா | சுக்ர |
| ,, | 4 | விரு | குச | ,, | 4 | விரு | தச | ,, | 4 | விரு | குச |
| திருவா | 1 | தனு | குரு | சுவாதி | 1 | தனு | தரு | சதயம் | 1 | தனு | குரு |
| ,, | 2 | மகர | சனி | ,, | 2 | மகர | சனி | ,, | 2 | மகர | சனி |
| ,, | 3 | கும்ப | சனி | ,, | 3 | கும்ப | சனி | ,, | 3 | கும்ப | சனி |
| ,, | 4 | மீன | குரு | ,, | 4 | மீன | தரு | ,, | 4 | மீன | தரு |
| புனர்பூ | 1 | மேட | குச | விசாக | 1 | மேட | தச | பூரட் | 1 | மேட | குச |
| ,, | 2 | இட | சுக்ர | ,, | 2 | இட | சுக்ர | ,, | 2 | இட | சுக்ர |
| ,, | 3 | மிது | புத | ,, | 3 | மிது | புத | ,, | 3 | மிது | புத |
| ,, | 4 | கர்க்க | சந்தி | ,, | 4 | கர்க்க | சந்தி | ,, | 4 | கர்க்க | சந் |
| பூசம் | 1 | சிங்க | சூரிய | அனு | 1 | சிங்க | சூரிய | உத்ரட் | 1 | சிங்க | சூரிய |
| ,, | 2 | கன் | புத | ,, | 2 | கன் | புத | ,, | 2 | கன் | புத |
| ,, | 3 | துலா | சுக்ர | ,, | 3 | துல | சுக்ர | ,, | 3 | துலா | சுக்ர |
| ,, | 4 | விரு | குச | ,, | 4 | விரு | தச | ,, | 4 | விரு | தச |
| ஆயிலி | 1 | தனு | குரு | கேட் | 1 | தனு | தரு | ரேவதி | 1 | தனு | தரு |
| ,, | 2 | மகர | சனி | ,, | 2 | மகர | சனி | ,, | 2 | மகர | சனி |
| ,, | 3 | கும்ப | சனி | ,, | 3 | கும் | சனி | ,, | 3 | கும்ப | சனி |
| ,, | 4 | மீன | குரு | ,, | 4 | மீன | தரு | ,, | 4 | மீன | தரு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரக சத்துரு, மித்துரு, சமன்.

வெய்யவற்குச் சனிவெள்ளி பகைவர் புந்தி
விளம்புசம னொழிந்தோர்மித் திராராந் திங்கட்
கையமறு கதிரவன்மா லோழ ரல்லா
ரனைசமர்சேய்க் காதபன்பொன் றிங்க ளன்போர்
துய்யபுதன் பகைவனல்லோர் சமரா மாற்குச்
சூரியன்கா வியன்சிறந்தோர் பகைஞன் றிங்கள்
பொய்யிலொழிந் தோர்சமரந் தணர்க்கு வேண்டிற்
புகர்மாலர் காரமந்தன் சமனாய்ப் போக்கே.

வேறு.

அல்லார்மித் திராராகு மரும்புகருக்
கந்தணனல் லவனி மைந்தன்
சொல்லாய சமரிரவி மைந்தன்மால்
மித்திராராந் துலங்கு மற்றோர்
பொல்லாத பகைவர்சனிக் கிந்துமகன்
புகர்சிறந்தோர் சமனுஞ் செம்பொ
னல்லார்க ளவரொழிந்தா ரெனமொழிந்தார்
வதனமதி நயன வேலாய்.

(இ - ள்:)

| கிரகம் | மித்துரு | சமன் | சத்துரு |
|---|---|---|---|
| சூரியன் | சந், செவ்வா, வியாழ | புதன் | சுக்கிர, சனி |
| சந்திர | சூரியன், புதன் | செவ், வியா, சுக்ர, சனி | ——— |
| செவ்வா | சூரியன், சந்திர, வியா | சுக்கிரன், சனி | புதன் |
| புதன் | சூரியன், சுக்கிரன் | செவ், வியாழன், சனி | சந்திரன் |
| வியாழ | சூரியன், சந்திர, செவ் | சனி | புதன், சுக்ர |
| சுக்கிர | புதன், சனி | செவ்வாய், வியாழன் | சூரியன், சந் |
| சனி ... | புதன், சுக்கிரன் | வியாழன் | சூரி, சந், செ |

(102—103)

அவரவர்க டிரிகோண வகந்தொடங்கி
யாட்சியள வடைவே யெண்ணிற்
கவையறுமோ ரிரண்டைந்து மும்மூன்றீ
ராறெட்டுக் கருது நான்கென்
றிவைபெறினு முச்சமதே யாயினுமித்
திராமீ தில்லா வெண்ணே
னவையறுவெம் பகைசமரு மிவ்வகையே
குறித்தறிந்து நவிலு வாயே.

(இ - ள்:) கிரகங்களுடைய மூலத்திரிகோண இராசி தொடங்கி 2-4-5-8-9-12-ம் இராசிகளின் அதிபர்களும், தத்தம் உச்சராசியினதிபரும் மித்திரராவர்; அல்லாதார் சத்துருக் களாவர். ஒருகிரகத்துக்குரிய இரண்டிராசிகளுள் ஒன்றில் மித் திரராகவும் மற்றதில் சத்துருவாகவும் வருபவர் சமர். இவ்வா றறிந்தே முற்செய்யுட்களில் சத்துரு, மித்துரு, சமர்கள் நிச்ச யிக்கப்பட்டிருக்கின்றன. எ - று.

மூலத்திரிகோண இராசிகளாவன: சூரியனுக்குச் சிங்கம். சந்திர னுக்கு இடபம். செவ்வாய்க்கு மேடம். புதனுக்குக் கன்னி. வியாழ னுக்குத் தனு. சுக்கிரனுக்குத் துலாம். சனிக்குக் கும்பம். என்பன வாம். (104)

## தற்கால சத்துரு, மித்துரு; சுபாவ அதிசத்துரு.

தற்கால மித்திரராம் பதினொன் றி
　　ரொன்கைந்திற் சாரும் பத்திற்
சொற்காகு மிரண்டாறி லொருமூன்றி
　　லிரண்டிலரி சொல்லுங் காலை
நிற்பாகு மாறேழெட் டொன்றென்பான்
　　வாள்பகைஞர் நிகர்பொன் வெள்ளி
யற்கால மதிபுந்தி கதிர்மந்தன்
　　சேய்சனியென் றறிவா யன்றே.

(இ - ள்:) கிரகங்களிருக்கும் இராசிக்கு 2-3-4-5-10-11-12-ஆம் இராசிகளில் இருப்பவர்கள் தற்கால மித்திரராவர்; 1-6-7-8-9-ஆம் இராசிகளில் இருப்பவர்கள் தற்கால சத்துருக்களாவர். சூரியனும் சனியும், சந்திரனும் புதனும், செவ்வாயும் சனியும், குருவும் சுக்கிரனும் (சுபாவத்திலேயே) அதிசத்துருக்களாம். எ - று.

கிரகங்கள், சுபாவமித்திரரும் தற்காலமித்திருமாயின் அதிமித்திரர். சுபாவசமரும் தற்காலமித்திருமாயின் சாதாரணமித்திரர். சுபாவமித் திரரும் தற்காலசத்துருமாயினும், சுபாவசத்துருவும் தற்காலமித் திருமாயினும் சமர். சுபாவசமரும் தற்கால சத்துருவுமாயின் சாதா ரணசத்துரு. சுபாவசத்துருவும் தற்காலசத்துருவுமாயின் அதிசத்துரு.

கிரகங்களிருக்கும் இராசிக்கு 5-ஆம் இடத்திலிருப்பவர்கள் தற்கால சத்துருக்களாவரென்றும், தமது உச்சவீட்டிலிருப்பவர்கள் தற்கால மித்திரராவரென்றும் வேறு நூல்கள் கூறுகின்றன. (105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசியதிபதிப் பொருத்தம்.

கூட்டிருவோ ரோரைகளுக் கதிபர்வெகு
மித்திரரேற் குணமா மன்றி
நாட்டியமித் திரர்சமரே னடுவதமஞ்
சமராகி னயந்தோர் தாமு
மீட்டியவெம் பகைஞருமேற் சண்டைசமர்
சத்துருவே விறப்பப் பொல்லா
வோட்டியவான் பகைஞரெனின் மரணமெனக்
கவிஞரறிந் துரைத்த வாறே.

(இ - ள்:) ஸ்திரீபுருஷர் இருவருடைய இராசிகளுக்கதிபர் ஒருவராயினும், இருவரும் (ஒருவருக்கொருவர்) மித்திரராயினும் உத்தமம். மித்திரரும் சமருமாகில் மத்திமம். இருவரும் சமராயின் அதமம். மித்திரரும் சத்துருவுமாகிற் கலகம். சமரும் சத்துருவுமாகில் அதிக தீமை. இருவரும் சத்துருக்களாயின் மரணம். இருவரது நக்ஷத்திரபாத அதிபர்களைக்கொண்டும் இவ்வாறே நிச்சயித்துக்கொள்க. எ - று. (106)

## வசியப் பொருத்தம்.

தகர்க்குத்தே ளரிநண்டு துலையேற்றுக்
கரிவையது தடிக்குச் சாப
மிகைக்குத்தே ணண்டினுக்குத் துலையரிக்குத்
தண்டுகயன் மின்னுக் கெண்மான்
மகட்பெயர்கோ லுக்களிக்குத் துலைகடக
மீன்சிலைக்கு வருடை கும்ப
மிகட்பில்கலைக் காடுகுடத் துக்கரிண
மீனத்துக் கியம்புங் காலே.

| இராசி | வசியம் | இராசி | வசியம் |
|---|---|---|---|
| மேடம் | சிங்கம், விருச்சிகம் | துலாம் | கன்னி, மகரம் |
| இடபம் | கர்க்கடகம், துலாம் | விருச்சிகம் | கர்க்கடகம், துலாம் |
| மிதுனம் | கன்னி | தனு | மீனம் |
| கர்க்கடகம் | விருச்சிகம், தனு | மகரம் | மேடம், கும்பம் |
| சிங்கம் | துலாம் | கும்பம் | மேடம் |
| கன்னி | மிதுனம், மீனம் | மீனம் | மகரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியவாறு பார்க்குமிடத்து, இருவரது இராசிகளும் ஒன்றற்கொன்று வசியமாயினும், பெண்ணிராசிக்குப் புருஷ னிராசி வசியமாகிலும் உத்தமம். புருஷனிராசிக்குப் பெண் ணிராசி வசியமாகில் மத்திமம். இருவரது இராசிகளும் ஒன் றற்கொன்று வசியமின்றேல் பொருந்தாது. எ - று.

**துலாத்துக்கு மகரமும், விருச்சிகத்துக்குக் கர்க்கடகமும் கன்னி யும் வசியமென வேறுநூல்கள் கூறுகின்றன.** (107)

## இரச்சுப் பொருத்தம்.

நல்லிலிங்கா கிருதிமுன் றெழுதி மீது
நான்குவரை திட்டிக்கீ ழிடவந் தத்துப்
புல்லியகோட் டத்திரலே படுத்து நாவாய்
புகுமளவும் வலமாகப் பொருத்திற் றேர்ந்தோர்
சொல்லிரச்சுச் சக்கரமா மிருவர் நாளுந்
துலங்கியகீ றொன்றுகி லாகா வேறின்
மெல்லியலாய் சோபனமா மிறங்கிற் றீதா
மேல்கீழ்நோக் குறிலிரச்சு மிகவு நன்றே.

(இ - ள்:)

**சிரம்:** மிருகசீரிடம் — சித்திரை — அவிட்டம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **கண்ட:** | ரோ | திரு | அத் | சுவா | திரு | சதய |
| **நாபி:** | கார் | புனர் | உத் | விசா | உத் | பூரட் |
| **ஊரு:** | பர | பூசம் | பூரம் | அனு | பூரா | உத் |
| **பாத:** | அச் | ஆயி | மகம் | கேட் | மூல | ரேவ |

இருவருடைய நக்ஷத்திரமும் மேற்காட்டிய சிரம், கண்டம் முதலிய ஐந்து ரேகைகளுள் ஒரே ரேகையில் வரின் இரச் சுப் பொருந்தாது; மாறிவரிற் பொருந்தும். மாறிவரும் போதும், இரண்டும் ஆரோகணமாகில் (கீழிருந்து மேற்செல் லில்) மிகவும் நன்று. இரண்டும் அவரோகணமாகில் (மேலிருந்து கீழ்ச்செல்லில்) தீது. ஒன்று ஆரோகணமும் மற்றது அவரோ கணமுமாகில் நன்று. எ - று.

**மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் இவற்றின் முன்னவைகள் ஆரோகணம்; பின்னவைகள் அவரோணம்.** (108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு.

பதத்துறு வரையி லொன்றிடிற் றணப்பாம்
பயிலிய வூருவி லொன்றிற்
றிதப்படு தனக்கே டரைவயி னொன்றிற்
சிறப்புடை மகச்சிதை வாகு
மதிப்புறு கழுத்து வரையிடை யொன்றின்
மன்னிய காந்தனுக் கழிவு
கதித்தவச் சிரத்தி னொன்றிடின் மரிப்பர்
காந்தனுங் கன்னியுங் காணே.

(இ - ள்:) இருவர் நாளும் பாதரச்சுவிலிருந்தால் பிரிவு. ஊரு(தொடை)ரச்சுவிலிருந்தால் திரவியநாசம். உதர (நாபி) ரச்சுவிலிருந்தால் புத்திரநாசம். கண்டரச்சுவிலிருந்தால் புருஷன் மரணம். சிரரச்சுவிலிருந்தால் இருவரும் மரணம். எ - று. (109)

## வேதைப் பொருத்தம்.

ஆதியு மொளியும் பூதமும் பணையு
மறைதரு மாரனு முறமும்
வேதனும் விளக்கு மீசனும் மாலும்
புகர்தமும் விச்சுவ நாளு
மோதிய குருவு முரைசெய்நீர் நாளு
முரகமு மூலமு மகமுந்
நிதறு தொழுவும் பூரமு முரசுஞ்
செப்பிய விவையுடன் றிருவே.

உற்றபங் குனியு நற்புரட் டாதி
யும்பக ரத்தமுஞ் செக்குஞ்
சற்றல வேதை யொன்றினுக் கொன்று
தண்மதி சித்திரை யவிட்டம்
பெற்றவிம் மூன்று மப்படித் தலைதோள்
பேணிய வயிறது தொடைதா
ளெற்றிடு வேதை மகன்மகள் புதல்வ
ரிருங்கிளை தனஞ்சிதைந் திடுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) அச்சுவினிக்குக் கேட்டையும், பரணிக்கு அனுஷமும், கார்த்திகைக்கு விசாகமும், ரோகிணிக்குச் சுவாதியும், திருவாதிரைக்குத் திருவோணமும், புநர்பூசத்துக்கு உத்தராடமும், பூசத்துக்குப் பூராடமும், ஆயிலியத்துக்கு மூலமும், மகத்துக்கு ரேவதியும், பூரத்துக்கு உத்தரட்டாதியும், உத்தரத்துக்குப் பூரட்டாதியும், அத்தத்துக்குச் சதயமும் வேதையாம். மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் இம்மூன்றும் ஒன்றினுக்கொன்று வேதையாம். இருவருடைய நக்ஷத்திரமும் மேற்காட்டிய ஒரு வேதையாகிற் பொருந்தாது; மாறிவரிற் பொருந்தும். அவை சிரவேதையாயின் புருஷன் மரணம். தோள்வேதையாயின் பெண் மரணம். நாபிவேதையாயின் புத்திரமரணம். ஊருவேதையாயின் பந்து மரணம். பாதவேதையாயின் தனச்சேதம். எ - று.

மிருசீரிடம்—சித்திரை—அவிட்டம் இவை சிரவேதை. ரோகிணி—சுவாதி, திருவாதிரை—திருவோணம், அத்தம்—சதயம் இவை தோள் வேதை. கார்த்திகை—விசாகம், புநர்பூசம்—உத்தராடம், உத்தரம்—பூரட்டாதி இவை நாபிவேதை. பரணி—அனுஷம், பூசம்—பூராடம், பூரம்—உத்தரட்டாதி இவை ஊருவேதை. அச்சுவினி—கேட்டை, ஆயிலியம்—மூலம், மகம்—ரேவதி இவை பாதவேதை.




(110—111)

## பொருத்த பலன்.

ஆயுசு தினமாங் கணஞ்சுபம் யோனி
யன்புமா கேந்திரம் பிள்ளை
யேயநற் றீர்க்க நலங்கிள ரோரை
யிருங்குல வர்த்தனை யதிபர்
தூயமித் திரமாஞ் சந்துட்டி வசியஞ்
சொற்றிடி லிரச்சுமங் கலியங்
காயுத லின்மை வேதையென் றிவைக்குக்
கனங்குழாய் பலன்களைக் காணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) தினப்பொருத்தம் பொருந்தில் ஆயுள் விருத்தி. கணம் பொருந்தில் சுபம். யோனி பொருந்தில் அன்பு. மாகேந்திரம் பொருந்தில் புத்திரவிருத்தி. ஸ்திரீதீர்க்கம் பொருந்தில் இன்பம். இராசி பொருந்தில் குலவிருத்தி. அதிபதி பொருந்தில் சினேகம். வசியம் பொருந்தில் சந்தோஷம். இரச்சு பொருந்தில் மங்கலியவிருத்தி. வேதை பொருந்தில் உறவு. எ - று. ()

## வன்னகூடம்.

மீனமுந் தேளுங் கடகமு முரைக்கின்
விப்பிர சாதிகோல் சிங்கங்
கூனுவின் மன்ன ரரியதண் டாடு
கும்பமற் றவர்கலை மங்கை
யானவே றிவையாஞ் சூத்திர சாதி
யறைந்திடின் மாதர்க டாழ்ந்தே
மானமார் புருட ருயர்ந்திட வேண்டும்
வன்னகூ டத்தினின் மானே.

(இ - ள்:) கர்க்கடகம், விருச்சிகம், மீனம் இவை பிராமண சாதி. சிங்கம், துலாம், தனு இவை க்ஷத்திரியசாதி. மேடம், மிதுனம், கும்பம் இவை வைசியசாதி. இடபம், கன்னி, மகரம் இவை சூத்திரசாதி. பெண்ணிராசி தாழ்ந்தசாதியும், புருஷனிராசி உயர்ந்தசாதியு மாகிலும் இருவரும் ஒருசாதியாகிலும் வருணகூடம் பொருந்தும். புருஷனிராசி தாழ்ந்தசாதியும் பெண்ணிராசி உயர்ந்தசாதியுமாகிற் பொருந்தாது. எ - று.

மேடம் க்ஷத்திரியசாதியெனவும், இடபம் கன்னி மகரம் இவை வைசியசாதியெனவும், மிதுனம் துலாம் கும்பம் இவை சூத்திரசாதி யெனவும் வேறு நூல்கள் கூறுகின்றன. (113)

## நாடிகூடம்.

இடையது முதலா நாடிக ளென்ன
வியம்பிய மூவரை யிட்டு
நடையுறு பரிநாட் கிழக்குமுன் னாக
நாட்டியே வலமிட மெண்ணின்
மடவர லொரு மிறையவ னொரு
மதித்தொரு நாடியி லாகாத்
தடமுலை மடவாய் நாடிகூ டத்திற்
றனித்தனி வரிற்சுபந் தருமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடை | சுழிமுனை | பிங்கலை |
|---|---|---|
| அச்சுவினி | பரணி | கார்த்திகை |
| திருவாதிரை | மிருகசீரிடம் | ரோகிணி |
| புனர்பூசம் | பூசம் | ஆயிலியம் |
| உத்தரம் | பூரம் | மகம் |
| அத்தம் | சித்திரை | சுவாதி |
| கேட்டை | அனுஷம் | விசாகம் |
| மூலம் | பூராடம் | உத்தராடம் |
| சதயம் | அவிட்டம் | திருவோணம் |
| பூரட்டாதி | உத்தரட்டாதி | ரேவதி |

பெண்ணும் புருஷனும் ஓரின நாடியாயின் நாடிகூடம் பொருந்தாது; மாறிவரிற் பொருந்தும். எ - று. (114)

## பூதகூடம்.

*அஞ்சிரு மூன்று மஞ்சிரு மூன்று*
*மஞ்சுமாப் பரிமுத லாக*
*விஞ்சுபார் நீர்தீ வளிவெளி யென்ன*
*விளம்பிய வடைவினிற் கண்டான்*
*மஞ்சுநேர் குழற்கும் வரற்குமோர் பூத*
*மன்னுகி னல்லதாந் தீநீ*
*ரெஞ்சிய வதம மொழிந்தவை சமமென்*
*றியம்பினர் பூதத்தி னியல்பே.*

(இ - ள்)

| பிருதுவி | அப்பு | தேயு | வாயு | ஆகாயம் |
|---|---|---|---|---|
| அச்சுவினி | திருவாதிரை | உத்தரம் | அனுஷம் | அவிட்டம் |
| பரணி | புனர்பூசம் | அத்தம் | கேட்டை | சதயம் |
| கார்த்திகை | பூசம் | சித்திரை | மூலம் | பூரட்டாதி |
| ரோகிணி | ஆயிலியம் | சுவாதி | பூராடம் | உத்தரட்டாதி |
| மிருகசீரிடம் | மகம் | விசாகம் | உத்தராடம் | ரேவதி |
| | பூரம் | | திருவோணம் | |

பெண்ணும் புருஷனும் ஒரே பூதமாயின் உத்தமம். அப்பும் தேயுவுமாயின் பொருந்தாது. மற்றைய பூதங்களாயின் மத்திமம். எ - று.

அனுஷம் தேயுநாளென வேறு நூல்கள் கூறுகின்றன. (115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுகூல் தேசம்.

வேறு

வேதைசௌ ராட்டி ரர்க்கு விளம்பிய கலிங்கர்க் காகு
மோதிய ரச்சு மற்ற வுற்றிடு வசிய மோரிற் [னி
கோதில்கொங் கணத்திற் காகுங் குயின்மொழி மடவா யோ
யேதமி லிராசி ஞால மெங்கணு மாகு மன்றே.

(இ - ள்:) வேதை சௌராட்டிர தேசத்திற்கும், இரச்சு கலிங்கதேசத்திற்கும், வசியம் கொங்கணதேசத்திற்கும், யோனியும் இராசியும் எல்லாத் தேசங்களுக்கும் முக்கியமாகப் பொருந்தல் வேண்டும். எ - று. (116)

## பொருத்ததோஷாபவாதம்.

வேறு

எண்டிருத்து மிரண்டீரா றிருமூன்றெட்
டைந்தொன்பா னிராசி யாயும்
பண்டிகைக்கு மொழிக்கரக்கர் கணங்கூடி
னுங்கிரகம் பயினட் புண்டேற்
றெண்டிரைக்குட் கண்டுயில்மால் செகராச
சேகரனுந் திருவு மென்ன
மண்டலத்தி னெடுங்கால மடமானும்
புமானுமிக வாழ்வ ரன்றே.

(இ - ள்:) பெண்ணிராசிக்குப் புருஷனிராசி 2 ஆகவும் புருஷனிராசிக்குப் பெண்ணிராசி 12 ஆகவும் வரினும், பெண்ணிராசிக்குப் புருஷனிராசி 6 ஆகவும் புருஷனிராசிக்குப் பெண்ணிராசி 8 ஆகவும் அமையினும், பெண்ணிராசிக்குப் புருஷனிராசி 5 ஆகவும் புருஷனிராசிக்குப் பெண்ணிராசி 9 ஆகவும் இருப்பினும் (ஆகவே பெண்ணிராசிக்குப் புருஷனிராசி 2-5-6 ஆயினும்), பெண் இராக்ஷதகணமும் புருஷன் தேவ மனுஷ கணமுமாக விருப்பினும், ஸ்திரீபுருஷரிருவருக்கும் இராசியதிபர்கள் ஒருவருக்கொருவர் மித்திரராயிருப்பின் தெளிந்ததிரையையுடைய பாற்கடலிற் றுயிலுகின்ற விஷ்ணுவைப்போல உலகத்தைக் காக்கின்ற செகராசசேகரமன்னவனும் இலச்சுமியை நிகர்த்த அவனது தேவியும் போலப் பூவுலகத்திலே நெடுங்காலம் பிரிவின்றி வாழ்வார். எ - று. (117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சித்தமுறு தினமாதி நிதெனினுந்*
*திரிகூடஞ் சிதைவுற் ருலுஞ்*
*சுத்தவிரு வோரோரைக் கதிபதியோர்*
*கிரகமாத் தோன்றி லான்ற*
*முத்தமிழ்சேர் செகராச சேகரமன்*
*திருமார்பின் முந்நூ லென்ன*
*மெத்துமியன் மயிலனையார் பைங்கழுத்தின்*
*மங்கலநாண் விளங்கு மின்னே.*

(இ - ள்:) தினமுதலான பொருத்தங்களில்லையாயினும், வன்னகூடம் நாடிகூடம் பூதகூடம் என்னும் மூன்றும் பொருந் தாவிடினும், பெண்ணுக்கும் புருஷனுக்குமுரிய இராசிகளுக்கு ஒரு கிரகம் அதிபதியாக வந்தால், இயலிசைநாடகமென்னும் முத்தமிழையுமுணர்ந்த செகராசசேகரவேந்தனது மார்பகத்து விளங்கும் பூணூலாஞ் சூத்திரம்போல ஸ்திரீகளது கழுத்திற் றரித்த திருமங்கலிய சூத்திரம் அனந்தகாலம் பிரகாசிக்கும். எ - று. (118)

## சகோதரர்களுக்குக் காலநியமம்.

வேறு

*ஏன்றவோ ரன்னை மைந்த ரிருவருக் கொருதி னத்தி*
*லான்றவோர் மாதத் தங்க ணயனமொன் றதனிற் சோதி*
*கான்றவேல் விழியாய் சௌளங் கடிவினை நாலிம் மூன்றுஞ்*
*சான்றவ ராகா தென்று சாற்றினார் செயற்குத் தானே.*

(இ - ள்:) ஒருதாயின் புத்திரரிருவருக்கு ஒருநாளிலாதல் ஒருமாதத்திலாதல் ஒரு அயனத்திலாதல் சௌளம், உபநயனம், விவாகம் என்னும் மூன்று கருமங்களுளொன்றாயினும் செய்யலா காதென்று பெரியோர் கூறினர். எ - று. (119)

## விவாககாலம்.

*கடிவினைக் கிரட்டை யாண்டு கன்னியர்க் கழகாஞ் சாலப்*
*படியினிற் குமரர்க் கொற்றை பலிக்குமா யுகமும் வாழ்வுந்*
*தொடிபடு கரத்தாய் வேறு தோன்றிடிற் றீதா மென்று*
*நெடுமறை கிளந்த நூலோர் நிகழ்த்தினு ரெனக்கொ ணீயே.*

(இ - ள்:) பெண்ணுக்கு இரட்டித்த வயதிலும், புருஷ னுக்கு ஒற்றித்த வயதிலும் விவாகஞ் செய்யின் ஆயுளும் வாழ்வு முண்டாம். பெண்ணுக்கு ஒற்றித்த வயதிலும் புருஷனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டித்த வயதிலும் விவாகஞ்செய்யின் கேடுண்டாம். எனவே, இருவருக்கும் ஒற்றித்த வயதில் அல்லது இருவருக்கும் இரட்டித்த வயதில் விவாகஞ்செய்யின் மத்திமமாம். எ - று. (120)

## விவாகமுகூர்த்தம்.

வேறு

என்றவன் கடகங் குடந்தனுக் கன்னி
யிவையொழி யோரையி னிற்கு
நன்றிசேர் மாத மவைகளி னுக
நாயக புரோகிதன் வெள்ளி
பொன்றுதல் விருத்த வாலபா வங்கள்
பொருந்திய காலங்கள் போக்கி
யொன்றிய பக்க முதலினிற் றிங்க
ளூரம்பெற நன்மண முன்னே.

(இ - ள்:) ஆடி புரட்டாதி மார்கழி மாசி ஒழிந்த மாதங்களில், குருசுக்கிரர் அஸ்தமன பாலவிருத்த தோஷங்கள் நீக்கி, பூர்வபக்கத்திலே, சந்திரன் பலமடைய விவாகஞ்செய்க. எ - று.

பின்னுமக் கடிக்குப் பேசுவர் தலைச்சூற்
பிள்ளைகட் கானியு மாகா
சென்மமா மாதக் தவிர்தலு மாகுந்
திதிகளி லட்டமி யிருத்தை
மன்னிய சட்டி துவாதசி பர்வம்
வருமிரண் டொழிகென வல்லோர்
பன்னின ருவாவிற் பூரணை கடிக்குப்
பழிப்பிலை யென்பது பகரே.

(இ - ள்:) முதற்பிறந்த பிள்ளைக்கு ஆனிமாதமும் பிறந்த மாதமும் தவிரப்படும். சதுர்த்தி ஷஷ்டி அஷ்டமி நவமி துவாதசி சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகள் நன்று. பூரணை மத்திமம். எ - று. (122)

அன்றிலுத் தரங்க டோணிகற் றீப
மத்தமிற் தனுடநீள் வாய்க்கா
லொன்றிய வுருடே ராயவிந் நாளி
லுறுகதிர் சனிகுசன் வார
மின்றியிவ் வோர்க ளுதயவங் கிஷங்க
ளியம்பிய கோக்கிவை யொழித்து
மன்றலங் குழலாய் கடிபுரி மந்தன்
வர்ரமு மாமென மதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) ரோகிணி, மிருகசீரிடம், மகம், உத்தரம், அத்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்தராடம், உத்தரட்டாதி, ரேவதி நக்ஷத்திரங்களில்; ஞாயிறு செவ்வாய் சனி வாரங்களும் இவர்களின் உதயாங்கிஷ நோக்கங்களுமின்றி விவாகஞ்செய்க. சனிவாரம் மத்திமமாகக் கொள்ளப்படும். எ - று. (123)

காரிகை யிரட்டை துலையிவை நன்று
கார்சிலை குடங்குளி ரேறு
சீரிய சீய மெனுமிவை சமமாஞ்
சிறந்தவ ருதயத்தி னன்கி
ஞேரிரண் டடனே யஞ்சினிற் பத்தி
லோங்குபன் னொன் றிலொன் பானில்
வேரியங் குழலாய் நன்றுபன் னொன்று
விளம்புமூன் றாறுமற் றவர்க்கே.

(இ - ள்:) மிதுனம் கன்னி துலாம் உத்தமம். இடபம் கர்க்கடகம் சிங்கம் தனு கும்பம் இவை மத்திமம். சுபக்கிரகங்கள் 1-2-4-5-9-10-11-ஆம் இடங்களிலும், பாபக்கிரகங்கள் 3-6-11-ஆம் இடங்களிலும் நிற்றல் நன்று. எ - று. (124)

எட்டினிற் கவிபொ னன்றல வேழி
லிருவகைத் திறத்தரு மாகார்
மட்டவிழ் குழலா யன்றியுங் கடிக்கு
மடவரல் சென்மநாண் மூன்றுஞ்
சிட்டர்நன் றென்றூர் மைந்தர்நாண் மூன்றுஞ்
சிறப்பிலை யிராசிக ளெவையும்
பட்டமே னோக்கு நல்லவ ருதிப்பும்
பலிக்கினுத் தமமெனப் பகரே.

(இ - ள்:) 8-ல் குரு சுக்கிரர் இருத்தல் கூடாது. 7-ல் சுபர் பாபர் ஒருவரும் இருத்தல் கூடாது. பெண்ணின் சென்மத்திரயங்கள் நன்று. புருஷனின் சென்மத்திரயங்கள் ஆகா. எந்த இராசியாயினும் மேனோக்காகவும் சுபக்கிரக உதயத்துடன் பொருந்தியுமிருப்பின் உத்தமமாம். எ - று.

பிறந்த நக்ஷத்திரமும், அதற்கு 10 - 19-ஆம் நக்ஷத்திரங்களும் சென்மத் திரயங்களாம். சூரியனிற்குமிராசிக்கு 3 - 6 - 9 - 12-ஆம் இராசிகள் மேனோக்கிய இராசிகளாம். புருஷனின் சென்மத்திரயங்களுள் 10-ம் நாள் கொள்ளலாமென்று வேறு நூல்கள் கூறுகின்றன. (125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாயச நிமித்தம்

சாருபூற் பக்கத் தருங்கடிக் கமைந்த
தக்கநா ளாதிக டம்மிற்
சிரிய பகலின் முன்றூறு பத்திற்
றேர்ந்தநல் லோரைகள் பொருந்தப்
பாரினை மெழுகி விதிப்படி முன்னூல்
பகர்ந்தவா யசபெலி பரப்பி
வேரியங் குழலாய் நன்றுதீ தறிதி
மிக்கது மிவ்வகை விளம்பே.

(இ - ள்:) பூர்வபக்கத்தில், விவாகத்திற்குச் சொல்லிய பஞ்சாங்க சுத்தமுள்ள தினத்தில், பகலின் முதற்பத்து நாழிகையில், சுபலக்கினத்தில், பூமியைச் சுத்தம்பண்ணி, சாஸ்திரவிதியிற் சொல்லிய வாயசபெலியிட்டு, நன்மை தீமை அறிந்து, மற்றைய சுபநிமித்தமும் பார்த்து விவாகஞ் செய்க. எ - று.

வாயசபெலி - காகத்திற்கிடுமுணவு. (126)

மணவினைப்படலம் முற்றிற்று.

---

நான்காவது

## கூழ்விணைப்படலம்

### அக்கினியாதானம்

வையமிந் திரகாட் டொழுவனல் சுளகு
மதியமூன் றுத்தர மிவையிற்
செய்யவன் மந்தன் வாரமா திகளுஞ்
செழுங்குளிர் குடங்கலை மீனம்
வெய்யவா மிருத்தை யிவைகளு மொழித்து
மிக்கதி லம்புலி குருசே
யுய்யவா மாட்சி யுச்சமித் திரர்க
ளோரையி லொளிசிறந் திடவே.

(இ - ள்:) கார்த்திகை ரோகிணி மிருகசீரிடம் உத்தரம் விசாகம் கேட்டை உத்தராடம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே, செவ்வாய் சனி அல்லாதவர் வாரோதயாம்சங்களிலே, கர்க்கடகம் மகரம் கும்பம் மீனம் ஒழிந்த இராசிகளில், சதுர்த்தி நவமி சதுர்த்தசி அல்லாத திதிகளில், சந்திரன் செவ் குரு ஆட்சி உச்ச நட்பு இராசிகளில் அஸ்தமனமின்றி விளங்க அக்கினியாதானஞ் செய்க. எ - று. (127)

ஆதவன் சோமன் மண்மகள் புதல்வ
னந்தணனிவர்கள்கேந் திரத்து
மோதிய வொன்பா னைந்தினுஞ் சிறந்த
வுபசயத் தினுமுற மற்றோர்
பேதியா துரைத்த வுபசய மதனிற்
பிறங்கிடச் சுத்தியெட் டாக
வேதியர் வேத முறைப்படி யோமம்
விளைத்திட னன்றென வேண்டே.

(இ - ள்.) சூரியன் சந்திரன் செவ்வாய் வியாழன் இவர்கள் 1-3-4-5-6-7-9-10-11-ம் இடங்களிலும், புதன் வெள்ளி சனி இவர்கள் 3-6-11-ம் இடங்களிலும் நிற்க, 8-ம் இடம் சுத்தமாக அந்தணர் வேதவிதிப்படி ஓமம் பண்ணுக. எ - று. (128)

## பூமிப்பிரவேசம்

ஆதிரை பூசஞ் சித்திரை வாய்க்கா
லனுடமூன் றுத்தரஞ் சோதி
பூதமிந் நாளின் ஞெண்டுதே ளேற்றிற்
புதன்மதி பூமகள் புதல்வன்
வேதிய னிவர்வா ராதியி னவமி
வேண்டுபத் திரையுவா வகற்றிச்
சோதிட முணர்ந்தோர் பூப்பிர வேசஞ்
சொற்றனர் தெரிந்துரை தோகாய்.

(இ - ள்.) பரணி திருவாதிரை பூசம் மகம் உத்தரம் சித்திரை சுவாதி அனுஷம் உத்தராடம் உத்தரட்டாதி இந்த நக்ஷத்திரங்களிலே, இடபம் கர்க்கடகம் விருச்சிக இராசிகளில், திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வாரோதயாம்சங்களில், துதியை சத்தமி நவமி துவாதசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில் பூமியிற் பிரவேசிக்க. எ - று. (129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷியாரம்பம்

ஒழுகுகா மாமூன் றுத்தரந் தோணி
யுயர்கரும் பசுரார்நாட் பூசம்
பழுதிலா விவையிற் குருமதி புந்தி
பளிங்கிவர் வாரமா திகளில்
வழுவிலா வுவாக்க ளிருத்தைக ளாறு
மன்னிய பன்னிரண் டெட்டுந்
தழுவிடா ஞெண்டு கலைதடி யேறு
தாவுமீ னெழக்ருஷி சாற்றே.

(இ - ள்:) ரோகிணி புநர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் மூலம் உத்தராடம் உத்தரட்டாதி ரேவதி நக்ஷத்திரங்களில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், சதுர்த்தி ஷஷ்டி அஷ்டமி நவமி துவாதசி சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில், இடபம் மிதுனம் கர்க்கடகம் மகரம் மீன இராசிகளில் கிருஷியாரம்பஞ் செய்க. எ - று. (130)

## உழுதல்

புட்பனை யத்த மகசிரங் கரும்பு
பூசமைப் பசிசக டோணங்
கொட்புறு மனிலந் தோணியுத் தரங்கள்
குன்றுசித் திரைமுற மூல
நட்புடை மகமென் றிவையிலே றலவ
னவ்விமீன் றண்டெழ வியந்த
பெட்புறு கிழக்கு வடக்கினை நோக்கிப்
பிறைநுதால் செறுவுழப் பேசே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் மகம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் மூலம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி நக்ஷத்திரங்களில், இடபம் மிதுனம் கர்க்கடகம் மகரம் மீன இராசிகளில், சுபதிதிகளும் சுபவாரோதயாம்சங்களு மமைய, கிழக்கு அல்லது வடக்கு நோக்கி நின்று உழுக. எ - று. (131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

அருக்க ஞருடன் முன்பி ஞரு
மமைந்த வேறது நாசமாம்
விருத்தி யா நுனி மூன்று நாளும்
வியந்த மூன்றுமம் மள்ளர்தா
மரிப்பர் மத்திம மாய பத்தும்
வயங்கு பாலம மைந்துமே
வுருத்த மேழியின் மூன்று நன்றென
வோதி ஞருழ வும்பரே.

(இ - ள்:) சூரியன் நிற்கும் நக்ஷத்திரம் முதல் முகூர்த்தம் சொல்லும் நக்ஷத்திரம் வரை எண்ணிச் கண்டதொகை 1, 2, 27 ஏர்முடி. 3, 4, 5, 24, 25, 26 நுகம். 6, 7, 8, 9, 10, 19, 20, 21, 22, 23 ஏர்க்கால். 11, 12, 13 மேழி. 14, 15, 16, 17, 18 கொழு எனக் கணக்கிடப்படும். இவற்றில் ஏர்முடி மூன்றும் எருது நாசம். வலநுகம் மூன்றும் (3,4,5) தானியவிருத்தி. இடநுகம் மூன்றும் (24,25,26) உழவர்க்குக் கேடு. ஏர்க்கால் நடுவிற் பத்தும், கொழுவில் ஐந்தும், மேழியில் மூன்றும் நன்று. எ - று. (132)

பணிச்சக்கரம்

வேறு

பணிச்சி ரத்தினுறு மூன்று நாட்பயிர்
பரந்தெ ழும்புழுவி ஞல்விடு
மணிக்க ழுத்தி னுறு மூன்று நாட்பயி
ரறப்பெ ருத்தழுகு மன்றியே
மணிக்கு டற்படி வயிற்றி ஞளவைமுந்
நான்கு மல்குமிகு தானியங்
கணித்த புச்சமுறு நான்கு நாளுமொழி
கடையி லைந்துபதர் காணுமே.

(இ - ள்:) சூரியன் நிற்கும் நாள் முதல் மூன்று நாள் பாம்பின் சிரம்; இவற்றில் பயிர் புழுவினுலழியும் மேல் 4-5-6-ம் நாட்கள் கழுத்து; இவற்றில் நீர்ப்பெருக்கினுல் பயிரழுகும். 7-8-9-10-11-12-13-14-15-16-17-18-ம் நாட்கள் வயிறு; இதற்றில் தானியவிருத்தி. 19-20-21-22-ம் நாட்கள் வால்; இவற்றில் பயிர் கெடும். 23-24-25-26-27ம் நாட்கள் வால்நுனி; இவற்றில் பயிர் பதராகும். எ - று. (133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீஜாவாபனம்

அத்த மோண முறங்கு ருச்சக
　　டனில மாசிக லஞ்சொன் மூன்
றுத்த ரம்பனை செக்கு மூல
　　முறந்த னுத்தகர் மங்கைதேள்
பத்தி ரைத்திதி யிருத்தை மூன்றி னொடு
　　பகரு வாவெழு பனிங்குநீத்
தொத்த பொன்கவி திங்கண் மாறின
　　முதய மாகவிதை யுய்த்திடே.

(இ - ள்:) ரோகிணி பூசம் மகம் உத்தரம் அத்தம் சுவாதி விசாகம் அனுஷம் மூலம் உத்தராடம் திருவோணம் சதயம் உத்தரட்டாதி ரேவதி என்னும் நக்ஷத்திரங்களில், துதியை சதுர்த்தி சத்தமி நவமி துவாதசி சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில், மேடம் கன்னி விருச்சிகம் தனு அல்லாத இராசிகளில், ஏழாமிடத்தில் சுக்கிரனில்லாதிருக்க, திங்கள் புதன் குரு சுக்கிர வாரோதயாங்கிசங்களில் வயலில் வித்திடுக. எ - று (134)

## கிழங்குவகை

சுளகு மூல மடிப்பு மாசி துலங்கு மங்கி சிறந்தமூன்
றளவு பூர மிதிற்ற னுப்பக ரரிவை மீனம மைந்தசொற்
றளர்வில் யாமெழு வொன்று மம்புலி சாரு வாரம தாதியாய்க்
களவில் கந்த மிடற்கு நன்று கரும்ப னுயிது காண்டியே.

(இ - ள்:) பரணி கார்த்திகை மகம் பூரம் விசாகம் மூலம் பூராடம் பூரட்டாதி நக்ஷத்திரங்களில், மிதுனம் கன்னி தனு மீனம் என்னும் இராசிகளில், திங்கள் வாரோதயாம்சங்களில் கிழங்குவகை நடுக. எ - று. (135)

## கோடிவகை

சோதி கேட்டை கரும்பு கன்னி
　　துலங்கு தாலமு மரியமா
வோது மானறலி தோணி சித்திரை
　　யுற்ற விங்கிவை யிற்றுலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதி நண்டு சுரூவெ ழத்திக
பூம்பொன் வாரம தாதியாக்
கோதில் வல்லிக ளாக்க நன்று
கொடுஞ்செய் வாளி நெடுங்கணுய்.

(இ - ள்:) அச்சுவினி மிருகசீரிடம் புனர்பூசம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் கேட்டை ரேவதி நக்ஷத்திரங்களில், மேடம் கர்க்கடகம் துலாம் மகரம் என்னும் இராசிகளில், வியாழ வாரோதயாங்கிசங்களில் கொடிவகை நடுக. எ - று. (136)

## மரவகை

பூச மோண மவிட்ட மாதிரை
புணரி தேரிவை தம்மிலே
யேசி லேறரி கும்ப மிவ்வுட
னேன்ற தேளெழ வான்றசீர்
மாசில் புந்தி தினுதி யாக
வரத் தடித்திடை மங்கைகே
ளாசில் சாய்கை கிளர்ந்த நன்மர
மாக்க நன்றென வாய்ந்திடே.

(இ - ள்:) ரோகிணி திருவாதிரை பூசம் திருவோணம் அவிட்டம் சதயம் என்னும் நக்ஷத்திரங்களில், இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் என்னும் இராசிகளில், புதவாரோதயாங் கிசங்களில் மரவகை நடுக. எ - று. (137)

## வெற்றிலை, செங்கழுநீர் முதலியவை உண்டாக்க

வேறு

சித்திரை மூலம் பனைபணி யத்தந்
திகழ்முறம் பூசமா மிவையும்
வித்தக வெள்ளி மதிதினு திகளு
மிக்கதா நாகவல் லிகளுக்
குத்தர மாசி கரும்புதே ரோண
முடுபதி குருகுபொன் பூர
மத்தமெய்ப் பயறு நல்லதா மின்னே
யமைத்தவுற் பலாதிக ளவைக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பூசம் ஆயிலியம் அத்தம் சித்திரை விசாகம் அனுஷம் மூலம் என்னும் நக்ஷத்திரங்களில், சந்திர சுக்கிர வாரோதயாங்கிசங்களில் வெற்றிலைக்கொடி நடுக. ரோகிணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் மகம் பூரம் உத்தரம் அத்தம் சித்திரை மூலம் திருவோணம் என்னும் நக்ஷத்திரங்களில், சந்திர சுக்கிர வாரோதயாம்சங்களில் செங்கழுநீர் முதலிய உற்பலாதிகள் நடுக. எ - று. (138)

## கருப்பு, புன்பயிர்

தோணிதேர் புரவி பூசநாட் செக்குத்
தொடுகர மிவையிலம் புலியோ
டேணில்நன் கவிவா ராதிக ளாகக்
கழைநடற் கழகதாஞ் சோதி
காணிய சுளகு பனைமக மோணங்
கண்ணிய தேர்கலஞ் சதய
நாணுறும் வைவேல் விழியிணை மடவாய்
நயந்தபுன் பயிர்க்கெலா நன்றே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி பூசம் அத்தம் சதயம் ரேவதி நக்ஷத்திரங்களில், சந்திர சுக்கிர வாரோதயாம்சங்களில் கருப்பு நடுக. ரோகிணி மகம் சுவாதி விசாகம் அனுஷம் திருவோணம் சதயம் ரேவதி நக்ஷத்திரங்களில் சிறுதானியங்கள் வித்திடுக. எ - று. (139)

## பனை, கமுகு, வாழை, மா, உழுந்து, பயறு

பனைசக டோண முத்தர மூன்று
பண்ணிய கலம்பய றுடனே
நினைவுறு குருகென் றிவைகளி னுழுந்து
நீள்பய றுதியங் குரங்க
ளனையவை யிடற்கு நல்லதா மாவிற்
கழகதா முத்தரங் கமுகு
நனைவுறு தாலம் பரியினி லழகா
நற்குரு வரம்பைக்கு நன்றே.

(இ - ள்:) ரோகிணி உத்தரம் சித்திரை அனுஷம் மூலம் உத்தராடம் திருவோணம் உத்தரட்டாதி ரேவதி என்னும் நக்ஷத்திரங்களில் உழுந்து பயறு முதலானவை வித்திடுக. உத்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்ஷத்திரத்தில் மாவும், அச்சுவினியில் பனையும் கமுகும், பூசத்தில் வாழையும் நடுக. எ - று. (140)

## இராசிப்பலன்

மேடமு மேறும் பயிர்மிகும் பலிக்கு
மிதுனமுங் கடகமுஞ் சிங்கம்
பிடையாய் நாசங் கன்னியிற் புல்லும்
பிறங்கிடுந் துலாத்தினி னன்றாங்
கிடமாந் தேளிற் சிலையினிற் களவாங்
கிளர்கலை குற்றமே வருத்து
நாடிய குடமேற் கலகமா மீன
நல்லதா மெனப்பல நாடே.

(இ - ள்:) பயிர்கள் மேடம், இடபம் இவைகளில் இடில் விருத்தி. மிதுனம், கர்க்கடகம் பலிக்கும். சிங்கம் நோயாற் கெடும். கன்னி புல் மிகும். துலாம் நன்றாகும். விருச்சிகம் புழு மிகும். தனு கள்வராற் சேதம். மகரம் அதிக குற்றங்களை உண்டாக்கும். கும்பம் கலகத்தினு லழியும். மீனம் நன்றாகப் பலிக்கும். எ - று. (141)

## நெற்கதிரறுத்தல்

வேறு

அடுப்பு மாசியோ டோண மத்த
மறைந்த வாதிரை சுளகுதே
ரெடுத்த நாளிவை தம்மின் மன்னு
மிருத்தை யன்றிய திதிகளின்
மடுத்த வோரை திரத்து டன்குளிர்
மல்க மால்சனி வெள்ளிபொன்
படைத்த வாரம தாதி யிற்சனி
பலமு றக்கதிர் பறிமினே.

(இ - ள்:) பரணி ரோகிணி திருவாதிரை மகம் அத்தம் விசாகம் திருவோணம் என்னும் நக்ஷத்திரங்களில், சதுர்த்தி நவமி சதுர்த்தசி ஒழிந்த திதிகளில், இடபம் கர்க்கடகம் சிங்கம் விருச்சிகம் கும்பம் இவ்விராசிகளில், புதன் வியாழன் வெள்ளி சனி வாரோதயாட்சங்களில், இலக்கினத்திற்குச் சனி பலமுண்டாக நெற்கதிரறுத்தல் செய்க. எ - று. (142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானிய சங்கிரகம்

மாசி மூதிரை கவ்வி சோணை மடிப்பு ரோகிணி மற்றுமேற்
பேசு நோக்குடை நாட்க ளிற்சசி பீத கன்கவி மந்தனென்
றேகில் வாரம தாதி யெய்த விருத்தை விட்டி யுவாக்களோ
டாகில் சித்திரை யின்றி நற்றிர மாக நெற்குவை யாக்கிடே.

(இ - ள்:) பரணி ரோகிணி திருவாதிரை பூசம் மகம் உத்தரம் அத்தப் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி நக்ஷத்திரங்களிலே, திங்கள் வியாழன் வெள்ளி சனி வாரோதயாப்சங்களில், சதுர்த்தி ஷஷ்டி அஷ்டமி நவமி துவாதசி சதுர்த்தசி பூரணை அமாவாசை விட்டிக்கரணம் இவை தவிர்த்துத் தானியசங்கிரகம் செய்க. எ - று. (143)

## புவனுந்தயோகம்

வேறு

ஏதினன்பத் திடத்தடைய விலக்கினத்திற்
பொன்னுதிப்ப வேழி னுன்கிற்
சோதிமதி யெழும்புவனுந் தத்திற்சங்
கிரகிக்கிற் றுலங்கும் பைந்தாட்
சீதமலர் நறுந்தெரியற் செகராச
சேகரமன் சிறந்த கீர்த்தி
மேதினிமேல் வளர்ந்துலவுந் தகைமையெனத்
தானியங்கள் மிகுக்கு மின்னே.

(இ - ள்:) இலக்கினத்தில் வியாழனும், நாலில் அல்லது ஏழில் சந்திரனும், பத்தில் சூரியனும் நிற்கில் புவனுந்தயோகமாம். இதில் தானியங்கள் சங்கிரகிக்கில் செகராசசேகரவேந்தனது புகழ்போல விருத்தியாகும். எ - று. (144)

## தானியபருவதம்

வேறு

பங்குனி மாசி யிரண்டினு மொன்றிய
பாற்குனி மாசியினிற்
றங்கிய வேறெழ நெற்குவை செய்திடிற்
றுனிய பர்வதமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிங்கிசை காரியு தித்திட வம்புலி
யைக்கெதழ வேழ்பொரனுறச்
செங்கதி ரோன்பதி னொன்றினி னின்றது
தேமொழி மேருவெனே.

(இ - ள்.) மாசிமாதத்து மகத்திலும், பங்குனிமாத உத்தரத்திலும், இடபலக்கினத்தில் நெற்குவை செய்திடில் தானிய பருவதமாம். இதன் பலன்: தானியங்கள் மிகுவிருத்தியாம். இலக்கினத்திற் சனியும், ஐந்திற் சந்திரனும், ஏழிற் குருவும், பதினொன்றிற் சூரியனும் இருத்தல் தானியமேரு யோகமாம். இதில் தானியசங்கிரகஞ் செய்யின் குறைவற்ற விருத்தியாம். எ - று. (145)

## தானிய விரயம்

கந்துக மார்கழி யுத்தர மூன்று
கரும்புட னுவணிமால்
மூந்துறு தோணி குருக்கணை மூன்று
மொழிந்திடு நாட்களிலே
சந்திரன் மால்சனி யந்தண னுமிவர்
தந்தின மாதிவரச்
சிந்தைசெ யோரை திரம்பெற நீடிய
செந்திரு நெற்செலவே.

(இ - ள்.) அச்சுவினி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் பூரம் உத்தரம் பூராடம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் பூரட்டாதி உத்தரட்டாதி ரேவதி நக்ஷத்திரங்களில், திங்கள் புதன் வியாழன் சனி வாரோதயாம்சங்களில், இடபம் சிங்கம் விருச்சிகம் கும்ப இராசிகளில் தானியச்செலவு செய்க. எ - று. (146)

## நவபோசனம்

சித்திரை யோண மகம்பணி தேர்பரி
திங்களொ டாவணிமூன்
றுத்தர மூல முறங்குரு வேய்கர
மோது கலங்கடல்கா
லித்திற நாளி லிருத்தைத யுவாவிவை
யின்றிய நற்றிதியிற்
றெருத்துறு தேடகர் மீன மொழிந்தவை
துய்த்திட வூண்புதிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் மகம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி விசாகம் அநுஷம் மூலம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி நக்ஷத்திரங்களில், சதுர்த்தி அட்டமி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில், மேடம் விருச்சிகம் மீனமொழிந்த இராசிகளில் நவபோசனஞ் செய்க. எ - று. (147)

## நவபலாதி இராசி

அந்தணன் மால்கவி யென்றிவர் வாரம தாதிசி றந்திடவே
யிந்திரு நாலழ கன்றினி மேட விராசிம லர்க்கிலைதேண்
முந்துறு மீனெழ நன்று பழுங்கள் மொழிந்த வகைப்படியே
புந்திசெய் வாரையி ரண்டினில் வந்து புகாதிட யாவருமே.

(இ - ள்:) புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், எட்டாமிடத்திற் சந்திரன் இல்லாதிருக்க நவபோசனஞ் செய்க. மேடம் மலர்ப்பயிருக்கும், விருச்சிகம் இலைப்பயிருக்கும், மீனம் பழப்பயிருக்கும் நன்று. பத்தாமிடஞ் சுத்தமாக விருத்தல்வேண்டும். எ - று (148)

கூழ்வினைப்படலம் முற்றிற்று.

---

ஐந்தாவது

# பலவினைப்படலம்

## திரவியசேமம்

இந்துரு டேர்குரு வத்தமொ டச
விருப்பனை யுத்தராமூன்
றந்தமில் போரொ டவிட்ட மூலக்கை
யமைந்திடு நாளிவையிற்
சுந்தர வோரை சுகம்பெற நல்லவர்
நாய நிறுதிவரச்
சந்த வுவாக்க ளிருத்தை சரங்க
டவிர்த்து தனங்கள்வையே.

(இ - ள்:) ரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை பூசம் உத்தரம் அத்தம் அனுஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி இந்நாட்களில், சதுர்த்தி அட்டமி நவமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், இடபம் மிதுனம் சிங்கம் கன்னி விருச்சிகம் தனு கும்பம் மீனம் இவ்விராசிகளில் திரவியஞ் சேமிக்க. எ - று. (149)

## கிரய விக்கிரயம்

வேறு

முற்றின் மாசிமதி யிந்தி ரன்புனர்த
மூல மைப்பசி கலஞ்சிவன்
பற்று பூரமுரு டேர்கு ருக்களிறு
பன்னு குன்றுதிரி யுத்தரம்
பெற்ற நாளிவையில் வெள்ளி புந்திமதி
பீத கன்றினம தாதியா
யுற்ற தேளரி துலாத்தி னேறுதடி
யோங்க நன்றுகொள விற்கவே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை புனர்பூசம் பூசம் மகம் பூரம் உத்தரம் அத்தம் விசாகம் கேட்டை மூலம் உத்தராடம் சதயம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், இடபம் மிதுனம் சிங்கம் துலாம் விருச்சிகம் என்னுமிராசிகளில் கொள்ளல் விற்றல் செய்க. எ - று. (150)

## மாடு ஆடு கொள்ளல்

புணர்த மாவணி விளக்கு சவ்வியொடு
பூச மைப்பசி புரந்தர
னிணையி ரேவதிகள தென்று நாளவையி
லேன்ற நல்லவர் நிறுதிவச்
சணைய வாவகை கொளற்கு நன்றெனை
வகுந்த தாலதிவி னந்தணன்
றணிவில் வாரமுறு பூச நாளில்வரு
தகரி லாடுகொள நக்கதே.

(இ - ள்:) அச்சுவினி புனர்பூசம் பூசம் அத்தம் சுவாதி விசாகம் கேட்டை அவிட்டம் ரேவதி இந்நாட்களில் சுபக்கிரகவாரோதயாம்சங்களில் மாடும், குருவாரமும் பூசநக்ஷத்திரமும் மேடலக்கினமுமமைய ஆடும் கொள்ளல் நன்று. எ - று. (151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவவஸ்திரந் தரித்தல்

ஆதி சித்திரையோ டத்த முங்கின் மற
மனுட மக்கமுறு மோணிதேர்
சோதி யுத்தரமொர் மூன்றி லொன்றிவரு
தூய சேய்சனி யெனச்சொலு
மேத முற்றபெரு வார மாதிக
விருத்தைதை தேளரி யியம்புமீன்
போத முற்றசிலை தகரொ ழிந்துதரி
புதிய நற்கலைகள் பூவையே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி புநர்பூசம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் உத்தராடம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், சதுர்த்தி அட்டமி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில், ஞாயிறு திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயங்களில், இடபம் மிதுனம் கர்க்கடகம் கன்னி துலாம் மகரம் கும்பம் என்னும் இராசிகளில் புதிய ஆடை தரிக்க நன்று. எ - று. (152)

## நவவஸ்திரந் தரிக்கும் இராசிப்பலன்

மேட மன்னர்பய மேறு தானியம்
வியன் றனந்தடி சுபங்குளிர்
கேடு சிங்கமட வாட னத்துலை
விளங்க நன்மைவித னங்கடேள்
பீடை விஞ்சுசிலை குணமு றுங்கலை
பெருத்த வாழ்வுகுட மரணமீன்
தேடு மந்தனி லுடுக்க லாங்கருமை
சேயி னன்றுடல் சிறந்ததே.

(இ - ள்:)

| இராசி | பலன் | இராசி | பலன் |
|---|---|---|---|
| மேடம் | ...இராசபயம் | துலாம் | ...நன்மை |
| இடபம் | ...தானியவிருத்தி | விருச்சிகம் | ...துக்கம் |
| மிதுனம் | ...தனவரவு | தனு | ...வியாதி |
| கர்க்கடகம் | ...சுபம் | மகரம் | ...சோபனம் |
| சிங்கம் | ...கேடு | கும்பம் | ...பெருவாழ்வு |
| கன்னி | ...தனவரவு | மீனம் | ...மரணபயம் |

செவ்வாய்க்கிழமையிற் சிவப்புநிறவாடையும், சனிக்கிழமையிற் கறுப்புநிறவாடையும் தரிக்கலாம். எ - று. (153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவவஸ்திரம்தரிக்கும் நக்ஷத்திரபலன்

கூறை யைப்பசி நமன் பயங்கனல்
கொளுந்து மாரல்சக டர்த்தமிந்
தேறு மச்சிகரி நாச மாதிரை
யிருந்த னங்கழை குருத்துகில்
பேறில் சர்ப்பமக மரண யம்பாசர்
பீடை புத்தரமு றுங்கலை
மாறி னற்றனம தத்த மாம்பயறு
வாக னம்மடிசில் வாயுவே.

காணு மன்புறு முறக்க ரும்பனை
கருத்த மைந்தவுடை யிந்திரன்
பேணு மப்புடைவை சிதையு மூலமிகு
பீடை நாரமுறு பிணிதுகிற்
பூணு மப்பொருவி லாடி யோணமிடி
புட்ட னஞ்சதய மரணநோய்
தாண முற்கொழுவு டுக்கை யாமுரசு
தோணி நற்றன மெனச்சொலே.

(இ - ள்:)

| நக்ஷத்திரம் | பலன் | நக்ஷத்திரம் | பலன் |
|---|---|---|---|
| அச்சுவினி | ...ஆடைப்பேறு | சுவாதி | ...போசனசுகம் |
| பரணி | ...பயம் | விசாகம் | ...சினேகப்பேறு |
| கார்த்திகை | ...அக்கினிபயம் | அநுஷம் | ...ஆடைப்பேறு |
| ரோகிணி | ...தனலாபம் | கேட்டை | ...ஆடைகிழிதல் |
| மிருகசிரிடம் | ...எலிப்பயம் | மூலம் | ...வியாதி |
| திருவாதிரை | ...நாசம் | பூராடம் | ...துக்கம் |
| புனர்பூசம் | ...தனலாபம் | உத்தராடம் | ...வஸ்திரலாபம் |
| பூசம் | ...ஆடைப்பேறு | திருவோணம் | ...வறுமை |
| ஆயிலியம் | ...மரணபயம | அவிட்டம் | ...தனலாபம் |
| மகம் | ...மரணபயம் | சதயம் | ...மரணபயம் |
| பூரம் | ...இராசபயம் | பூரட்டாதி | ...நோய்மிகுதி |
| உத்தரம் | ...ஆடைப்பேறு | உத்தரட்டாதி | ...ஆடைப்பேறு |
| அத்தம் | ...பொருட்பேறு | ரேவதி | ...நல்வாழ்வு |
| சித்திரை | ...வாகனலாபம் | | |

எ - று. (154–155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நவவஸ்திரந்தரிக்கும் வாரபலன்

அருக்க னிங்கலை விரைந்து கையுமதி
யனுதி னம்புனலி னனையுநோய்
பெருக்கு மக்குசன் மிகத்த னங்கலைகள்
பெருகும் புத்திகுரு ஞானமாஞ்
செருக்கு மிக்கபுகர் மகிழ்வு றுஞ்சனி
தினஞ்தொ றுங்கலை பிறங்குமென்
றுரைக்கு நற்பல மறைக்கு ளுற்றதென
வோதி னர்முனிவ ருண்மையே.

(இ - ள்:)

| வாரம் | பலன் | வாரம் | பலன் |
|---|---|---|---|
| ஞாயிறு | ...விரைவிற் கெடும் | வியாழன் | ...அறிவுவிருத்தி |
| திங்கள் | ...நீரில் நனையும் | வெள்ளி | ...மனமகிழ்ச்சி |
| செவ்வாய் | ...நோய் மிகும் | சனி | ...அழுக்கடையும் |
| புதன் | ...தனலாபம் | | |

எ - று. (156)

### தலைப்பாகை தரித்தல்

இரலை தேர்பயறு சோதி விட்டமுட
னிக்கி ரேவதி யிரும்பனை
குருவ தாயதிரி யுத்த ரங்களிறு
குலவு நாளிவையின் மின்னனுய்
பெருமை யானசிர வேட்டி தொக்கின்மிகு
பீடு றும்பெருக வென்றிசே
ரரிய வாரியர் குலாதி பன்றெரியு
மம்ம றைப்பொரு ளுரைக்குமே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி புநர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் உத்தராடம் அவிட்டம் உத்தரட்டாதி ரேவதி இந்நக்ஷத்திரங்களில், சுபக்கிரக வாரோதயாம்சங்களில், சுபதிதிகளில், சுபலக்கினம் பொருந்தத் தலைப்பாகை தரிக்க நன்று. எ - று. (157)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாமரை, காளாஞ்சி, கெண்டிகை முதலியன கொள்ளல்

மன்னர் மன்னுசெக ராச சேகரமன்
மணவை யாரிய வரோதயன்
பன்னு செந்தமிழ் வளம்பெ றற்குதவு
பரிசி லங்கவரி சித்திரயாம்
பொன்னின் மிஞ்சிய களாஞ்சி கெண்டிகை
பொலன்க லம்பிறவு மாம்பரிச்
சின்ன முள்ளதொகை யாவு மிவ்விதி
சிறந்த திக்துரைசெய் சேயிழாய்.

(இ - ள்:) முன் தலைப்பாகை தரித்தற்குச் சொல்லிய முகூர்த்தங்களில், சாமரை, குடை, காளாஞ்சி, கெண்டிகை, பொற்பாத்திரம் முதலியவற்றைக் கொள்ளலாம். எ - று. (158)

### நவவஸ்திரந்தரித்தற்கு விசேஷகாலம்

வேறு

வேந்தராக மகிழ்வுற்றுத் தருங்காலு
நான்மறையோர் வேண்டுங் காலுங்
காத்திபெறு மடவாரைக் கைப்பிடிக்குங்
காலையினுங் கடவுண் முன்னும்
போக்தவெழுத் துபதேசம் பெறும்போது
மபிடேகம் புனையும் போது
மாந்தர்தமக் கருங்கோடி யுடுப்பதற்கு
நாள்வார மதியா ரென்னே.

(இ - ள்:) அரசரிடத்தில் பரிசில் பெறுங் காலத்தும், அந்தணர் வேண்டுமிடத்தும், விவாகஞ்செய்யுமிடத்தும், சிவசந்நிதியிலும், மந்திரோபதேசம் பெறும்போதும், அபிஷேகாலத்தும், புதியவாடை யுடுத்தற்கு நாள்வாராதி நியமங்கள் விசாரிக்க வேண்டாவாம். எ - று. (159)

### நவபூஷணம்

நாடுமதி புரவிகுருத் தேர்தோணி
சித்திரையு நவ்வி தாலங்
தேடிவையிற் சனிபுந்தி குருவெள்ளி
சசிவாருஞ் சிறந்த கால்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடவரு நந்தையொடு பூரணையாந்
திதிகூடக் கோதண் டம்பெண்
ணேறிடப மிதுனமீ னெழுக்கலங்கள்
புனைவதுநன் றுரைக்குங் காலே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் பூசம் அத்தம் சித்திரை அனுஷம் ரேவதி இந்நக்ஷத்திரங்களில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி சனி வாரோதயாம்சங்களில், பிரதமை பஞ்சமி ஷஷ்டி தசமி ஏகாதசி பூரணை என்னுந் திதிகளில், இடபம் மிதுனம் கன்னி தனு மீனம் என்னும் இராசிகளில் புதிய ஆபரணங்கள் அணிய நன்று. எ - று. (160)

## கடன் தீர்த்தல்

அந்தணனோ டறைகாரி வாரங்க
ளிருத்தையுவா வவர்க ளோக்கு
முந்தியகா லுதயமென வவையன்றி
யிருத்தையுறு முடவன் வாரத்
துக்குளி கோதயமு முண்டாக
வாகுதன்மற் றோங்கு பெண்ணை
தந்தவிரு சரணத்து முகூர்த்தந்தே
ளெழுவாத றனிசு திரே.

(இ - ள்:) வியாழன் சனி வாரங்களில் சதுர்த்தி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசைத் திதிகளில் குரு சனி நோக்குள்ள உதயாம்சங்களிலும், சனிவாரத்தில் சதுர்த்தி நவமி சதுர்த்தசித் திதிகளில் குளிகோதயத்திலும், அனுஷநக்ஷத்திரத்தின் இரண்டாம்பாதத்தில் விருச்சிகலக்கினத்தில் கன்னி நவாம்சத்திலும் கடன் தீர்க்க நன்று. எ - று. (161)

## ரோகாரம்ப நாட்பலன்

புரவி யொன்பதிற் றீர்க்திடு மல்லது
புகல்பலி பயறடுஞ் சோறு
பரியின் பக்தியி லுய்க்கவா மியம்பிய
பரணியைந் தெட்படி சோறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவுஞ் சந்தியிற் கார்த்திகைக் கேழுடன்
விளம்பெழு மூன்றுகற் பயறு
தரவு மூக்கொடு சொன்றிவாழ் துர்க்கையின்
றனத்திற் பலியிட றகைத்தே.

பண்டி யைந்துடன் பன்னொன்று பாயசம்
பகர்பிர மத்தலங் குபேரன்
விண்ட வாறுட னொன்பது மலர்த்தொடை
மேவன்னந் த_ரகமா நிரைக்குக்
கொண்ட வைந்துமுப் பக்கஞ்சாச் சிவப்பன்னங்
கொன்றைவேய் முடிவோன்பான் பன்மூன்
றுண்ட வெண்சோறு மாயவன் றனத்தி
லுறுபலி யிடுகென வோதே.

பூச மேழுநல் லோதன மயானமாம்
புகலர வாறுபன் னொளாந்
தேசு மேவிய நல்லிள நீர்புற்றுத்
திகழ்மக நாலுமூன் றெழுநா
ளாசி லெள்ளன்ன மீமத்திற் கணைக்குநல்
லறையெழு மூன்றுமுற் கான்ன
மேசில் சாமுண்டி பங்குனி மும்மூன்
றின்சோறு மானினிக ளிடமே.

கன்னி யேழுநல் லோதன மாதியிற்
கருதுசித் திரையிரு நான்கும்
பின்னு மவ்வள வைவகை யோதனம்
பிறழ்தரு சித்திரா லயங்கள்
மன்னு வாயுவீ ரைந்துநாற் பத்தைந்து
வருபாட கான்னதீல் கானஞ்
சொன்ன வம்முற மரணமூ வேழுறை
துலங்குமூந் தோதனஞ் சுணையே.

தால மெட்டிமூ வைந்துதே னோதனந்
தண்மலர் மரவடி கேட்டை
யேல வாறிரண் டறைபிடி மாவன்ன
மியம்புசேட் டாலய மினிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூல மூவேழு சுத்தான்ன மிறையா
முக்கண னாலய நீர்நாட்
கோல வைந்துபத் தியவைசே ரோதனங்
குளிர்புன னடுவெனக் கொள்ளே.

ஆடு மாதமொன் றெட்டுநெய் மன்மத
னாலய மோணமெட் டடைசேர்
நீடு மோதனங் கதிரவ னாலய
நிகரில்புட் பத்துடன் றயிர்ச்சோ
றேடு மைம்முக னாலயஞ் சதயம
தாறிரண் டாறுசா மைம்பாற்
றேடு மன்னநீர் கறுமலர் பொருந்திய
செழுங்குளக் கரையிடை செப்பே.

சொற்புரட் டாதி பன்னிரண் டாறு
துலங்கிய பலோதனங் கணேச
னற்பநி தான முத்தரட் டாதி
நவில்பதி னாலுமா வன்னஞ்
சற்பகங் கணனா லயங்கல மெட்டுத்
தசமுழுந் தோதனஞ் சத்திர
முற்பட நல்கிற் சுரமெனு மெவையு
மோசன மாமென மொழியே.

(இ - ள்:)

| நோய் தொடங்கும் நக்ஷத்திரம | நோய் தீரும் நாள் | தீராவிடில் இடும் பலி | பலியிடும் இடம் |
|---|---|---|---|
| அச்சுவினி | 9 | பயறு கலந்து பாகஞ் செய்த சோறு | குதிரைப்பந்தி |
| பரணி | 5 | எட்சோறு | நாற்சந்தி |
| கார்த்திகை | 7, 21 | பயறு உழுந்து கலந்து சமைத்த சோறு | துர்க்காலயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நோய் தொடங்கும் நக்ஷத்திரம் | நோய் தீரும் நாள் | தீராவிடில் இடும் பலி | பலியிடும் இடம் |
|---|---|---|---|
| ரோகிணி | 5, 11 | பாற்சோறு | பிரமத்தானம் |
| மிருசீரிடம் | 6, 9 | பூமாலை, சுத்தான்னம் | குளக்கரை |
| திருவாதிரை† | 5, 45 | சிவந்த அன்னம் | கொன்றைமரத்தடி |
| புநர்பூசம் | 13, 27 | சுத்தான்னம் | விஷ்ணுவாலயம் |
| பூசம் ... | 7 | சுத்தான்னம் | மயானம் |
| ஆயிலியம் | 6, 10 | இளநீர் | புற்றடி |
| மகம் ... | 4, 21 | எட்சோறு | மயானம் |
| பூரம் ... | 21 | பயற்றன்னம் | காளிகோவில் |
| உத்தரம் | 9 | மதுரான்னம் | சத்தமாதர்கோவில் |
| அத்தம் | 7 | சுத்தான்னம் | சூரியாலயம் |
| சித்திரை | 8, 27 | ஐந்துவகைச்சோறு | சித்திராலயம் |
| சுவாதி | 10, 45 | துவரைச்சோறு | காடு |
| விசாகம்† | 21 | உழுந்துகலந்தசோறு | தடாகக்கரை |
| அநுஷம் | 8, 15 | தேன்சோறு, மலர் | விருக்ஷத்தடி |
| கேட்டை | 12 | மாவும், அன்னமும் | மூதேவியாலயம் |
| மூலம் ... | 21 | சுத்தான்னம் | சிவாலயம் |
| பூராடம் | 5, 10 | துவரைச்சோறு | நீர்நிலைநடு |
| உத்தராடம் | 30,240 | நெய்ச்சோறு | மன்மதனாலயம் |
| திருவோணம் | 8 | மோதகம், அன்னம் | சூரியாலயம் |
| அவிட்டம் | 10 | தயிர்ச்சோறு | சிவாலயம் |
| சதயம்†... | 6, 12 | ஐந்துவகைச்சோறு | குளக்கரை |
| பூரட்டாதி | 6, 12 | பழங்கலந்தசோறு | கணேசராலயம் |
| உத்தரட்டா | 14 | மாவும், அன்னமும் | சிவாலயம் |
| ரேவதி... | 8, 10 | உழுந்துகலந்த சோறு | சத்திரம் |

நோயாளனது கிருகத்திலே சுத்தமான விடத்தில் அவன் முன்பாக மண்டலமாக மெழுகி, ஆசாரியன் கிழக்கு அல்லது வடக்கு முகமாக இருந்து, விக்கினேசுவரரைப் பூசித்து, நோய் கண்ட நக்ஷத்திரங்களுக்குரிய பலிகளைத் தாபித்து, சோடசோப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரத்துடன் அருச்சித்து, அவைகளைக் கொண்டுபோய் அவ்வந் நக்ஷத்திரத்துக்குரிய மந்திரத்தினாலே பலியிடச் சுரமுதலான சகல நோய்களும் சாந்தியாம். எ - று.

† இந்த அடையாளமிடப்பட்ட நக்ஷத்திரங்களில் நோய் தொடங்கினால் குறித்தநாள்வரை அசாத்தியமாம். (162,-168)

## ரோக மரணயோகம்

கவ்வை குன்றுபுட் கேட்டையா திரைகனல்
கருதிய பூதமுப் பூர
மெவ்வ மொன்றுமிந் நாட்களு நவமியு
மியைந்தபன் னிரண்டொடு சட்டி
செவ்வி தாயவித் திதிகளுங் கதிர்சனி
செய்பவ ரினங்களுஞ் சேர்ந்தாற்
றவ்வை யாமர ணயோகமா மிதினோய்
சார்ந்தவர் பிழைப்புறார் தானே.

(இ - ள்:) பரணி கார்த்திகை திருவாதிரை ஆயிலியம் பூரம் கேட்டை பூராடம் அவிட்டம் சதயம் பூரட்டாதி இந் நக்ஷத்திரங்களும், ஷஷ்டி நவமி துவாதசித் திதிகளும், ஞாயிறு செவ்வாய் சனி வாரங்களுங் கூடில் மரணயோகமாம். இதில் நோயுற்றார் பிழைக்கமாட்டாரென்க. எ - று. (169)

## நோயுறினும், விஷந்தீண்டினும் ஆகாநாட்கள்

விளக்கு மாசுண மாதிரை துளங்கொளி
மேவுமுப் பூரமென் றிவைபி
லிளக்க மின்றியே நோய்கொளிற் சாவெனு
மிசைத்தனன் றிரும்பனை தோணி
துளக்கு நாளிவை யிரண்டினு நோயுறிற்
றுயரொழிந் தழிவில மூலம்
வளர்க்கு மங்கியா திரைமகஞ் சுளகரா
மருவடிப் பரத்தொடின் மரிப்பே.

(இ - ள்:) திருவாதிரை ஆயிலியம் பூரம் சுவாதி கேட்டை பூராடம் பூரட்டாதி இந்நாட்களில் நோயுறின் அசாத்தியமாம். அனுஷம் ரேவதிகளில் நோய்வரிற் சிரமசாத்தியமாம். பரணி கார்த்திகை திருவாதிரை ஆயிலியம் மகம் விசாகம் மூலம் இந் நாட்களில் விஷந்தீண்டில் மீளாது. எ - று. (170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருந்துண்ணல்

கலங் காஞ்சக டோணமைப் பசிபனை
காய்கரும் பிக்துவுத் தராங்கள்
சிலம்பு புட்குருச் சித்திரை யிவைகளிற்
சேய்புதன் வெள்ளிபொன் றிங்க
ளிலங்கு வெய்யவ னிவர்தின மாதிரி
லிருத்தையிற் சாத்துடன் மடவா
டிலங்கு வாறுட னேழெட்டுச் சுத்தியாத்
தோன்றநன் றவுடதந் தொடற்கே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி நக்ஷத்திரங்களிலே, ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், சதுர்த்தி நவமி சதுர்த்தசித் திதிகளில், மேடம் சர்க்கடகம் கன்னி துலாம் மகர லக்கினங்களில், 6–7–8-ம் இடங்கள் சுத்தமாக நோய்தீர மருந்துண்க. எ - று (171)

### சுரத்துக்கும் சன்னிக்கும் மருந்துண்ணல்

ஆவ ணங்கர மைப்பசி சித்திரை
யம்புலி புகாவன் சனிமால்
மேவு வாரங்க ளாதிக ளோரைகள்
விளம்பிய சாஞ்சராங் கிசங்க
டேவி டுங்கள சுரத்தினுக் காஞ்சிவன்
சுளகடிப் பனுஷமா தவனன்
றேவிய வார மிருத்தைகள் சன்னிக்
குண்மருந் தருந்திட வுரையே.

(இ - ள்:) அச்சுவினி புநர்பூசம் அத்தம் சித்திரை இந் நாட்களில், திங்கள் புதன் வெள்ளி சனி வாரோதயாம்சங்களும், மேடம் கர்க்கடகம் துலாம் மகர இராசிகள் அம்சங்களும் பொருந்தச் சுரத்துக்கு; பரணி திருவாதிரை விசாகம் அனுஷ நக்ஷத்திரங்களும், ஞாயிற்றுக்கிழமையும், சதுர்த்தி நவமி சதுர்த்தசித் திதிகளும் அமையச் சன்னிக்கும் மருந்துண்ணலாம். எ - று (172)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சீவினி மருந்துண்ணல்

திணைமடந்தையம் புயத்தொடைப் புயத்திடைத்
திகழ்செக ராசசே கரமன்
மணவை தந்தமா லிருபதாம் புயமென
மருவினர்க் காத்துயி ரளிக்குங்
குணமி குந்தசஞ் சீவினிக் காதிரை
குலவிய முறமடுப் பனுடக்
கணிவில் வெங்கதிர் வாரம திருத்தைகள்
சார்ந்திடி னன்றெனச் சாற்றே.

(இ - ள்.) தாமரைமலர்மாலை பொருந்திய தோளினிடத்துப் பூமகள் எஞ்ஞான்றும் பிரிவின்றி வாழ்ந்திருக்கின்ற செகராசசேகரமன்னன் என்கின்ற மணவைப்பதியினுற்பவித்த அடைந்தோரைக் காக்கின்ற திருமாலி னுபயபாதாரவிந்தங்களைப் போலத் தன்னை யடைந்தாரது பிராணனைக் காக்கின்ற அமுதசஞ்சீவினியை, பரணி திருவாதிரை விசாகம் அனுஷம் என்னும் நாட்களில், சதுர்த்தி நவமி சதுர்த்தசித் திதிகளில், ஞாயிற்றுக்கிழமையில் உண்க. எ - று. (173)

## வாத பித்த சேட ரோகங்களுக்கு மருந்துண்ணல்

வாத ரோகத்திற் கோணமைப் பசிபணி
மகிழ்குருத் திருதிகள் சயையாம்
பித கன்குரு கனிலநற் சுரர்குருப்
பெறுதிரு திகளுறு நந்தை
மோது பித்தநோய் தனக்குகன் ருதிரை
மொழிகன லடுப்பொடு மூலம்
பேத மாஞ்சர ராசிசெவ் வாய்தினம்
பெறுங்கபஞ் தனக்கெனப் பேசே.

(இ - ள்.) அச்சுவினி ஆயிலியம் திருவோணம் என்னும் நக்ஷத்திரங்களில், திருதியை அட்டமி திரயோதசித் திதிகளில், வியாழன் வாரோதயாம்சங்களில் வாதரோகத்திற்குப்; பூசம் சுவாதி மூல நக்ஷத்திரங்களில், பிரதமை ஷஷ்டி ஏகாதசித் திதிகளில், வியாழன் வாரோதயாம்சங்களில் பித்தரோகத்திற்கும்; பரணி கார்த்திகை திருவாதிரை மூல நக்ஷத்திரங்களில், மேடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்க்கடகம் துலாம் மகர ராசிகளில், செவ்வாய் வாரோதயாம் சங்களில் சேடரோகத்திற்கும் மருந்துண்க. எ - று. (174)

## 18-வகைப் பிரமேகத்துக்கும் குட்டத்துக்கும் மருந்துண்ணல்

இருஞ்ச ரந்துட னுக்கிர மிலகுவென்
றினையவு மாறின மிருத்தை
வருந்தி யுற்றமே கங்களீ ரொன்பதாம்
வகைக்குனன் றருங்குட்ட வகைக்குப்
பொருந்து பக்கமுந் தியதாந் திவசமும்
புகலுநா ளவைகளுந் தீதாய்ப்
பரிந்தி லக்கினத் தெட்டினிற் றீயவர்
பயிலகன் மருந்தினைப் பண்ணே.

(இ - ள்:) சரமென்கின்ற புனர்பூசம் சுவாதி திருவோணங்களிலும், உக்கிரமென்கின்ற பரணி மகம் பூர நக்ஷத்திரங்களிலும், இலகுவென்கின்ற அச்சுவினி பூசம் அத்தம் என்னும் நக்ஷத்திரங்களிலும், புதன் வாரத்திலும், சதுர்த்தி நவமி சதுர்த்தசித் திதிகளிலும் பிரமேகங்கள் 18-க்கும் மருந்துண்ணவும்; திதி வார நக்ஷத்திர ராசிகளெல்லாம் பொல்லாதனவாயுற, இலக்கினத்தும் எட்டிலும் பாபக்கிரகங்கள் நிற்கக் குட்டரோகங்களுக்கு மருந்துண்ணவும் நன்று. எ - று. (175)

## பெருவயிறு, பித்தம், க்ஷயம் முதலிய சகலவியாதிகளுக்கும் மருந்துண்ணல்

பெருவ யிற்றினுக் காதிரை மகமுறம்
பித்தமான் றலையடிப் பரவந்
தரணி புத்திரன் வாரமு மாங்கயக்
தனக்குச்சேய் பார்த்திட விட்டி
வரவெவா ழிந்தசா தாரண நாளதாய்
மதித்திடு வியாதிகட் கெல்லா
மிரவி சேய்சனி யுதித்திடக் கண்டகத்
தெழுமருந் தியற்றுவ தியல்பே.

(இ - ள்:) திருவாதிரை மகம் விசாக நக்ஷத்திரங்களில் பெருவயிற்றிற்கும், பரணி மிருகசீரிடம் ஆயிலிய நக்ஷத்திரங்களில் பைத்தியத்திற்கும், செவ்வாய் வாராம்சங்களில் மருந்

துண்க. சாதாரணமென்கின்ற கார்த்திகை விசாகம் பூராடம் அவிட்டம் சதயம் பூரட்டாதி என்னும் நக்ஷத்திரங்களில், விட்டிக்கரணத்துடன் சேராத திதிகளில், இலக்கினத்தைச் செவ்வாய் நோக்க க்ஷயரோகத்திற்கு மருந்துண்க. சகல வியாதிகளுக்கும் சூரியன் செவ்வாய் சனி 1–4–7–10-ம் இடங்களில் நிற்க மருந்துண்க. எ - று. (176)

## சுடல், காரமிடல், சத்திரசிகிச்சைசெய்தல்

முக்கணன் கேட்டை கவ்வைதேட் கடைபின்
மூடவன்சேய் வாரமா திகளிற்
பக்க மாகிய விருத்தையின் ஞெண்டொடு
பாவைமே டந்துலை யுதிப்பத்
திக்க தெக்களி பெற்றிடப் பாவர்கள்
சிறந்தகேந் திரத்துற நோக்கத்
தக்கநாட் பொருந்தச் சுடவருங் காரஞ்
சத்திர முதவிடச் சாற்றே.

(இ - ள்:) திருவாதிரை ஆயிலியம் கேட்டை மூலம் இந்நாட்களில், செவ்வாய் சனி வாரோதயாம்சங்களில், சதுர்த்தி நவமி சதுர்த்தசித் திதிகளில், மேடம் கர்க்கடகம் கன்னி துலாம் இவ்விராசிகளில், எட்டாமிடஞ் சுத்தமாக, பாபக்கிரகங்கள் 1-4-7-10-ம் இடங்களில் நிற்க நோக்க, தாராபலஞ் சந்திரபலமமைய சுடல், காரமிடல், சத்திரசிகிச்சைசெய்தல் முதலியன செய்ய நன்று. எ - று (177)

## அட்டைவிடல்

வேறு

படத்த ராக்குரு வாதிரை பாவகன்
றெடுத்த பூரமுங் கேட்டையுஞ் சோதியுந்
தடத்த னத்திரு வேகாரஞ் சத்திர
மிடச்சு டச்சலூ கம்விட வேய்ந்தவே.

(இ - ள்:) கார்த்திகை திருவாதிரை பூசம் ஆயிலியம் பூரம் சுவாதி கேட்டை பூராடம் பூரட்டாதி இந்நாட்களில் காரமிடல், சுடல், அட்டைவிடல் என்பனவை செய்யலாம். எ - று. (178)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைலாப்பியங்கம்

இராவு வாப்பதி ஞன்கொடி யம்புமொன்
றொருவு மாறெட்டுப் பன்னிரண் டுத்தர
மரிய ரன்புனி தன்சென்ம மன்றியே
மருவு சங்கிரமம் விட்டெண்ணெய் வார்த்திடே.

(இ - ள்:) இராக்காலமும், பிரதமை ஷஷ்டி அஷ்டமி துவாதசி சதுர்த்தசி பூரணை அமாவாசைத் திதிகளும், திருவாதிரை உத்தரம் கேட்டை திருவோணம் என்னும் நக்ஷத்திரங்களும், ஜன்மத்திரய நாட்களும், சங்கிரமகாலங்களும் நீக்கி மற்றைக்காலங்களில் எண்ணெய்ஸ்நானஞ் செய்யலாம். எ - று. (179)

புந்தி சந்திரன் மந்தன்பு மான்களுக்
கந்த வெள்ளியொ டாரல ரிவையர்க்
குந்து வாரந் திதியவை யூறெனிற்
சிந்தி நெய்மண் டெறித்தெண்ணெய் சேர்த்திடே.

(இ - ள்:) ஆடவருக்குத் திங்கள் புதன் சனி வாரங்களும், பெண்களுக்குச் செவ்வாய் வெள்ளி வாரங்களும் எண்ணெயிட்டு முழுக நன்று. வாரம் திதி நக்ஷத்திரங்கள் தகுதியற்றனவாயிருந்தால் எண்ணெயுடன் நெய்யும் மண்ணுங் கூட்டினாற் குற்றமில்லை. எ - று. (180)

## தைலாப்பியங்க வாரபலன்

நண்ணு தாகம் பெரும்புகழ் நாசம்வாழ்
வண்மை மைந்தர்கள் சாவழி வாயுவாம்
விண்ணில் வெய்யவ ஞதிவி ரும்பநோய்க்
கண்ணர் பாலர்வி ருத்தர்க்கெக் காலமே.

(இ - ள்:)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | — தாகம். | வியாழன் | — புத்திரநாசம். |
| திங்கள் | — புகழ். | வெள்ளி | — அழிவு. |
| செவ்வாய் | — நாசம். | சனி | — ஆயுள்விருத்தி. |
| புதன் | — வாழ்வு. | | |

நோயாளர் பாலர் விருத்தர் இவர்களுக்குக் கால நன்மைதீமை விசாரியாமல் எக்காலமும் தைலாப்பியங்கம் பண்ணலாம் எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நோய்நீங்கியவர் ஸ்நானஞ்செய்ய ஆகாதவை

பாலை மாசிபு ரோகிணி பாந்தண்மூன்
றேல வுத்தரஞ் சோதியி ரேவதி
சீல வெள்ளி குபேரன் றினுதிமெய்க்
கோல நோயர் குளித்திடக் குற்றமே.

(இ - ள்:) ரோகிணி மிருகசீரிடம் ஆயிலியம் மகம் உத்தரம் சுவாதி உத்தராடம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களும், திங்கள் வெள்ளி வாரோதயாம்சங்களும் நோய்நீங்கியவர் ஸ்நானஞ்செய்தற்கு ஆகாவாம், எ - று. (182)

### நோய்நீங்கியவர் ஸ்நானஞ்செய்தல்

ஏனை நாட்க ளிரவிபொன் சேய்சனி
யான புந்தி தினுதிக ளட்டமி
தானி ருத்தை புவாக்கள்சற் கோட்பலன்
றேன ளுயுறு மோரைசி றந்ததே.

(இ - ள்:) அச்சுவினி பரணி கார்த்திகை ரோகிணி திருவாதிரை புநர்பூசம் பூசம் பூரம் அத்தம் சித்திரை விசாகம் அனுஷம் கேட்டை மூலம் பூராடம் திருவோணம் அவிட்டம் சதயம் பூரட்டாதி நக்ஷத்திரங்களிலே, ஞாயிறு செவ்வாய் புதன் வியாழன் சனி வாரோதயாம்சங்களில், சதுர்த்தி அட்டமி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசைத் திதிகளில், சுபக்கிரக பலம் பெற்ற சுபராசிகளில் நோய்மாறியவர்கள் ஸ்நானஞ் செய்க. எ - று (183)

### ஆயிரம்பிறை

வேறு

கருது மானுட ராயி ரம்பிறை காணி லங்கவர் வயதினன்
வருட மெண்பது மாத மெட்டு தில் மதிய மாயிரம் வந்தவா
றரிய வாண்டுக ளஞ்சி லஞ்சினி லதிக மாதமி ரண்டுட
னுரிய வாயுக மாகு மாதமு டன்படத்தொகை யொன்றுமே.

(இ - ள்:) மானுடர் ஆயிரம் பிறை கண்டால் அவர் வயது சௌரமானப்படி வருடம் எண்பதும் மாதம் எட்டுமாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்பது வருடம் எட்டு மாதத்தினும் ஆயிரம் பிறை வந்தவா றெங்ஙனமெனின்: மாதமொன்றுக்கு ஒருபிறை வீதம் எண்பதுவருடம் எட்டுமாதத்துக்கும் தொளாயிரத்தறுபத்தெட்டுப் பிறையாம். இன்னும், ஐந்து வருடத்துக்கு இரண்டு அதிக பிறை வீதம் எண்பது வருடத்துக்கும் முப்பத்திரண்டு அதிக பிறையாம். முந்திய வகையான் வந்த தொளாயிரத்தறுபத்தெட்டுப் பிறையுடன் இத்தொகையுங் கூட்ட, ஆயிரம் பிறை வந்த வாறு காண்க. எ - று. (184)

### சதாபிடேகம்

சொன்ன விவ்வகை யாயி ரம்பிறை
தொழுதல் சூரிய வாண்டுநூ
றென்ன வாயுக முற்று வாழ்த
லிசைந்த மன்னவ ரன்றியே
மன்னி டுங்குர வோர்வி ரும்பிய
மாறில் சொர்க்கமு றும்பொருட்
டுன்னி மிக்கச தாபி டேகமு
ரைத்த தாலதை யுற்றிடே.

(இ - ள்:) மேற்சொல்லியவாறு ஆயிரம் பிறையை வணங்குதல், உரிமையான வயது நூறாக ஆயுள் முதிர்ந்து வாழுதல் ஆகிய இப் பூருவபுண்ணிய வேதுக்களமைந்த அரசர்கள் மாத்திரமேயன்றி நிலைபெற்ற குரவர்களும் விரும்பியபடி சுவர்க்கமடையும்பொருட்டு மேலான நூறு அபிடேகம் செய்யவேண்டுமென்று மறைகள் கூறுதலால் அங்ஙனம் செய்க. எ - று. (185)

பதங்க னுத்தர மாதல் வேறு
பழித்த மாதம தன்றியே
யிதங்கொ ணல்வினை மாத மாமிவை
யிற்செ ணித்திடு நாளின் மூன்
றுதிர்ந்த வுத்தர மத்த மோணமு
ருட்க லங்கட லிவைகளில்
விதங்கொள் பக்கமு வாவி ருத்தைகள்
விட்ட வொற்றையின் மேவிடே.

(இ - ள்:) சூரியன் உத்தராயணத்திற் சஞ்சரிக்கும் காலத்திலாதல், தக்ஷிணாயனத்திலே சுபசருமங்களுக்கு ஆகாவென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கப்பட்ட மாதங்களொழிந்த ஏனைய மாதங்களிலாதல், ஜென்மநக்ஷத்திரம், ரோகிணி உத்தரம் அத்தம் உத்தராடம் திருவோணம் சதயம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், பிரதமை திருதியை பஞ்சமி ஸப்தமி ஏகாதசி திரயோதசித் திதிகளில் சதாபிஷேகஞ் செய்க. எ - று. (186)

சுத்த மெட்டுற வெள்ளி யோடு
சுரேசன் மந்திரி பண்டிதன்
வித்த கச்சுத கரனெ னப்பகர்
மிக்க வாரமு மவர்கடம்
வைத்த வோரையு முதய மும்பெற
மன்னு நாறபி டேகமுக்
தொத்தி னர்த்தொடை யோதி வஞ்சி
துணிந்து பண்ணு கினைந்திடே.

(இ - ள்:) அட்டமசுத்தியுண்டாக, திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில் சதாபிடேகஞ் செய்க. எ - று. ()

## சிராத்தம்

### வேறு

மாசிபுரட் டாதியினி லபர பக்க
மதித்திடுபஞ் சமிக்குமேல் வார வர்க்கந்
தேசிரவி சேய்மந்தன் பிறபன் னுன்கரந்
திதிநந்தை கழித்தவிட்டஞ் சோதி யத்தம்
பூசமகஞ் சித்திரைமான் றலைபோ ரோணம்
புரவிபனை நீரிவையிற் புதல்வர் பாரி
யோசைபெறு கர்த்தாவென் றவர்நாண் மூன்று
மொழித்திரண்டு சிராத்தமுஞ்செய் துவனுய்ப்பாயே.

(இ - ள்:) மாசி புரட்டாதி மாதங்களில், அபரபக்க பஞ்சமிக்கு மேற்பட்ட திதிகளில், ஞாயிறு செவ்வாய் சனி வாராம்சங்களில், பிரதமை ஷஷ்டி ஏகாதசி சதுர்த்தசி ஒழிந்த திதிகளில், அச்சுவினி மிருகசீரிடம் பூசம் மகம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் பூராடம் திருவோணம் அவிட்டம் சதயம் இந்நாட்களில், கர்த்தாவினுடையவும் பாரி புத்திரர்களினதும் ஜென்மத்திரயங்களுந் தவிர்த்து, காலங்கடந்த சபிண்டீகரண ஏகோத்திஷ்ட சிராத்தங்கள் செய்க. எ - று. (188)

## பிரேதகன்மம்

பற்றுதிதி பன்னொன்கி னேடு நந்தை
பத்திரையென் றிவைகளுஞ்சேய் கவிபொன் வார
முற்றகனல் கரும்புமுற மாடி தன்னே
டுணும்புரட்டை யுத்தரமென் றேது நாட்க
ளுற்றசிலை மீனலவன் றுலைய தேறு
தூயவர்க ளோரைகளுந் தள்ளித் திமை
பெற்றவர்கள் பெலம்பெருக மடவா யெல்லாப்
பிரேதகா ரியங்களுக்கும் பேசு வாயே.

(இ - ள்:) அச்சுவினி பரணி ரோகிணி மிருகசீரிடம் திரு வாதிரை பூசம் ஆயிலியம் மகம் பூரம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் கேட்டை மூலம் பூராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், திரு தியை சதுர்த்தி பஞ்சமி அஷ்டமி நவமி தசமி திரயோதசி பூரணை அமாவாசைத் திதிகளில்; ஞாயிறு திங்கள் புதன் சனி வாரங்களில், மேடம் மிதுனம் சிங்கம் கன்னி விருச்சிகம் மக ரம் கும்பம் என்னும் இராசிகளில், பாபக்கிரக பலமுண்டாகப் பிரேதகாரியங்கள் செய்க. எ - று (189)

## மரணம், தகனம்

வெய்யவன்மால் சனிதிங்க டினத்தின் நந்தை
மேவுசயை பூரணைமற் றிருத்தை கூடி
லையமிகு மரணமெனிற் றகிக்கி னன்று
மவ்வர்க்க மனைத்தினுக்கு மன்றிச் சேய்பொன்
றுய்யகவி வாரமுற முக்கா னுளிற்
றுலங்கியபத் திரையின்மரித் திடிற்பி ரேதஞ்
செய்யகனற் படுக்கில்வர்க்கத் தின்முப் பிரேதந்
திண்ணமுற வினையுமெனச் செப்பி னரே.

(இ - ள்:) ஞாயிறு திங்கள் புதன் சனி வாரங்களும், பிர தமை திருதியை சதுர்த்தி பஞ்சமி ஷஷ்டி அஷ்டமி நவமி தசமி ஏகாதசி திரயோதசி சதுர்த்தசி பூரணை அமாவாசைத் திதிக ளும் சம்பவிக்க மரிக்கினும் தகனிப்பினும் அக்கோத்திரத் துக்கு நன்மையாம். செவ்வாய் வியாழன் வெள்ளி வாரங்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்பூசம் விசாகம் பூரட்டாதி நாட்களும், துதியை சத்தமி துவாதசித் திதிகளும் சம்பவிக்க மரிப்பினும் தகனிப்பினும் அக்கோத்திரத்தில் மூன்றுபேர் மரிப்பாரென்று மேலோர் சொன்னார்கள். எ - று. (190)

## கல்லெடுத்தல், அத்திசஞ்சயனம்

ஆருமதி பொன்கவிமால் வாரஞ் சாரி
லாகாது கல்லெடுக்க வறையுங் காலைத்
தாரணிசே யிரவிசனி வார மாதி
சார்ந்திடவக் கல்லெடுக்கச் சால நன்றாங்
காரிகையாய் தசாகத்து லிரண்டா மிந்துக்
காணினன் றன் றொருநான்கு கருதஞ் சொன்பான்
நேர்பதியி னொன் றெனுநாளில் வருணத் தோர்க்குத்
திதிகளத்தி சஞ்சயனஞ் செய்ய நன்றே.

(இ - ள்:) திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சராசிகளில் கல்லெடுக்கலாகாது. ஞாயிறு செவ்வாய் சனி வாரோதயாப்சராசிகளில் கல்லெடுக்க நன்று. இரண்டு சாந்திரமாதமுறக் கல்லுவைத்தெடுத்தல் கூடாது. பிராமணருக்கு நான்காநாளும், அரசர்களுக்கு ஐந்தாநாளும், வைசியருக்கு ஒன்பதாநாளும், சூத்திரருக்குப் பதினொராநாளும் அத்திசஞ்சயனஞ் செய்ய நன்று. எ - று. தசாகம் - இறந்த பத்தாம் நாள். (191)

## ஏகோத்திட்டம், சபிண்டீகரணம்

அந்தணன்சேய் கவிபுடவ னிவர்கள் வார
மத்திசஞ் சயனத்திற் காகா வாகு
நந்துபன்னொன் றீராறெண் ணிரண்டா றைந்தா
காண்மேலே கோத்திட்ட முதல வாதி
சிந்திநன் றென் றொருநான்கு மாகா நாட்க
டிகழீரா றையொன்பான் மாத நான்கு
வந்தவிரு மூன்றுபதி னொன்று சொற்ற
வருடமொன்றுஞ் சபிண்டிக்கு மடநல் லாளே.

(இ - ள்:) செவ்வாய் வியாழன் வெள்ளி சனி வாரங்களில் அத்திசஞ்சயனம் பண்ணலாகாது. பிராமணருக்குப் பதினொராம் நாளின் மேலும், அரசருக்குப் பன்னிரண்டாம் நாளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், வைசியருக்குப் பதினாறும் நாளின் மேலும், சூத்திர ருக்கு முப்பதாம் நாளின் மேலும் ஏகோத்திட்ட சிராத்தம் பண்ணல் வேண்டும். தகனமுதல் நான்குநாளும் ஏகோத்திட்ட சிராத்தஞ் செய்தலாகாது. 12-ம் நாள், 45-ம் நாள், 4-ம் மாதம், 6-ம் மாதம், 11-ம் மாதம், 1-ம் வருஷம் என்னுமிவை சபிண்டீகரணஞ் செய்ய நன்று. எ - று. (192)

## நாளாதி வேண்டப்படாத மரணம்

வேறு

*பரித்த மாதாப்பி தாமு தற் பான்மையோர்*
*மரித்தி டிற்றக னுதிவ ருதினத்*
*துருத்த சன்மநாள் வாரம தோர்ந்திடா*
*தருத்த னன்றிரண் டாம்பிறை யன்றியே.*

(இ - ள்:) பிதா மாதா முதலியோர் மரணமான காலத்து, சென்மத்திரயங்கள், திதிவாராதி சுபாசுபங்களை ஆராயாது, அவ்வக் காலத்திலேயே, தகனாதி சகல கருமங்களையுஞ் செய்தல்வேண்டும். இரண்டு சாந்திரமாதத்தை மாத்திரம் இவற்றில் விலக்க வேண்டும். எ - று. (193)

## நாராயணபலி

*ஈனர் நீளர வானையி ரும்புலி*
*யான வாறி யடிபழி தீர்ந்தவர்*
*வான நண்ண மறைப்படி மங்கையே*
*தான நாரணன் றன்பலி செய்திடே.*

இ - ள்: சண்டாளர்களாலும், பாம்பு யானை புலி முதலிய துஷ்டவிலங்குகளாலும் கொலையுண்டவர் அப் பழி தீர்ந்து சுவர்க்க மடையும் பொருட்டு வேதவிதிப்படி நாராயணபலி இடுக. எ - று.

*பன்னு மாசற நிறைந்தபின் பன்னிரண்*
*டுன்னு பவ்வ முபயங்க ளாதல்சேர்*
*மன்னு மோணம் வரவாதல் செய்கலீர்*
*மின்னும் வெம்படைக் காம்வெள்ளி வேண்டிலே.*

(இ - ள்:) ஒருவருடம் நிறைந்தபின்பு, துவாதசி பூரணை அமாவாசைத் திதியிலாதல், திருவோணத்திலாதல் நாராயணபலி இடுக. வெள்ளிக்கிழமை தவிர்க்கப்படும். ஆயுதத்தால் இறந்தவருக்கு வெள்ளிக்கிழமையிலும் நாராயணபலியிடலாம். எ - று. ()

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்திகம், பௌடிகம்

வேறு

பெண்ணைகரும் புத்தரமூன் றனிலஞ் செக்குப்
பிதிர்காறு வாயோண மத்தம் பூச
நண்ணியசி ரவிட்டமெனப் பகரு நாளி
னலந்திகழ்முற் பக்கத்தி லிருத்தை யெட்டோ
டெண்ணியவா முவாவொழிந்த திதியிற் சுத்தி
யெட்டாகச் சுரர்குருமால் வெள்ளி திங்கள்
திண்ணியவா ராதிகளி லோரை கூடச்
செய்சாந்தி பௌடிகத்தைத் திருவொப் பாளே

(இ - ள்:) புநர்பூசம் பூசம் மகம் உத்தரம் அத்தம் சுவாதி அநுஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், பூர்வபக்கத்தில் சதுர்த்தி அட்டமி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சராசிகளில், அட்டமசுத்தியுண்டாகச் சாந்திக பௌடிகஞ் செய்க. எ - று. ()

பலவினைப்படலம் முற்றிற்று.

---

ஆறுவது

## வேந்தர்வினைப்படலம்

இராசாபிடேகம்

ஓதியவுத் தராயணத்திற் குடநீத் தல்லா
துத்தமமத் திமங்கன்னி சிலைநண் டன்றித்
திதலுதக் கிணுயனமுற் பக்க நன்றுந்
திகழுபர மூன்றுங்கூ றுகா வன்றிப்
பேதமுறு மிருபக்க மவையில் விட்டி
பிறழ்பக்கச் சித்திரையென் றிவைக ணீத்து
வேதியன்மால் புகரிந்து வார மாதி
விரும்பியெட்டுச் சுத்திபெற வேண்டு வாயே.

(இ - ள்:) இராசாபிடேகஞ் செய்யுமிடத்து, சித்திரை வைகாசி ஆனி தை பங்குனி மாதங்கள் உத்தமம். ஆவணி ஐப்பசி கார்த்திகை மாதங்கள் மத்திமம். பூர்வபக்கத்தில் பிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமை துதியை திருதியை பஞ்சமி ஸப்தமி தசமி ஏகாதசி திரயோதசித் திதிகளிலும், அபரபக்கத்தில் பிரதமை துதியை திருதியை பஞ்சமி ஸப்தமி தசமித் திதிகளிலும், விட்டிக் கரணம் நீக்கி, திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில் எட்டாமிடஞ் சுத்தியாகச் செய்க எ - று. (197)

மங்கைதுலை மகரந்தே ளொழித்தல் லாது
வருமோரை பெறவான மலின நீங்க
வங்கையுரு டேர்கரும்பு பூச மோணை
மம்புலியிற் திரன்போக்தை தோணி மூன்றாய்ப்
பங்குறமுத் தாம்புரவி பயறிங் நாளிற்
பகற்காலத் தபிடேகஞ் சூட்ட நன்று
மிங்கிதனின் மடநல்லாய் நம்பி ராட்டிக்
கிளங்குமரர்க் கிவ்விதியை யியற்றிக் கொள்ளே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் சித்திரை அனுஷம் சேட்டை உத்தராடம் திருவோணம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், மேடம் இடபம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் தனு கும்பம் மீனம் இவ்விராசிகளில், பகலில் ஆகாயம் களங்கமற்றிருக்குங் காலத்தில், இராசாபிடேகஞ் செய்க. இளவரசர், அரசிகளுக்கும் இங்ஙனமே அபிடேகஞ் செய்க. எ - று. (198)

## பட்டங்கட்டல், முத்திரைமோதிரங் கொடுத்தல்

மன்னவர்க்கும் பன்னியர்க்குஞ் சாமந் தர்க்கும்
மந்திரிக்குஞ் சேவகர்க்கு மற்றுள் ளோர்க்கும்
பன்னிலென்றும் யானைகட்கும் பரிக்கும் பட்ட
மியற்றிடிகி லபிடேகப் படியே காண்க
கன்னல்மதி குருவனுடஞ் சகடு சோதி
கடலொடுமூன் றுத்தரங்க டொடங்கி மூன்றின்
முன்னுறுவா ரோதயங்க ணன்றாய் வேந்தர்
முத்திரைமோ திரங்கொடுக்க மொழிந்தி டாயே.

(இ - ள்:) அரசர்க்கும் அரசியர்க்கும் சேனாதிபதிகளுக்கும் மந்திரிமாருக்கும் சேவகருக்கும் மற்றுமதிகாரிகளுக்கும் யானைக்கும் குதிரைக்கும் பட்டம் கட்டுமிடத்து, முன் இராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடேகத்துக்குச் சொல்லிய விதிப்படியே கொள்க. முத்திரை மோதிரங்கொடுத்தற்கு, அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர் பூசம் பூசம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி என்னும் நாட்களும், இராசாபிடேகத்துக்குச் சொன்ன சுபவார திதி லக்கினங்களும் நன்று. எ - று. (199)

## மங்கலங்கேட்டல்

சிவிகைகரங் கொடிரோணங் கரும்பு கேட்டை
செங்கைபனை யுத்தரங்கள் பரியிந் நாளிற்
சவுமியன்பொன் றிங்கள்கதிர் வெள்ளி வாரஞ்
சாருமுத யாதிகளி லிரண்டொன் றைந்தே
முவமறுமெட் டாறொருப தைம்மூன் றாய
வத்திதியின் மங்கலநன் றருக்க னாதி
கவையகல்சீ ராயுவினை வாழ்வு செல்வங்
கைப்பொருள்சா வெனப்பலங்கள் கருதுங்காலே.

(இ - ள்.) அச்சுவினி ரோகிணி திருவாதிரை புநர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் அனுஷம் கேட்டை உத்தராடம் திருவோணம் உத்தரட்டாதி இந்நாட்களில், பிரதமை துதியை பஞ்சமி ஷஷ்டி ஸப்தமி அட்டமி தசமி பூரணைத் திதிகளில், ஞாயிறு திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில் அரசர்கள் இராசாபிடேகத்தின் மேல் வாழ்த்துப்பெறுதல் நன்று. இவ்வாழ்த்து ஞாயிறுயின் நற்கீர்த்தி. திங்கள் ஆயுள் விருத்தி. செவ்வாய் பகை. புதன் வாழ்வு. வியாழன் செல்வம். வெள்ளி தனலாபம். சனி ஆயுட்குறைவு. எ - று. (200)

## சங்கீத நிருத்தாதிகள்

உடைகுளம்பா வகன்கொடிறு சுளகு தோணி
யுருத்திரனு வணியடுப்புப் பயறிந் நாளிற்
புடைதருநற் றிதிகளில்வா ராதி யெல்லாம்
பொருந்தியநற் கோட்கள்பெற்ற ராசி தேள்கர்க்
கடகமரி மிதுனம்விற் றுலைமீன் வாய்ப்பக்
கலந்திடுசங் கிதமுடன் கவிஞர் சொற்ற
விடமுடைய நிருத்தாதி கன்ம மெல்லா
மிளங்கொடியா யிவைகூட வியற்று வாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) பரணி கார்த்திகை திருவாதிரை பூசம் சித்திரை விசாகம் பூராடம் அவிட்டம் ரேவதி இந்நாட்களில், சுபவாரங் களில், சுபதிதிகளில், மிதுனம் கர்க்கடகம் சிங்கம் துலாம் விருச் சிகம் தனு மீனம் என்னு மிராசிகளில் சங்கீதம் நிருத்தம் முத லியவற்றை அரசர்கள் செய்விக்க நன்று. . எ - று. (201)

## இறைகோள்ளல்

புணர்தமுரு டேர்பவன மத்த மோணம்
பூராட மான்றலைபுட் பயமு மூன்று
யுணர்வருமுத் தரங்களா திரையிக் காளி
லுயர்குருபார்க் கவன்புந்தி யிவர்வா ராதி
யணையவிரு நான்கிருத்தை யேகன் பக்க
மமாவாசை யொழிதிதியி லாடு சாடி
குணமுறுதே ளன்றியெட்டிச் சுத்தி யாகக்
குலவியபூ விறைகரங்கள் கொள்ள லாமே.

(இ - ள்:) ரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை புனர்பூசம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி பூராடம் உத்தராடம் திரு வோணம் அவிட்டம் உத்தரட்டாதி இந்நாட்களில், புதன் வியா ழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், பிரதமை சதுர்த்தி அட் டமி நவமி சதுர்த்தசி அமாவாசை ஒழிந்த திதிகளில், மேடம் விருச்சிகம் கும்பம் அல்லாத இராசிகளில், எட்டாமிடஞ் சுத்த மாக அரசிறைப்பொருள் கொள்க. எ - று. (202)

## இராசதரிசனம்

அயமுலக்கை புட்கரங்காற் குளனேர் வானோ
டறைகலந்தேர் பனைசசிமூன் றுகுக் தூய
வயமுறுத்த வுத்தரங்க ளிவையிற் புந்தி
மதிகவிபொன் னிவர்வரோ தயங்க ளாகப்
பயமுறுத்த விருத்தையுவா வெட்டு விட்டி
பழித்தனுகூ லிக்கவிரும் பாரேழ் தாங்கு
நயமுறுத்த மன்னர்தமைக் காண நன்று
நன்றுநிர முபபமெனி னடுவ தாமே.

இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் பூசம் உத் தரம் அத்தம் சித்திரை அனுஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், சதுர்த்தி அட்

டமி நவமி சதுர்த்தசி பூரணை அமாவாசை ஒழிந்த திதிகளில், விட்டிக்கரணம் நீக்கி, உத்தமமான இடபம் சிங்கம் விருச்சிகம் கும்ப ராசிகளில், அல்லது மத்திமமான மிதும் கன்னி தனு மீன ராசிகளில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங் களில் அரசரைக் காண நன்று. எ - று. (203)

வையமன்னு காத்தியா யனசூத் ரத்து
மன்னியகா சிபகோத்ர மருவு கேண்மைச்
செய்யசதுர் மறைவாய்மைக் காசி வந்த
செகராச சேகரனு மன்ன னாதி
தூய்யபுகழ்ப் பூசுரமன் னவரைக் காணச்
சோபனஞ்சேர் மன்னவரைக் காண லாகும்
வெய்யவரும் வணிகர்குல வேந்தர்க் கன்றி
வேளாள வேந்தருக்காம் வெய்யோன் சேயே.

(இ - ள்:) காத்தியாயன சூத்திரத்தையுடைய காசிப கோத்திரத்திற் பிறந்த கிருபையுடைத்தாகிய நான்கு வேதங்களி னுண்மை கண்டவனும், காசியம்பதியினின்று வந்த அந்தணனு மாகிய செகராசசேகரன் முதலான பிராமண அரசர்களை ஞாயிற் றுக்கிழமையிலும், சிறப்புப்பொருந்திய க்ஷத்திரிய அரசர்களைச் செவ்வாய்க்கிழமையிலும் காண்க. வைசியகுல அரசர்களையும் வேளாளகுல அரசர்களையும் சனிக்கிழமையிற் காண்க. எ - று.

## இராசசேவை

### வேறு

உத்தர மூன்று தோணி யுருள்பனை பூச மோண
மத்தமிந் தயம்நேர் வான்புள் ளாகுமிந் நாட்கள் காசின்
கொத்தணி முடிக்குச் சொன்ன குணங்கள்வா ராதி பக்கஞ்
சுத்தம்வந் துதிப்ப வேந்தைத் துயரறச் சேவை செய்யே.

(இ - ள்:) முன்பு இராசாபிஷேகத்துக்குச் சொன்ன வாரம் திதி இலக்கினம் பக்கம் என்பவற்றில், அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் பூசம் உத்தரம் அத்தம் சித்திரை அனு ஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில் இராசசேவை செய்க. எ - று. (205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படைக்கலப்பயிற்சி, தேரேற்றம்

வேறு

மாசிகலம் புரவியுருள் மதிபுகர்தம் பணையோணம்
வாயு வத்தம்
பூசமொடு சிததிரைமூன் றுத்தரங்க ளிக்நாளிற்
புக்தி வெய்யோன்
றேசுறுமம் புலிகவிபொன் றினமுதய மாதிபெறத்
திகழு நக்தை
யேசுறுபூ ரணையில்வில்வா ளியற்றநெடுக் தேரேற
விசைத்தா ரென்னே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் மகம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி அனுஷம் உத்தராடம் திருவோணம் உத்தரட்டாதி ரேவதி இக்நாட்களில், ஞாயிறு திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், பிரதமை பஞ்சமி ஷஷ்டி தசமி ஏகாதசி பூரணை அமாவாசைத் திதிகளில் வில் வாள் முதலிய படைக்கலப் பயிற்சியும், தேரேற்றமும் செய்க. எ - று. (206)

## வில், வாள் இலக்கணம்

சிக்திக்கு மிரதவிதி சிற்பத்தி லாகுநெடுஞ்
சிலைக்கு நீளம்
வக்திக்கு நான்குதலை தொண்ணூறென் றறைவர்வடி
வாட்கு நீளம்
பக்தித்த விரலைம்பா னாகுமெனப் பகர்வரிவ்வாள்
பற்று வோர்க்கு
முக்துற்ற பொருத்தவகை முதியோர்க ளுரைப்படியே
மொழிவாய் மின்னே.

(இ - ள்:) தேருக்குரிய இலக்கணங்களெல்லாம் பாக்கக் கூறவேண்டுதலின் பிரமியம் காசியபம் அகத்தியம் மயமதம் மானஸாரம் முதலான சிற்பசாத்திரங்களிற் காண்க. வில்லின் நீளம் தொண்ணூற்றுநான்கு அங்குலமும், வாளின் நீளம் ஐம்பதங்குலமும் இருத்தல் வேண்டும். இவ்வாள் பற்றுவோர் முன்னோர் கூறிய பொருத்தமுறை அமையக் கொள்ளல் வேண்டும். எ - று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மானவிதானம்

சுற்றெயில்கோ புரமிரதந் துவசதண்டந் தெண்டாகுந்
துலங்கு விம்பம்
பற்றியவா சனஞ்சுடர்வாள் பயில்காளங் கலம்விளக்குப்
பரிசை சாபந்
தெற்றியந்தற் பணம்வாசல் காலிவைகள் விரலாகுஞ்
சின்னங் காசு
நற்றுகொழு வாபரண மிவையியவை யாமளவு
நாட்டுங் காலே.

இ - ள்: மதில் கோபுரம் தேர் கொடி கொடிமரம் இவை தெண்டளவையாற் கொள்ளப்படும். பிரதிமை ஆசனம் வாள் எக்காளம் நிறைகுடம் விளக்கு கேடகம் வில் வாத்தியம் கண்ணுடி வாயில் தம்பம் இவைகள் அங்குல அளவாற் கொள்ளப்படும். முத்திரைக்காசு கொழு ஆபரணம் இவை யவையளவாற் கொள்ளப்படும். எ - று. (208)

### வாட்பொருத்தம்

வேறு

அடுசுடர் வாளி னீள மளந்திறை வலது செங்கை
நடுவிர லிறைய தாக்கி நற்றிய குணத்தாற் றூக்கிக்
கொடைநிதி யுடனே கூட்டிக் கோவினு லீந்த சேடந்
தொடிபடு மங்கை நல்லாய் துவசமே முதலாய்ச் சொல்லே.

கேதனம் பொருளாந் தூமங் கேடதாஞ் சியம் வென்றி
யோதுநாய் பீடை யாமே யுறுபுவி புரக்குங் கோடு
நீதுறு விதனந் தந்தி செல்வங்கார் மகவே யாகிற்
போதணி குழலாய் நன்மைபொருந்திடா தென்று போற்றே.

(இ - ள்:) வாட்பொருத்தம் ஆராயுமிடத்து, வாளின் நீளத்தை அளந்து, வலக்கை நடுவிரலின் இறையா லெத்தனை கொண்டதென்று கண்டு, அத்தொகையை மூன்றுற் பெருக்கி, அத்துடன் ஒன்பது கூட்டி, எட்டாற் பிரித்த சேடம் 1 ஆயின் கொடி - அர்த்தலாபம். 2. புகை - மரணபயம். 3. சிங்கம் - வெற்றி. 4. நாய் - பிணி. 5. எருது - அரசவாழ்வு. 6. கழுதை - துக்கம். 7. யானை - பாக்கியம். 0. காகம் - நிஷ்பலம் என்று முறையே காண்க. (209-210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜகன்மம்

கந்துகங் கொடிறு மாசி கரம்பனை யிந்து தோணி
முந்திய கரும்பு சோதி மும்மையுத் தரங்க ளோணம்
வந்தபுள் ளுருளிந் நாளின் மதிமகன் மறையோன் வெள்ளி
புந்திவா ராதி யோரை புகல்கஜ கருமம் போக்கே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் மகம் உத்தரம் அத்தம் சுவாதி அனுஷம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் உத்தரட்டாதி ரேவதி இந்நாட்களில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில் சஜ கருமஞ் செய்க. எ - று. (211)

நல்லவர் சிறந்த வோரை நாட்டிய கால்கள் சாரப்
புல்லிய பக்க நன்ருய்ப் பொருந்தவெங் கரிக்கும் வெய்ய
மல்லலங் குசமேற் கொள்ள மதித்ததா மரையோ ரிதிற்
கொல்லலில் சாலை கட்டற் குரைத்தது மிவ்வா றன்றே.

(இ - ள்:) சுபக்கிரகங்களுடைய இராசியம்சங்கள் சம்ப விக்க, சுபதிதிகளில் யானைகளுக்கு அங்குசம் பிடிக்க, ஆரோகணம் பண்ண, சாலை கட்ட நன்று. எ - று (212)

## மிருகசாலை

அங்கியி னிருதி மீதி லானச மெருமை வாயு
தங்கிய திசையி லாகுஞ் சாருமீ சான மீது
துங்கமா வுறைதற் காகுந் துவாரத்திற் கிடமே யாகி
லெங்குமாந் தந்தி வாசி யிவைகளின் சாலை யென்னே.

(இ - ள்:) வடகிழக்குத் திசையிற் பசுச்சாலையும், தென் மேற்கில் ஆட்டுச்சாலையும், வடமேற்கில் எருமைச்சாலையும், வடகிழக்கில் யானை குதிரைச் சாலையும் அமைக்குக. வாயிலுக்கு இடப்பாகமாக உள்ள எத்திசையிலும் யானைச்சாலை குதிரைச் சாலைகள் அமைக்குக. எ - று (213)

## அசுவகன்மம்

பரிகளை சோதி தோணி பரணியிந் தங்கி காக்கை
குருமுற விவையில் வெள்ளி கூரியோன் செம்பொன் றிங்கள்
விரவிய வார மாதி மிகத்திர ஞெண்டு சாரப்
புரவியின் கருமஞ் செய்யப் புனையிழை யிருத்தை போக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) அச்சுவினி பரணி கார்த்திகை மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் சுவாதி விசாகம் அவிட்டம் ரேவதி இந்நாட்களில், சதுர்த்தி நவமி சதுர்த்தசி அல்லாத திதிகளில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாராம்சங்களில், இடபம் கர்க்கடகம் சிங்கம் விருச்சிகம் கும்பம் என்னும் இராசிகளில் குதிரையின் கருமங்கள் செய்க. எ - று. (214)

## பாற்கருமம்

கன்னிய நல்ல நாளிற் கதிர்மதி யுதிக்கு மோரை
நன்னைப்பால் கறக்கச் சேர்க்க நற்றயிர் கடைய நன்றாத்
தண்மதி வாரத் தோரை சசியெழுத் தறிக்கு நன்று
வெண்ணெய துருக்கத் திங்கள் மேவுநாட் சுளகு நன்றே.

(இ - ள்:) சுபதினத்திலே சந்திரனுதயமான இலக்கினத்தில் பால்கறக்க, பிரைசேர்க்க தயிர்கடைய நன்று. திங்கட்கிழமையில் சந்திரன் இலக்கினத்திருப்பப் பசுக்கட்டுந் தறி நடவும், திங்கட்கிழமையும் விசாகமுங் கூடிய தினத்தில் வெண்ணெய் உருக்கவும் நன்று. எ - று. (215)

## சுவாதிசம்பாதயோகம்

விளக்கினிற் சுடரோன் கால மேவிய வுலகுள் ளோர்க்குத்
துளக்குறு பீடை செய்யுஞ் சுவாதிசம் பாத யோகங்
கிளக்குமக் காலை சாந்தி கேண்மைமன் னவர்க்கு வேண்டுங்
குளப்புறு கற்கி சாந்தி கோல்வலை விதித்துக் கொள்ளே.

(இ - ள்:) சூரியன் சுவாதிநக்ஷத்திரத்தில் சஞ்சரிக்குங் காலம் சுவாதிசம்பாதயோகமாம். இக்காலத்தில் உலகத்துக்குப் பீடையுண்டாகும். இப் பீடை தீர அரசர்கள் சாந்தி செய்யக் கடவர். முக்கியமாகக் குதிரைகட்குத் தீங்கு வாராமல் இக்காலத்தில் சாந்தி பண்ணவேண்டும். எ - று. (216)

## அசுவசாந்தி, கெஜசாந்தி

ஐப்பசி மாத மன்றி யங்கிராண் மாத மாத
லெய்ப்புறு முதலாம் பக்கத் திருநான்கு பன்னொந் நிரா
றெப்புறு திதிகள் கூட வோரைகள் சுபமாய்ச் சாந்தி
மெய்ப்புறச் செய்யி னுய்யும் வேந்தயம் வேழ மின்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) ஐப்பசி கார்த்திகை மாதங்களில், பூர்வபக்ஷ அட்டமி துவாதசி பூரணைத் திதிகளில், சுபலக்கினங்களில் சாந்தி செய்யில் அரசருக்கும் யானைக்கும் குதிரைக்கும் உய்தியுண்டு. ()

## திருவாண்டேழுத்திடல்

ஆதவன் மிதுனத் தன்றி யலவனி னிற்குங் காலத்
தோதிய புனர்தஞ் செங்கை யில்லனு கூல வோரை
நிதனு பெலன்கள் பெற்றுத் திகழ்ச்செழ மகிழ்ந்து வேந்தை
யேதமில் திருவாண் டுற்ற வெழுத்தினை யிடுவிப் பாயே.

(இ - ள்:) ஆனி ஆடி மாதங்களில், திருவாதிரை புனர்பூச நக்ஷத்திரங்களில், சுபலக்கினங்களில் அரசர்கள் திருவாண்டெழுத்திடுக. எ - று. (218)

## அகத்தியபூசை

கன்னிகா டன்னில் வெய்யோன்
கலந்திடு காலத் தாய
மின்னிய பகன்மு கத்து
விளம்புதெக் கிணத்துக் கும்பந்
தன்னிடைப் பிறந்தோற் கர்க்கியந்
தரணியில் வேந்தர் நல்லோ
ரன்னவ ரளிக்கில் வாழ்வு
மாயுவும் புகழு மாமே.

(இ - ள்:) சூரியன் அத்தநக்ஷத்திரத்தில் நிற்கும்போது உதய காலத்தில் தெற்குத்திக்கில் கும்போற்பவராகிய அகத்திய முனிவருக்கு அரசர் பெரியோராதியர் அர்க்கியங் கொடுத்துப் பூசித்தால் வாழ்வும் ஆயுளுங் கீர்த்தியுமுண்டாம். எ - று. (219)

வேந்தர்வினைப்படலம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாவது

# கோசரப்படலம்

### யாத்திரைக்குக் கோசரசுபம்

நன்மைசால் கோச ரங்க
    ணயந்திடு கால மாக
வின்மலி புகரோன் புந்தி
    மேதினி மைந்த னென்போர்
முன்னிட மொழிந்து மற்றை
    மொழிகுரு வெள்ளி யானோர்
புன்மைக ளொழிந்து நன்றாய்ப்
    புகலியாத் திரைக்குப் பொன்னே.

(இ - ள்.) ஜென்மலக்கினத்துக்குஞ் சந்திரலக்கினத்துக்கும் கோசரசுபம் பொருந்திய காலத்து, செவ்வாய் புதன் வெள்ளி இவர்கள் பிரயாணதிசைக்கு எதிரினும் இடத்தினும் இல்லாமல், குருசுக்கிர அஸ்தமனங்கள் தவிர யாத்திரை செய்க. எ - று. (220)

### சந்திரலக்கின கோசரபலன்

#### சுபகோசரம்

வேறு

கோளனைத்தும் பன்னொன்று மாறு மூன்று
    குலவியபத் தருக்கற்கா மிதிற்பத் தோம்பில்
வாளரவு சுன்சேய்க்காம் மூன்று பத்து
    வயங்காறே ழொன்றுபனி மதிக்காம் பத்துத்
தாளுறுமே ழாறொழிந்த வெல்லாம் வெள்ளி
    தனக்காமைந் திரண்டொனேழ் தக்க வொன்பான்
கேளுறுமந் திரிக்காமா றெட்டுப் பத்துக்
    கிளரிரண்டு நான்குபுதன் கிட்டு மன்றே.

(இ - ள்.) சூரியன் 3-6-10-11-லும், சந்திரன் 1-3-6-7-10-11-லும், செவ்வாய் சனி இராகு கேது 3-6-11-லும், புதன் 2-4-6-8-10-11-லும், குரு 2-5-7-9-11-லும், சுக்கிரன் 1-2-3-4-5-8-9-11-12-லும் நற்பலன்களைக் கொடுப்பர். எ - று. (221)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூரியன்

வேறு

நற்பதி யகற்றும் போத
நடைதரு மரசர் தம்மாற்
பொற்புறு செல்வங் காட்டும்
பொருந்துநோய் பிடை சேர்க்குஞ்
சொற்படு வினைக டர்க்குந்
தூரம்போ நோய்சா வாக்கும்
பற்பொருள் பூமி நல்கும்
பழிதரு மிரவி பாவாய்.

(இ - ள்:) சூரியன் (சந்திரலக்கினமாகிய) 1-ல் இருக்கும் போது இடப்பிரிவு. 2. நடைக்கஷ்டம். 3. இராசசன்மானம். 4. நோய். 5. பீடை. 6. பகைநீக்கம். 7. தேசசஞ்சாரம். 8. நோய் 9. மரணபயம். 10. திரவியலாபம். 11. பூமிலாபம். 12. அபகீர்த்தி உண்டாம். எ - று. (222)

### சந்திரன்

ஓதன முதவு மத்த மொழிக்கும்பொன் பெருக்கு நோயா
மேதகு கருமக் கேடாம் விளைந்திடும் வித்த மேமந்
நீதற விளக்குஞ் சாவாந் திகழ்மன்னர் பயமுண் டாக்கு
மாதிய சுபமி லாப மளிக்கும்பொன் னகற்று மாலோன்.

(இ - ள்:) சந்திரன் 1-ல் போசனசுகம். 2. தனச்சேதம். 3. திரவியலாபம். 4. வியாதி. 5. காரியக்கேடு. 6. தன தானிய விருத்தி. 7. சுகம். 8. மரணபயம். 9. அரசர்பயம். 10. சுபம். 11. திரவியலாபம். 12. தனச்சேதம். எ - று. ()

### செவ்வாய், சனி, இராகு, கேது

பெருக்குமெய்ச் சோபங் கேடு பிறங்கிய வெற்றி நோய்க
ளருக்கிய மோக நன்மை யாம்பழி விதனம் பீடை
நெருக்கிய விவாதங் காட்டு நிகழ்ந்திடும் விவாகங் கூட்டுந்
தருக்கிய விரோதஞ் சேர்க்குஞ் சனிகுச னரவு தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ-ள்:) செவ்வாய் சனி இராகு கேதுக்கள் 1-ல் வியாதி. 2. காரியக்கேடு. 3. வெற்றி. 4. நோய். 5. புத்தி மயக்கம். 6. காரியசித்தி. 7. அவமானம். 8. துயரம். 9. கிலேசம். 10. கலகம். 11. விவாகசோபனம். 12. பகை மிருதி. எ-று. (224)

## புதன்

பிணிப்புமெய்ப் பொருளோ டொன்னூர்
பெரும்பய மிடியுண் டாக்குந்
தணிப்பறு நலனோய் மானந்
தரும்பய மளிக்குந் தக்க
கணிப்புறு மழிவு செல்வங்
கனதன நோயுண் டாக்கு
மணிப்பணிக் கிரணக் கற்றை
யம்புலி மைந்தன் றானே.

(இ-ள்:) புதன் 1-ல் சிறைப்பயம். 2. அர்த்தலாபம். 3. சத்துருபயம், தரித்திரம். 4. நன்மை. 5. நோய். 6. கீர்த்தி. 7. பயம். 8. இலட்சுமீகரம். 9. காரியக்கேடு. 10. திரவியலாபம். 11. தனலாபம். 12. நோய். எ-று. (225)

## குரு

மனத்தடு மாற்றங் கல்வி வாதுநோய் நன்மை துக்கங்
கனப்படு செல்வ மாக்குங் கருதிய சோகங் காட்டுஞ்
சினக்கயல் விழியார்ச் சேர்க்குந் திகழ்பதி பிரிக்கு மேம
மினப்பழு தளிக்கு மண்டத் திமையவர் குரவனன்னே.

(இ-ள்:) குரு 1-ல் மனத்தடுமாற்றம். 2. வித்தை விருத்தி. 3. கலகம். 4. நோய். 5. சுகம். 6. துக்கம். 7. சோபனம். 8. சோகம். 9. ஸ்திரீசேர்க்கை. 10. இடமாற்றம். 11. லாபம். 12. பந்துநாசம். எ-று. (226)

## சுக்கிரன்

நோயறும் புகழ்சீர் நன்மை நுவன்மக வளிக்கு மத்த
மாய்வுறுஞ் சிந்தை நோவு வருத்துமெய்ப் பொருள்பூணுக்கு
மேயுமெய்ப் பீடை காட்டு மெவைகளு மிலாப மாக்குங்
காயமே பெருக்குஞ் செல்வி கலைப்பெருங் கவியோன் காணே.

(இ - ள்:) சுக்கிரன் 1-ல் ஆரோக்கியம். 2. கீர்த்தி. 3. செல்வம். 4. சோபனம். 5. புத்திரவிருத்தி. 6. பொருட்சேதம். 7. மனக்கவலை. 8. தனலாபம். 9. ஆபரணப்பேறு. 10. வியாதி. 11. காரியசித்தி. 12. தேகாரோக்கியம். எ - று.

## கோசர வேதை

### சூரியன்

மேவறு

அறைகதிர் பன்னொன் றாறுமூன் றீரைந்
தாமறு கோட்களைத் திரா
நிறைதரு மொன்பா னான்குநின் விருத்த
மெட்டுநான் கைந்திரண் டொன்பான்
மறைதரு மொன்றே ழாறிரண் டாகா
மன்னிய வெட்டுமூன் றூறே
டுறையிரண் டீரைந் தொருமையேழ் பன்னொன்
றென்றினன் றுறுசனி யொழித்தே.

(இ - ள்:)

| சூரியன் இருக்கும் இடம் | சனியல்லாத கிரகங்கள் | பலன் | சூரியன் இருக்கும் இடம் | சனியல்லாத கிரகங்கள் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | 1-ல் இருந்தால் | நன்று | 7 | 7-ல் இருந்தால் | நன்று |
| 2 | 2-ல் இருந்தால் | நன்று | 8 | 8-ல் இருந்தால் | நன்று |
| 3 | 9-ல் இருந்தால் | தீது | 9 | 10-ல் இருந்தால் | நன்று |
| 4 | 3-ல் இருந்தால் | நன்று | 10 | 4-ல் இருந்தால் | தீது |
| 5 | 6-ல் இருந்தால் | நன்று | 11 | 5-ல் இருந்தால் | தீது |
| 6 | 12-ல் இருந்தால் | தீது | 12 | 11-ல் இருந்தால் | நன்று |

எ - று. (228)

### சந்திரன்

அம்புலி யேழொன் றாறுபன் னொன்றீ
ரைந்துமூன் றுமிரண் டைந்து
வம்பில்பன் னிரண்டெட் டீரிரண் டொன்பான்
மற்றவர் விருத்தமா மிரண்டு
கம்புகான் கைந்தெட் டாறிரண் டொன்பா
னன்றல வொன்றுமூன் றெட்டே
ழிம்பர்பன் னொன்று பத்துநின் வேதை
யிரும்புத னொழிவதா மியல்பே.

(இ - ள்:)

| சந்திரன் இருக்கும் இடம் | புதனல்லாத கிரகங்கள் | பலன் | சந்திரன் இருக்கும் இடம் | புதனல்லாத கிரகங்கள் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | 5 ல் இருந்தால் | தீது | 7 | 2-ல் இருந்தால் | தீது |
| 2 | 1-ல் இருந்தால் | நன்று | 8 | 7-ல் இருந்தால் | நன்று |
| 3 | 9-ல் இருந்தால் | தீது | 9 | 10-ல் இருந்தால் | நன்று |
| 4 | 3-ல் இருந்தால் | நன்று | 10 | 4-ல் இருந்தால் | தீது |
| 5 | 8-ல் இருந்தால் | நன்று | 11 | 8-ல் இருந்தால் | தீது |
| 6 | 12-ல் இருந்தால் | தீது | 12 | 11-ல் இருந்தால் | நன்று |

எ - று. (229)

## புதன்

புந்தியா றெட்டுப் பத்துநான் கிரண்டு
புகழ்பதி னொன்றமு கல்லார்
வந்தவொ ரன் பானொன் றெட்டேழொன் றைந்து
மருவுபன் னிரண்டெனில் விருத்த
முந்துமொன் றொன்பா னைந்துபன் னிரண்டேழ்
மூன்றுநிற் றியனொன் றீரைந்
தைந்துபன் னொன்றேழ் நான்கினி னன்று
மம்புலி யொழிவதா மணங்கே.

(இ - ள்:)

| புதன் இருக்கும் இடம் | சந்திரனல்லாத கிரகங்கள் | பலன் | புதன் இருக்கும் இடம் | சந்திரனல்லாத கிரகங்கள் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | 1-ல் இருந்தால் | நன்று | 7 | 7-ல் இருந்தால் | நன்று |
| 2 | 5-ல் இருந்தால் | தீது | 8 | 1-ல் இருந்தால் | தீது |
| 3 | 4-ல் இருந்தால் | நன்று | 9 | 10-ல் இருந்தால் | நன்று |
| 4 | 3-ல் இருந்தால் | தீது | 10 | 8-ல் இருந்தால் | தீது |
| 5 | 5-ல் இருந்தால் | நன்று | 11 | 12-ல் இருந்தால் | தீது |
| 6 | 9-ல் இருந்தால் | தீது | 12 | 11-ல் இருந்தால் | நன்று |

எ - று. (230)

## குரு

குருவிரண் டொன்ப தேழ்பதி னொன்று
குலவுமைந் தழகுபன் னிரண்டு
விரவிய பத்து மூன்றிரு நான்கு
விளம்புநான் கொழிந்தவர் விருத்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுதி தொன்று மூன்றுநான் கெட்டுக்
காட்டுபன் னிரண்டுபத் திருமூன்
றொருவுமொன் றிரண்டைந் தேழ்பதி னொன்றோ
டொன்பதா றுறினல னேதே.

(இ - ள்:)

| குரு இருக்கும் இடம் | கிரகங்கள் | பலன் | குரு இருக்கும் இடம் | கிரகங்கள் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | 1-ல் இருந்தால் | நன்று | 7 | 3-ல் இருந்தால் | தீது |
| 2 | 12-ல் இருந்தால் | தீது | 8 | 7-ல் இருந்தால் | நன்று |
| 3 | 2-ல் இருந்தால் | நன்று | 9 | 10-ல் இருந்தால் | தீது |
| 4 | 5-ல் இருந்தால் | நன்று | 10 | 9-ல் இருந்தால் | நன்று |
| 5 | 4-ல் இருந்தால் | தீது | 11 | 8-ல் இருந்தால் | தீது |
| 6 | 6-ல் இருந்தால் | நன்று | 12 | 11-ல் இருந்தால் | நன்று |

எ - று. (231)

### சுக்கிரன்

ஒள்ளியோ னைந்தொன் றிரண்டுமூன் றீரா
றென்பதெட் டீரிரண் டோதுக்
தெள்ளுபன் னொன்று சிறப்பலா ரொன்பான்
றிகழ்ந்தவெட் டேழொன்ப தாறு
விள்ளுபன் னொன்றைந் தொருபது மூன்று
மேவிடில் விருத்தமா றீரைக்
தெள்ளுமே ழாகா னென்றுபன் னிரண்டா
றிரண்டுறி னன்றென வியம்பே.

(இ - ள்:)

| சுக்கிரன் இருக்கும் இடம் | கிரகங்கள் | பலன் | சுக்கிரன் இருக்கும் இடம் | கிரகங்கள் | பலன் |
|---|---|---|---|---|---|
| 1 | 8-ல் இருந்தால் | தீது | 7 | 2-ல் இருந்தால் | நன்று |
| 2 | 7-ல் இருந்தால் | தீது | 8 | 5-ல் இருந்தால் | தீது |
| 3 | 9-ல் இருந்தால் | தீது | 9 | 11-ல் இருந்தால் | தீது |
| 4 | 10-ல் இருந்தால் | தீது | 10 | 6-ல் இருந்தால் | நன்று |
| 5 | 9-ல் இருந்தால் | தீது | 11 | 3-ல் இருந்தால் | தீது |
| 6 | 12-ல் இருந்தால் | நன்று | 12 | 6-ல் இருந்தால் | தீது |

எ - று. (232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோசரகால கருமம்

வேறு

அவ்வவ ரோரை யாதியா யடைவி
லாங்குறு கோசர பலன்க
ளிவ்வகை யுணர்ந்து நன்றெனிற் கரும
மெவைகளு மியற்றுத லியல்பாந்
செவ்விய முலையாய் கோசர காலந்
தீதெனிற் பிறர்மனைச் செலவு
வெவ்வியல் வேட்டை வாகன மாடல்
வேண்டலென் றியம்பினர் மேலோர்.

(இ - ள்:) மேற்கூறியவாறு அவ்வவருடைய ஜென்மராசி முதலாக முறையே சொல்லப்பட்ட கோசரபலன்களை நன்குணர்ந்து, கோசரபலன்கள் நன்றாங் காலத்தில் பிரயாணம் முதலிய சகல சுபகருமங்களுஞ் செய்யலாம். தீதான காலத்தில் பிறர்மனைப்பிரவேசம், வேட்டையாடல், வாகனமேறல், போர்புரிதல் முதலியன விசேஷித்துத் தவிர்க்கவேண்டும். எ - று. (233)

### உடற்கோசரம், உயிர்க்கோசரம்

எண்ணுற விசைந்த கோசர விதிக
ளிவ்வகை யியன்றவா றியம்பிற்
றிண்ணிய வுடலாந் தண்மதி யோரை
செனித்திடு மோரைய துயிரா
நண்ணிய விவையே யுடலுயி ரிரண்டு
நன்மைமிக் கமைந்துற வெண்ணிப்
பண்ணமர் மொழிவேல் விழிமதி முகத்தாய்
பகர்ந்தன ரெனப்பயன் பாரே.

(இ - ள்:) உதயலக்கினம் உயிரென்றும், சந்திரலக்கினம் உடலென்றும் சொல்லப்படும். உயிர்க்கோசரம், உடற்கோசரம் இரண்டும் நன்மையாங் காலத்துச் செய்யுங் காரியங்கள் மிகு நன்மையாம். இரண்டுந் தீதாங் காலத்துச் செய்யுங் கருமங்கள் மிகத் தீதாம். ஒன்று நன்று ஒன்று தீதாங் காலத்துச் செய்யுங் கருமங்கள் மத்திமமாம். எ - று. (234)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரக காலவரையறை, பலன் காலவரையறை

*கதிர்புதன் கவியோர் மாதமொன் றரையாங்*
*காசினி மகனொரு வருடஞ்*
*சதிர்குரு மந்த னிரண்டரை யரவஞ்*
*சாற்றிய விரண்டுமொன் றரையாம்*
*மதியிரண் டேகா லெனச் சரிக்கும்*
*வகைபல னாதியிற் கதிர்சேய்*
*விதுபுதன் முழுதுங் கவிகுரு நடுவாம்*
*விடவராச் சனிகடை யின்னே.*

(இ - ள்.) சந்திரன் இரண்டேகால் நாளும், சூரியன் புதன் வெள்ளி மூவரும் ஒரு மாதமும், செவ்வாய் ஒன்றரை மாதமும், வியாழன் ஒரு வருஷமும், இராகு கேதுகள் ஒன்றரை வருஷமும், சனி இரண்டரை வருஷமும் ஒரு இராசியிற் சஞ்சரிப்பர். சூரியன் செவ்வாய் முற்கூற்றிலும், சந்திரனும் புதனும் முழுவதிலும், வியாழன் வெள்ளி நடுக்கூற்றிலும், சனி இராகு கேது கடைக்கூற்றிலும் பலன் கொடுப்பர். எ - று. (235)

## வக்கிரம், அதிசாரம், பார்வை

*ஓதுவக் கிரங்க ளுள்ளதி சார*
*முறிற்பல னுதயவோ ரையிலாஞ்*
*சோதிமெய்க் குருவுக் கப்படி யன்று*
*அறுபலன் முன்னையோ ரையிலாந்*
*தீதறக் கனலி கவிபுதன் செவ்வாய்*
*திகழ்பதி னறுதினஞ் செம்பொன்*
*போதவச் சனிமூ விரண்டதாந் திங்கட்*
*புகன்முனம் பலம்பெறும் பொன்னே.*

(இ - ள்.) வியாழன் வக்கிரகதியில் பின்னிராசியிற் பிரவேசித்தாலும் அதிசாரத்தில் முன்னிராசியிற் பிரவேசித்தாலும் முன்னின்ற இராசியிற் பலனும், செவ்வாய் புதன் சுக்கிரன் சனி இவர்கள் வக்கிராதிசாரங்களில் முன் பின் இராசிகளிற் பிரவேசித்தால் (பிரவேசித்த) அவ்வவ் விராசிகளுக்குரிய பலனும் கொள்ள வேண்டும். சூரியன் செவ்வாய் புதன் சுக்கிரன் இவர்கள் பதினறு நாட்களின் முன்னும், வியாழன், சனி ஆறு மாதத்தின் முன்னும் அடுத்த இராசியினிற்கும் பலனைக் கொடுப்பர். எ - று. (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலனுக்குரியவர்

ஆடவர்க் கிரெட் டாண்டள வாக
வரும்பல னன்னை தந் தையர்க்காம்
பிடுறு மதன்மேற் றமக்குறு மன்றிப்
பெண்மகா ரொன்பதாண் டளவுஞ்
சேடிடை யவ்வை மையன்மாட் டாகுந்
தேர்பல னதற்குமே லெல்லாங்
கேடறு கொழுநன் புசிக்குமென் றறிந்தோர்
கிளிமொழி விளம்பினர் கேளே.

(இ - ள்:) ஆடவருக்குக் கிரகங்களால் உண்டாகும் பலன் பதினாறு வயதளவும் பெற்றாருக்கும், மேல் தமக்கும்; பெண்களுக்கு ஒன்பது வயதளவும் பெற்றாருக்கும், மேல் தமக்கும் நாயகருக்கும் உண்டாம். எ - று. (237)

## கோசரதோஷம் பலிக்காதவர்

மறையவர் தம்மை வழிபடு வோர்க்கும்
மன்னிய குருவழி கிற்போர்க்
கறநெறி யுடையோர் மொழிசெவிப் படுவோர்க்
காரணங் கேட்பவர்க் கோமத்
துறைதவக் தருமஞ் செய்பவர்க் ககத்திற்
சுத்தமே யுறுபவர்க் கமைந்த
குறைவறு நியமஞ் செபமுளோர்க் காகாக்
கோசரம் பலிக்குமோ கொடியே

(இ - ள்:) அந்தணரை வழிபடுவோர்க்கும், குருவுபதேசப் படி யொழுகுவோர்க்கும், அறநெறிச் செல்வோருடைய சொற் படி கேட்டொழுகுபவர்க்கும், வேதப்பொருளைக் கேட்பவருக்கும், வேள்வி தானம் தருமம் தவம் செய்வோர்க்கும், சித்த சுத்த முடையவர்க்கும், நியமானுஷ்டானந் தவறாதோர்க்கும், செபமுடையவர்க்கும் கோசரத்திற் சொல்லிய தீமைகள் பலிக்கா வாம். எ - று. (238)

கோசரப்படலம் முற்றிற்று

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது

# யாத்திரைப்படலம்

## யாத்திரைக்கு மாத நியதி

வேறு

உத்தமமார் கழியுடனே யாவணிசித் திரைமூன்று
முறைதேர் மாசி
சுத்தமுறு வைகாசி புரட்டாதி யைப்பசிதை
துலங்கு மானி
மத்திமமாங் கார்த்திகைபங் குனியாடி மதிக்குங்கா
லதம மாகு
மெத்தவுமவ் வாடிதனைப் பழித்தனர்கள் சோதிடநூல்
மிகுந்து ளோரே.

(இ - ள்:) யாத்திரைக்குச் சித்திரை ஆவணி மார்கழி இவை உத்தமம். வைகாசி ஆனி புரட்டாதி ஐப்பசி தை இவை மத்திமம். ஆடி கார்த்திகை பங்குனி அதமம். ஆடி முக்கியமாக விலக்கப்படும். எ - று. (239)

## யாத்திரைக்குத் திதி நியதி

ஓங்குயர்முற் பக்கத்தி லாறெட்டுப் பன்னிரண்டோ
டொன்று விட்டி
பாங்கிருத்தை பிற்பக்கம் பழிப்பாகு மிவையன்றிப்
பன்னு நந்தை
திங்கறுபத் திரைசயைபூ ரணையிற்கிழ்த் திசையாதி
சிறப்ப தாகுந்
தூங்கியவெட் டாறென்றீ ராறுகிழக் காதிதிதி
சூல மென்னே.

(இ - ள்:) பூர்வபக்கத்துத் துதியை திருதியை பஞ்சமி ஸப்தமி தசமி ஏகாதசி திரயோதசித் திதிகள் நன்று. இருபக்கத்து விட்டிக்கரணமும், அபரபக்கமும் தவிரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திதி | | சிறப்பாக ஆகுந்திசை | திதிசூலம் (ஆகாத்திசை) |
|---|---|---|---|
| பிரதமை ... | ... | கிழக்கு | மேற்கு |
| துதியை ... | ... | தெற்கு | —— |
| திருதியை ... | ... | மேற்கு | —— |
| பஞ்சமி ... | ... | வடக்கு | —— |
| ஷஷ்டி ... | ... | கிழக்கு | தெற்கு |
| ஸப்தமி ... | ... | தெற்கு | —— |
| அஷ்டமி ... | ... | மேற்கு | கிழக்கு |
| தசமி ... | ... | வடக்கு | —— |
| ஏகாதசி ... | ... | கிழக்கு | —— |
| துவாதசி ... | ... | தெற்கு | வடக்கு |
| திரயோதசி | ... | மேற்கு | —— |
| பூரணை, அமாவாசை | | வடக்கு | —— |

எ - று. (240)

## யாத்திரைக்கு நக்ஷத்திர நியதி

மறையவனைப்பசிபெண்ணை மதியவிட்டங் கரமோணம்
வழங்கு தோணி
குறைவருமிக் நாட்கடிகை யெவையிற்கு நன்றென்று
குறித்தா ரன்றி
யுறையுமனல் நாளாதி யேழேழா யபிசித்தோ
டெய்த்து மின்னே
நிறையுறுகிழ்த் திசையாதி நான்கினுக்கு மாஞ்செலவு
நேருங் காலே.


(இ - ள்:) அச்சுவினி மிருகசீரிடம் பூசம் அத்தம் அனு ஷம் திருவோணம் அவிட்டம் ரேவதி இவை எத்திக்கும் யாத்திரைசெய்ய நன்று. கார்த்திகை ரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை புநர்பூசம் பூசம் ஆயிலியம் இவை கிழக்குத் திசையிற் பிரயாணஞ் செய்யவும், மகம் பூரம் உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி விசாகம் இவை தெற்குத் திசையிற் பிரயாணஞ் செய்யவும், அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்தராடம் திருவோணம் இவை மேற்குத் திசையிற் பிரயாணஞ் செய்யவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்தரட்டாதி ரேவதி அச்சுவினி பரணி இவை வடக்குத் திசையிற் பிரயாணஞ் செய்யவும் நல்லன வாம். எ - று. (241)

## பரிக சக்கரம்

மன்னுபெரும் பரிகமது வன்னியினும் வாயுவினும்
வரையொன் றுக்கித்
துன்னியநாண் மகமர்தி யரியந்தம் மேற்கினுக்குந்
துலங்கு தெற்காய்ப்
பன்னியவத் திசையினுக்கும் பாம்பந்தம் புள்ளாதி
பயிலு நாட்க
ளுன்னியவுத் தரத்திற்குங் கிழக்கினுக்கு மாங்கடக்கி
லுறுநோய் தானே.




(இ - ள்.) வடக்குக் கிழக்குத் திசைக்குரிய (அவிட்டம் முதல் ஆயிலியம் வரையுள்ள) நக்ஷத்திரங்களில் தெற்கு மேற்குத் திசைகளிலும், தெற்கு மேற்குத் திசைக்குரிய (மகம் முதல் திருவோணம் வரையுள்ள) நக்ஷத்திரங்களில் வடக்குக் கிழக்குத் திசைகளிலும் (பரிகரேகையைக் கடந்து) யாத்திரை போகலாகாது. செய்யின் நோயுண்டாம். எ - று. (242)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாத்திரைக்கு வார நியதி

வேறு

உரம்பயில் குருவா ராதி யுத்தமம் புந்தி வாரந்
தரும்புகர் வார மாதி மத்திமஞ் சவுரி திங்கள்
கரம்பெறு வெய்யோ னாரல் கருதுவா ராதி தீதாஞ்
சுரும்பணி குழலாய் பின்னுஞ் சொற்றனர் திங்க ளோயோர்.

(இ - ள்:) வியாழ வாரோதயாம்சங்கள் உத்தமம். புத சுக்கிர வாரோதயாம்சங்கள் மத்திமம் ஞாயிறு திங்கள் செவ்வாய் சனி வாரோதயாம்சங்கள் ஆகாவாம். திங்கள் யாத்திரைக்கு நன்றென்பாருமுளர். (243)

## யாத்திரைக்கு இராசி நியதி

ஓரைகள் சரங்கள் மேனுேக் குற்றவை சிரோத யங்கள்
சீரிதெத் திசைக்கு மேடஞ் சிலையரி கிழக்கிற் காகுங்
காரிகை கலிகோ தெற்காங் கடந்துலே தண்டு மேற்காம்
வாரிமீன் றேளே நண்டு வடக்கிற்கா மடகல் லாளே.

(இ - ள்:) மேடம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் மகரம் கும்பம் என்னு மிராசிகளும், சூரியன் நிற்கு மிராசிக்கு 3, 6, 9, 12-ம் இராசிகளும் எத்திசையிலும் யாத்திரைசெய்ய நன்று. மேடம் சிங்கம் தனு இவைகளில் கிழக்கிலும், இடபம் கன்னி மகரம் இவைகளில் தெற்கிலும், மிதுனம் துலாம் கும்பம் இவைகளில் மேற்கிலும், கர்க்கடகம் விருச்சிகம் மீனம் இவைகளில் வடக்கிலும் பிரயாணஞ் செய்தல் மிக நன்று. எ - று. (244)

அன்றியு முபய வோரை
யறையின்மத் திமமே யாகுங்
கன்றிய திரத்திற் சேறல்
கருதவு மாகா தென்பர்
நன்றுநற் கோட்க ளோரை
நவிலுங்கா லவையின் மீன
மொன்றொழிந் திடுதல் நன்றென்
றுரைத்தனர் சுருதி யோரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) மிதுனம் கன்னி தனு மீனம் இவை மத்திமம். இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் இவை ஆகா. (முன் ஆகு மென்ற இராசிகளுள்) சுபக்கிரகங்களின் ஆட்சி இராசிகள் நன்று. அவற்றுள் மீனத்தை மாத்திரம் விலக்கல்வேண்டும் என்பாருமுளர். எ - று. (245)

## இராசி சுத்தம்

விதித்தவவ் விராசி யாதி
விளம்புமா றிரண்டி னற்கோ
ளுதித்திட னன்றும் வெள்ளி
யோங்கிய வேழிற் பொல்லா
னெதிர்த்தமூன் றாறு பன்னொன்
றிவைபாபர்க் காமற் றுகா
துதித்தபொன் வெள்ளி யோரை
தோய்தனன் றஞ்சு தூய்தே.

(இ - ள்:) சுபக்கிரகங்கள் 12-லும், பாபர் 3-6-11-லும் நிற்றல் நன்று. சுக்கிரன் 7-ல் மிகப் பொல்லான். குருசுக்கிரர் இலக்கினத்து மிக நல்லர். ஐந்தாமிடஞ் சுத்தியாதல் வேண்டும். எ - று. (246)

## நக்ஷத்திர சூலம்

கிழக்கினுக் கோணங் கேட்டை
கிளர்பரி புரட்டை தெற்கு
வளக்குரு சகடு மேற்கு
வடக்கிற்குத் தரமோ டத்தம்
பழிப்பில்கி ழாதி திக்குப்
பகர்ந்திரண் டிரண்டாய்க் கேட்டை
துளக்குறு புரட்டை தேருத்
தரமிவை சூலந் தானே.

(இ - ள்:)

| நக்ஷத்திரம் | | | | சூலம் |
|---|---|---|---|---|
| கேட்டை | திருவோணம் | ... | ... | கிழக்கு |
| அச்சுவினி | பூரட்டாதி | ... | ... | தெற்கு |
| ரோகிணி | பூசம் | ... | ... | மேற்கு |
| உத்தரம் | அத்தம் | ... | ... | வடக்கு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்களில் இத்திசைகளில் யாத்திரை செய்யலாகாது. விசேஷித்து, கேட்டை கிழக்கிற்கும் தென்கிழக்கிற்கும் சூலமென்றும், பூரட்டாதி தெற்கிற்கும் தென்மேற்கிற்கும் சூலமென்றும், ரோகிணி மேற்கிற்கும் வடமேற்கிற்கும் சூலமென்றும், உத்தரம் வடக்கிற்கும் வடகிழக்கிற்கும் சூலமென்றும் அறிக. எ - று. (247)

## சூலதோஷ அநுபவம்

வச்சிர னுளிற் கிழக்கினிற் சென்று
மாபலி பெருஞ்சிறைப் பட்டா
னச்சுறு முரனும் புரட்டையிற் றெற்கே
யடைந்தலர்க் கண்ணனு லழிந்தான்
பச்சிம மதனிற் றேர்மிசைச் சென்று
படைமுசி யரிக்ககப் பட்டான்
மெச்சுறு வடபா லுத்தரத் தேகி
விந்தனன் சம்பரன் மின்னே.

(இ - ள்.) கேட்டையிற் கிழக்கிற் சென்று மாபலி சிறைப்பட்டான். பூரட்டாதியில் தெற்கிற் போய் முரனென்பவன் விட்டுணுவாற் சங்கரிக்கப்பட்டான். ரோகிணியில் மேற்கே போய் முசி என்பானும் விட்டுணுவா லழிந்தான். உத்தரத்தில் வடதிசையிற் போய்ச் சம்பரனென்பான் மாண்டான் என்று சாத்திரங்கள் சொல்லுகையால், சூலநாட்களில் அவ்வத் திசையிற் பிரயாணங்கள் தவிரவேண்டுமென்று பெரியோர் சொல்வர். எ - று. (248)

## வாரசூலம்

அம்புலி மந்தன் கிழ்குரு தென்பா
லாதவன் பார்க்கவன் மேற்கு
வம்பவிழ் புந்தி யாரனுத் தரத்து
வருதினச் சூலமா மதித்து
நம்பவச் சிரத்தேர்ன் குபேரனு மிவர்கள்
நாட்டிய வாதியந் தத்துத்
தம்பமா மிந்து சனிகுரு வெள்ளி
தபனன்மால் குசனெனச் சாற்றே.

(இ - ள்:) திங்கள் சனி கிழக்கும், வியாழன் தெற்கும், ஞாயிறு வெள்ளி மேற்கும், செவ்வாய் புதன் வடக்கும் சூலமாம். கிழக்குத் திங்களும், தென்கிழக்குச் சனியும், தெற்கு வியாழனும், தென்மேற்கு வெள்ளியும், மேற்கு ஞாயிறும், வடமேற்குப் புதனும், வடக்குச் செவ்வாயும் சூலமென்று அறிக. எ - று. (249)

## திசையாத்திரை

இந்திரன் றிசையிற் சேயினி லேகி
லிலாபமாந் தெற்கினின் மந்தன்
சந்திரன் றினத்திற் றணக்கிடிற் றனமாஞ்
சாற்றிய மேற்கினிற் செம்பொன்
புந்தியி லிகப்பிற் காரிய மாகும்
பொருந்திய வுத்தரத் தசுர
மந்திரி கனலி தினத்திடைப் படரின்
மன்னிய சுபமென வழங்கே.

(இ - ள்:) செவ்வாய்க்கிழமை கிழக்கிற் செல்லில் லாபம். திங்களும் சனியும் தெற்கிற் செல்லில் திரவியலாபம். புதனும் வியாழனும் மேற்கிற் செல்லில் காரியபலிதம். ஞாயிறும் வெள்ளியும் வடக்கிற் செல்லிற் சுபம். எ - று. (250)

## திசையாத்திரைக்குக் காலம், வாகனம், பக்ஷணம்

நடுப்பக லந்தி நள்ளிரா வுதய
நான்கிவை கீழ்த்திசை யாதி
கொடுத்ததிற் சேற லன்றிமா விரதங்
கோடர நரனெனக் குறிக்கு
மடுத்தவா கனங்க ளவையுமப் படியா
மனைதில மதுபய நான்கும்
படிக்குமா வனையாய் கீழ்த்திசை யாதி
பக்ஷண மாமெனப் பகரே.

(இ - ள்:) மத்தியான்னம் கிழக்கிலும், அந்திக்காலம் தெற்கிலும், அர்த்தராத்திரி மேற்கிலும், உதயகாலம் வடக்கிலும் யாத்திரை செய்ய நன்று. கிழக்கே செல்வதற்கு யானையும், தெற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்குத் தேரும், மேற்கே செல்வதற்குக் குதிரையும், வடக்கே செல்வதற்கு நரவாகனமும் நன்று. கிழக்குத்திசையிற் செல்பவர் தயிரும், தெற்கிற் செல்பவர் எள்ளும், மேற்கிற் செல்பவர் தேனும், வடக்கிற் செல்பவர் பாலும் புசித்துச் செல்லுக. எ - று. (251)

## நக்ஷத்திர பக்ஷணம்

*அடிமுழுக்தோ தனங்கிர மனைச்சோறா னரிதா*
*யாகியதா மரைக்கிழங்கு குருதிபுடோல் கிருதம்*
*படுபயமெட் சோறன்னம் பாலொடுபணி காரம்*
*பலவன்னச் சோறுநெல்லிக் கனிகொள்ளெள் கிழங்கு*
*வடிவுடைமா துளங்கனிநற் பாலன்னஞ் சோறாய்*
*மதுக்கண்டு பன்றியூன் பால்பயறென் றிவைக*
*டொடிபடுகை மடநல்லாய் புரவிமுத லுணவாய்ச்*
*சொற்றனர்சோ திடக்தெரிந்த தூயவர்க டுணிந்தே.*

இ - ள்:

| நக்ஷத்திரம் | பக்ஷணம் | நக்ஷத்திரம் | பக்ஷணம் |
|---|---|---|---|
| அச்சுவினி | ...உழுத்தஞ்சோறு | சுவாதி | ...நெல்லிக்கனி |
| பரணி | ...பால் | விசாகம் | ...கனி |
| கார்த்திகை | ...தயிர்ச்சோறு | அனுஷம் | ...கொள்ளு |
| ரோகிணி | ...மாமிசம் | கேட்டை | ...எள்ளு |
| மிருகசீரிடம் | தாமரைக்கிழங்கு | மூலம் | ...கிழங்கு |
| திருவாதிரை | இரத்தம் | பூராடம் | ...மாதுளங்கனி |
| புநர்பூசம் | ...புடலங்காய் | உத்தராடம் | பாலன்னம் |
| பூசம் | ...நெய் | திருவோணம் | சோறு |
| ஆயிலியம் | ...பால் | அவிட்டம் | ..தேன் |
| மகம் | ...எட்சோறு | சதயம் | ...கற்கண்டு |
| பூரம் | ...சுத்தான்னம் | பூரட்டாதி | ...பன்றியிறைச்சி |
| உத்தரம் | ...பால் | உத்தட்டாதி | பால் |
| அத்தம் | ...பணிகாரம் | ரேவதி | ...பயறு |
| சித்திரை | ...பலவன்னச்சோறு | | |

குறித்த நக்ஷத்திரங்களில் குறித்த பக்ஷணங்களை உண்டு, (பரிசித்து அல்லது நினைத்து) யாத்திரைசெய்தல் நன்றாம். எ - று. (252)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதி வார பக்ஷணம்

வேறு

பத்திரை பசுவின் பாலொடு சோறு பயினந்தை
தனக்கட கன்னஞ்
சித்தமாஞ் சயைபண் ணிகாரமா மிருத்தை செப்பிய
சர்க்கரைச் சோறு
முத்தம மான பூரணை கிழங்கோ டுழுந்திவை
யன்றியென் றுதி
சுத்தமா நெய்பால் குளந்தில் நதிசூழ் துவரையோ
டுழுந்திவை துய்ப்பாய்.

(இ - ள்.) பிரதமை ஷஷ்டி ஏகாதசியில் இலைக்கறியன்னமும், துதியை சத்தமி துவாதசியில் பசுப்பாற்சோறும், திருதியை அஷ்டமி திரயோதசியில் பணிகாரமும், சதுர்த்தி நவமி சதுர்த்தசியில் சர்க்கரைச்சோறும், பஞ்சமி தசமி பூரணை அமாவாசைகளில் கிழங்கு உழுந்து இவைகளும் உண்டு பிரயாணஞ் செய்க. ஞாயிறில் நெய்யும், திங்களில் பாலும், செவ்வாயில் சர்க்கரையும், புதனில் எள்ளும், வியாழனில் தயிரும், வெள்ளியில் துவரையும், சனியில் உழுந்தும் உண்டு செல்லுக. எ - று. (253)

## பக்ஷணங்களுக்குப் புறநடை

இப்படி வகுத்த வாரப க்ஷணமு மியம்பிய
திதிகளி னுணவுஞ்
செப்பிய நாளின் பக்ஷண மெவையுஞ் செலவினிற்
றுய்ப்பது விதியா
மப்படி யதற்குக் காரண மல்லா ததுவிடிற்
றெடுகினு மமையுங்
கொப்புறு குழையா யதனினு நினைக்கிற் கொண்டதின்
பலனெனக் கூறே.

(இ - ள்.) திதி வார நக்ஷத்திர பக்ஷணங்களையெல்லாம் யாத்திரைகாலத்திற் புசிப்பது முறைபாம். அங்ஙனஞ் செய்ய முடியாதிருந்தால் அவ்வப் பொருட்களைத் தொடுதல் அல்லது நினைத்தல் செய்து பிரயாணஞ் செய்க. எ - று. (254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாத்திரை புறப்படும் முறை

இடத்தினிற் பவன னியங்கிடக் கோட்கட் கிருங்கன
லாகுதி யியற்றி
யடுத்தகான் மறையோர் தங்களுக் கன்பா லரும்பொருள்
கலைபசு வளித்து
மடுத்துநற் றெய்வ பூசையும் புரிந்து மகிழ்வுடன்
றமர்வர வலமா
நடைக்கழ லெடுத்தெண் ணுன்கடி நடந்து நாற்றிய
வாகன மேறே.

(இ - ள்:) யாத்திரைக்குப் புறப்படுமிடத்து, இடது நாசியிற் சரம் ஓட, கிரகசாந்தி செய்து, சற்பிராமணர்களுக்கு அன்புடன் பொன் பசு ஆடை முதலிய தானங் கொடுத்து, தெய்வ பூசைபண்ணி, வலக்காலை முன்னெடுத்து வைத்து, பந்துக்கள் சூழ முப்பத்திரண்டடி நடந்து, பின்னர் வாகனங்களில் ஏறிச் செல்லுக. எ - று. (255)

## பிரஸ்தானம்

பொற்புனை கலனு தனம்படை யாடி புத்தகம்
வாகனம் புறத்தே
விற்கிடை நாறி லைம்பதில் விடுதல் மெய்ப்பிரத்
தானமாம் விளம்பி
லற்புத மாய கிரகண நீட வடும்புயல்
வாதமென் பனவகண்
முற்பட வேழு தினத்துறி லக்காண் முனிந்துபின்
வேறுநாண் முயலே.

(இ - ள்:) (குறித்த முகூர்த்தத்தில் யாத்திரைசெய்ய முடியாதாயின்,) ஆபரணம் ஆசனம் ஆயுதம் கண்ணாடி புத்தகம் வாகனம் இவைகளைக் குறித்த நாள் முகூர்த்தத்தில் நூறு அல்லது ஐம்பது விற்கிடை தூரத்தில் முன் விடுத்து, பின் பிரயாணம் பண்ணுதல் பிரஸ்தானமாகும். அதிசயப்படுதற்கேதுவாகிய கிரகணம் பெருமழை பெருங்காற்று பூகம்பம் முதலிய உற்பாதங்கள் பிரயாண தினத்திற்கு முன் ஏழு தினங்களுக்குட் சம்பவிக்கில் அப் பிரயாணத்தை விடுத்து, புதிய நன்முகூர்த்தம் நியமித்துப் பிரயாணம் பண்ணுக. எ - று. (256)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதினி யிறைவர்க் கொன்பதா மன்றி விரும்புமண்
டலிகருக் கேழாம்
போதமா மற்றோ ரெவர்க்குமைந் தாகும் புறப்படு
நாளிவை புகலி
லாதுலர் பித்தர் பயத்தினர் கோபி யரும்பிணி
யினருறுப் பற்றோர்
திதறு பேடி யிவர்பிற வீடு செய்நிடிற்
றீதெனச் செப்பே.

(இ - ள்:) பிரஸ்தானம் (பிறவீடு) செய்த தினத்திலிருந்து பூமண்டலாதிபர் ஒன்பது நாளினுள்ளும், மண்டலீகர் ஏழு நாட்களுள்ளும், மற்றையோர் ஐந்து நாட்களுள்ளும் புறப்படல்வேண்டும். பிரயாணப் பொருட்கள் கொண்டுபோய் வைக்குமிடத்து, தரித்திரர் பித்தர் பயமுள்ளோர் கோபிகள் நோயாளர் அங்கவீனர் பேடிகள் இவர்களிருக்கும் இடம் விலக்கப்படும். எ - று. (257)

சுப சகுனம்

வேறு

ஏறுகொடி வேசியர்க டேர்புரவி வேழமலை
யேசின்மறை யோரிருவர்பால்
நாறுமலர் பேரிவலை கோவடிசி லூனிளைய
காரியர்கள் வீணைகனிதேன்
கூறுசவ மாலையிரு மீன்முரச மாடையுறல்
கோலுகுட மாசகலவே
தேறுகுழ லோசையெழு நிமையகல் வாய்மையிவை
சேறலெதிர் சாரவினிதே.

இ - ள்: இடபம் கொடி வேசியர் தேர் குதிரை யானை தயிர் இரண்டுபிராமணர் பால் சுகந்தபுஷ்பம் பேரிகை சங்கு பசு சோறு இறைச்சி கன்னிகை யாழ் பழம் தேன் பிணம் மாலை மீன் முரசு ஆடை பூரணகும்பம் வேய்க்குழலோசை நல்வசனம் இவை பிரயாணத்தி லெதிர்ப்படின் நன்று. எ - று. (258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசுப சகுனம்

மோராரவ மாடையிலி நீடுமவிழ் கேசிதுவர்
    மூகர்நனை யாடையுடையோர்
சோரர்தயின் மேவுதலை யாளர்துவ ராடையர்க
    ளைமட வார்களலியோர்
நேர்பகைஞர் வேதனையர் தாபமுடை யோர்சடிலர்
    நீறுடைய வேடர்குருடர்
ஆர்கனலி லேறுகல மோர்பிரம சாரியெதி
    ராகினுடன் மீள்வதழகே.

(இ - ள்:) மோர் பாம்பு நிருவாணி விரிதலையர் விறகு ஊமையர் ஈரவாடையர் கள்வர் எண்ணெய்த்தலையர் காவியாடை தரித்தோர் தூரஸ்திரீகள் அலிகள் பகைவர் வியாதியாளர் பசியாளர் சடையுடையோர் தபசிகள் குருடர் வெந்தபாண்டம் ஒரு பிரமசாரி(பிராமணன்) இவை பிரயாணகாலத் தெதிர்ப்படில் தீமையாம். ஆதலின் அப்போது யாத்திரை போகலாகாது. எ - று. (259)

## தும்மற் பலன்

### வேறு

மல்கிய கோவின் குதமது நாசம்
    வருத்தமாம் பூனையின் குதமேற்
பல்கிய வசமோ டெருமைமங் கையர்கள்
    பலவுமாங் குதமது தீதா
நல்கிய நன்மை தருங்குத மருந்து
    நாற்றிய வாகன மசனம்
புல்கிய சயன மாசனம் வித்தை
    பொருந்துவித் திடற்கெனப் புகலே.

(இ - ள்:) பசுத்தும்மல் காரியநாசம். பூனைத்தும்மல் வியாதி. ஆடு எருமை ஸ்திரிகளின் தும்மல் பெருந் தீமை. மருந்துண்ணும்போதும் வாகனமேறும்போதும் போசனஞ்செய்யும்போதும் சயனிக்கும்போதும் ஆசனத்திருக்கும்போதும் கல்விகற்கும்போதும் வித்திடும்போதும் உண்டாகும் தும்மல் நன்று. எ - று. குதம்=க்ஷூதம் - தும்மல். (260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்திரீயாத்திரை

மன்னு டி புரட்டாதி மாசியெனு மிவைமூன்று
மதித்த சூலேன்
முன்னுய நான்காறெட் டாமாத முங்கழித்து
மொழிந்த வெள்ளி
பின்னுய புதனிவர்க டினங்களுமுத் தரநாளும்
பிரதமை தானு
முன்னுது மற்றெவையும் யாத்திரைபோ மங்கையருக்
குவந்து கூறே.

இ - ள்: ஆடி புரட்டாதி மாசி ஒழிந்த மாதங்களில், கருப்பவதியானல் 4-ம் 6-ம் 8-ம் மாதங்கள் தவிர்ந்த மற்றைய மாதங்களில், புதன் வெள்ளி அல்லாத பிரயாணத்துக்குரிய வாரங்களில், உத்தரம் நீங்கிய பிரயாண நக்ஷத்திரங்களில், பிரதமை நீங்கிய பிரயாண திதிகளில், பிரயாணத்துக்குச் சொல்லிய இலக்கினங்களில் ஸ்திரீகள் யாத்திரை செய்க. எ - று. (261)

## சலயாத்திரை

ஓணமதி காந்தால முயர்பவணம் புரவிகல
முரைதேர் விட்டஞ்
சேணவிரு மிந்நாளிற் கவிபுந்தி திங்கள்செம்பொன்
றினங்க ளாதி
பேணுறுகற் பக்கத்துப் பிறழ்விட்டி சகுனதி
யிருத்தை தள்ளி
வாணுதலாய் சரந்திகழுர்த் துவங்களெழ
நீர்ச்செலவு மன்னு வாரே.

(இ - ள்:) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் அத்தம் சுவாதி அனுஷம் திருவோணம் அவிட்டம் ரேவதி இந்நாட்களில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரோதயாம்சங்களில், பூர்வபக்கத்தில், சதுர்த்தி நவமி சதுர்த்தசி என்பவை நீங்கிய திதிகளில், விட்டி சகுனம் சதுர்ப்பாதம் நாகவம் கிம்ஸ்துக்கினம் அல்லாத கரணங்களில், மேடம் கர்க்கடகம் துலாம் மகரம் என்னும் இராசிகளில், சூரியன் நின்ற இராசிக்கு 3, 6, 9, 12-ம் இராசிகளில் சலயாத்திரை செய்க. எ - று. (262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவையிலுயிர் கண்ணிறைந்த நாளவையி லுத்தமமா
நாட்டு கண்ணென்
றுவமையில்செம் பாதியுயிர் பெற்றவைகண் மந்திமமா
மொழிந்த வாகா
வவமறுகண் டகரிரா ருயதிரி கோணத்தி
லாகு நல்லோர்
கவையிலோர் மூன்றாறு பன்னொன்று பெறநன்றங்
கருதுங் காலே.

(இ - ள்:) சூரியன் நின்ற நாள் முதல் 11-12-13-14-15-16-17-18-ம் நாட்களாகிய முழுவுயிர்நாட்களும், 9-10-11-12-13-14-15-16-17-18-19-20-ம் நாட்களாகிய இருகண்ணுட்களும் உத்தமம். 3-4-5-6-7-8-9-20-21-22-23-24-25-26-ம் நாட்களாகிய அரையுயிர்நாட்களும், 5-6-7-8-21-22-23-24-ம் நாட்களாகிய ஒருகண்ணுட்களும் மத்திமம். ஏனைய நாட்கள் ஆகா. சுபக்கிரகங்கள் 1-4-5-7-9-10-12-லும், பாபக்கிரகங்கள் 3-6-11-லும் நிற்றல் நன்று. எ - று. (263)

பேதித்த பிற்பக்கத் தறைந்தவையும் பின்னிலேத்தும்
பேணி னன்றுஞ்
சோதித்த விருநான்கே சுத்தமுற வைத்திடத்துச்
சோம னன்றும்
வாதித்த வினையன்றித் திசைமாதந் தினமாதி
மற்று மெல்லாங்
காதுற்ற கண்மடவாய் யாத்திரைபோற் சலச்செலவுங்
கண்டு கொள்ளே.

(இ - ள்:) முன் விலக்கப்பட்ட அபரபக்கத்தில், விட்டி சகுனம் சதுர்ப்பாதம் நாகவம் கிம்ஸ்துக்கினம் என்னும் கரணங்களும் சதுர்த்தி நவமி ஏகாதசி துவாதசி திரயோதசி சதுர்த்தசி அமாவாசை என்னுந் திதிகளும் தவிர்த்து, ஏனைய திதிகள் கொள்ளலாமென்பர் சிலர். 8-ம் இடம் சுத்தமாகச் சலயாத்திரை செய்க. 5-ல் சந்திரனிற்றல் நன்று. சலயாத்திரைக்குரிய திசை மாதம் நக்ஷத்திரம் முதலிய மற்றைய நியதிகளை யெல்லாம் முன்னே யாத்திரைக்குச் சொன்னவாறே கொள்க. எ - று. (264)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயாத்திரை

### வேறு

புரந்தரன் மாசி யம்புலி யங்கி
புரவிமுப் பூரமுத் தரமூன்
றுரந்தரு மாயன் கலஞ்சக டடுப்போ
டொளிர்மூறந் தெக்கெறு மிவைமி
னிரக்தெழு திங்க ளந்தணன் வார
நேரமீன் றகர்விடை சிலையாழ்
கரக்தொளிர் சிய முதலிய வோரை
கலக்கக்கோ யாத்திரை மூயலே.

(இ - ள்:) அச்சுவினி பரணி கார்த்திகை ரோகிணி மிருக சீரிடம் மகம் பூரம் உத்தரம் விசாகம் கேட்டை பூராடம் உத்தராடம் திருவோணம் சதயம் பூரட்டாதி உத்தரட்டாதி ரேவதி ஆகிய இந்நாட்களில், திங்கள் வியாழன் வாரங்களில், மேடம் இடபம் மிதுனம் சிங்கம் தனு மீன ராசிகளில் கோயாத்திரை செய்க. எ - று. (265)

நாலிரண் டிடம தழுக்கற வேண்டு
நாற்றிய வதனிடை வெள்ளி
கோலினு நன்று மற்றவை யாவுங்
குலவுக யாத்திரைப் படியே
நீலன்மா லிரவி வெள்ளிசேய் வார
நேடல்கா லுதயங்க ளிசியென்
றேனுமிவ் வகைகோ யாத்திரைக் குற்ற
லிருகுல நாசமென் றியம்பே.

(இ - ள்:) எட்டாமிடஞ் சுத்தமாதல்வேண்டும். ஆயின், அவ் வெட்டாமிடத்தில் வெள்ளி நிற்பின் நன்று. மற்றைய கிரககோசரமெல்லாம் யாத்திரைக்குச் சொல்லியபடி கொள்க. ஞாயிறு செவ்வாய் புதன் வெள்ளி சனி வாரோதய நோக்கங்களும் இராக்காலமும் கோயாத்திரைக்காகா. செய்யின் கோவின் குலமும் கர்த்தாவின் குலமும் நாசமாம். எ - று. (266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருகம் பறவை யாத்திரை

மதகரி யயத்திற் கொட்டக மதற்கு
வயப்புலி கடாப்பொறி யுழுவைக்
கிதமலி பசுக்கட் கியைந்தநாற் சரணத்
தெவைகட்குங் கோவெனு மிவையாற்
றிதமுறு கோவின் யாத்திரைப் படியாஞ்
செப்பிய விருபதத் தெவைக்கும்
விதமலி நரர்போ லெனவட விதுக்கள்
விளம்பினர் துடியிடை மின்னே.

(இ - ள்.) யானை குதிரை ஒட்டகம் சிங்கம் ஆடு எருமை புலி முதலியவைகட்கும் பசுக்களை யொத்த மான் பன்றி முதலிய நாற்கால் மிருகங்களெவைக்கும் கோயாத்திரைக்குச் சொன்ன விதிப்படியும், அன்னம் மயில் கிளி முதலிய இருகாலுள்ள பறவைகளுக்கு மானுடர்க்குச் சொன்னபடியும் யாத்திரை கொள்க. எ - று. (267)

## யுத்த யாத்திரை

அரிபரி மூங்கி லம்புலி கலந்தே
ரவிட்டமூன் றுத்தர மனுடங்
குருகுபொன் னேர்வான் வருணனை விரலாக்
குறித்தநா ளிவைகளி லோரை
திரமரி யெட்டுத் திகழ்ந்தெழ மற்றுஞ்
செப்பிய யாத்திரைப் படியே
மருமலி குழலாய் திணுதிக ணன்றாய்
வரவிகல் யாத்திரை மருவே.

(இ - ள்.) அச்சுவினி ரோகிணி மிருகசீரிடம் புநர்பூசம் பூசம் உத்தரம் அத்தம் சித்திரை அனுஷம் மூலம் உத்தராடம் திருவோணம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி இந் நாட்களிலே, இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் என்னுமிராசி களில், பகைவருடைய அட்டமராசிகளில், மற்றும் முன் யாத் திரைக்குச் சொல்லிய திதி வாராதிகளில் யுத்தயாத்திரை செய்க. எ - று. (268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

அண்டர்புரோ கிதனுதிப்ப வாறகத்திற் கனற்கதிரோ
னுகத் திங்க
ளெண்டருகா லிரண்டொழிய விகற்கேகி னெடுந்தாங்க
மிரங்கு கூலத்
தெண்டிரைசூழ் மணவையர்கோன் செகராச சேகரமன்
செவ்வேல் வென்றி
கண்டிறை புரிந்தவர்போ லுரம்பகரா தஞ்சலிப்பர்
கருத லாரே.

(இ - ள்:) வியாழன் இலக்கினத்தும், சூரியன் 6-ம் இடத்தும், சந்திரன் 8-ம் இடமொழிந்த விடத்தும் நிற்க, யுத்த யாத்திரை செய்யின் சத்துருக்கள் வலிகெட்டு வணங்கிப் போவர். எ - று. (269)

விண்ணொன்று புந்திகுருக் கவியிவர்கள் கேந்திரத்து
விளங்கத் தீயோர்
கண்ணொன்று மூன்றாறு பெற்றொளிர வமர்க்கேகிற்
கறைந்தாட் சூதப்
பண்ணொன்று சததணத்தார்ச் செகராச சேகரமன்
பகைஞர் தம்மிற்
றுண்ணென்று வெருவுதல்போல் விழியிணைக டுயிலாவாத்
துன்ன லார்க்கே.

(இ - ள்.) புதன் வியாழன் சுக்கிரன் இவர்கள் கேந்திரத்து நிற்ப, பாபர் 3-6-ல் விளங்கி நிற்ப யுத்தத்திற்குச் செல்லில் சத்துருக்கள் அச்சம் மிகுந்து கண்டுயிலார். எ - று. (270)

வேறு

இரண்டிலா சன்கவி யிசைந்தபுத னிற்கப்
பரத்தகதி ரம்புலிய தேழிடை பரிப்ப
வுரமபடு பெருங்கனலி யோரையுற வேகி
லரும்பகை யிரிந்துபுத லங்கைபடு மம்மா.

(இ - ள் ) இரண்டில் புதன் வியாழன் வெள்ளியும், ஏழிற் சந்திரனும், இலக்கினத்திற் சூரியனும் நிற்ப யுத்தத்திற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வில் சத்துருக்க ளுடைந்தோடிப் புல்லேந்தித் தஞ்சம் புகுவர். எ - று. (271)

சுக்கிரனொ டம்புலிம கன்னுதய லக்கினத்
தொக்கவுற வம்புலிய தேழிடையு திப்பத்
திக்கிசை பொலிந்தரசர் செல்லிலிகல் மல்லற்
றக்கவர் பெறும்படி தருஞ்சடை தரிப்பே.

(இ - ள்:) புதனும் சுக்கிரனும் இலக்கினத்தும், சந்திரன் ஏழிலும் நிற்க யுத்தத்திற்குச் செல்லில் சத்துருக்கள் தோற்றோடிச் சடைமுடி தரித்துச் சந்நியாசிகளாவர். எ - று. (272)

ஐந்திலர சன்கவி யமைந்துற விலக்கினத்
துந்துபதி னொன்றிடை யுதிக்கவிரு மைக்கோ
ணந்தரிசி றந்தவிரு நான்கெழக டந்தால்
வந்தெதிரெ ழும்பகைஞர் மாள்வரொரு கோடி.

(இ - ள்:) ஐந்தில் குருவும், இலக்கினத்தில் சுக்கிரனும், பதினொன்றில் சுபராயினும் பாபராயினும் நிற்க, பகைவருடைய அட்டமராசியுதமாகப் போர்க்குச் சென்றால் ஒருகோடி பகைவர் வந்தெதிர்ப்பினும் அவர் தப்பாது மடிவர். எ - று. (273)

கட்டுகர வெங்கனலி யாறிடை கலப்ப
வட்டமதி யேழொழிய வன்னமறை யோன்வந்
தொட்டியெழு மோரையெழ வெய்திலிக லோரா
ரிட்டமுளர் பொன்களி றிருந்திறை யிடற்கே.

(இ - ள்:) 6-ல் சூரியனும், ஏழல்லாதவிடங்களிற் சந்திரனும், இலக்கினத்து வியாழனும் நிற்பப் போர்க்குச் செல்லிற் பகைவர்கள் அஞ்சிப் பொன் யானை முதலான திறைகளைக் கொடுத்தற்கு இசைவார்கள். எ - று. (274)

கண்டக விடஞ்சுரர் குருத்தலி கலப்ப
வெண்டரு பனிக்கதி ரிரண்டினி லிருப்ப
மண்டல மதித்தகிரு போர்செலவு மன்னிற்
றண்டரசர் புக்கணிகொ டாள்பணிவர் தாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) வியாழன் கேந்திரத்தும், சந்திரன் 2-ம் இடத்தும் நிற்பப் போர்க்குச் செல்லில் எதிரிகள் தஞ்சமாக வந்து பாதங்களை வணங்குவர். எ - று. (275)

அங்குரவ னேழினுற வாறுகுச ஞகச்
சுங்கனிக லோரையிடை தோயவொரு மூன்றிற்
பங்குறைய நான்கினெழு பண்டிதன மைந்தே
தங்கவிகல் சாரிலடை யார்கடரி யாரே.

(இ - ள்:) வியாழன் ஏழிலும், செவ்வாய் ஆறிலும், சுக்கிரன் இலக்கினத்திலும், சனி மூன்றிலும், புதன் நாலிலும் நிற்பப் போர்க்குச் செல்லில் சத்துருக்கள் தரியாதோடுவர். எ. - று. (276)

ஓரையுறு கண்டக முறும்புகர்பொ னெண்போர்
சாரவுயர் நல்லவர்க டாவில்விழி தோயும்
பார்வைபெற மன்னவர்கள் பாசறையி லேகிற்
சேரலர் விசும்பினிடை சேர்ந்திடுகை திண்ணம்.

(இ - ள்:) 1-4-7-10-ல் வியாழனும் சுக்கிரனும் நிற்ப, மற்றைய சுபர் பார்க்க அரசர்கள் பாசறையிற் சென்றால் எதிர்க்கும் சத்துருக்கள் மாண்டு வீரசொர்க்க மடைவது நிச்சயம். எ- று. ()

யுத்தம்

வேறு

நக்க ஞாலொ டிந்திரன் மாசிமா
கல்லராப் பூரமூன் றடுப்புச்
செக்கு மீன்சுவை சோதியென் றிவைகளிற்
சேய்குருச் சனிசுடர் வாரந்
தொக்க காலுதிப் பாட்சிகள் பார்வைநாட்
டோய்ந்திடக் கதிர்மதி குறைந்த
பக்க மாசயை யிருத்தைகள் விட்டிகள்
பயிலுநா ளம்பெயப் பகரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) அச்சுவினி பரணி கார்த்திகை திருவாதிரை ஆயிலியம் மகம் பூரம் சித்திரை சுவாதி கேட்டை பூராடம் சதயம் பூரட்டாதி இந்நாட்களில், சூரியன் செவ்வாய் வியாழன் சனி வாரோதயாப் சங்களில், இவர்களின் ஆட்சிராசிகளில், இரு கண்ணுள்ள நாட்களில், அபரபக்கத்தில் திருதியை சதுர்த்தி அட்டமி நவமி திரயோதசி சதுர்த்தசித் திதிகளில், விட்டிக்கரணத்தில் அம்பெய்க. எ - று. (278)

பகைஞர் சென்மங்க ளட்டம ராசிநாட்
பயில்பொருந் தாதவை யிந்து
தகையி லட்டம நாட்கள்வை நாசிகஞ்
சார்ந்தநா ளிராசியிற் றனக்கு
மிகவு நல்லநு கூலம தாகவே
வேண்டுமக் கணைவிடு மதற்குத்
தொகைய வாரநா ளாதியாம் யோகத்தின்
றோடமு நன்றெனச் சொல்லே.

(இ - ள்:) சத்துருக்களின் சென்மலக்கின சந்திரலக்கின இராசிக்கமைந்த நாட்களும், அவற்றின் அட்டமராசி நாட்களும், பிரதிகூல நாட்களும், வைநாசிக நாளும், இந்நாட்களுக்குரிய இராசிகளும் சம்பவிக்க, தனக்கு அநுகூலமான நாளிராசிகளில் பாணமெய்யின் வாரநக்ஷத்திராதி தோஷங்களில்லையாம். எ - று. (279)


கண்டகக் தூணங் குளிகன்சா நாட்கள்
கண்ணிலி தூமமா தியதா
யெண்டருங் கோர தோஷமா மெவையு
மியம்பிய சூலமா சூலந்
தண்டருந் துட்ட யோகமவ் வியதி
பாதநற் சகடம்வெம் முசல
மண்டிய காள யோகமென் றிவைக
ளாதியா யழகமர்க் கணங்கே.

(இ - ள்:) கண்டகம் தூணம் குளிககாலம் மிருதநக்ஷத்திரங்கள் குருட்டுநாள் தூமாதிதோஷங்கள் சூலம் மகாசூலம் துட்டயோகங்கள் வியதிபாதம் சகடம் முசலயோகம் விஷயோகம் ஆதியான தோஷங்களனைத்தும் போர்செய்தற்கு நன்றாம். எ - று. (280)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைதொறு மேமேழ் வரையமைத் தனல்கீழ்த்
திசைநடு வதனில்வைத் தெண்ணி
யிசையுநா ளற்றை முன்பின்மூன் றென்பா
னியம்பிய மூன்றுமூன் றேழு
வசையின்மூன் றுகா விருணலந் தழும்பா
மன்னிய வெளியது சாவாம்
விசைபயில் விழியாய் முன்பினும் பக்கம்
விளம்பிடின் வலமிடம் வேண்டே.

(இ - ள்:)




கார்த்திகை முதல் அன்றைய நக்ஷத்திரம் வரை அபிசித்தை யுஞ் சேர்த்து பூர்வபக்கமாயின் வலமாகவும், அபரபக்கமாயின் இடமாகவும் எண்ணிக் கண்ட தொகை 28-1-2-ஆயின் திசை. 3-4-5-6-7-8-9-10-11-ஆயின் இருள். இதன்பலன் அபஜயம். 12-13-14-ஆயின் நலம். 15-16-17-ஆயின் தழும்பு. 18-19-20-21-22-23-24-ஆயின் வெளி. இதன்பலன் வெற்றி. 25-26-27-ஆயின் மரணம். எ - று. (281)

யாத்திரைப்படலம் முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவது

# மனைவிளைப்படலம்

## பூமிப்பரீக்ஷை

பேதினி யதனைச் சமதல மாக்கி
விளம்பிய நிறங்களா கிருதி
பேதமாங் கமழ்த சிரசமண் ணிவைகள்
பெட்புறு சகுனம தெவையுந்
தீதற வுணர்ந்து மறையவ ரரசர்
செட்டிகள் சூத்தி ராய
சாதிக ளென்கிற் கமைந்ததே வாதி
தங்களுக் கிசைந்தவை சாற்றே.

(இ - ள்:) பூமியைச் சமமாக்கி, மண்ணின் நிறம் ஆகிருதி மணம் சுவை பாங்கு இவைகளும், சகுனமும் குற்றமறத் தெரிந்து, பிராமணர் அரசர் வைசியர் சூத்திரர் என்னும் நான்கு வருணத்தவர்க்கும் தேவர்க்கும் இடமான பூமியை அறிந்து கொள்க. எ - று. (282)

## பூமியின் நிறம், சுவை

தவளமந் தணரும் பொன்னிற மாகிற்
சாற்றிய வரசனுஞ் செம்மை
திவளுமவ் வணிகன் கருமைய தாகிற்
செப்பிய சூத்திர னென்ப
விவைகளா கிறத்தி னியல்புகள் சுவைக
ளினிமைவே தியர்க்குறு துவர்ப்புச்
சுவையின்மன் னவர்க்குப் புளிப்புவை சியர்க்குக்
கார்ப்புமங் களமருக் காமே.

(இ - ள்:) வெண்ணிறப்பூமி பிராமணருக்கும், பொன்னிறப்பூமி அரசருக்கும், செந்நிறப்பூமி வைசியருக்கும், கருநிறப்பூமி சூத்திருக்கும் உரியன. மண்ணின் சுவை இனிப்பாகிற் பிராணருக்கும், துவர்ப்பாயின் அரசருக்கும், புளிப்பாயின் வைசியருக்கும், கார்ப்பாயின் சூத்திருக்கும் நன்று. எ - று. ()



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமியின் ஆகிருதி, மணம்

வட்டநாற் கோணம் வச்சிரங் கமட
  மச்சமுக் கோணமா தியதாய்ப்
பட்டவா கிருதி நல்லவாங் கோணி
  பணிசுள குரல்மணி யோத்தி
தொட்டவா னரமாற் சாரமா மாதி
  சொற்றிடிற் றீயவாம் பால்வி
யிட்டமாங் கிழங்கு நீரெனு மணநான்
  கிசைந்தவந் தணர்முத லியர்க்கே.

(இ - ள்:) வட்டம் சதுரம் வச்சிராயுதம் ஆமை மீன் முக்கோணம் என்னும் ஆகிருதிகள் நன்று. பன்றி பாம்பு சுளகு உரல் மணி ஒந்தி குரங்கு பூனை இவைகளின் ஆகிருதிகள் ஆகா. பால்மணம் பிராமணருக்கும், பூமணம் அரசருக்கும், கிழங்கு மண்ம் வைசியருக்கும், நீர்மணம் சூத்திரர்க்கும் நன்றாம். எ - று. (284)

## சகுனபலன்

எதிரெழுஞ் சகுன நல்லவை யாகி
  லிசைந்திடு நன்மை தீதாகின்
முதிர்பெரும் பழியென் றறியவை யின்றி
  முன்னிய குழியினீர் விடுத்துத்
துதிபெறு பன்ன மிட்டிடின் வலமாய்ச்
  சுழல்வது நல்லதா மிடத்தே
பிதிர்வுறிற் சுரருக் கிசைந்ததா மென்று
  பேசினர் மனைவிதி பின்னும்.

(இ - ள்:) பூமிப்பரீக்ஷை செய்யுமிடத்து, சுபசகுன முண்டானாற் சோபனம். அசுபசகுன முண்டானாற் றவிரப்படும். பூமியின் நடுவே ஒரு குழி யுண்டாக்கி, அதிற் சலத்தை விட்டு, அந்நீரின்மேல் ஒரு பத்திரத்தை யிட்டால் அது வலமாகச் சுழலுகில் மனிதர்க்கு நன்றாம். இடமாகச் சுழலிற் றேவர்க்கு நன்றாம். எ - று. (285)

பன்னம தமைந்து துயிலுமவ் விராசி
  பாற்படிற் பழிப்பதா மென்றே
முன்னுற நடையு மிருக்கையு நிலையு
  முயன்றவவ் விராசியிற் சேரிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றென்னவர் பரவும் பொலன்மணிக் கழலான்
செகராச சேகர னென்னு
மன்னவர் மன்னு மாதிநா ரணன்சீர்
மருவினர் நிகர்க்குமப் புவியே.

(இ-ள்:) துயிலுமிராசிகளிலே அவ்வில்லை போயொதுங்குமாயின் அம்மனை யெவராலும் பழிக்கப்படும். நடக்குமிராசி நிற்குமிராசி இருக்குமிராசிகளிற் போயொதுங்குமாயின் பாண்டியன் முதலிய இராசாக்களாற் பரவப்படும் பொன்னாலும் மணியாலும் இயற்றிய வீரக்கழலையணிந்த செகராசசேகரனென்னும் அரசர்க்கரசனுன ஆதிநாராயணனது சீரைப்படைத்த மனிதர்போல அப்பூமியும் வெகு சம்பத்தைப் பெற்று அனந்தகாலம் வாழும். எ-று. (286)

## இராசிகளில் துயில்வன, நடப்பன, நிற்பன, இருப்பன.

கலைவிடை மங்கை துயிலுமீன் கொச்சை
கைச்சிலை நடக்குநற் றேளு
முலைவறு ஞெண்டுஞ் சிங்கமு நிற்கு
மோங்கிய குடந்துலை மிதுன
நிலைபெற விருக்கு மென்றிவை யனைத்து
நெருங்கிய வனமுலைச் சித்திரச்
சிலைநுதன் மடவாய் முனிவரு முணர்ந்து
செப்பின ராமெனத் தெளியே.

இ-ள்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இடபம் கன்னி மகரம் | துயில்வன | மேடம் தனு மீனம் | நடப்பன | கடகம் சிங்கம் விருச் | நிற்பன | மிதுன துலாம் கும்பம் | இருப்பன |

எ-று. (287)

சானுவி னுழுங் கோணநான் காகத்
தடங்குழி வருத்ததை மறைப்பின்
மேனிரம் பிடினுத் தமஞ்சம மாயின்
விளம்பிய மத்திம மாகு
மானகங் குறையி னதமமாங் குழியிற்
றவனேதே ளரவுமண் ணுக
மீனமாம் புழுநீ ரிருக்கையிற் றனமென்
றிவையுறி னம்மனை யிகழே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ - ள்:) முழந்தாளளவாகச் சதுரமாக ஒரு குழி அகழ்ந்து, அம்மண்ணை மீளவுங் குழியில் இட, அக்குழி நிறைந்து மிஞ்சின் உத்தமம்; சமமாகில் சமம்; மண் குறையினும், குழியில் தவளை தேள் பாம்பு பூநாகம் கிருமி கரி என்பு விறகு இவைகளுறினும் விலக்கப்படும். எ - று. (288)

ஏமமா ரசத முதும்பரஞ் சர்ப்ப
மியம்பிய நவமணித் தொகைக
ளாமிவை யிரும்பு தானிய மாதி
யவையுறிற் கிராமங்கள் கிருகக்
தோமில்பத் தனங்கள் நாடுக ளன்றிச்
சுராலயங் கோபுர மரங்கங்
காமரு யாக சாலைமன் றகங்கள்
கட்டநன் றுமெனக் கருதே.

(இ - ள்:) பொன் வெள்ளி செம்பு இரும்பு முதலிய லோகங்களும், நவரத்தினங்களும், தானியம் சர்ப்பம் என்பவைகளும் இருந்தால், கிருகம் கிராமம் நகரம் நாடு தேவாலயம் கோபுரம் நாடகசாலை யாகசாலை சபை இவைகட்ட நன்று. எ-று. (289)

## வாஸ்துவின்னியாசம்

பரித்தவப் பெரிய கிராமவின் னியாசம்
பகரிலவ் விதங்களெட் டவற்றில்
விரித்ததெண் டகஞ்சுவத் திகமொடு பாரவம்
விளம்பிய நந்தியா வர்த்தம்
பெருத்தபி ரதாமம் பிரமகஞ் சிறீபிர
திட்டிதம் பிரகீர்ண மெனவாக்
தெரித்திவைக் குற்ற விதியு மியல்புக்
தேமொழி பிறிதினிற் றெளியே.

(இ - ள்:) கிராமவின்னியாசம் எட்டுவகைப்படும். அவை தெண்டகம் சுவத்திகம் பாரவம் நந்தியாவர்த்தம் பிரதாமம் பிரமகம் சிறீபிரதிட்டிதம் பிரகீர்ணம் என்பனவாம். இவற்றின் விதிகளும் மற்றுமிலக்கணங்களும் ஈண்டு விரிக்கிற் பெருகும். ஆதலால் அவற்றை விரிந்த நூலிற் கண்டுகொள்க. எ-று. (290)

மனைவினைப்படலம் முற்றிற்று.

---

செகராசசேகரமாலை முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுண்முதற்குறிப்பகராதி


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அங்கியினிருதிமீதி | ...104 |
| அங்குரவனேழினுற | ...134 |
| அஞ்சிருமூன்று | ... 60 |
| அடுசுடர்வாளினீள | ...103 |
| அடுப்புநீர்கரம | ... 46 |
| அடுப்புமாசியொ | ... 72 |
| அடுமுழுக்கோதனங் | ...123 |
| அண்டர்புரோகித | ...132 |
| அத்தமுருடேரோண | ... 5 |
| அத்தமைப்பசி | ... 40 |
| அத்தமோண | ... 69 |
| அந்தணன்சேய் | ... 95 |
| அந்தணன்மால் | ... 75 |
| அந்தணனேடைறைகாரி | ... 81 |
| அம்புலிமந்தன்கீழ் | ...121 |
| அம்புலியேழொன் | ...110 |
| அயமுலக்கை | ...100 |
| அரிபரிமூங்கி | ...131 |
| அருக்கனுளுடன் | ... 68 |
| அருக்கனிற்கலே | ... 79 |
| அல்லார்மித்திரராகு | ... 53 |
| அவ்வவரோரையாதியா | ...113 |
| அவரவர்கடிரிகோண | ... 53 |
| அறைகதிர்பன்னென் | ...110 |
| அன்றியுமுபயவோரை | ...119 |
| அன்றிலுத்தரங்க | ... 63 |
| அனலாதிநாலுமூன் | ... 8 |
| ஆகுமைப்பசி | ... 41 |
| ஆட்சியோடுநல்லுச்சத்தின் | ... 37 |
| ஆடவர்க்கீரெட் | ...115 |
| ஆடிமாதமொன்றெட்டு | ... 83 |
| ஆண்டிருநான்கினிற் | ... 6 |
| ஆண்டொன்றி | ... 28 |
| ஆதவன்சோமன் | ... 66 |
| ஆதவன்மிதனத் | ...106 |
| ஆதிசித்திரையொ | ... 77 |
| ஆதியுமொளியும் | ... 57 |
| ஆதிரைபூசஞ் | ... 66 |
| ஆயுசுதினமாங் | ... 58 |
| ஆருமதிபொன்கவிமால் | ... 95 |
| ஆவணங்கர | ... 86 |
| ஆவணியாதி | ... 39 |
| ஆவணியோணம் | ... 39 |
| இடத்தினிற்பவன | ...125 |
| இடையதுமுதலா | ... 59 |
| இந்திரன்றிசையிற் | ...122 |
| இந்குருடேர்குரு | ... 75 |
| இப்படிவகுத்த | ...124 |
| இரண்டிலரசன்கவி | ...132 |
| இரலேதேர்பயறு | ... 79 |
| இரவுவாப்பதி | ... 90 |
| இருக்கதாதிய | ... 37 |
| இருஞ்சரத்திட | ... 88 |
| இருவர்தங்கணமு | ... 47 |
| ஈரெட்டிலாறிரண்டா | ... 26 |
| ஈனர்நீளரவானே | ... 96 |
| உடைகுளம்பாவகன் | ... 99 |
| உத்தமமார்கழி | ...116 |
| உத்தரமூன்று | ...101 |
| உயர்பெனிலுயர்வாம் | ... 12 |
| உரம்பயில்குருவாராதி | ...119 |
| உருத்ததிதிநாளோரைச் | ... 20 |
| உற்றபங்குனியு | ... 57 |
| எட்டினிற்கவிபொ | ... 64 |
| எண்டிருத்தி | ... 61 |
| எதிரெழுஞ்சகுன | ...138 |
| எழில்வாய்த்த | ... 1 |
| என்றவன்கடகங் | ... 63 |
| ஏதினன்பத்திடத்தடைய | ... 73 |
| ஏமமாரசத | ...140 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செய்யுள் | பக். |
|---|---|
| ஏய்ந்தமங்கையர்க | ... 47 |
| ஏறுகொடிவேசியர்க | ...126 |
| ஏறுறுகேசரிவணிகன் | ... 5 |
| ஏன்றவோரன்னைமைந்த | ... 62 |
| ஏனைநாட்க | ... 91 |
| ஐந்திலரசன்கவி | ...133 |
| ஐந்துறுமாண் | ... 34 |
| ஐப்பசிமாதமன்றி | ...105 |
| ஒழுகுகாமரமூன் | ... 67 |
| ஒள்ளியோனைந்தொன் | ...112 |
| ஒன்றுசென்ம | ... 45 |
| ஒன்றுமேழிரு | ... 41 |
| ஓங்குயர்முற்பக்கத்தி | ...116 |
| ஓணமதிகரந்தால | ...128 |
| ஓணமிரேவதிசெங்கை | ... 26 |
| ஓதனமுதவு | ...108 |
| ஓதியவுத்தராயணத்திற் | ... 97 |
| ஓருத்திரர்தமக்கு | ... 43 |
| ஓதுவக்கிரங்க | ...114 |
| ஓரைகள்சரங்கள் | ...119 |
| ஓரையுறுகண்டக | ...134 |
| கட்டுகரவெங்கனலி | ...133 |
| கடிவினைக்கிரட்டை | ... 62 |
| கண்டகந்தூணங் | ...135 |
| கண்டகவிடஞ்சுரர் | ...133 |
| கண்ணியநல்லநாளிற் | ...105 |
| கண்ணியவக்கிருகத்தை | ... 15 |
| கத்துமேறுதுலை | ... 43 |
| கதிர்புதன்கவியோர்மாத | ...114 |
| கதிரவன்றனிராசிக்கெட் | ... 17 |
| கந்துகங்கொடிறு | ...104 |
| கந்துகமார்கழி | ... 74 |
| கரமதிநிவிளக்கோணம் | ... 34 |
| கருதுமானுடராயிரம் | ... 91 |
| கரும்புகுருமதிபவிட்டம் | ... 27 |
| கலங்கரஞ்சகடோண | ... 86 |
| கலையினில்வெள்ளை | ... 10 |
| கலைவிடைமங்கை | ...139 |
| கவ்வைகுன்றுபுட் | ... 85 |
| கன்னிநாடன்னில் | ...106 |
| கன்னியேழுநல் | ... 82 |
| காசிபன்வசிட்ட | ... 3 |
| காணுமன்புறு | ... 78 |
| காரிகையிரட்டை | ... 64 |
| கிழக்கினுக்கோணங் | ...120 |
| குமரன்மங்கையிவர் | ... 46 |
| குருவிரண்டொன்ப | ...111 |
| குலவுமங்கையர்க | ... 44 |
| குளிர்மடவாடண்டு | ... 29 |
| கூட்டிருவோரோரை | ... 55 |
| கூரியவோர்கோளுச்சம் | ... 22 |
| கூறையைப்புசி | ... 78 |
| கேதனம்பொருளாங் | ...103 |
| கோளனைத்தும் | ...107 |
| சங்கரனைப்பிறைவேணிப் | ... 2 |
| சந்தசாத்திரங்காணுசி | ... 40 |
| சாதமுதற்பதினாறிற் | ... 25 |
| சாதமுறுந்திவசத்துக் | ... 23 |
| சாபமெழுகாலத்துக் | ... 33 |
| சாருமுற்பக்கத்தருங்கடிக் | ... 65 |
| சாற்றியிடுநற்புதல்வன் | ... 16 |
| சாற்றுகுருகரம்பிண்டி | ... 35 |
| சானுவினாழங் | ...139 |
| சித்தமுறுதினமாதி | ... 62 |
| சித்திரைகைப்பொருள்வென்றி | 32 |
| சித்திரைமூலம் | ... 70 |
| சித்திரையோண | ... 74 |
| சிந்திக்குமிரதவிதி | ...102 |
| சிவிகைகரங் | ... 99 |
| சிறந்ததிங்களிருநான்கின் | ... 14 |
| சிறந்தமதித்திருவதனச் | ... 48 |
| சுக்கிரனொடம்புலிமகன் | ...133 |
| சுத்தமெட்டுற | ... 93 |
| சுத்தவேதியன்றன்னொடு | ... 38 |
| சுளகுமூலமடுப்பு | ... 69 |
| சுற்றெயில்கோபுர | ...103 |
| சூலமோணமுருடேர் | ... 42 |
| சென்மத்திலீராறே | ... 18 |
| சென்மநோய்விபத்து | ... 45 |
| சென்மாதிமுப்பத்தொன் | ... 25 |
| சொல்லியவாண்டோரைந்தின் | 32 |
| சொற்புரட்டாதி | ... 83 |
| சொன்னவில்வகை | ... 92 |
| சோதிகரும்போண | ... 35 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செய்யுள் | பக். |
|---|---|
| சோதிகேட்டைகரும்பு | ... 69 |
| தகர்க்குத்தேளரிநண்டு | ... 55 |
| தந்தைதாய்சகோதர | ... 18 |
| தரணிமகன்வெள்ளிபுத | ... 51 |
| தலைபடுமெண்ணெய் | ... 12 |
| தவளமந்தனனும் | ...137 |
| தற்காலமித்திரராம் | ... 54 |
| தாலமெட்டுமூவைந்து | ... 82 |
| திங்கள்வெய்யவன் | ... 38 |
| திங்களிருமூன்றி | ... 27 |
| திசைதொறுமேழேழ் | ...136 |
| திணைமடந்தை | ... 87 |
| தினங்கணந்தரும | ... 44 |
| தோணிதேர்புரவி | ... 71 |
| நக்கனுரலொடிந்திரன் | ...134 |
| நகமறுத்தல்கடலாடல் | ... 31 |
| நடுப்பகலந்தி | ...122 |
| நண்ணுதாகம் | ... 90 |
| நல்லசுபோதயமம்சம் | ... 10 |
| நல்விலிங்காகிருதி | ... 56 |
| நவ்விகரும்பிரேவதி | ... 15 |
| நவ்விநாற்பதமவற்றுண் | ... 36 |
| நவையிலுயிர் | ...129 |
| நற்குழவிபிறந்த | ... 22 |
| நற்பதியகற்றும் | ...108 |
| நன்மைசால்கோசரங்க | ...107 |
| நாட்டியநற்றிங்களொரு | ... 27 |
| நாட்டுமூவர்க்கு | ... 37 |
| நாடுமதிபுரவிகுருத் | ... 80 |
| நாரணனைப்பயோததியி | ... 2 |
| நாலிரண்டிடம | ...130 |
| நோயறும்புகழ்சிர் | ...109 |
| பக்கமதிலாறெட்டு | ... 24 |
| பகைஞர்செண்மங்க | ...135 |
| பங்குனிமாசியிரண்டினு | ... 73 |
| படத்தராக்குரு | ... 89 |
| படிகநிறத்திருமேனிப் | ... 3 |
| பண்டியைந்துடன் | ... 82 |
| பணிச்சிரத்தினுறு | ... 68 |
| பத்திரைபசுவின்பாலொடு | ...124 |
| பதங்கனுத்தர | ... 92 |
| பதத்துறுவரையி | ... 57 |
| பதிமரிப்புச்சுகம்வாழ்வு | ... 7 |
| பரணியின்மூன்றுங்காலிற் | ... 20 |
| பரிகழைசோதிதோணி | ...104 |
| பரித்தமாதாப்பிதா | ... 96 |
| பரித்தவப்பெரிய | ...140 |
| பற்றுதிதிபன்னுன்கி | ... 94 |
| பன்னமதமைந்து | ...138 |
| பன்னுமாண்டு | ... 96 |
| பனைசகடோணை | ... 71 |
| பாலைமாகியுரோகிணி | ... 91 |
| பிண்டிகரம்பவனமுட | ... 36 |
| பிணிப்புமெய்ப்பொருளோர் | ...109 |
| பிறத்தலுறுமோரைக் | ... 17 |
| பிறைநுதன்மாமடமாதர் | ... 48 |
| பின்னுமக்கடிக்குப் | ... 63 |
| புகருறுதீமைசாரினுந் | ... 38 |
| புட்பனையத்தமகசிரந் | ... 67 |
| புண்ணியவேதாகமங்கள் | ... 4 |
| புணர்தமாவணி | ... 76 |
| புணர்தமுருடேர்பவன | ...100 |
| புந்திசந்திரன் | ... 90 |
| புந்தியாறெட்டுப் | ...111 |
| புந்திவெள்ளிபொன் | ... 40 |
| புரந்தரன்மாசி | ...130 |
| புரவிமான்றலை | ... 38 |
| புரவியொன்பதிற்றீர்ந்திடு | ... 81 |
| புனர்தமதியவிட்டமுட | ... 29 |
| பூசமேழுநல்லோதன | ... 82 |
| பூசமோணமவிட்ட | ... 70 |
| பூசனுதபன்சனியுறை | ... 38 |
| பூப்புறுநாட்டொடுத் | ... 6 |
| பெண்ணைகரும்புத்தரமூன் | ... 97 |
| பெருவயிற்றினுக்காதிரை | ... 88 |
| பேசியதற்காலமதில் | ... 24 |
| பேதித்தபிற்பக்கத் | ...129 |
| பொற்பனைகலனுதனம் | ...125 |
| மகமைந்துமூன்றனுட | ... 31 |
| மங்கைதுலைமகரந்தே | ... 98 |
| மடவரலாடவர்களா | ... 50 |
| மதகரியயத்திற் | ...131 |
| மதிமுகத்தாரோரைமுதன் | ... 50 |
| மல்கியகோவின்குதமது | ...127 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செய்யுள் | பக். |
|---|---|
| மறையவர் தம்மைவழிபடு | ...115 |
| மறையவருக்கிரவிசெவ்வாய் | ... 30 |
| மறையவனைப்பசிபெண்ணை | ...117 |
| மன்னர்மன்னுசெகராசசேகர | ... 80 |
| மன்னவர்க்கும் | ... 98 |
| மன்னோடிபுரட்டாதி | ...128 |
| மன்னுபெரும்பரிகமழ | ...118 |
| மன்னுமுதற்கருப்பமதற் | ... 14 |
| மன்னுவேதியர்க் | ... 36 |
| மனத்தடுமாற்றங்கல்வி | ...109 |
| மாக்களிறுமறியுட | ... 49 |
| மாசிகலம்புரவியுருள் | ...102 |
| மாசிபுரட்டாதியினி | ... 93 |
| மாசிமூதிரைநவ்விசோணை | ... 73 |
| மாதர்மைந்தரிவர் | ... 43 |
| மீனமுந்தேளுங்கடகமு | ... 59 |
| முக்கணன்கேட்டை | ... 89 |
| முற்றின்மாசிமதி | ... 76 |
| முறையினோதியமணவினை | ... 42 |
| முன்னுறத்தானேகண்டிடிற் | ... 11 |
| மூலத்தின்முதற்காலிற் | ... 19 |
| மூன்றுநான்கெட்டாந் | ... 13 |
| மேடமன்னர்பய | ... 77 |
| மேடமுமேறும் | ... 72 |
| மேதினியதனைச்சமதலமாக்கி | 137 |
| மேதினியிறைவர்க்கொன்பதா | 126 |
| மோரரவமாடையிலி | ...127 |
| வச்சிரனொளிற்கிழக்கினிற் | ...121 |
| வச்சிரனின்மகவைந்து | ... 10 |
| வட்டநாற்கோணம் | ...138 |
| வளர்ந்தசீர்மகவினுக்குச் | ... 28 |
| வனைந்துமாமுனிவோர் | ... 3 |
| வாதரோகத்திற்கோளை | ... 87 |
| விண்ணொன்றுபுந்திகுருக் | ...132 |
| விதித்தவவ்விராசி | ...120 |
| விளக்கினிற்சுடரோன்கால | ...105 |
| விளக்குமாசுணமர்திரை | ... 85 |
| விளங்குபெலத்தொடு | ... 21 |
| வெய்யவற்குச்சனிவெள்ளி | ... 53 |
| வெய்யவன்மால்சனிதிங்க | ... 94 |
| வேதியர்க்குச்சென்மாதி | ... 23 |
| வேதைசௌராட்டிரர்க்கு | ... 61 |
| வேந்தரகமகிழ்வுற்றுத் | ... 80 |
| வையமன்னுகாத்தியாயன | ...101 |
| வையமிந்திரநாட்டொழு | ... 65 |


(சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் இதிற் சேர்க்கப்படவில்லை.)

செய்யுண்முதற்குறிப்பகராதி முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வெளியீடுகள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| சோதிட வினவிடை ... ... | 9 | 00 |
| ஜாதக பாஸ்கரன் ... ... | 8 | 00 |
| ஸ்ரீபதி அனுபவ ஜாதகம் .... ... | 2 | 00 |
| பரகிதஸ்புட கணிதம் ... ... | 1 | 50 |
| செகராசசேகரமாலை உரை ... | 3 | 00 |
| சந்தானதீபிகை உரை ... ... | 0 | 75 |
| அரிஷ்ட நவநீதம் (வசனம்) ... | 0 | 36 |
| ஜாதகசந்திரிகை விளக்கச் சருக்கம் ... | 0 | 25 |
| கனவுநூல் உரையுடன் ... ... | 0 | 18 |
| சரநூல் ... ... | 0 | 10 |
| Practical Horoscopy | 3 | 50 |
| Sripaty's Interpretations on Jathaka Chandrika | 1 | 25 |
| Summary of Interpretations on Jathaka Chandrika | 0 | 25 |
| சம்ஸ்கிருத முதலாம் பாலபாடம் ... | 0 | 25 |
| சம்ஸ்கிருத இரண்டாம் பாலபாடம் ... | 0 | 45 |

**சோதிடவிலாச புத்தகசாலை**

46, பெரியகடை,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org